# வள்ளுவர்



# திருவள்ளுவர்

அருளிய

# திருக்குறள்

எளிய தமிழ் உரையுடன்

# திருக்குறள்
# எளிய உரை


உரையாசிரியர்

**முல்லை பிஎல். முத்தையா**

(பல்வேறு திருக்குறள் விருதுகள் பெற்றவர்)



**முல்லை**

பதிப்பகம்

323/10, கதிரவன் காலனி,

அண்ணாநகர் மேற்கு, சென்னை 40

தொலைபேசி: 26163596,24715968

e-mail: mullaipathipagam@yahoo.com

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Thirukkural** |
| Commentary by | : | Mullai PL. Muthiah |
| Language | : | Tamil |
| Edition | : | First, December 2003 |
| No.of Copies | : | 288 |
| Publisher | : | **Mullai Pathipagam**<br>323/10, Kathiravan Colony<br>Anna Nagar West<br>Chennai - 600 040.<br>Ph: 26163596 / 2471568<br>*e-mail:mullaipathipagam@yahoo.com* |
| Printed at | : | **Zion Printers**<br>Chennai - 28 |
| Price | : | **Rs. 25.00** |

## சென்னை பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் பொற்கோ பாராட்டுகிறார்

தமிழ் இலக்கிய வரலாற்றில் எல்லாக் காலத்திலும் எல்லா அறிஞர்களாலும் போற்றிப் பாராட்டப்படும் ஒரு சிறப்புப் பேற்றைப்பெற்று விளங்குவது திருக்குறள். இந்த நூலைக் கற்றோர்க்கும் கல்லார்க்கும் அறிமுகப்படுத்துகிற முறையில் இந்த நூற்றாண்டில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த நூற்றாண்டுக்கு முன்பும் இந்த நூலைப் பரப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

திருக்குறளைப் பரப்புவதற்கான முயற்சிகளில் திருவாளர் முல்லை பிஎல். முத்தையா அவர்கள் தொடர்ந்து தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர் என்றால் அது ஒரு சிறிதும் மிகையாகாது. திருக்குறளைப் பரப்புகிற வகையில் இவர் இதற்கு முன்பே 'திருக்குறள் உவமைகள்', 'திருக்குறள் அறிவுரைகள்' ஆகிய நூல்களை எழுதியிருக்கிறார். எடுத்த பொருளை இனிது விளக்கும் ஆற்றல் பெற்றவர் திருவாளர் முத்தையா அவர்கள்.

திருக்குறளைப் பரப்புவதற்குத் திருவாளர் முல்லை முத்தையா அவர்கள் புதிய புதிய உத்திகளைக் கையாண்டுள்ளார். திருக்குறளைப் பரப்புவதற்கு இவர் கையாளுகின்ற உத்தி எளியோரையும் கவர்ந்து தப்பாமல் பயன் விளைவிப்பதாக அமைந்திருக்கிறது. திருவாளர் முல்லை முத்தையா அவர்கள் தமிழகத்தின் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்.

*("திருக்குறள் முத்துக்கள்" நூலுக்கு வழங்கிய பாராட்டுரையிலிருந்து)*

# வாசகர் பதிப்பு

- திருக்குறளுக்கு உரை கூறும் பதிப்புகள் ஏராளமானவை! இன்னும் வந்து கொண்டிருக்கின்றன. மேலும் வரக்கூடும்.

- ஆனால், திருக்குறளைப் படிக்காதவர்களும், திருக்குறள் என ஒன்று இருப்பதை அறியாதவர்களும் எண்ணற்றோர் இருக்கின்றனர்.

- புலவர்கள், பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் முதலானோருக்கு மட்டுமே திருக்குறள் தனி உடைமையாக இருக்கக் கூடாது.

- பாமர வாசகர், சராசரி வாசகர்கூட எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பே நினைத்தேன். அப்போது எடுத்துக் கொண்ட முயற்சி இது!

*முல்லை பிஎல். முத்தையா*
*("திருக்குறள் அறிவுரைகள்"*
*நூலுக்கு எழுதிய*
*முன்னுரையிலிருந்து 1990)*

# பொருளடக்கம்

## இயல் அகரவரிசை


| | பக்கம் |
|---|---|
| **1. அறத்துப்பால்** | |
| 1. பாயிரம் | 18 |
| 2. இல்லறவியல் | 16 |
| 3. துறவறவியல் | 56 |
| 4. ஊழியல் | 82 |
| **2. பொருட்பால்** | |
| 1. அரசியல் | 84 |
| 2. அமைச்சியல் | 134 |
| 3. அரணியல் | 156 |
| 4. கூழியல் | 158 |
| 5. படையியல் | 160 |
| 6. நட்பியல் | 164 |
| 7. குடியியல் | 198 |
| **3. இன்பத்துப்பால்** | |
| 1. களவியல் | 224 |
| 2. கற்பியல் | 240 |
| செய்யுள் அகரவரிசை | 278 |

# அதிகார அகரவரிசை

## எண் : பக்க எண்


| | |
|---|---|
| அடக்கமுடைமை | 32 |
| அமைச்சு | 134 |
| அரண் | 156 |
| அருளுடைமை | 56 |
| அலர் அறிவுறுத்தல் | 238 |
| அவர்வயின் விதும்பல் | 263 |
| அவா அறுத்தல் | 80 |
| அவை அஞ்சாமை | 152 |
| அவை அறிதல் | 150 |
| அழுக்காறாமை | 40 |
| அறன் வலியுறுத்தல் | 14 |
| அறிவுடைமை | 92 |
| அன்புடைமை | 22 |
| ஆள்வினை உடைமை | 130 |
| இகல் | 178 |
| இடன் அறிதல் | 106 |
| இடுக்கண் அழியாமை | 132 |
| இரவச்சம் | 220 |
| இரவு | 218 |
| இல்வாழ்க்கை | 16 |
| இறைமாட்சி | 84 |
| இனியவை கூறல் | 26 |
| இன்னா செய்யாமை | 70 |
| ஈகை | 52 |
| உட்பகை | 184 |
| உழவு | 214 |
| உறுப்புநலன் அழிதல் | 257 |
| ஊக்கம் உடைமை | 126 |
| ஊடலுவகை | 276 |
| ஊழ் | 82 |
| ஒப்புரவறிதல் | 50 |
| ஒழுக்கமுடைமை | 34 |
| ஒற்றாடல் | 124 |
| கடவுள் வாழ்த்து | 8 |
| கண்ணோட்டம் | 122 |
| கண் விதுப்பழிதல் | 245 |
| கயமை | 222 |
| கல்லாமை | 88 |
| கல்வி | 86 |
| கள்ளாமை | 64 |
| கள்ளுண்ணாமை | 192 |
| கனவுநிலை உரைத்தல் | 253 |
| காதற் சிறப்புரைத்தல் | 234 |
| காலம் அறிதல் | 104 |
| குடி செயல்வகை | 212 |
| குடிமை | 198 |
| குறிப்பறிதல் (பொருள்) | 148 |
| குறிப்பறிதல் (இன்பம்) | 226 |
| குறிப்பறிவுறுத்தல் | 266 |
| குற்றங்கடிதல் | 94 |
| கூடா ஒழுக்கம் | 62 |
| கூடா நட்பு | 172 |
| கேள்வி | 90 |
| கொடுங்கோன்மை | 118 |
| கொல்லாமை | 72 |
| சான்றாண்மை | 204 |
| சிற்றினம் சேராமை | 98 |
| சுற்றந் தழால் | 112 |
| சூது | 194 |
| செங்கோன்மை | 116 |
| செய்ந்நன்றி அறிதல் | 28 |
| சொல்வன்மை | 136 |

தகையணங்குறுத்தல் 224
தவம் 60
தனிப்படர் மிகுதி 249
தீ நட்பு 170
தீவினையச்சம் 48
துறவு 76
தூது 144
தெரிந்து செயல்வகை 100
தெரிந்து தெளிதல் 108
தெரிந்து விளையாடல் 110
நடுவு நிலைமை 30
நட்பாராய்தல் 166
நட்பு 164
நலம் புனைந்துரைத்தல் 231
நல்குரவு 216
நன்றியில் செல்வம் 208
நாடு 154
நாணுடைமை 210
நாணுத் துறவுரைத்தல் 236
நிலையாமை 74
நிறையழிதல் 261
நினைந்தவர் புலம்பல் 251
நீத்தார் பெருமை 12
நெஞ்சொடு கிளத்தல் 259
நெஞ்சொடு புலத்தல் 270
பகைத்திறம் தெரிதல் 182
பகைமாட்சி 180
பசப்புறு பருவரல் 247
படர் மெலிந்திரங்கல் 242
படைச்செருக்கு 162
படை மாட்சி 160
பண்புடைமை 206
பயனில சொல்லாமை 46
பழைமை 168
பிரிவாற்றாமை 240
பிறனில் விழையாமை 36
புகழ் 54
புணர்ச்சி மகிழ்தல் 229
புணர்ச்சி விதும்பல் 268
புலவி 272
புலவி நுணுக்கம் 274
புலால் மறுத்தல் 58
புல்லறிவாண்மை 176
புறங்கூறாமை 44
பெண்வழிச்சேறல் 188
பெரியாரைத் துணைக்கோடல் 96
பெரியாரைப் பிழையாமை 186
பெருமை 202
பேதைமை 174
பொச்சாவாமை 114
பொருள் செயல்வகை 158
பொழுதுகண்டு இரங்கல் 255
பொறையுடைமை 38
மக்கட்பேறு 20
மடிஇன்மை 128
மருந்து 196
மன்னரைச் சேர்ந்தொழுகல் 146
மானம் 200
மெய்யுணர்தல் 78
வரைவின் மகளிர் 190
வலியறிதல் 102
வாய்மை 66
வாழ்க்கைத் துணைநலம் 18
வான் சிறப்பு 10
விருந்தோம்பல் 24
வினைசெயல்வகை 142
வினைத்திட்பம் 140
வினைத்தூய்மை 138
வெகுளாமை 68
வெஃகாமை 42
வெருவந்த செய்யாமை 120

# அறத்துப் பால்

## 1. பாயிரம்

### 1. கடவுள் வாழ்த்து

*அகரம் முதல, எழுத்து எல்லாம்;—ஆதி—*
*பகவன் முதற்றே, உலகு.* 1
எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன; அதுபோல, உலகம் கடவுளை முதன்மையாகக் கொண்டது.

*கற்றதனால் ஆய பயன் என்கொல்—வால்—அறிவன்*
*நல் தாள் தொழாஅர் எனின்?* 2
கல்வி கற்றதன் பயன் கடவுளை வணங்குவது.

*மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடு வாழ்வார்.* 3
கடவுளின் திருவடிகளை வணங்குவோர் இன்ப உலகில் நீடித்து வாழ்வார்.

*வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு*
*யாண்டும் இடும்பை இல.* 4
கடவுளை வணங்குவோருக்கு எப்பொழுதும் துன்பம் இல்லை.

*இருள் சேர் இரு வினையும் சேரா, இறைவன்*
*பொருள் சேர் புகழ் புரிந்தார்மாட்டு.* 5
கடவுளின் புகழைப் போற்றுகின்றவரிடம், அறியாமையால் ஏற்படும் நல்ல செயலும், தீய செயலும் சேர்வதில்லை.

*பொறி வாயில் ஐந்து அவித்தான் பொய் தீர் ஒழுக்க*
*நெறி நின்றார் நீடு வாழ்வார்.* 6

ஐந்து பொறிகளால் ஏற்படும் ஐந்து ஆசைகளை விட்ட, கடவுளுடைய ஒழுக்க நெறியில் நிற்பவர் நீடூழி வாழ்வார்.

*(மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியன ஐம்பொறி.)*

*தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்,*
*மனக் கவலை மாற்றல் அரிது.* 7

கடவுளை வணங்காதவருக்கு மனக்கவலையை நீக்கிக் கொள்ள முடியாது.

*அற ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்,*
*பிற ஆழி நீந்தல் அரிது.* 8

கடவுளை வணங்காதவர், பொருளும் இன்பமும் ஆகிய கடலைக் கடக்க மாட்டார்.

*கோள் இல் பொறியின் குணம் இலவே—எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை.* 9

கடவுளின் திருவடிகளை வணங்காதவருடைய தலை பயன் இல்லாதது.

*பிறவிப் பெருங் கடல் நீந்துவர்; நீந்தார்,*
*இறைவன் அடி சேராதார்.* 10

கடவுளை நினைக்காதவர், பிறப்பு என்னும் கடலைக் கடக்க மாட்டார்.

# 2. வான் சிறப்பு

## (மழையின் பெருமை)

*வான் நின்று உலகம் வழங்கி வருதலான்,*
*தான் அமிழ்தம் என்று உணரல் பாற்று.* **11**

மழையானது, உலகத்தில் வாழும் எல்லா உயிர்களுக்கும் அமிர்தம் என்று அறிய வேண்டும்.

*துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி, துப்பார்க்குத்*
*துப்பு ஆயதூஉம் மழை.* **12**

உண்பவருக்கு உணவுப் பொருள்களைத் தருவதோடு, உணவாக இருப்பதும் மழைதான்.

*விண் இன்று பொய்ப்பின், விரிநீர் வியன் உலகத்து—*
*உள் நின்று உடற்றும் பசி.* **13**

மழை பெய்யாவிட்டால், உலகத்தில் உள்ள உயிர்களைப் பசியானது துன்புறுத்தும்.

*ஏரின் உழாஅர் உழவர், புயல் என்னும்*
*வாரி வளம் குன்றிக்கால்.* **14**

மழை வளம் குறைந்தால், உழவர்கள் ஏரைப்பூட்டி உழவு வேலையைச் செய்ய மாட்டார்கள்.

*கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே*
*எடுப்பதூஉம், எல்லாம் மழை* **15**

கெடுப்பதும், கெட்டுப் போனவர்களை உயர்த்துவதும் மழைதான்.

*விசும்பின் துளி வீழின் அல்லால், மற்று ஆங்கே*
*பசும் புல் தலை காண்பு அரிது.* **16**
மழை பெய்யாவிட்டால், பசுமையான புல்லின் தலையைக் கூட காண முடியாது.

*நெடுங் கடலும் தன் நீர்மை குன்றும், தடிந்து எழிலி—*
*தான் நல்காது ஆகிவிடின்.* **17**
மழை பெய்யாவிட்டால், பெரிய கடலும்கூட வளம் குறைந்து விடும்.

*சிறப்பொடு பூசனை செல்லாது—வானம்*
*வறக்குமேல், வானோர்க்கும், ஈண்டு.* **18**
மழை இல்லாவிட்டால், திருவிழாவும், பூசையும் நடைபெறாது.

*தானம் தவம் இரண்டும் தங்கா, வியன் உலகம்*
*வானம் வழங்காதுஎனின்.* **19**
மழை பெய்யாவிட்டால், இந்த உலகத்தில் தானமும், தவமும் நடைபெறா.

*நீர் இன்று அமையாது உலகுஎனின், யார்யார்க்கும்*
*வான் இன்று அமையாது ஒழுக்கு.* **20**
எப்படிப்பட்டவருக்கும் நீர் இல்லாமல் ஒன்றும் நடக்காது என்றால், வேறு எந்த வழியில் முயன்றாலும் மழை இல்லாவிட்டால் கிடைக்காது (கிணறு, வாய்க்கால் வெட்டினாலும், ஆழ்துளைக் கிணறு தோண்டினாலும் பயன் இல்லை.)

# 3. நீத்தார் பெருமை

## (துறவிகள்) (பெரியோர் பெருமை)

*ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும்–பனுவல் துணிவு.* 21

ஒழுக்கத்தோடு இருந்த மகான்களின் பெருமையைப் போற்றுவதே அறிவு நூல்களின் முடிவு.

*துறந்தார் பெருமை துணைக் கூறின், வையத்து*
*இறந்தாரை எண்ணிக்கொண்டற்று.* 22

துறவிகளின் பெருமையை அளவிட்டுக் கூற வேண்டுமானால், உலகில் பிறந்து இறந்தவரின் எண்ணிக்கையை அளவிடுவதைப் போன்றது.

*இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்*
*பெருமை பிறங்கிற்று, உலகு.* 23

அறவழியை மேற்கொண்ட துறவிகளின் பெருமையே இந்த உலகத்தில் உயர்ந்து நிற்கின்றது.

*உரன் என்னும் தோட்டியான், ஓர் ஐந்தும் காப்பான்*
*வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து.* 24

ஐந்து பொறிகளையும், ஐந்து புலன்களின் வழியில் செலுத்தாமல், அடக்கத்தோடு இருப்பவனே விதை நெல் போன்றவன்.

*ஐந்து அவித்தான் ஆற்றல், அகல் விசும்புளார் கோமான்*
*இந்திரனே சாலும், கரி.* 25

ஐந்து ஆசைகளையும் ஒழித்த வல்லமைக்கு (கௌதம முனிவருடைய சாபத்துக்கு) இந்திரனே சாட்சியாக இருக்கிறான்.

*செயற்கு அரிய செய்வார் பெரியர்; சிறியர்*
*செயற்கு அரிய செய்கலாதார்.* 26

சிறப்பான செயலைச் செய்வார் பெரியோர், சிறியோரால் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய முடியாது.

*சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்று ஐந்தின்*
*வகை தெரிவான்கட்டே—உலகு.* 27

ஐந்து ஆசைகளின் உண்மைகளை அறிந்து, அவற்றை வசப்படுத்துகிறவனுடைய அறிவை உலகம் போற்றும்.

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டிவிடும்.* 28

மகான்களின் பெருமையை, அவர்கள் கூறிய அறிவுரைகளே நன்றாகத் தெரிவித்து விடும்.

*குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி*
*கணம் ஏயும், காத்தல் அரிது.* 29

நல்ல பண்புடையவரான, மலைபோன்ற பெரியோரின் கோபம் சிறிது நேரம் நின்றாலும், அதைத் தடுத்து நிறுத்த முடியாது.

*அந்தணர் என்போர் அறவோர்—மற்று எவ் உயிர்க்கும்*
*செந் தண்மை பூண்டு ஒழுகலான்.* 30

எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தும் அறவோரே மேன்மையானவர் (அந்தணர்) என்று கூறப்படுவர்.

## 4. அறன் வலியுறுத்தல்

## (நன்மையை உறுதிப்படுத்துவது)

*சிறப்பு ஈனும்; செல்வமும் ஈனும்; அறத்தின் ஊஉங்கு ஆக்கம் எவனோ, உயிர்க்கு?* **31**

நன்மையான செயல் பெருமையையும், செல்வத்தையும் தரும். ஆகையால், நன்மையைக் காட்டிலும், மனிதனுக்கு உயர்வானது வேறு எதுவும் இல்லை.

*அறத்தின் ஊஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை மறத்தலின் ஊங்கு இல்லை கேடு.* **32**

தருமத்தைக் காட்டிலும், நன்மையானது எதுவும் இல்லை. அதை மறப்பதைவிடத் தீமையானதும் வேறு இல்லை.

*ஒல்லும் வகையான், அறவினை, ஓவாதே, செல்லும்வாய் எல்லாம் செயல்.* **33**

முடிந்த வரையில், சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது எல்லாம், நன்மைகளை விடாமல் செய்ய வேண்டும்.

*மனத்துக்கண் மாசு இலன் ஆதல்; அனைத்து அறன்; ஆகுல நீர, பிற.* **34**

மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அதுவே அறம் என்பது. மனத் தூய்மை இல்லாதவை எல்லாம் வெளிப் பகட்டு.

*அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல், நான்கும் இழுக்கா இயன்றது—அறம்.* **35**

பொறாமை, பேராசை, கோபம், கடும்சொல் ஆகிய நான்கையும் நீக்கிவிட்டுச் செய்கின்ற காரியங்கள் அறம் ஆகும்.

***'அன்று அறிவாம்' என்னாது, அறம் செய்க; மற்று அது***
***பொன்றுங்கால் பொன்றாத் துணை.*** 36

பிறகு செய்யலாம் என்று எண்ணாமல், உடனே நன்மைகளைச் செய்துவிட வேண்டும். அதுவே, இறக்கும் பொழுது துணையாக நிற்கும்.

***'அறத்து ஆறு இது' என வேண்டா; சிவிகை***
***பொறுத்தானொடு ஊர்ந்தானிடை.*** 37

பல்லக்கைத் தாங்குபவனுக்கும், அதில் இருப்பவனுக்கும் இடையே, தருமத்தின் பயன் இதுவே என்று தெரிந்து கொள்ளலாம் (நன்மையான செயலைச் செய்தவன் பல்லக்கில் இருக்கிறான். நன்மை செய்யாதவன் அதைத் தூக்குகிறான் என்பது, தொழில் தெரிந்த காரணத்தால் அவன் தூக்குகிறான் என்றும் கருதலாம்).

***வீழ் நாள் படாஅமை நன்று ஆற்றின், அஃது ஒருவன்***
***வாழ் நாள் வழி அடைக்கும் கல்.*** 38

ஒருவன் எந்த நாளும் உதவிகளைச் செய்து கொண்டே இருந்தால், அவனுடைய வாழ்க்கையில் துன்பம் நேரிடாது.

***அறத்தான் வருவதே இன்பம்; மற்று எல்லாம்***
***புறத்த; புகழும் இல.*** 39

தருமத்தால் வரும் மகிழ்ச்சிதான் இன்பம், பிற எல்லாம் இன்பம் ஆகா, புகழும் இல்லை.

***செயற்பாலது ஓரும் அறனே; ஒருவற்கு***
***உயற்பாலது ஓரும் பழி.*** 40

தன் வாழ்நாளில் ஒருவன் செய்ய வேண்டியது தருமமே. செய்யாமல் விட்டு விட வேண்டியது பழி, குற்றச் செயல்.

# 5. இல்வாழ்க்கை

## (குடும்ப வாழ்க்கை)

***இல்வாழ்வான் என்பான் இயல்பு உடைய மூவர்க்கும்***
***நல்லாற்றின் நின்ற துணை.*** 41
மனைவி மக்களோடு வாழ்பவன் உறவினர், நண்பர், எளியவர் ஆகிய மூன்று வகையினருக்கும் உதவியாக இருப்பான்.

***துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும்,***
***இல்வாழ்வான் என்பான் துணை.*** 42
துறவிகளுக்கும், பசித்திருப்பவருக்கும், நிலைகெட்டவருக்கும் குடும்பத்தில் வாழ்பவனே துணையாக இருப்பான்.

***தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான், என்று ஆங்கு***
***ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை.*** 43
மூதாதையர், குலதெய்வம், உறவினர், விருந்தினர் வீட்டில் உள்ளவர் ஆகியோரை ஆதரிப்பது குடும்பத்தில் வாழ்பவன் கடமை.

***பழி அஞ்சிப் பாத்து ஊண் உடைத்தாயின், வாழ்க்கை***
***வழி எஞ்சல், எஞ்ஞான்றும், இல்.*** 44
நல்ல வழியில் சம்பாதித்து, முன்சொன்னபடி எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்பவனுடைய சந்ததிக்கு, ஒரு நாளும் குறைவு இல்லை.

***அன்பும் அறனும் உடைத்துஆயின், இல்வாழ்க்கை***
***பண்பும் பயனும் அது.*** 45
அன்பும், அறமும், உடையதாக குடும்ப வாழ்க்கை இருக்குமானால், அதுவே பண்பும், பயனும் பொருந்தியது ஆகும்.

*அறத்து ஆற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்து ஆற்றில்*
*போஒய்ப் பெறுவது எவன்?* 46

தருமத்தின் முறையோடு குடும்ப வாழ்க்கை நடத்துபவன் ஆனால், அவன் வேறு முறையில் சென்று, பெற வேண்டியது என்ன இருக்கிறது?

*இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*
*முயல்வாருள் எல்லாம் தலை.* 47

அறத்தின் இயல்போடு குடும்ப வாழ்க்கை வாழ்கின்றவன், மற்ற முயற்சி செய்கிற எல்லோரையும் விட மேன்மையானவன்.

*ஆற்றின் ஒழுக்கி, அறன் இழுக்கா இல்வாழ்க்கை*
*நோற்பாரின் நோன்மை உடைத்து.* 48

தருமத்தோடு குடும்ப வாழ்க்கை நடத்தி, மற்றவரையும் நல்ல வழியில் செலுத்துபவன் வாழ்வு, தவத்தை விடச் சிறந்தது.

*அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்*
*பிறன் பழிப்பது இல்ஆயின் நன்று.* 49

தருமம் என்று உயர்வாகக் கூறுவது, குடும்ப வாழ்க்கையே. அதுவும், மற்றவன் பழிக்காமல் இருந்தால், நன்மை ஆகும்.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்.* 50

உலகில், வாழும் முறைப்படி வாழ்கின்றவன், வானத்தில் உள்ள தெய்வத்தில் ஒருவனாகக் கருதி மதிக்கப்படுவான்.

# 6. வாழ்க்கைத் துணைநலம்

## (நல்ல மனைவி)

*மனைத் தக்க மாண்பு உடையள் ஆகி, தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத்துணை.* 51

குடும்பத்துக்குப் பெருமை ஏற்பட, கணவனுடைய வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கை நடத்துகின்றவள் நல்ல மனைவி ஆவாள்.

*மனை மாட்சி இல்லாள்கண் இல்ஆயின், வாழ்க்கை*
*எனைமாட்சித்து ஆயினும், இல்.* 52

மனைவியிடம், பெருமை தரக்கூடிய நல்ல பண்பு இல்லையானால், வேறு எவ்வளவு சிறப்பு இருந்தாலும், அதனால் நன்மை இல்லை.

*இல்லது என், இல்லவள் மாண்புஆனால்? உள்ளது என்,*
*இல்லவள் மாணாக்கடை?* 53

ஒழுக்கமும், நல்ல குணமும் மனைவியிடம் இருந்தால், அந்த வீட்டில் ஒரு குறையும் இல்லை. அப்படி இல்லாவிடில் பயன் இல்லை.

*பெண்ணின் பெருந்தக்க யா உள—கற்பு என்னும்*
*திண்மை உண்டாகப்பெறின்?* 54

ஒருவன் பெறுகின்ற செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வம், ஒழுக்கமும், மன உறுதியும் உடைய மனைவியை விட, வேறு என்ன இருக்கிறது?

*தெய்வம் தொழாஅள், கொழுநன்—தொழுது எழுவாள்,*
*'பெய்' என, பெய்யும், மழை.* 55

தெய்வத்தை வணங்காவிட்டாலும் கணவனைப் போற்றி வணங்குகிறவள், கோடை காலத்தில் பெய்யும் மழையைப் போன்றவள்.

*தற்காத்து, தற் கொண்டாற் பேணி, தகை சான்ற
சொற்காத்து, சோர்வு இலாள்—பெண்.* 56

ஒழுக்கத்தில் தன்னையும் தன் கணவனையும் காத்து, தகுதியான பெருமையையும் போற்றி, உறுதியோடு வாழ்கின்றவளே பெண்.

*சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை.* 57

பெண்கள், உறுதியால் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதே சிறப்பான பாதுகாப்பு. வேறு காவல் முறையால் எவ்விதப் பயனும் இல்லை.

*பெற்றாற் பெறின் பெறுவர், பெண்டிர், பெருஞ் சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.* 58

கணவனை மதித்துத் தன் கடமையைச் செய்தால், மனைவி சிறப்பு மிக்க மேலான உலக வாழ்வைப் பெறுவாள்.

*புகழ் புரிந்த இல் இலோர்க்கு இல்லை—இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.* 59

மனைவி ஒழுக்கம் இல்லாதவளாக இருந்தால், இகழ்ந்து பேசும் பகைவரின் முன்னே கணவன் சிங்கம் போல் கம்பீரமாகச் செல்ல இயலாது.

*'மங்கலம்' என்ப, மனைமாட்சி; மற்று அதன்
நன்கலம் நன் மக்கட் பேறு.* 60

மனைவியின் நல்ல பண்பே வாழ்க்கைக்கு நன்மை தரும். நல்ல மக்களைப் பெறுவதே அணிகலம் என்று கூறுவர்.

# 7. மக்கட்பேறு

## (மக்களைப் பெறுவது)

*பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை—அறிவு அறிந்த*
*மக்கட்பேறு அல்ல பிற.* 61

பெறவேண்டும் என்று விரும்புகின்ற நன்மைகளில், அறிவு உள்ள மக்களைப் பெறுவதைத் தவிர, வேறு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

*எழுபிறப்பும் தீயவை தீண்டா—பழி பிறங்காப்*
*பண்புடை மக்கட் பெறின்.* 62

பழி பாவங்களுக்குப் ஆளாகாத பண்புள்ள மக்களைப் பெற்று விட்டால், ஏழு தலைமுறைக்கும் துன்பங்கள் தொடரா.

*தம் பொருள் என்ப தம் மக்கள்; அவர் பொருள்*
*தம்தம் வினையான் வரும்,* 63

பெற்றோரின் செல்வம் அவர்களுடைய மக்கள்; அந்த மக்களின் செல்வம் அவரவர் செயலால் வருவது.

*அமிழ்தினும் ஆற்ற இனிதே—தம் மக்கள்*
*சிறு கை அளாவிய கூழ்.* 64

குழந்தைகளின் மென்மையான கையால் குழப்பிய சோறு, பெற்றோருக்கு அமிர்தத்தைவிட இனிமையாக இருக்கும்.

*மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்; மற்று அவர்*
*சொல் கேட்டல் இன்பம், செவிக்கு.* 65

பிள்ளைகளின் உடம்பைத்தொடுவது பெற்றோருக்கு இன்பம் தரும். அவர்களின் மழலைப் பேச்சு, காதுக்கு இனிமையாக இருக்கும்.

*'குழல் இனிது; யாழ் இனிது' என்ப—தம் மக்கள்*
*மழலைச் சொல் கேளாதவர்.* 66

தம்முடைய பிள்ளைகளின் மழலை மொழிகளைக் கேளாதவர், புல்லாங்குழல் ஒலியும் வீணையின் நாதமும் இனிமையானது என்று கூறுவர்

*தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து*
*முந்தி இருப்பச் செயல்.* 67

தந்தை மகனுக்குச் செய்ய வேண்டிய உதவி கற்றவர் குழுவில் முதலாவதாக இருக்கும்படி அவனைக் கல்வி அறிவு பெறச் செய்வது.

*தம்மின், தம் மக்கள் அறிவுடைமை மா நிலத்து*
*மன் உயிர்க்கு எல்லாம், இனிது.* 68

தம் மக்களின் அறிவுக் கூர்மை, தம்மைவிட உலகத்தாருக்கு மிகுந்த இன்பம் தரும்.

*ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்—தன் மகனைச்*
*சான்றோன் எனக் கேட்ட தாய்.* 69

தன் மகனை அறிவாளி எனப் பிறர் சொல்லக் கேட்ட தாய், அவனைப் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள்.

*மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, 'இவன் தந்தை*
*என் நோற்றான்கொல்!' எனும் சொல்.* 70

மகன் தன்னுடைய தந்தைக்குச் செய்ய வேண்டிய உதவி, "இவன் தந்தை, இப்படிப்பட்ட மகனைப் பெறுவதற்கு என்ன நன்மை செய்தானோ" என்று மற்றவர் புகழும்படி நடப்பது.

# 8. அன்பு உடைமை

## (அன்புடன் வாழ்வது)

*அன்பிற்கும் உண்டோ, அடைக்கும் தாழ்? ஆர்வலர்*
*புன் கணீர் பூசல் தரும்.* 71

அன்பு என்பது ஓர் உணர்ச்சி; அதை மூடி மறைத்து விட முடியாது. ஒருவர் அன்பானவர் என்பதைப் பிறருடைய துன்பத்தைக் கண்டு, உள்ளம் நெகிழ்ந்து, கண் கலங்குவதே காட்டிவிடும்.

*அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர்; அன்பு உடையார்*
*என்பும் உரியர், பிறர்க்கு.* 72

அன்பு இல்லாதவர், எல்லாவற்றையும் தானே அனுபவிப்பார்; அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறருக்குத் தந்து உதவுவார் (உழைப்பை அளிப்பார்).

*'அன்போடு இயைந்த வழக்கு' என்ப—'ஆர் உயிர்க்கு*
*என்போடு இயைந்த தொடர்பு'.* 73

அருமையான் உயிருக்கு, உடம்போடு இணைந்த தொடர்பானது அன்போடு இணைந்து வாழ்வதன் காரணமாக ஏற்படும் பயன் என்று கூறுவர்.

*அன்பு ஈனும், ஆர்வம் உடைமை; அது ஈனும்,*
*'நண்பு' என்னும் நாடாச் சிறப்பு.* 74

அன்பு ஒருவரை ஒருவர் விரும்புகின்ற ஆசையை உண்டாக்குகிறது. அதனால், நட்பு என்னும் தொடர்பு ஏற்படுகிறது.

*'அன்புற்று அமர்ந்த வழக்கு' என்ப—'வையகத்து*
*இன்புற்றார் எய்தும் சிறப்பு.'* 75

அன்போடு வாழ்கின்றதனால் ஏற்படுகின்ற நன்மையே, உலகத்தில் இன்பத்தோடு வாழ்கின்றவர் அடைகின்ற பெருமை.

*'அறத்திற்கே அன்பு சார்பு' என்ப, அறியார்;*
*மறத்திற்கும் அஃதே துணை.* 76

நல்ல காரியத்துக்கு மட்டுமே அன்பு உதவி செய்கின்றது என்று அறியாதவர் கூறுவர். பகையை நீக்குவதற்கும் அன்பு உதவுகிறது.

*என்பு இலதனை வெயில் போலக் காயுமே—*
*அன்பு இலதனை அறம்.* 77

எலும்பு இல்லாத புழுக்களை வெயில் சுடுவதுபோல், அன்பு இல்லா தவர்களை அறம் துன்புறுத்தும்.

*அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்*
*வற்றல்மரம் தளிர்த்தற்று.* 78

உள்ளத்தில் அன்பு இல்லாமல், உயிர் வாழ்வது பாலைவனத்தில் பட்ட மரம் தளிர்த்தது போன்றது.

*புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும்—யாக்கை*
*அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு?* 79

உடம்பின் உறுப்புகளில் உள்ளமும் ஒன்று, அதில் அன்பு இல்லாதவருக்கு, உடம்பின் வெளி உறுப்புகளால் என்ன நன்மை ஏற்படும்?

*அன்பின் வழியது உயிர்நிலை; அஃது இலார்க்கு,*
*என்பு தோல் போர்த்த, உடம்பு.* 80

அன்புடன் நடப்பவர்களின் உடம்பில் உயிர் உள்ளது; அன்பு இல்லாத உடம்பு தோலால் மூடப்பட்ட வெறும் எலும்புக் கூடு.

# 9. விருந்து ஓம்பல்

## (விருந்தினரை உபசரிப்பது)

*இருந்து ஓம்பி இல் வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி,*
*வேளாண்மை செய்தற்பொருட்டு.* *81*

பணத்தைச் சம்பாதித்து, மனைவி மக்களோடு வாழ்வது, வரும் விருந்தினர்களைப் போற்றி உபகாரம் செய்வதற்காகத்தான்.

*விருந்து புறத்ததாத் தான் உண்டல், சாவா*
*மருந்து எனினும், வேண்டற்பாற்று அன்று.* *82*

வந்த விருந்தினரை வெளியே இருக்கச்செய்து விட்டு, தான் மட்டும் உண்பது சாவா மருந்தான அமிர்தமே ஆனாலும், வெறுக்கத் தக்கது.

*வரு விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை*
*பருவந்து, பாழ்படுதல் இன்று.* *83*

நாள்தோறும் வருகின்ற விருந்தினரை உபசரிப்பவன் வாழ்க்கை, துன்பத்தால் வருந்திக் கெட்டுப் போகாது.

*அகன் அமர்ந்து செய்யாள் உறையும்—முகன் அமர்ந்து*
*நல் விருந்து ஓம்புவான் இல்.* *84*

விருந்தினரை முகமலர்ச்சியோடு போற்றுகின்றவனுடைய வீட்டில், செல்வமகள் வாழ்வாள் (பணம் பெருகும்).

*வித்தும் இடல்வேண்டும் கொல்லோ—விருந்து ஓம்பி,*
*மிச்சில் மிசைவான் புலம்?* *85*

விருந்தினருக்கு முதலில் உணவு அளித்து, மிஞ்சியதை உண்பவனின் நிலத்தில் விதை விதைக்காமலே விளையும் (ஊரார் ஒத்துழைப்பார்கள்).

*செல் விருந்து ஓம்பி, வரு விருந்து பார்த்திருப்பான்
நல் விருந்து, வானத்தவர்க்கு.* 86

வந்த விருந்தினரை உபசரித்து அனுப்பி, அடுத்து வரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன் தேவர்களுக்கு நல்ல விருந்தினனாகச் செல்வான்.

*இனைத் துணைத்து என்பது ஒன்று இல்லை; விருந்தின்
துணைத் துணை—வேள்விப் பயன்.* 87

விருந்து அளிப்பதற்கு இவ்வளவு என்ற கணக்கு இல்லை. எந்த அளவுக்குச் செய்தாலும், நல்ல காரியம் செய்த பலன் உண்டு.

*'பரிந்து ஓம்பி, பற்று அற்றேம்' என்பர்—விருந்து ஓம்பி
வேள்வி தலைப்படாதார்.* 88

விருந்தினரைப் போற்றி, உபசரிக்கும் நல்ல காரியத்தில் ஈடுபடாதவர், பாடுபட்டுப் பொருளைத் தேடி, அதை இழந்த பிறகு, செல்வத்தில் தங்களுக்கு ஆசை இல்லை என்று கூறுவார்.

*உடைமையுள் இன்மை விருந்து ஓம்பல் ஓம்பா
மடமை; மடவார்கண் உண்டு.* 89

பணவசதி இருந்தாலும் வறுமை இருக்கிறது என்றால், அது விருந்தினரை உபசரிக்காத முட்டாள்தனமாகும். அது அறிவு இல்லாதவரிடமே உள்ளது.

*மோப்பக் குழையும், அனிச்சம்;—முகம் திரிந்து
நோக்கக் குழையும், விருந்து.* 90

முகர்ந்ததுமே அனிச்சம்பூ வாடிப் போகும்; அன்பு இல்லாமல் பார்த்ததுமே விருந்தினர் உள்ளம் நொந்து விடும் (வெறுப்போடு பார்ப்பது).

# 10. இனியவை கூறல்

## (இனிமையாகப் பேசுவது)

*இன் சொல்—ஆல் ஈரம் அளைஇ, படிறு இலஆம்*
*செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்.* 91
வாழ்க்கையின் உண்மையை அறிந்தவர் வாயிலிருந்து வரும் சொற்கள் இனிமையாகவும், அன்பாகவும் வஞ்சனை இல்லாமலும் இருக்கும்.

*அகன் அமர்ந்து ஈதலின் நன்றே—முகன் அமர்ந்து*
*இன்சொலன் ஆகப்பெறின்.* 92
உள்ளம் கனிந்து ஒருவருக்கு ஏதேனும் பொருள் கொடுப்பதைவிட, முகமலர்ச்சியோடு இனிய சொற்களைக் கூறுவது நல்லது.

*முகத்தான் அமர்ந்து, இனிது நோக்கி, அகத்தான் ஆம்*
*இன் சொலினதே—அறம்.* 93
முகத்தில் மலர்ச்சி பொங்க, அன்புடன் பார்த்து, உள்ளம் மகிழும் இனிமையான வார்த்தைகளைக் கூறுவது அறம் (நல்ல வழி).

*துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும்—யார்மாட்டும்*
*இன்புறூஉம் இன்சொலவர்க்கு.* 94
யாரிடத்திலும் இன்பம் உண்டாகக் கூடிய இனிய சொற்களைப் பேசுகிறவருக்குத் துன்பம் தருகிற வறுமை ஏற்படுவதில்லை.

*பணிவு உடையன், இன் சொலன் ஆதல் ஒருவற்கு*
*அணி; அல்ல, மற்றுப் பிற.* 95
பணிவு உடையவனாகவும், இனிய சொற்களைப் பேசுபவனாகவும் இருப்பதே ஒருவனுக்கு அணிகலன் ஆகும். மற்றவை அணிகலன்கள் அல்ல.

*அல்லவை தேய அறம் பெருகும்—நல்லவை*
*நாடி, இனிய சொலின்.* 96

பிறருக்கு நன்மை தருவதை அறிந்து, இனிமையான சொற்களைச் சொன்னால், துன்பங்கள் ஒழியும்; நன்மை பெருகும்.

*நயன் ஈன்று நன்றி பயக்கும்—பயன் ஈன்று*
*பண்பின் தலைப்பிரியாச் சொல்.* 97

நன்மை உண்டாகும்படி சொல்லி பண்போடு இனிய வார்த்தைகள் பேசுகின்றவனுக்கு இன்பம் தந்து, நன்மையும் ஏற்படும்.

*சிறுமையுள் நீங்கிய இன்சொல், மறுமையும்*
*இம்மையும், இன்பம் தரும்.* 98

பிறருக்குத் துன்பம் உண்டாகாத இனிய சொற்களைக் கூறுகிறவனுக்கு அப்பொழுதும் பிறகும் நன்மை உண்டாகும்.

*இன் சொல் இனிது ஈன்றல் காண்பான், எவன்கொலோ—*
*வன் சொல் வழங்குவது?* 99

இனிமையான சொல்லால் இன்பம் தருவதைக் கண்ட பிறகும், கடுமையான சொற்களைப் பேசுவது ஏனோ?

*இனிய உளவாக இன்னாத கூறல்—*
*கனி இருப்ப, காய் கவர்ந்தற்று.* 100

இனிமையான சொற்கள் இருக்கும்போது அவற்றை விட்டு, கடுமையான சொற்களைக் கூறுவது, பழம் இருக்கும்போது காயைப் பறித்துத் தின்பது போன்றது.

# 11. செய்ந்நன்றி அறிதல்

## (பிறர் செய்த உதவியை அறிவது)

*செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்றல் அரிது.* **101**

நாம் ஓர் உதவியும் செய்யாத போது, பிறர் நமக்கு செய்த உதவிக்குக் கைம்மாறாக விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் கொடுத்தாலும் ஈடு ஆகாது.

*காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்,*
*ஞாலத்தின் மாணப் பெரிது.* **102**

தகுந்த சமயத்தில், ஒருவர் செய்த உதவி சிறிதாக இருந்தாலும், அதன் பயன், உலகத்தை விடப் பெரிதாகும்.

*பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்,*
*நன்மை கடலின் பெரிது.* **103**

என்ன நன்மை கிடைக்கும் என்று எண்ணாமல் ஒருவர், அன்புடன் செய்த உதவியை உணர்ந்தால், அதன் பயன் கடலை விடப் பெரியதாகும்.

*தினைத் துணை நன்றி செயினும், பனைத் துணையாக்*
*கொள்வர்—பயன் தெரிவார்.* **104**

தினை அளவு ஒருவர் உதவி செய்தாலும், அதன் பயனை உணர்ந்தவர், அதனைப் பனையளவாக எண்ணிப் போற்றுவர் (தினை, பனை என்று கூறியது அளவைக் கருதி).

*உதவி வரைத்து அன்று, உதவி; உதவி*
*செயப்பட்டார் சால்பின் வரைத்து.* **105**

ஒருவர் செய்த உதவியின் மதிப்பு எவ்வளவு என்று தீர்மானிப்பது அல்ல; அந்த உதவியைப் பெற்றுக் கொண்டவரின் பெருந்தன்மையைப் பொறுத்தது.

*மறவற்க, மாசு அற்றார் கேண்மை! துறவற்க*
*துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு!* **106**

நல்லவர் நட்பை ஒருபோதும் மறக்கக் கூடாது. அதுபோல, துன்பம் ஏற்பட்டபோது உதவி செய்தவரை, மறந்து விடக்கூடாது.

*எழுமை எழு பிறப்பும் உள்ளுவர்—தம்கண்*
*விழுமம் துடைத்தவர் நட்பு.* **107**

துன்பமான நேரத்தில் வந்து, துன்பத்தைப் போக்கியவரின் நட்பை, ஏழேழு தலைமுறைகளிலும் நினைத்துப் போற்றுவர்.

*நன்றி மறப்பது நன்று அன்று; நன்று அல்லது*
*அன்றே மறப்பது நன்று.* **108**

முன்பு ஒருவர் செய்த நன்மையை மறந்து விடுவது நல்லது அல்ல. பிறகு அவர் தீமை செய்தாலும் அதை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

*கொன்றன்ன இன்னா செயினும், அவர் செய்த*
*ஒன்றும் நன்று உள்ள, கெடும்.* **109**

ஒருவர் நம் உயிருக்குத் துன்பம் ஏற்படும்படியான தீங்கைச் செய்தாலும், முன்பு அவர் செய்த நன்மை ஒன்றை நினைத்தாலும், அந்தத் தீமை அழிந்து விடும்.

*எந் நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்; உய்வு இல்லை,*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு.* **110**

எந்த நல்ல காரியத்தை அழித்தவருக்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டு. ஆனால், துன்பத்தில் செய்த உதவியை அழித்த மக்களுக்கு வாழ்வே இல்லை.

# 12. நடுவு நிலைமை

## (நடுநிலைமை தவறாமல் நடப்பது)

*தகுதி என ஒன்றும் நன்றே—பகுதியான்*
*பாற்பட்டு ஒழுகப்பெறின்.* **111**

ஒவ்வொரு வகையிலும், நடுநிலைமையோடு நடந்து கொண்டால், அந்தக் கொள்கை நன்மை தரும்.

*செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவு இன்றி,*
*எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.* **112**

நடுநிலைமையோடு நடப்பவனுடைய செல்வ வசதி அழியாமல், அவனுடைய பரம்பரைக்கும் நிலையான நன்மையைத் தரும்.

*நன்றே தரினும்; நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை*
*அன்றே ஒழியவிடல்!* **113**

தீமைக்கு இடமில்லாமல், நன்மையே தருவதானாலும், நடுநிலைமை தவறி வரும் செல்வத்தை அப்பொழுதே கைவிட வேண்டும்.

*தக்கார் தகவு இலர் என்பது அவர் அவர்*
*எச்சத்தால் காணப்படும்.* **114**

நடுநிலைமை உள்ளவர், இல்லாதவர் என்பதை அவரவருக்குப் பிறகு ஏற்படும் புகழாலும், பழியாலும் காணலாம்.

*கேடும் பெருக்கமும் இல் அல்ல; நெஞ்சத்துக்*
*கோடாமை சான்றோர்க்கு அணி.* **115**

துன்பமும், செல்வமும் வாழ்வில் இல்லாதவை அல்ல; ஆதலால், உள்ளத்தில் நடுநிலைமை பிசகாமல் இருப்பதே பெரியோருக்குப் பெருமை.

*'கெடுவல் யான்' என்பது அறிக—தன் நெஞ்சம்*
*நடுவு ஒரீஇ, அல்ல செயின்.* **116**

மனம் நடுநிலைமை தவறி நடக்க நினைக்குமானால், "நான் கெட்டு அழியப் போகிறேன்" என்று அவன் அறிந்து கொள்ள வேண்டும் (மனச்சாட்சி அப்படி உறுத்தும்).

*கெடுவாக வையாது உலகம்—நடுவாக*
*நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.* **117**

நடுநிலைமையில் நின்று, நல்ல வழியில் நடந்தவனுடைய வாழ்வில் அவன் அடைந்த வறுமையை, உலகம் ஒருபோதும் கேவலமாக நினைக்காது.

*சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்து, ஒருபால்*
*கோடாமை—சான்றோர்க்கு அணி.* **118**

சமநிலையில் நின்று பொருளின் அளவு காட்டும் தராசு போல, ஒரு சார்பாகச் சாயாமல், நடுநிலைமையோடு நடந்து கொள்வதே பெரியோருக்கு பெருமை.

*சொற் கோட்டம் இல்லது, செப்பம்—ஒருதலையா*
*உட் கோட்டம் இன்மை பெறின்.* **119**

உள்ளத்தில் கோணல் இல்லாமல், உறுதியாக இருந்தால், சொல்லிலும் கோணல் இல்லாமல் நடுநிலைமை தோன்றும்.

*வாணிகம் செய்வார்க்கு வாணிகம்—பேணிப்*
*பிறவும் தமபோல் செயின்.* **120**

பிறருடைய பொருளையும், தம்முடைய பொருளைப் போல் போற்றி வியாபாரம், செய்வதே நல்ல வியாபார முறைக்கு அடையாளம்.

## 13. அடக்கம் உடைமை

## (அடக்கத்தோடு நடந்து கொள்வது)

*அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை*
*ஆர் இருள் உய்த்துவிடும்* **121**

அடக்கத்தோடு நடப்பவரை உயர்வாக, தேவர்களோடு சேர்க்கும், அடக்கம் இல்லாதவரை இருள் போன்ற தீய வழியில் தள்ளிவிடும்.

*காக்க, பொருளா அடக்கத்தை—ஆக்கம்*
*அதனின் ஊங்கு இல்லை, உயிர்க்கு!* **122**

அடக்கத்தை உறுதியாகக் கொண்டு நடக்க வேண்டும். அதைவிட மனிதனுக்கு மேலான செல்வம் வேறு இல்லை.

*செறிவு அறிந்து சீர்மை பயக்கும்—அறிவு அறிந்து*
*ஆற்றின் அடங்கப்பெறின்.* **123**

அறிவதை அறிந்து, அடக்கத்தோடு நடந்து கொண்டால், அந்த அடக்கம் நல்லோரால் அங்கீகரிக்கப் பட்டு, மேன்மை உண்டாக்கும்.

*நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது.* **124**

தன்னுடைய கொள்கையை விட்டு விடாமல், பணிவோடு நடந்து கொள்கிறவனுடைய தோற்றம் மலையை விட மிகவும் பெரிதாகத் தெரியும்.

*எல்லார்க்கும் நன்று ஆம், பணிதல்; அவருள்ளும்*
*செல்வர்க்கே செல்வம் தகைத்து.* **125**

பணிவோடு நடந்து கொள்வது, எல்லோருக்குமே நன்மை தரும். சிறப்பாக பணக்காரருக்கு, அதுவும் வேறொரு செல்வம் போன்றது.

*ஒருமையுள், ஆமைபோல், ஐந்து அடக்கல் ஆற்றின்,*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து.* *126*
ஆமையானது தன் உறுப்புகளை ஓட்டுக்குள் அடக்கிக் கொள்வதைப் போல, ஐந்து புலன்களையும் அடக்கிக் கொள்கிறவர் ஏழேழு தலைமுறைக்கும் பெருமை அடைவார்.

*யா காவார் ஆயினும், நா காக்க; காவாக்கால்,*
*சோகாப்பர், சொல் இழுக்குப் பட்டு.* *127*
எவற்றை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்கிக் கொள்ள வேண்டும். தவறினால், பேச்சில் குற்றம் ஏற்பட்டு துன்பம் அடைவர்.

*ஒன்றானும் தீச்சொற் பொருட் பயன் உண்டாயின்,*
*நன்று ஆகாது ஆகிவிடும்.* *128*
தீய சொல்லின் அர்த்தத்தால் ஏற்படுகின்ற தீமை ஒன்றுதான் என்ற போதிலும், அதனால் மற்ற நல்ல செயல்களால் நன்மை ஏற்படாமல் கெட்டுப் போய்விடும்.

*தீயினால் சுட்ட புண் உள் ஆறும்;–ஆறாதே,*
*நாவினால் சுட்ட வடு.* *129*
நெருப்பினால் சுட்ட புண் ஆறிவிடும். ஆனால், நாவினால் கூறி பழிச்சொல்லான வடு ஆறவே ஆறாது.

*கதம் காத்து, கற்று அடங்கல் ஆற்றுவான் செவ்வி*
*அறம் பார்க்கும், ஆற்றின் நுழைந்து.* *130*
கோபத்தை அடக்கி, கற்று அறிந்து பணிவோடு நடக்கின்ற வனை நல்வாழ்வு எதிர்கொண்டு வரவேற்கக் காத்திருக்கும்.

# 14. ஒழுக்கம் உடைமை

## (நல்ல ஒழுக்கத்தோடு வாழ்வது)

*ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.* 131

நல்ல நடத்தையே ஒருவருக்கு மேன்மையைத் தரும். அதனால் நல்ல நடத்தையை உயிரைக் காட்டிலும் சிறப்பாகப் போற்ற வேண்டும்.

*பரிந்து ஓம்பிக் காக்க, ஒழுக்கம்—தெரிந்து ஓம்பித்
தேரினும், அஃதே துணை!* 132

எவ்வளவு கற்றுத் தெளிந்த போதிலும், நல்ல நடத்தையே வாழ்க்கைக்கு மிகவும் துணையாக அமைவதால், அதை விரும்பிப் பாதுகாக்க வேண்டும்.

*ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய்விடும்.* 133

ஒழுக்கம் உள்ளவராக இருப்பதே குடும்பத்துக்குப் பெருமையாகக் கருதப்படும். ஒழுக்கம் கெட்டு விட்டால், குடும்பத்துக்கு கேவலம் ஏற்பட்டு விடும்.

*மறப்பினும், ஒத்துக் கொளல்ஆகும்; பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்.* 134

கற்றதை மறந்தாலும், மீண்டும் படித்து அறிந்து கொள்ளலாம்; ஆனால், நடத்தை கெட்டு விட்டால், குடும்பத்தின் பெருமை சீர் அழிந்து விடும்.

*அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை—
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.* 135

பொறாமை உள்ளவனிடம் செல்வம் தங்காது. அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.

*ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்—இழுக்கத்தின்*
*ஏதம் படுபாக்கு அறிந்து.* *136*
ஒழுக்கம் கெடுவதால் குற்றம் ஏற்படுவதை உணர்ந்து, மனஉறுதி உடைய பெரியோர் ஒழுக்கம் கெடாமல் காத்துக் கொள்வர்.

*ஒழுக்கத்தின் எய்துவர், மேன்மை; இழுக்கத்தின்*
*எய்துவர், எய்தாப் பழி.* *137*
ஒழுக்கத்தைக் கைக்கொண்டவர் பெருமை அடைவார். ஒழுக்கம் இல்லாதவர் மீளாத பழியை அடைவார்.

*நன்றிக்கு வித்து ஆகும், நல் ஒழுக்கம்; தீ ஒழுக்கம்*
*என்றும் இடும்பை தரும்.* *138*
இன்பமான நல்வாழ்வுக்கு விதை விதைப்பது போன்றது நல்ல ஒழுக்கம். கெட்ட நடத்தை எப்பொழுதும் துன்பத்தையே தரும்.

*ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே—தீய*
*வழுக்கியும், வாயால் சொலல்.* *139*
ஒழுக்கம் உடையவர் தவறிக் கூடத் தம் வாயால், கெட்ட வார்த்தைகளைச் சொல்ல மாட்டார்.

*உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பல கற்றும்,*
*கல்லார் அறிவிலாதார்.* *140*
எவ்வளவு கற்றவரானாலும், உலகத்தில் உள்ள உயர்ந்தவரோடு ஒத்து வாழத் தெரியாதவர், அறிவில்லாதவரே (அறிவு உடையர் புத்திசாலித்தனமாக ஒத்துப் போவார்).

# 15. பிறன் இல் விழையாமை

*(பிறர் மனைவியிடம் ஆசையை வைக்காமல் இருப்பது)*

*பிறன்பொருளாள்–பெட்டு ஒழுகும் பேதைமை ஞாலத்து*
*அறம், பொருள், கண்டார்கண்இல்.* **141**

பிறனொருவனுடைய மனைவியிடம் காம இச்சை கொண்டு அலைகிற மூடத்தனம் இல்லற ஒழுக்கத்தை அறிந்தவர்களிடம் இருக்காது.

*அறன்கடை நின்றாருள் எல்லாம், பிறன்கடை*
*நின்றாரின், பேதையார் இல்.* **142**

இல்லற ஒழுக்கத்தில் தவறுகிறவர் எல்லாரிலும் பிறனொருவனுடைய மனைவியிடம் ஆசைப்பட்டு, அவன் வீட்டுக்குப் போகிறவனை விட மூடன் வேறு யாரும் இல்லை.

*விளிந்தாரின் வேறு அல்லர் மன்ற–தெளிந்தார் இல்*
*தீமை புரிந்து ஒழுகுவார்.* **143**

தன்னிடம் மிகவும் நம்பிக்கை வைத்திருப்பவனின் மனைவியிடம் காமம் கொண்டு தீமையைச் செய்கிறவன் செத்த பிணத்தைப் போன்றவனே.

*எனைத் துணையர் ஆயினும் என்னாம்–தினைத் துணையும்*
*தேரான், பிறன் இல் புகல்?* **144**

சிறிதும் எண்ணிப் பாராமல், பிறனொருவனின் மனைவியிடம் காமம் கொண்டு, அந்த வீட்டுக்குள் நுழைகிறவன், எப்படிப்பட்ட பெருமை வாய்ந்தவன் ஆனாலும் என்ன பயன்? (கௌரவம் போய் விடும்.).

*'எளிது' என இல் இறப்பான் எய்தும்–எஞ் ஞான்றும்*
*விளியாது நிற்கும் பழி.* **145**

சுலபம் என்று எண்ணி, பிறனொருவனுடைய மனைவியிடம் ஒழுக்கம் தவறிச் செல்கிறவன் எப்பொழுதும் நீங்காத பழியை அடைவான்.

*பகை, பாவம், அச்சம், பழி, என நான்கும்*
*இகவா ஆம்—இல் இறப்பான்கண்.* 146

பிறருடைய மனைவியிடம் ஒழுக்கம் தவறிச் செல்கிறவனிடம் விரோதம், துயரம், பயன், பழி ஆகிய நான்கும் எப்போதும் குடிகொண்டிருக்கும்.

*அறன் இயலான் இல்வாழ்வான் என்பான்—பிறன் இயலாள்*
*பெண்மை நயவாதவன்.* 147

இல்லற ஒழுக்கத்தோடு வாழ்கிறவன், பிறனொருவனுடைய மனைவி யிடம் காம இன்பத்தை விரும்ப மாட்டான்.

*பிறன் மனை நோக்காத பேர் ஆண்மை, சான்றோர்க்கு*
*அறன் ஒன்றே? ஆன்ற ஒழுக்கு.* 148

பிறனொருவனுடைய மனைவியைக் காம இச்சையோடு பார்க்காத மன உறுதியை அறிவுடையோர் தருமமாகக் கொள்வார்கள். அது அவர்களுடைய ஒழுக்கமாகும்.'

*'நலக்கு உரியார் யார்?' எனின், நாம நீர் வைப்பில்*
*பிறற்கு உரியாள் தோள் தோயாதார்.* 149

கடல் சூழ்ந்த உலகில் மெச்சத்தக்கவர் யார் என்றால், பிறனொருவனுடைய மனைவியைக் காம இச்சை யினால் தீண்டாதவரே.

*அறன் வரையான், அல்ல செயினும், பிறன் வரையாள்*
*பெண்மை நயவாமை நன்று.* 150

ஒருவன் நல்ல காரியங்களைச் செய்யாமல், தீய செயல்களைச் செய்தாலும், பிறனொருவனுடைய மனைவியை விரும்பாமல் வாழ்ந்தால் நல்லது.

# 16. பொறை உடைமை

## (பொறுமையோடு இருப்பது)

*அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல, தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை.* **151**

நிலமானது தன்னை வெட்டுகின்றவரையும் தாங்கிக் கொண்டிப்பதைப் போல, தம்மை இகழ்ந்து பேசுவோரைப் பொறுத்துக் கொள்வதே சிறந்த பண்பு.

*பொறுத்தல், இறப்பினை என்றும்; அதனை*
*மறத்தல் அதனினும் நன்று.* **152**

ஒருவர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொள்வது நல்லது. மேலும் அந்தத் தீங்கையே நினைத்துக் கொண்டிருக்காமல், அப்பொழுதே அதை மறந்து விடுவது, பொறுத்துக் கொள்வதிலும் நன்மை ஆகும்.

*இன்மையுள் இன்மை விருந்து ஒரால்; வன்மையுள்*
*வன்மை மடவார்ப் பொறை.* **153**

வறுமையிலும் வறுமை, வந்த விருந்தினரை உபசரிக்காமல் இருப்பது வலிமையிலும் வலிமை அறிவில்லாதவர் செய்த தீங்கைச் சகித்துக் கொள்வது.

*நிறை உடைமை நீங்காமை வேண்டின், பொறை உடைமை*
*போற்றி ஒழுகப்படும்.* **154**

நிறைந்த குணம் உள்ளவன் என்ற பெருமை தன்னை விட்டு நீங்காமல் இருக்க வேண்டுமானால், பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும்.

*ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்,*
*பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.* **155**

தீங்கு செய்தவருக்குத் திருப்பி தீங்கு செய்கிறவரை உலகத்தார் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார்கள். ஆனால், தீங்கைப் பொறுத்துக் கொண்டவரைப் பொன்போல் உள்ளத்தில் வைத்துப் போற்றுவர்.

*ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்; பொறுத்தார்க்குப்*
*பொன்றும் துணையும் புகழ்.* **156**

தீங்கு செய்தவருக்கு உடனே, பதிலுக்கு தீங்கு செய்வதால் அப்போதைக்கு இன்பம் ஏற்படும். ஆனால், அதைப் பொறுத்துக் கொண்டவருக்கு உலகம் உள்ளவரை புகழ் உண்டு.

*திறன் அல்ல தன்–பிறர் செய்யினும், நோ நொந்து,*
*அறன் அல்ல செய்யாமை நன்று.* **157**

செய்யத்தகாத தீங்கை ஒருவன் தனக்குச் செய்தாலும், அதனால் அவனுடைய செயலுக்கு வருந்தி, தீய செயல் எதையும் அவனுக்குச் செய்யாமல் இருப்பது நல்லது.

*மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம் தம்*
*தகுதியான் வென்றுவிடல்!* **158**

ஒருவன் கர்வத்தால் தீங்கைச் செய்தாலும் அவனைத் தன்னுடைய மிகுந்த பொறுமையால் வெற்றி கொள்ள வேண்டும்.

*துறந்தாரின் தூய்மை உடையர்–இறந்தார்வாய்*
*இன்னாச் சொல் நோற்கிற்பவர்.* **159**

தீயவழியில் நடப்பவரின் வாயிலிருந்து வரும் கடும் சொற்களைப் பொறுத்துக் கொள்பவர் துறவியரைப் போல் மேலானவர்.

*உண்ணாது நோற்பார் பெரியார்–பிறர் சொல்லும்*
*இன்னாச் சொல் நோற்பாரின் பின்.* **160**

உண்ணாமல் தவம் இருப்பவர் கூட, பிறர் கூறும் கடும் சொற்களைப் பொறுத்துக் கொள்கின்றவருக்கு அடுத்த நிலையில்தான் பெரியோர் ஆவார்.

# 17. அழுக்காறாமை

## (பொறாமைப்படாமல் இருப்பது)

*ஒழுக்கு ஆறாக் கொள்க—ஒருவன் தன் நெஞ்சத்து*
*அழுக்காறு இல்லாத இயல்பு!* **161**

ஒருவன் தன்னுடைய உள்ளத்தில் பொறாமை இல்லாமல், வாழும் இயல்பை ஒழுக்கத்தின் சிறந்த முறையாகக் கொள்ள வேண்டும்.

*விழுப்பேற்றின் அஃது ஒப்பது இல்லை – யார்மாட்டும்*
*அழுக்காற்றின் அன்மை பெறின்.* **162**

எவருடைய நல்வாழ்வைக் கண்டும் பொறாமைப்படாத மனப்பண்பை அடைந்து விட்டால், விருப்பத்தக்க சிறப்பான செல்வங்களில் அதற்கு இணையானது வேறு இல்லை.

*அறன், ஆக்கம், வேண்டாதான் என்பான் பிறன் ஆக்கம்*
*பேணாது அழுக்கறுப்பான்.* **163**

தனக்கு நன்மையும், பயனும் உண்டாக வேண்டாம் என்று நினைப்பவனே மற்றவனுடைய உயர்வைப் பார்த்து மகிழாமல் பொறாமைப் படுவான்.

*அழுக்காற்றின் அல்லவை செய்யார்—இழுக்கு ஆற்றின்*
*ஏதம் படுபாக்கு அறிந்து.* **164**

பொறாமைப்படக் கூடிய தவறான முறை தமக்குத் துன்பம் ஏற்படுகின்றதை அறிந்து, பொறாமை காரணமாக நன்மை அல்லாதவற்றைச் செய்ய மாட்டார் அறிவுடையோர்.

*அழுக்காறு உடையார்க்கு அது சாலும்—ஒன்னார்*
*வழுக்கியும் கேடு ஈன்பது.* **165**

பொறாமை உள்ளவருக்கு வேறு பகை வேண்டாம். அது ஒன்றே போதும். பகைவர் தீங்கு செய்யத் தவறினாலும், பொறாமையே அவருக்குக் கெடுதலைத் தரும்.

*கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்*
*உண்பதூஉம் இன்றிக் கெடும்.* **166**
பிறருக்கு ஒருவர் உதவியைக் கண்டு பொறாமைப் படுகிறவன் அவனும் உறவினரும் உடுத்த உடையும், உண்ண உணவும் இல்லாமல் அழிய நேரிடும்.

*அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்*
*தவ்வையைக் காட்டி விடும்.* **167**
பொறாமைப்படுகிறவனைக் கண்டு திருமகள் பொறாமைப் பட்டு, தன் அக்காளுக்கு அவனைக் காட்டிவிட்டு நீங்கி விடுவாள் (திருமகளுக்கு அக்காள் மூதேவி).

*அழுக்காறு என ஒரு பாவி திருச் செற்று,*
*தீயுழி உய்த்துவிடும்.* **168**
பொறாமை எனப்படும் ஒப்பற்ற பாவி, ஒருவனுடைய செல்வத்தையும் அழித்து, அவனையும் தீய வழியில் தள்ளி விடும்.

*அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான்*
*கேடும், நினைக்கப்படும்.* **169**
பொறாமைக் குணம் உள்ளவனுடைய உயர்வும், பொறாமைக் குணம் இல்லாதவனுடைய தாழ்ந்த நிலையும் ஆராய்ந்து பார்க்கத் தக்கவை.

*அழுக்கற்று அகன்றாரும் இல்லை; அஃது இல்லார்*
*பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.* **170**
பொறாமைப்பட்டு செல்வம் பெற்றவரும் இல்லை; பொறாமைப்படாதவர் செல்வம் பெறாமலும் இல்லை.

# 18. வெஃகாமை

## (மற்றவருடைய பொருளுக்கு ஆசைப்படாமல் இருப்பது)

*நடுவு இன்றி நன் பொருள் வெஃகின், குடி பொன்றி,*
*குற்றமும் ஆங்கே தரும்.* **171**

நியாயம் இல்லாமல், மற்றவருடைய நல்ல பொருளை ஒருவன் கவர்ந்து கொண்டால், அவனுடைய குடும்பமும் கெட்டுக் குற்றமும் வந்து சேரும் (கவர்தல் என்பது, திருடுதல், கைப் பற்றுதல், மோசம் செய்தல்).

*படு பயன் வெஃகி, பழிப்படுவ செய்யார்—*
*நடுவு அன்மை நாணுபவர்.* **172**

நியாயம் தவறி நடக்க நாணப்பட்டு ஒதுங்குகின்றவர், பிறருடைய பொருளைக் கவர்வதால் வரக்கூடிய லாபத்தை நினைத்துப் பழியான செயலைச் செய்ய மாட்டார்.

*சிற்றின்பம் வெஃகி, அறன் அல்ல செய்யாரே—*
*மற்று இன்பம் வேண்டுபவர்.* **173**

நல்ல வழியில் பெறக்கூடிய இன்பத்தை விரும்பு கின்றவர், நிலையற்ற சிறிய இன்பத்துக்காக ஆசைப் பட்டுத் தீய காரியங்களைச் செய்ய மாட்டார்.

*'இலம்' என்று வெஃகுதல் செய்யார்—புலம் வென்ற*
*புன்மை இல் காட்சியவர்.* **174**

ஐந்து புலன்களையும் வென்ற, குற்றமற்ற அறிவு உள்ளவர், தம்மிடம் செல்வம் இல்லையே என்பதற்காகப் பிறருடைய பொருளைக் கவர்ந்து கொள்ள ஆசைப்பட மாட்டார்.

*அஃகி அகன்ற அறிவு என் ஆம்—யார்மாட்டும்*
*வெஃகி, வெறிய செயின்?* **175**

ஆழ்ந்த அறிவுள்ளவர், பிறருடைய பொருளைக் கவர விரும்பி, தீய செயலைச் செய்வாரானால், அவருடைய விரிந்த அறிவினால் என்ன பயன்? அறிவு உடையோர் அத்தகைய செயலில் ஈடுபட மாட்டார்.

*அருள் வெஃகி, ஆற்றின்கண் நின்றான், பொருள் வெஃகிப்*
*பொல்லாத சூழ, கெடும்.* *176*

கருணையை விரும்பி, நல்ல வழியில் நிற்பவன், மற்றவருடைய பொருளுக்கு ஆசைப்பட்டுப் பொல்லாத குற்றங்களைச் செய்ய எண்ணினால், கெட்டுப் போவான்.

*வேண்டற்க, வெஃகி ஆம் ஆக்கம்—விளைவயின்*
*மாண்டற்கு அரிது ஆம் பயன்!* *177*

பிறருடைய பொருளைக் கவர ஆசைப்படுவதால் வரும் பயனை விரும்ப வேண்டாம். அதனால், நன்மை அடைய முடியாது.

*'அஃகாமை செல்வத்திற்கு யாது?' எனின், வெஃகாமை*
*வேண்டும் பிறன் கைப் பொருள்.* *178*

இருக்கின்ற செல்வம் குறையாமல் இருக்க வழி என்ன என்றால், பிறருடைய பொருளுக்கு ஆசைப்படாமல் இருப்பதே சரியான வழி.

*அறன் அறிந்து வெஃகா அறிவு உடையார்ச் சேரும்—*
*திறன் அறிந்து ஆங்கே திரு.* *179*

நல்லது இது என்று உணர்ந்து பிறருடைய பொருளை விரும்பாத அறிவுள்ளவரைச் செல்வ மகள்(திருமகள்) அவருடைய தகுதியை அறிந்து சேர்வாள் (யோக்கியதை உள்ளவர்களுக்கு எப்படியாகிலும் செல்வம் கிடைக்கும்).

*இறல் ஈனும், எண்ணாது வெஃகின்; விறல் ஈனும்,*
*வேண்டாமை என்னும் செருக்கு.* *180*

ஆலோசிக்காமல் பிறருடைய பொருளை இச்சித்தால் அது அழிவை ஏற்படுத்தும். அதை விரும்பாமல் வாழும் பெருமையானது வெற்றியைத் தரும்.

## 19. புறம் கூறாமை

## (கோள் சொல்லாமல் இருப்பது)

*அறம் கூறான், அல்ல செயினும், ஒருவன்*
*புறம் கூறான் என்றல் இனிது.* 181

ஒருவன், நன்மை தரக் கூடியதைச் சொல்லாதவனாக, தீயவற்றைச் செய்தாலும் பிறனொருவனைப் பற்றி இழிவாகப் பேச மாட்டான் என்பது நல்லது.

*அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீதே—*
*புறன் அழீஇப் பொய்த்து நகை.* 182

நல்லன செய்வதை விடுத்து, தீயன புரிவதைவிட. ஒருவரைக் காணாத இடத்தில் அவரைப் பழித்துப் பேசி, கண்ட இடத்தில் பொய்யாக சிரித்துப் பேசுவது தீமை.

*புறம் கூறி, பொய்த்து, உயிர் வாழ்தலின், சாதல்*
*அறம் கூறும் ஆக்கம் தரும்.* 183

கோள் சொல்லிப் பொய்யாக உயிர் வாழ்வதை விட வறுமையினால் சாவது, அறுநூல் கூறும் பயனைத் தரும்.

*கண் நின்று, கண் அறச் சொல்லினும், சொல்லற்க—*
*முன் இன்று பின் நோக்காச் சொல்.* 184

ஒருவன் எதிரில் நின்று தாட்சண்யம் இல்லாமல், கடும் சொற்களைச் சொன்னாலும் குற்றம் இல்லை. ஆனால், ஒருவன் இல்லாத போது, பின்னால் வருவதை எண்ணாத சொல்லைச் சொல்லக் கூடாது.

*அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம் சொல்லும்*
*புன்மையால் காணப்படும்.* 185

நல்லதைப் போற்றும் மனம் இல்லாத தன்மை, ஒருவன் மற்றவனைப் பற்றிக் கோள் சொல்லுகின்ற அற்பத்தனத்தால் தெரிந்து கொள்ளலாம். (கோள் சொல்லுகிறவன் கடையன்)

*பிறன் பழி கூறுவான் தன் பழியுள்ளும்*
*திறன் தெரிந்து கூறப்படும்.* 186

மற்றவனைப் பற்றி பழி கூறுகிறவன், தன் குற்றங்களையும் ஆராய்ந்து, அவ்வாறு மற்றவர் பழித்துக் கூறுவதற்கு ஆளாவான்.

*பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்—நகச் சொல்லி*
*நட்பு ஆடல் தேற்றாதவர்.* 187

மகிழ்ச்சியோடு பேசி, நட்புக் கொள்ளும் நன்மை அறியாதவர் ஒருவரோடு ஒருவர் சேராதபடி கோள் சொல்லி, நண்பரையும் பிரித்து விடுவார்.

*துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்,*
*என்னைகொல், ஏதிலார்மாட்டு?* 188

நண்பர்களின் குற்றத்தையும், கோள் சொல்லித் திரிகின்ற இயல்புள்ளவர் முன்பின் அறியாதவர்களை என்ன செய்ய மாட்டாரோ?

*அறன் நோக்கி ஆற்றும்கொல் வையம்—புறன் நோக்கிப்*
*புன் சொல் உரைப்பான் பொறை?* 189

ஒருவன் இல்லாத நேரம் பார்த்து, அவனைப் பற்றி பழி சொல்லுகிறவனுடைய உடல் பாரத்தையும், இந்தப் பூமி சுமந்து கொண்டிருப்பது தன் கடமையைக் கருதியோ?

*ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின்,*
*தீது உண்டோ, மன்னும் உயிர்க்கு?* 190

மற்றவருடைய குற்றத்தைக் காண்பது போல், தன்னுடைய குற்றத்தையும் கண்டு திருத்திக் கொள்ள முடியுமானால் மனித வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ?

## 20. பயன் இல சொல்லாமை

### (வீண் வார்த்தைகளை பேசாமல் இருப்பது)

*பல்லார் முனியப் பயன் இல சொல்லுவான்*
*எல்லாரும் எள்ளப்படும்.* **191**
பலரும் வெறுக்கும்படி, வீண் வார்த்தைகளைப் பேசுகின்றவனை எல்லாரும் இகழ்ந்து பேசுவர்.

*பயன் இலன் பல்லார்முன் சொல்லல், நயன் இல*
*நட்டார்கண் செய்தலின், தீது.* **192**
பலர்முன் வீண் வார்த்தைகளைப் பேசுவது, நண்பர்களுக்குத் தீய செயலைச் செய்வதைவிடத் தீமையானது.

*நயன் இலன் என்பது சொல்லும்—பயன் இல*
*பாரித்து உரைக்கும் உரை.* **193**
பயனில்லாத வீண் வார்த்தைகளை விரிவாகப் பேசுகின்ற பேச்சே அவன் வீணன் என்பதைக் காட்டி விடும்.

*நயன் சாரா நன்மையின் நீக்கும்—பயன் சாராப்*
*பண்பு இல் சொல் பல்லாரகத்து.* **194**
பயனும், பண்பும் இல்லாத சொற்களைப் பலர்முன் பேசுவது, அறத்தோடு பொருந்தாமல், நன்மை யிலிருந்து நீக்கி விடும்.

*சீர்மை சிறப்பொடு நீங்கும்—பயன் இல*
*நீர்மை உடையார் சொலின்.* **195**
நல்ல பண்பு உள்ளவர், பயன் இல்லாத சொற்களைச் சொல்லுவாரானால் அவருடைய புகழும் பெருமையும் நீங்கி விடும்.

*பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல்!*
*மக்கட் பதடி எனல்!* 196

பயன் இல்லாத வார்த்தைகளைப் பலமுறை பேசுகின்றவனை மனிதன் என்று சொல்வதைவிட, மனிதர்களில் பதர் (குப்பை) என்றே சொல்ல வேண்டும்.

*நயன் இல சொல்லினும் சொல்லுக! சான்றோர்*
*பயன் இல சொல்லாமை நன்று.* 197

கண்டிப்பான வார்த்தைகளைச் சொன்னாலும் சொல்லலாம். அறிவுடையோர் பயன் இல்லாத சொற்களைச் சொல்லாமல் இருப்பது நன்மை தரும்.

*அரும் பயன் ஆயும் அறிவினார் சொல்லார்—*
*பெரும் பயன் இல்லாத சொல்.* 198

அருமையான பயனை ஆராயக்கூடிய அறிஞர், மிகுந்த பயன் தராத வீண் வார்த்தைகளை ஒருபோதும் சொல்ல மாட்டார்.

*பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்—மருள் தீர்ந்த*
*மாசு அறு காட்சியவர்.* 199

அறிவு மயக்கம் இல்லாத தெளிந்த மாசற்ற அறிவு உடையவர்; மறந்தும்கூட பயன் இல்லாத சொற்களை ஒருக்காலும் சொல்ல மாட்டார்.

*சொல்லுக, சொல்லில் பயன் உடைய! சொல்லற்க,*
*சொல்லில் பயன் இலாச் சொல்!* 200

பயன் தரக்கூடிய சொற்களை மட்டுமே சொல்ல வேண்டும். பயன் இல்லாத சொற்களைச் சொல்லக் கூடாது.

# 21. தீவினை அச்சம்

## (தீமையான செயலுக்குப் பயப்படுதல்)

*தீவினையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர்—*
*தீவினை என்னும் செருக்கு.* 201

தீய செயல் செய்யக் கூடிய பாவிகள் அதற்கு அஞ்சமாட்டார். ஆனால், தீய செயல் இல்லாத மேன்மையாளர் அதைச் செய்ய அஞ்சுவார்.

*தீயவை தீய பயத்தலான், தீயவை*
*தீயினும் அஞ்சப்படும்.* 202

தீய செயல்கள் தீமையை உண்டாக்கக் கூடியவை ஆதலால், தீய செயல்கள் நெருப்பைவிடக் கொடுமையானது என்று கருதிப் பயப்பட வேண்டும். 202

*அறிவினுள் எல்லாம் தலை என்ப—தீய*
*செறுவார்க்கும் செய்யா விடல்.* 203

தம்மைத் துன்புறுத்துவோருக்குத் தீமை செய்யாமல் இருப்பதே, எல்லாவற்றுக்கும் மேலான அறிவு என்று கூறுவர்.

*மறந்தும் பிறன் கேடு சூழற்க! சூழின்,*
*அறம் சூழும், சூழ்ந்தவன் கேடு.* 204

மறந்தும்கூட மற்றவருக்குக் கேடு உண்டாக்க நினைக்கக் கூடாது. அப்படி நினைத்தால் அவருக்குத் துன்பம் ஏற்படக் கூடிய தொல்லை வந்தே தீரும்.

*'இலன்' என்று தீயவை செய்யற்க! செய்யின்,*
*இலன் ஆகும், மற்றும் பெயர்த்து.* 205

வறுமைக் காரணமாகத் தீய செயல் எதையும் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் மேலும் வறுமை ஏற்பட்டுத் துன்புற நேரிடும்.

*தீப் பால தான் பிறர்கண் செய்யற்க—நோய்ப் பால*
*தன்னை அடல் வேண்டாதான்!* 206

துன்பம் தரக்கூடிய தொல்லைகள் தனக்கு வரக்கூடாது என்று நினைப்பவன், பிறருக்குத் தீங்கைச் செய்யாமல் இருக்க வேண்டும்.

*எனைப் பகை உற்றாரும் உய்வர்; வினைப் பகை*
*வீயாது, பின் சென்று, அடும்.* 207

எத்தகைய கொடிய பகைவரிடத்திலிருந்தும் தப்பிவிட முடியும். ஆனால், தீய செயல்கள் செய்வதால் வரும் பகை எங்கே சென்றாலும் விடாமல் பின்தொடரும்.

*தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை*
*வீயாது அடி உறைந்தற்று.* 208

ஒருவனுடைய நிழல் அவனை விடாமல் தொடர்ந்து, அவன் காலடியில் தங்கி இருப்பதைப் போல், தீய செயல் புரிந்தவனைத் துன்பம் விடாமல் தொடர்ந்து வரும்.

*தன்னைத் தான் காதலன்ஆயின், எனைத்து ஒன்றும்*
*துன்னற்க, தீவினைப் பால்!* 209

தன்னுடைய நல்வாழ்வை விரும்பக் கூடியவன், மிகச் சிறிய தீய செயலைக்கூடச் செய்யாமல் வாழ வேண்டும்.

*அருங் கேடன் என்பது அறிக—மருங்கு ஓடித்*
*தீவினை செய்யான்எனின்!* 210

தீயவழியில் சென்று தீய செயல் செய்யாமல் இருப்பானானால் அவன் கேடு இல்லாதவன் என்று அறிந்து கொள்ளலாம்.

# 22. ஒப்புரவு அறிதல்

## (உலக இயல்பை அறிந்து உதவி செய்வது)

*கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்டு*
*என் ஆற்றும் கொல்லா, உலகு?* 211
தங்களுக்கு உதவும் மழைக்கும் இந்த உலகத்தார் என்ன பிரதிபலனைச் செய்கின்றனர்? கைம்மாறு கருதாமல், பிறருக்கு உதவுவது ஒருவனுடைய கடமை.

*தாள் ஆற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற்பொருட்டு.* 212
பாடுபட்டுச் சம்பாதித்த செல்வம் எல்லாம், தகுதி யானவருக்கு விரும்பி உதவி செய்வதற்காக என்று நினைக்க வேண்டும்.

*புத்தேள் உலகத்தும், ஈண்டும், பெறல் அரிதே—*
*ஒப்புரவின் நல்ல பிற.* 213
மண்ணுலகத்தில் பிறருக்கு உதவி செய்து வாழும் பரோபகாரத்தின் சிறப்பை செய்யாதான் விண்ணுலகிலும் அதைப் பெற முடியாது.

*ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்; மற்றையான்*
*செத்தாருள் வைக்கப்படும்.* 214
உலகத்தில் நடைபெறுவனவற்றுக்கு ஒப்ப அறிந்து செய்பவன்தான் வாழ்வான். செய்யாதவன் செத்தவனைப் போல் எண்ணப் படுவான் (உலக நடை மிகச் சிறந்தது).

*ஊருணி நீர் நிறைந்தற்றே—உலகு அவாம்*
*பேர் அறிவாளன் திரு.* 215
பரோபகாரத்தினால் உலகம் வாழ வேண்டும் என்று விரும்புகின்ற பேரறிவாளருடைய செல்வமானது, தேவைக்கு ஏற்ப குடிதண்ணீர் தருகின்ற ஊர்க் குளத்தில் நீர் நிறைந்திருப்பது போன்றது.

*பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்—செல்வம்*
*நயன் உடையான்கண் படின்.* 216

தாராளத் தன்மையால் உபகாரம் செய்பவனிடம் செல்வம் உண்டானால் அது ஊர் நடுவில் பழுத்துத் தொங்கும் பயன்தரும் மரம் போன்றது.

*மருந்து ஆகித் தப்பா மரத்தற்றால்—செல்வம்*
*பெருந்தகையான்கண் படின்.* 217

பெருந்தன்மை மிகுந்தவனிடம் செல்வம் சேர்ந்திருப்பது, இலை, பூ, விதை, காய், பழம், பட்டை, வேர் முதலியன மருந்தாகிப் பயன் தருகின்றன மரம் போன்றது.

*இடன் இல் பருவத்தும், ஒப்புரவிற்கு ஒல்கார்—*
*கடன் அறி காட்சியவர்.* 218

உதவி செய்ய வேண்டும் என்ற கடமை உணர்வுள்ள அறிவு உடையோரிடம், செல்வ வளம் குறைந்த போதிலும் உதவிபுரியத் தயங்க மாட்டார்.

*நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும் நீர*
*செய்யாது அமைகலா ஆறு.* 219

நல்ல பண்பு உடையவன் வறுமையால் வருந்துகிறான் என்றால், பிறருக்கு உதவ முடியவில்லையே என்று அவன் படுகிற துன்பம் தான்.

*'ஒப்புரவினால் வரும், கேடு' எனின், அஃது ஒருவன்*
*விற்றுக் கோள் தக்கது உடைத்து.* 220

பிறருக்கு உதவுகிறதால் ஒருவனுக்குக் கேடுவரும் என்றால், அக்கேடு தன்னை விற்றாவது அவன் வாங்கிக் கொள்ளும்படி தகுதி உடையது ஆகும்.

## 23. ஈகை

### (வறுமையில் இருப்பவருக்குக் கொடுப்பது)

*வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை; மற்று எல்லாம்*
*குறியெதிர்ப்பை நீரது உடைத்து.* 221

வறுமையில் வாடுபவருக்கு அவர் வேண்டும் ஒரு பொருளைக் கொடுத்து உதவுவதே ஈகை. மற்றவருக்குக் கொடுப்பது எல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது.

*'நல்லாறு' எனினும், கொளல் தீது; 'மேல் உலகம்*
*இல்' எனினும், ஈதலே நன்று.* 222

பிறரிடமிருந்து வேண்டிப் பெற்றுக் கொள்வதே நன்மை அடைவதற்கு (விண்ணுலகுக்குக்) வழி என்று கூறினாலும் பெற்றுக் கொள்வது தீமையே; கொடுப்பதால் உயர்ந்த விண்ணுலக வாழ்வு, இல்லை என்றாலும் கொடுப்பதே நல்லது.

*'இலன்' என்னும் எவ்வம் உரையாமை ஈதல்*
*குலன் உடையான்கண்ணே உள.* 223

ஒருவன் வந்து இல்லை என்னும் துன்பமான சொல்லைக் கூறு முன்னே, அவனுக்குக் கொடுத்து உதவுவது நல்ல குடும்பத்தில் பிறந்தவனிடம் காணப்படும் சிறந்த குணம்.

*இன்னாது இரக்கப்படுதல்—இரந்தவர்*
*இன் முகம் காணும் அளவு.* 224

உதவி கிடைத்ததும் மகிழ்ச்சி அடைகின்ற மலர்ந்த முகத்தைக் காணும் வரை கையேந்தி வருவோருக்கு ஒன்றும் கொடுக்காமல் அவரைப் பார்த்து இரக்கப்பட்டுக் கொண்டிருப்பது இல்லை என்று பிச்சை எடுப்பதை விடத் துன்பமாகும்.

*ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல்; அப் பசியை*
*மாற்றுவார் ஆற்றலின் பின்.* 225

தவம் செய்கிறவருடைய வலிமை தம்முடைய பசியைப் பொறுத்துக் கொள்வது. அதுவும் கூட பசிக்கு உணவு அளித்துத் தீர்த்து வைப்பவருடைய வலிமைக்கு அடுத்தபடிதான்.

*ஆற்றார் அழி பசி தீர்த்தல்! அஃது ஒருவன்*
*பெற்றான் பொருள் வைப்பு உழி.* 226

வறுமையாளரின் கடும் பசியை ஒருவன் தீர்த்து வைத்தல் என்பது அவன் பிற்காலத்தில் தனக்கு உதவுவதற்காக செல்வத்தைப் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைப்பதைப் போன்றது.

*பாத்து ஊண் மரீஇயவனைப் பசி என்னும்*
*தீப் பிணி தீண்டல் அரிது.* 227

தனக்குக் கிடைத்த உணவைப் பலருக்கும் கொடுத்து, உண்ணும் இயல்பு உடையவனைப் பசி என்று கூறப்படுகின்ற தீய நோய் நெருங்குவது இல்லை.

*ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல்—தாம் உடைமை*
*வைத்து இழக்கும் வன்கணவர்?* 228

தாம் சேர்த்து வைத்த செல்வத்தைப் பிறருக்கு வழங்காமல், பிறகு பறிகொடுக்கும் இரக்கமற்றவர், வறியவருக்குக் கொடுத்து மகிழும் இன்பத்தை அறிய மாட்டாரோ!

*இரத்தலின் இன்னாது மன்ற—நிரப்பிய*
*தாமே தமியர் உணல்.* 229

செல்வத்தைப் பெருக்கும் ஒருவன் அதனைப் பிறருக்கு வழங்காமல், தான் மட்டுமே உண்பது, பிச்சை எடுப்பதை விடக் கொடுமையானது.

*சாதலின் இன்னாதது இல்லை; இனிது, அதூஉம்*
*ஈதல் இயையாக்கடை.* 230

சாவதைவிடத் துன்பம் தரக்கூடியது வேறு ஒன்றும் இல்லை. ஆனால், வறுமையாளருக்கு எதையும் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்ட போது, சாவதும் இனிமை ஆகும்.

# 24. புகழ்

## (புகழ் உண்டாக நல்ல செயல்களைச் செய்வது)

ஈதல்! இசைபட வாழ்தல்! அது அல்லது
ஊதியம் இல்லை, உயிருக்கு. 231

பிறருக்கு உதவுதல், அதனால் புகழ் பெற்று வாழ்தல், அது அல்லாமல் வேறு பயன் ஒன்றும் இல்லை.

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ். 232

பேசுபவர் பெருமையாகப் பேசுவன எல்லாம், வறுமையில் யாசிப்பவருக்குக் கொடுத்து உதவுகின்ற கொடையாளிகளின் புகழைப் பற்றித்தான்.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்,
பொன்றாது நிற்பது ஒன்று இல். 233

இந்த உலகத்தில் ஒப்பற்று அழியாமல், நிலைத்திருப்பது உயர்ந்த புகழைத்தவிர வேறு ஒன்றும் இல்லை.

நில வரை நீள் புகழ் ஆற்றின், புலவரைப்
போற்றாது, புத்தேள் உலகு. 234

பரந்த உலகத்தில், அழியாத புகழ் தரும் செயல்களைச் செய்தால், தேவலோகம் அவனைப் பாராட்டுமே அல்லாமல் தேவர்களைப் போற்றாது.

நத்தம்போல் கேடும், உளதாகும் சாக்காடும்,
வித்தகர்க்கு அல்லால் அரிது. 235

புகழோடு வளர்கின்ற வாழ்வும், பின்னர் புகழ் மட்டும் நின்று, தான் அழிகின்ற சாவும், அறிவில் சிறந்தவருக்கு மட்டுமே வாய்க்கும், பிறருக்குக் கிடைக்காது.

*தோன்றின், புகழொடு தோன்றுக! அஃது இலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று.* 236

மக்களாகப் பிறந்தால் புகழ்பெறுவதற்குரிய குணத்தோடு பிறக்க வேண்டும்; அக்குணமில்லாதார் பிறவா திருத்தலே நல்லது.

*புகழ்பட வாழாதார் தம் நோவார், தம்மை*
*இகழ்வாரை நோவது எவன்?* 237

புகழ் உண்டாகும்படி வாழ முடியாதவர், தம்மை நொந்து கொள்ள வேண்டுமே தவிர, தம்மை இகழ்வோரை நொந்து கொள்வது ஏன்?

*'வசை' என்ப, வையத்தார்க்கு எல்லாம்—'இசை' என்னும்*
*எச்சம் பெறாஅ விடின்.* 238

தனக்குப்பின், நிலைத்து நிற்கக் கூடிய புகழைப் பெறாதவனுடைய வாழ்க்கையை உலகத்தார் எல்லாரும் பழிப்பார்கள்

*வசை இலா வண் பயன் குன்றும்—இசை இலா*
*யாக்கை பொறுத்த நிலம்.* 239

புகழ் ஏற்படும்படியான காரியங்களைச் செய்யாமல், வாழ்வைப் போக்கியவனுடைய உடம்பைச் சுமந்த நிலம், விளைச்சல் இல்லாமல் குறைந்து போகும்.

*வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசை ஒழிய*
*வாழ்வாரே வாழாதவர்.* 240

பழி ஏற்படாமல் வாழ்கின்றவரே உண்மையில் வாழ்கின்றவர். புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவர், உயிர் இல்லாதவர்.

# 25. அருள் உடைமை

## (கருணையோடு இருப்பது)

*அருட்செல்வம், செல்வத்துள் செல்வம்; பொருட் செல்வம்*
*பூரியார்கண்ணும் உள.* 241

கருணை என்னும் செல்வமே செல்வங்களில் எல்லாம் உயர்ந்த செல்வம். பொருளான செல்வம் இழிவான வரிடமும் உள்ளது.

*நல் ஆற்றான் நாடி அருள் ஆள்க! பல் ஆற்றான்*
*தேரினும் அஃதே துணை.* 242

நல்ல வழியில் நின்று கருணையுடன் வாழ வேண்டும். பல வழிகளிலும் ஆராய்ந்து பார்த்தாலும், அந்தக் கருணைதான் வாழ்க்கைக்குத் துணையாக இருக்கிறது.

*அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை—இருள் சேர்ந்த*
*இன்னா உலகம் புகல்.* 243

கருணை உள்ளம் கொண்டவருக்கு, அறியாமை என்னும் இருள் சூழ்ந்த துன்ப உலகில் இருந்து வாழ வேண்டியது இல்லை.

*'மன் உயிர் ஓம்பி, அருள் ஆள்வாற்கு இல்' என்ப—*
*'தன் உயிர் அஞ்சும் வினை.'* 244

நிலையான உயிர்களைப் போற்றிக் கருணையோடு இருக்கிறவனுக்குத் தன்னுடைய உயிரின் பொருட்டுப் பயப்படுவதற்குக் காரணமான பாவங்கள் உண்டாகா.

*அல்லல், அருள் ஆள்வார்க்கு இல்லை; வளி வழங்கும்*
*மல்லல் மா ஞாலம் கரி.* 245

கருணையோடு வாழ்கின்றவர் துன்பப் படுவதில்லை. உயிர் வாழ்வதற்குக் காரணமான காற்று வீசும் இந்த வளமான பூமியில் வாழ்ந்து இருப்போரை இதற்குச் சாட்சியாகக் கூறலாம்.

*'பொருள் நீங்கிப் பொச்சாந்தார்' என்பர்– 'அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார்.'* 246

கருணை இல்லாமல், தீயவற்றைச் செய்கின்றவர்கள், நன்மையிலிருந்து விலகி, வாழ்க்கையின் லட்சியத்தை மறந்தவர் என்று சொல்லுவார்கள்.

*அருள் இல்லார்க்கு அவ் உலகம் இல்லை–பொருள் இல்லார்க்கு இவ் உலகம் இல்லாகியாங்கு.* 247

செல்வம் இல்லாதவருக்கு, இந்த உலகத்தில் இன்பம் இல்லாததைப் போல், உயிர்களிடத்தில் கருணை இல்லாதவர்க்கு புகழ் அடையும் இன்ப உலகமும் இல்லை.

*பொருள் அற்றார் பூப்பர் ஒருகால்; அருள் அற்றார் அற்றார்; மற்று ஆதல் அரிது.* 248

வறுமை அடைந்தவர் பிறகு, ஒரு காலத்தில் வளம்பெற்று விளங்குவார். ஆனால், கருணை இல்லாதவர், வாழ்க்கையில் வளம் பெற்று ஒரு காலத்திலும் வாழ இயலாது.

*தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்–தேரின், அருளாதான் செய்யும் அறம்.* 249

இரக்கம் இல்லாதவன் செய்கின்ற தருமத்தை ஆராய்ந்து பார்த்தால், அறிவில் தெளிவு இல்லாதவன் ஒரு நூலின் உண்மைப் பொருளைக் கண்டது போன்றது.

*வலியார்முன் தன்னை நினைக்க–தான் தன்னின் மெலியார்மேல் செல்லும் இடத்து.* 250

கருணையற்றவன், தன்னைவிட மெலிந்தவரைத் துன்புறுத்தும் போது, தன்னைவிட வலிமை வாய்ந்தவர் முன்னே தான் அச்சத்தோடு நிற்கும் நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

# 26. புலால் மறுத்தல்

## (புலால் உண்பதை விலக்கி விடுவது)

*தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்?* 251
தன்னுடைய உடலை வளர்ப்பதற்காக, மற்றொரு உயிரைக் கொன்று தின்பவன் எப்படிக் கருணை உள்ளவனாக இருக்க முடியும்?

*பொருள் ஆட்சி போற்றாதார்க்கு இல்லை; அருள் ஆட்சி*
*ஆங்கு இல்லை, ஊன் தின்பவர்க்கு.* 252
பொருளைப் பாதுகாத்துப் போற்றாதவர் பொருளின் பயனைப் பெற முடியாது. அதுபோல, மாமிசம் தின்கின்றவர் கருணையின் பயனைப் பெற முடியாது.

*படை கொண்டார் நெஞ்சம்போல் நன்று ஊக்காது—ஒன்றன்*
*உடல்சுவை உண்டார் மனம்.* 253
கொலைபுரியும் ஆயுதத்தைக் கையில் வைத்திருப்பவன் நெஞ்சம் கொலையையே நாடுவதுபோல, ஓர் உயிரின் உடலைச் சுவைத்துத் தின்பவன் மனம் நன்மையான கருணையை நினைக்காது.

*'அருள், அல்லது, யாது?' எனின்,—கொல்லாமை, கோறல்:*
*பொருள் அல்லது, அவ் ஊன் தினல்.* 254
கருணை என்பது எந்த உயிரையும் கொல்லாமல் இருப்பது; உயிரைக் கொல்லுதல், கருணையற்றது. அதன் உடலைத் தின்னுதல் நல்ல செயல் ஆகாது.

*உண்ணாமை உள்ளது உயிர்நிலை; ஊன் உண்ண,*
*அண்ணாத்தல் செய்யாது, அளறு.* 255
மாமிசம் உண்ணாமல் இருப்பதன் அடிப்படையில்தான் உயிர்கள் வாழ்கின்ற நிலைமை உள்ளது. மாமிசம் தின்பவன் சேர்ந்தடைந்த நரகம் விழுங்கியபின் வாய் திறவாமல் இருக்கும்.

*தினற்பொருட்டால் கொல்லாது உலகு எனின், யாரும்
விலைப்பொருட்டால் ஊன் தருவார் இல்.* 256

உலகத்தார் உண்பதற்காக உயிர்களைக் கொல்லாமல் இருப்பார்கள் என்றால், மாமிசத்தை விலைக்கு விற்பதற்காக எவரும் முன் வர மாட்டார்.

*உண்ணாமை வேண்டும், புலால்அல்—பிறிது ஒன்றன்
புண்; அது உணர்வார்ப் பெறின்.* 257

மாமிசம் என்பது, ஓர் உயிரைக் கொன்றதால் உண்டான புண் ஆகும். அதை உணர்ந்தவர் மாமிசத்தை உண்ணாமல் விலக்கி விடுவர்.

*செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்,
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.* 258

ஓர் உயிரில் இருந்து பிரிந்து வந்த உடலான மாமிசத்தைத் தெளிந்த அறிவுடையோர் உண்ண மாட்டார்.

*அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின், ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று.* 259

நெய் முதலான பொருளைத் தீயிலே கொட்டி, ஆயிரம் யாகங்கள் செய்வதைவிட, ஒரு பிராணியின் உயிரைக் கொன்று தின்னாமல் இருப்பது நல்லது.

*கொல்லான், புலாலை மறுத்தானைக் கைகூப்பி,
எல்லா உயிரும் தொழும்.* 260

எந்த உயிரையும் கொல்லாமலும், மாமிசத்தை உண்ணாமலும் வாழ்கின்றவனை, உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களும் கைகூப்பி வணங்கும்.

## 27. தவம்

### (தவம் செய்கின்றவர் குணம்)

*உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை*
*அற்றே—தவத்திற்கு உரு.* 261

தனக்கு ஏற்படக்கூடிய துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு, எந்த உயிருக்கும் துன்பம் செய்யாமல் இருப்பதுவே தவத்தின் குணம்.

*தவமும் தவம் உடையார்க்கு ஆகும்; அவம், அதனை*
*அஃது இலார் மேற்கொள்வது.* 262

தவ ஒழுக்கம் உள்ளவருக்கே தவக்கோலம் பொருந்தும். தவ ஒழுக்கம் இல்லாதவர் தவத்தில் ஈடுபடுவது வீண் முயற்சி.

*துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி, மறந்தார்கொல்—*
*மற்றையவர்கள், தவம்!* 263

துறவிகளுக்கு உணவு முதலியவை கொடுத்து உதவ வேண்டும் என்று விரும்பி, இல்லறத்தில் இருப்பவர்கள் தவம் செய்வதை மறந்து விட்டார்களோ?

*ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும்,*
*எண்ணின், தவத்தான் வரும்.* 264

தீமை செய்வோரைக் கண்டிப்பதும், நன்மை செய்தவரை உயர்த்துவதும், நினைத்தபோது தவத்தின் வலிமையால் உண்டாகும்.

*வேண்டிய வேண்டியாங்கு எய்தலான், செய் தவம்*
*ஈண்டு முயலப்படும்.* 265

விரும்பிய நன்மையை, விருப்பம் போல் தவத்தால் அடைய முடியும். ஆதலால், செய்யத் தக்க தவத்தை அறிவு உடையோர் இப்பொழுதே முயற்சி செய்யலாம்.

*தவம் செய்வார் தம் கருமம் செய்வார்; மற்று அல்லார்*
*அவம் செய்வார், ஆசையுள் பட்டு.* 266

தவம் செய்கின்றவர் தமக்கு உரிய கடமையைச் செய்வார். மற்றவர் ஆசை வலையில் அகப்பட்டு, வீணான காரியத்தைச் செய்கின்றவர்.

*சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும்—துன்பம்*
*சுடச்சுட நோற்கிற்பவர்க்கு.* 267

புடம்போட்டுச் சுடுகின்ற தங்கம் பிரகாசிப்பதைப்போல், தவம் செய்கின்றவரை, துன்பம் வருத்த வருத்த அவருக்கு ஞான ஒளி என்னும் உண்மை உணர்வு அதிகமாகும்.

*தன் உயிர் தான் அறப் பெற்றானை ஏனைய*
*மன் உயிர் எல்லாம் தொழும்.* 268

தவத்தின் வலிமையால் தன் உயிர், தான் என்னும் சுயநலம் நீங்கப் பெற்றவனை எல்லாரும் வணங்குவர்.

*கூற்றம் குதித்தலும் கைகூடும்—நோற்றலின்*
*ஆற்றல் தலைப்பட்டவர்க்கு.* 269

தவத்தால் வெற்றி பெற்றவர், நினைத்தபோது உடலை விட்டு உயிரை நீக்கிக் கொள்ளக் கூடியவர்; அத்தகையவருக்கு முடிவு செய்ய வருகின்ற எமனைக் கடத்தி வெல்லுதலும் கைகூடும்.

*இலர் பலர் ஆகிய காரணம்—நோற்பார்*
*சிலர்; பலர் நோலாதவர்.* 270

உலகத்தில் வறுமையாளர் அதிகமாகவும், செல்வர் குறைவாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன என்றால், தவம் செய்கின்றவர் சிலரும், தவம் செய்யாதவர் பலரும் இருப்பதே காரணம்.

## 28. கூடா ஒழுக்கம்

## (கெட்ட நடத்தை உடையவர்)

*வஞ்ச மனத்தான் படிற்று ஒழுக்கம் பூதங்கள்*
*ஐந்தும் அகத்தே நகும்.* **271**

வஞ்சக எண்ணத்தை உடையவனுடைய பொய்யான ஒழுக்கத்தைக் கண்டு, அவன் உடம்பில் உள்ள ஐந்து பூதங்களும் தமக்குள்ளே சிரிக்கும்.

*வான் உயர் தோற்றம் எவன்செய்யும் – தன் நெஞ்சம்*
*தான் அறி குற்றப்படின்?* **272**

தன் மனச்சாட்சி, குற்றம் என்று சொல்லுவதை அறிந்தும், அதைச் செய்கிறவன், வானத்தைப் போல உயர்ந்த தவக்கோலம் கொண்டிருந்தும் என்ன பயன்?

*வலி இல் நிலைமையான் வல் உருவம் பெற்றம்*
*புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று.* **273**

மனத்தைக் கட்டுப்படுத்த வலிமை இல்லாதவன், வலிமையான தவ வேடம் கொள்ளுவது, பசுவானது காவலரை ஏமாற்றப் புலியின் தோலை போர்த்திக் கொண்டு பயிரை மேய்வது போன்றது.

*தவம் மறைந்து, அல்லவை செய்தல் – புதல்மறைந்து*
*வேட்டுவன் புள் சிம்ழ்த்தற்று.* **274**

தவ வேடத்தில் ஒளிந்து கொண்டு, கெட்ட காரியங்களைப் செய்வது வேடன் புதரில் மறைந்து பறவைகளை வலை வீசிப் பிடிப்பதைப் போன்றது.

*'பற்று அற்றேம்' என்பார் படிற்று ஒழுக்கம், 'எற்று! எற்று!' என்று*
*ஏதம் பலவும் தரும்.* **275**

'ஆசைகளை ஒழித்து விட்டோம்' என்று சொல்லு கிறவரின் பொய்யான ஒழுக்கம், 'என்ன செய்தோம்? என்ன செய்தோம்?' என்று வருந்தும்படி அவருக்குப் பல துன்பங்களைக் கொடுக்கும்.

*நெஞ்சின் துறவார், துறந்தார்போல் வஞ்சித்து,*
*வாழ்வாரின் வன்கணார் இல்.* 276

மனத்தில் இருக்கும் ஆசைகளை விடாமல், துறவியைப் போல் வஞ்சனை செய்து வாழ்கின்றவரைப் போல் கொடியவர் யாரும் இல்லை.

*புறம் குன்றி கண்டனையரேனும், அகம் குன்றி*
*மூக்கின் கரியார் உடைத்து.* 277

குன்றிமணி சிவந்து மினுமினுப்பாக காணப்பட்டாலும், அதன் மூக்கில் உள்ள கருப்பைப் போல், உள்ளத்தால் தீயவர்களும் உலகில் உள்ளனர்.

*மனத்தது மாசு ஆக, மாண்டார் நீர் ஆடி,*
*மறைந்து ஒழுகும் மாந்தர் பலர்.* 278

மனத்தில் குற்றம் இருக்க, தவத்தில் சிறப்புடையவர் போல் பிறருக்குத் தெரியும்படி நீரில் மூழ்கி மறைந்து செல்லும் வஞ்சனை உடைய மனிதர் பலர் உள்ளனர்.

*கணை கொடியது; யாழ் கோடு செவ்விது; ஆங்கு அன்ன*
*வினைபடு பாலால் கொளல்.* 279

வடிவத்தால் அம்பு நேராக இருந்தாலும் அது கொடியது. யாழின் தண்டு வளைவாக இருந்தாலும், அது நன்மையானது அவைபோல, தவம் செய்வோரையும் வேடத்தால் ஏற்காமல், செயலால் அறிந்து கொள்ள வேண்டும்.

*மழித்தலும் நீட்டலும் வேண்டா – உலகம்*
*பழித்தது ஒழித்துவிடின்.* 280

உலகம் பழித்துக் கூறும் தீய செயலை விட்டுவிட்டால், தவம் செய்கின்றவர் மொட்டை அடித்துக் கொள்ளவோ, சடை வளர்த்துக் கொள்ளவோ வேண்டாம்.

## 29. கள்ளாமை

### (பிறர் பொருளைக் களவாடாமல் இருப்பது)

*எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்து ஒன்றும்*
*கள்ளாமை காக்க, தன் நெஞ்சு !.* 281

இகழப்படாமல் இருக்க விரும்புகின்றவன், எந்தப் பொருளையும் களவு செய்ய எண்ணாமல், தன்னுடைய மனத்தைக் காக்க வேண்டும்.

*உள்ளத்தால் உள்ளலும் தீதே; 'பிறன் பொருளைக்*
*கள்ளத்தால் கள்வேம்' எனல் !* 282

மனத்தால், குற்றத்தை நினைப்பதும் தீமையே; ஆதலால், பிறருடைய பொருளை அவர் அறியாதபடி, வஞ்சனையால் களவாடுவோம் என்று நினைக்காமல் இருக்க வேண்டும்.

*களவினால் ஆகிய ஆக்கம், அளவு இறந்து,*
*ஆவது போல, கெடும்.* 283

களவாடிப் பெற்ற செல்வம் அளவுக்கு அதிகமாகப் பெருகுவதுபோல் தோன்றிப் பின்னர், உதவாது அழிந்துவிடும்.

*களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்*
*வீயா விழுமம் தரும்.* 284

களவாடுவதில் ஆசை வளர்ந்து விட்டால், அதன் பயனாகத் துன்பங்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

*அருள் கருதி அன்புடையர் அதல் பொருள் கருதிப்*
*பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.* 285

ஏமாந்து இருக்கும் சமயம் பார்த்து, ஒருவருடைய பொருளைக் களவாட நினைப்பது, கருணையைப் பெரிதாகக் கருதி, அன்பு வழியில் நடப்பவரிடம் இருக்காது

*அளவின்கண் நின்று ஒழுகலாற்றார் – களவின்கண் கன்றிய காதலவர்.* 286

பிறருடைய பொருளைத் திருடி வாழ ஆசை மிகுந்தவர், வாழ்வின் ( சிக்கனமான) அளவுக்கு ஏற்ற முறையில் வாழ மாட்டார்.

*களவு என்னும் கார் அறிவு ஆண்மை அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல்.* 287

தம்முடைய தகுதிக்கு ஏற்றபடி, அளவோடு வாழ்க்கை நடக்கக் கூடிய மன உறுதி உள்ளவரிடத்தில் அறிவு மயங்கிய திருட்டு எண்ணம் இருக்காது.

*அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல, நிற்கும், களவு அறிந்தார் நெஞ்சில் கரவு.* 288

அளவு அறிந்து வாழ்கின்றவர் மனத்தில், நல்ல எண்ணம் நிலைத்திருப்பதுபோல், திருட்டு எண்ணம் கொண்டவர் மனத்தில் வஞ்சகம் குடிகொண்டு இருக்கும்.

*அளவு அல்ல செய்து, ஆங்கே வீவர் – களவு அல்ல மற்றைய தேற்றாதவர்.* 289

திருடுவதைத் தவிர, வேறு நல்ல வழிகளை அறியாதவர், அளவற்ற தீமைகளைச் செய்து, அப்பொழுதே கெட்டு அழிவார்.

*கள்வார்க்குத் தள்ளும், உயிர்நிலை; கள்ளார்க்குத் தள்ளாது, புத்தேள் உலகு.* 290

திருடிப் பிழைப்பவருக்கு, உயிர் வாழ்வதனால் பலன் கிடைக்காது, திருட்டு எண்ணம் இல்லாமல் வாழ்கின்றவருக்கு உலகப் புகழ் கிடைக்கும்.

## 30. வாய்மை

### (உண்மை பேசுவது)

*'வாய்மை எனப்படுவது யாது?' எனின், யாது ஒன்றும்*
*தீமை இலாத சொலல்.* 291

உண்மை என்பது என்ன என்றால், பிறருக்குச் சிறிதும் தீங்கு தராத சொற்களைப் பேசுவதே.

*பொய்ம்மையும் வாய்மை இடத்த – புரை தீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்.* 292

குற்றம் இல்லாத நன்மையைத் தருமானால், பொய்யான சொற்களும் உண்மை என்று எண்ணத்தக்க நிலையைப் பெறும்.

*தன் நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்*
*தன் நெஞ்சே தன்னைச் சுடும்.* 293

மனம் அறிய ஒருவன் பொய் சொல்லக் கூடாது, அப்படிச் சொன்னால், அந்தப் பொய்யே அவனைத் துன்புறுத்தும்.

*உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார்*
*உள்ளத்துள் எல்லாம் உளன்.* 294

ஒருவன் மனம் அறியப் பொய் சொல்லாமல் நடந்தான் ஆனால், அப்படிப்பட்டவன் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் குடி இருப்பான்.

*மனத்தொடு வாய்மை மொழியின், தவத்தொடு*
*தானம் செய்வாரின் தலை.* 295

மனத்தாலும், வாக்காலும் உண்மை பேசுகின்றவன், தவத்தோடு தானமும் செய்வோரைவிடச் சிறந்தவன்

*பொய்யாமை அன்ன புகழ் இல்லை; எய்யாமை,*
*எல்லா அறமும் தரும்.* 296

பொய் சொல்லாமல் வாழ்கின்றதைப் போன்ற புகழ், ஒருவனுக்கு வேறு ஒன்றும் இல்லை. அது, அவன் வருந்தாமலே எல்லா நன்மைகளையும் அவனுக்கு கொடுக்கும்.

*பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம் பிற*
*செய்யாமை செய்யாமை நன்று.* 297

பொய் சொல்லாமல், உண்மையாக நடந்து கொண்டால் போதும். மற்ற தான தருமம் எதுவும் செய்யாவிட்டாலும் நல்லது.

*புறம் தூய்மை நீரான் அமையும்; — அகம் தூய்மை*
*வாய்மையான் காணப்படும்.* 298

தண்ணீரால் ஒருவனுக்கு உடம்பு தூய்மை உண்டாகும். அதுபோல், மனம் தூய்மையாக இருப்பது அவன் பேசுகின்ற உண்மையால் உண்டாகும்.

*எல்லா விளக்கும் விளக்கு அல்ல; சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு.* 299

இருளைப் போக்க உதவுகின்ற ஒளி விளக்குகள் எல்லாமே விளக்குகள் அல்ல. அறிவு உடையோருக்கு, மனத்தின் இருளை நீக்குகின்ற பொய் சொல்லாத உண்மையே, விளக்கு ஆகும். (திருவள்ளுவர் சொல்லும் விளக்குகள்: சூரியன், சந்திரன், தீ என்பன).

*யாம் மெய்யாக் கண்டவற்றுள், இல்லை—எனைத்து ஒன்றும்*
*வாய்மையின் நல்ல பிற.* 300

நாம் உண்மையாக அறிந்தவைகளில், எந்த வகையிலும், பொய் சொல்லாத உண்மையைவிடச் சிறந்தது, வேறு ஒன்றும் இல்லை.

# 31. வெகுளாமை

## (கோபப்படாமல் இருப்பது)

*செல் இடத்துக் காப்பான் சினம் காப்பான்;அல் இடத்து,*
*காக்கின் என்? காவாக்கால் என்?* 301

பலிக்கும் இடத்தில் கோபம் வராமல் இருப்பவனே கோபத்தைக் காத்தவன். கோபம் பலிக்காத இடத்தில், அதைக் காப்பதும், காக்காததும் ஒரே தன்மைதான்.

*செல்லா இடத்துச் சினம் தீது; செல் இடத்தும்,*
*இல், அதனின் தீய பிற.* 302

தன்னைவிட வலிமை மிகுந்தவரிடத்தில் (பலிக்காத இடத்தில்) கோபப்படுவது தீமை. வலிமை இல்லாதவரிடத்திலும் (பலிக்கும் இடத்திலும்) கோபப்படுவது அதைவிடத் தீமை வேறு இல்லை.

*மறத்தல், வெகுளியை யார்மட்டும் — தீய*
*பிறத்தல் அதனான் வரும்!* 303

எவரிடத்திலும் கோபம் கொள்ளாமல் மறந்து விட வேண்டும். மறக்காவிட்டால் அதனால் தீமைகள் உண்டாகும்.

*நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்*
*பகையும் உளவோ, பிற?* 304

முகமலர்ச்சியையும், மனமகிழ்ச்சியையும் கொல்லக் கூடியது கோபம். அதைவிட ஒருவனுக்கு வேறு பகையும் உண்டோ?

*தன்னைத் தான் காக்கின், சினம் காக்க! காவாக்கால்,*
*தன்னையே கொல்லும், சினம்.* 305

ஒருவன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள நினைத்தால், கோபம் கொள்ளாமல் அடக்கிக் கொள்ள வேண்டும். அடக்காவிட்டால், அந்தக் கோபம் அவனையே அழித்து விடும்.

*சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி இனம் என்னும்*
*ஏமப் புணையைச் சுடும்.* 306

கோபம் என்பது, சேர்ந்தவரை அழிக்கக்கூடிய நெருப்புப் போன்றது. அது இன்பம் தரும் தெப்பம் போன்ற, துணையான உறவினரையும் சுட்டு எரித்து விடும் (நெருப்பினும் கோபம் கொடியது).

*சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு*
*நிலத்து அறைந்தான் கை பிழையாதற்கு.* 307

தன்னுடைய வல்லமையைக் காட்டுவதற்காகக் கோபத்தோடு நடந்து கொள்கின்றவன் அழிந்து விடுவான். எப்படி என்றால், நிலத்தை அறைந்தவன் கை தப்பாமல் அடிபட்டு வேதனை அடைவதைப் போன்றது.

*இணர் எரி தோய்வன்ன இன்னா செயினும்,*
*புணரின் வெகுளாமை நன்று.* 308

கொழுந்து விட்டு எரியும் நெருப்பில் தள்ளுவதைப் போன்ற துன்பங்களை ஒருவன் செய்தாலும், கூடுமானால், அவன் மேல் கோபம் கொள்ளாமல் இருப்பது நல்லது.

*உள்ளிய எல்லாம் உடன் எய்தும் – உள்ளத்தால்*
*உள்ளான் வெகுளி எனின்.* 309

ஒருவன் மனத்தாலும் கோபத்தை நினைக்காமல் இருந்தால், அவன் நினைத்த நன்மைகளை எல்லாம் உடனே பெறுவான்.

*இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்*
*துறந்தார் துறந்தார் துணை.* 310

அளவு கடந்த கோபத்தைக் கொள்கின்றவர் செத்தவரைப் போன்றவர், கோபத்தை அடியோடு விட்டவர், துன்பத்தை எல்லாம் விட்டு, இன்ப வாழ்வு பெற்றவரைப் போன்றவர்.

# 32. இன்னா செய்யாமை

## (எவருக்கும் தீங்கு செய்யாமல் இருப்பது)

*சிறப்பு ஈனும் செல்வம் பெறினும், பிறர்க்கு இன்னா*
*செய்யாமை மாசு அற்றார் கோள்.* **311**

பெருமையைத் தருகின்ற செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறருக்குத் துன்பம் செய்யாமல் இருப்பதே நல்லவர் கொள்கை.

*கறுத்து இன்னா செய்த அக்கண்ணும், மறத்து இன்னா*
*செய்யாமை மாசு அற்றார் கோள்.* **312**

ஒருவன் கோபித்துத் துன்பம் செய்த போதிலும், அவனுக்கு மீண்டும் துன்பம் செய்யாமல் இருப்பதே, நல்லவர் கொள்கை.

*செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்,*
*உய்யா விழுமம் தரும்.* **313**

தான் ஒரு துன்பமும் செய்யாமல் இருக்கும்போது, தனக்குத் தீமை செய்தவருக்கும் துன்பத்தைச் செய்தால், செய்த பிறகு, தப்பிக்க முடியாத துன்பத்தையே உண்டாக்கும்.

*இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண*
*நல் நயம் செய்து, விடல்.* **314**

துன்பம் செய்தவரைத் தண்டிப்பதாவது, அவரே வெட்கப் படும்படியாக, அவருக்கு உதவி செய்து அவர் செய்த தீமையையும், தான் செய்த நன்மையையும் மறந்துவிட வேண்டும்.

*அறிவினான் ஆகுவது உண்டோ – பிறிதின் நோய்*
*தம் நோய்போல் போற்றாக்கடை?* **315**

பிற உயிரின் துன்பத்தை தனக்கு ஏற்பட்ட துன்பம்போல் எண்ணிக் காப்பாற்றாவிட்டால், தான் பெற்றிருக்கும் அறிவால் பயன்படுவது உண்டோ?

*இன்னா எனத் தான் உணர்ந்தவை, துன்னாமை*
*வேண்டும், பிறன்கண் செயல்.* *316*

துன்பம் என்று தான் அறிந்தவைகளைப் பிறருக்குச் செய்யாமல் கைவிட வேண்டும்.

*எனைத்தானும், எஞ்ஞான்றும், யார்க்கும், மனத்தான் ஆம்*
*மாணா செய்யாமை தலை.* *317*

மனமறிய எப்போதும், எந்தச் சிறு தீய செயலும் எவரிடமும் செய்யாமல் தவிர்ப்பதே சிறந்தது.

*தன் உயிர்க்கு இன்னாமை தான் அறிவான், என்கொலோ,*
*மன் உயிர்க்கு இன்னா செயல்?* *318*

தன் உயிருக்குத் துன்பம் தரக்கூடியவை இவை என்று அறிந்தவன், பிறருக்கு மட்டும் அந்தத் துன்பங்களைச் செய்வது என்ன காரணத்தாலோ?

*பிறருக்கு இன்னா முற்பகல் செய்யின், தமக்கு இன்னா*
*பிற்பகல் தாமே வரும்.* *319*

பிறருக்கு முன்னால் துன்பம் என்றால், செய்தவனுக்குத் துன்பம் பின்னால் வந்து சேரும்.

*நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம்; நோய் செய்யார்,*
*நோய் இன்மை வேண்டுபவர்.* *320*

துன்பம் எல்லாம் துன்பம் செய்தவரையே வந்து அடையும். எனவே துன்பம் இல்லாமல் வாழ விரும்புகின்றவர், பிறருக்குத் துன்பம் செய்ய மாட்டார்.

# 33. கொல்லாமை

## (உயிர்களைக் கொல்லாமல் இருப்பது)

*'அறவினை யாது?' எனின், கொல்லாமை; கோறல்
பிற வினை எல்லாம் தரும்.* 321

நன்மையான செயல் என்ன என்றால், பிற உயிர்களைக் கொல்லாமல் இருப்பது. உயிர்களைக் கொல்வது பல தீய செயல்களை உண்டாக்கும்.

*பகுத்து உண்டு, பல் உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.* 322

கிடைத்ததைப் பகிர்ந்து உண்டு, பலர் வாழத் தானும் வாழ்வது, நீதி நூல்கள் கூறும் நல்ல செயல்களில் எல்லாம் மிகச் சிறந்த செயல்.

*ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்று அதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.* 323

எல்லா நன்மைகளிலும் தனிச் சிறப்பானவை உயிரைக் கொல்லாமல் இருப்பது, வேண்டுமானால் பொய் பேசாமல் இருப்பது அதற்கு அடுத்தபடியாக நல்லது என்று சொல்லலாம்.

*'நல்லாறு எனப்படுவது யாது?' எனின், யாது ஒன்றும்
கொல்லாமை சூழும் நெறி.* 324

நல்ல வழி என்று சொல்லப்படுவது என்ன என்றால், எந்த உயிரையும் கொல்லாமல் இருக்கும் கடமையைப் போற்றும் வழி ஆகும்.

*நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம், கொலை அஞ்சிக்
கொல்லாமை சூழ்வான், தலை.* 325

வாழ்வின் துன்ப நிலையைக் கண்டு பயந்து, துறந்தவர்கள் எல்லாரிலும் கொலை புரிவதற்குப் பயந்து, கொல்லாத கடமையைப் போற்றுகின்றவன் உயர்ந்தவன்.

*கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது, உயிர் உண்ணும் கூற்று.* 326

கொல்லாமல் இருக்கும் கடமையைக் கொண்டு நடப்பவனின் வாழ்நாளின் மீது, உயிரைக் கொண்டு செல்லும் எமனும் செல்ல மாட்டான்.

*தன் உயிர் நீப்பினும் செய்யற்க — தான் பிறிது
இன் உயிர் நீக்கும் வினை!* 327

தன்னுடைய உயிர் உடம்பைவிட்டு நீங்குவதானாலும், தான் வேறு ஒன்றின் இனிய உயிரைக் கொல்லும் செயலைச் செய்யக் கூடாது.

*நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும், சான்றோர்க்குக்
கொன்று ஆகும் ஆக்கம் கடை.* 328

கொலை புரிவதால் வரும் செல்வம், மிகப் பெரிதாக இருந்தாலும், அப்படி வருகின்ற நன்மை சான்றோருக்கு இழிவானது.

*கொலை வினையர் ஆகிய மாக்கள் புலை வினையர்,
புன்மை தெரிவார் அகத்து.* 329

கொலைத் தொழில் புரிகின்ற மனிதர்களை, அதன் சிறுமை அறிந்தவர்கள், இழிந்த தொழில் செய்கின்றவர்களாகவே எண்ணுவர்.

*'உயிர் உடம்பின் நீக்கியார்' என்ப — 'செயிர் உடம்பின்
செல்லாத் தீ வாழ்க்கையவர்.'* 330

நோயுடன் கூடிய உடம்புடன் வறுமை உள்ள கொடிய வாழ்க்கை உடையவர், முன்பு பல கொலைகள் செய்து, உயிர்களை உடம்பிலிருந்து நீக்கியவர் என்று கூறுவார்.

# 34. நிலையாமை

## (உடம்பும் செல்வமும் நிலையில்லாதவை)

*நில்லாதவற்றை நிலையின என்று உணரும்*
*புல்லறிவு ஆண்மை கடை.* 331

நிலையில்லாதவைகளை, நிரந்தரமானவை என்று நினைக்கின்ற அற்ப புத்தி உள்ளவராக இருப்பது மிகவும் இழிவாகும்.

*கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே, பெருஞ் செல்வம்;*
*போக்கும், அது விளிந்தற்று.* 332

அரங்குகளில் கூத்து நடைபெறும் போது கூட்டம் கூடுகிறது; கூத்து முடிந்த உடன், கலைந்து சென்று விடுவதைப் போல், பெரிய செல்வமும் வருவது போலவே வந்து போய் விடும். (வள்ளுவர் காலத்தில் நாடகம், நாட்டியம், சினிமா இல்லை)

*அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அது பெற்றால்,*
*அற்குப ஆங்கே செயல்!* 333

செல்வம் எந்த இடத்திலும் நிலைத்து இருக்காத இயல்பு உடையது; அப்படிப்பட்ட செல்வத்தைப் பெற்றால், அப்பொழுதே நல்ல காரியங்களைச் செய்து விட வேண்டும்.

*நாள் என ஒன்றுபோல் காட்டி, உயிர், ஈரும்*
*வாளது — உணர்வார்ப் பெறின்.* 334

நாள் என்பது, ஒரு கால அளவு போல் காட்டி அடுத்தடுத்துப் பல நாட்களாக வந்து, சிறுகச் சிறுக, உயிரை அறுத்துவிடுகின்ற வாள் என்பதை உணர வேண்டும் (ஒவ்வொரு நாளாக வாழ்நாள் கழிகிறது).

*நாச் செற்று, விக்குள் மேல்வாராமுன், நல் வினை*
*மேற்சென்று செய்யப்படும்.* 335

பேச முடியாமல் நாக்குக் குழறி விக்கல் எழுந்து, உடலை விட்டு உயிர் போவதற்கு முன், விரைவாக, நல்ல காரியங்களைச் செய்து விட வேண்டும்.

*'நெருநல் உளன், ஒருவன்; இன்று இல்லை !' என்னும்*
*பெருமை உடைத்து, இவ் உலகு.* 336

நேற்று இருந்தவன் இன்று இறந்து போனான் என்னும் பெருமையை உடையது இந்த உலகம்.

*ஒருபொழுதும் வாழ்வது அறியார், கருதுப—*
*கோடியும் அல்ல, பல.* 337

ஒரு நாள் முழுவதும் கூட, உயிரோடு இருப்பதை அறியாதவர், எண்ணுகின்ற எண்ணங்களோ ஒரு கோடி அல்ல. பல கோடி!

*குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்றே—*
*உடம்பொடு உயிரிடை நட்பு.* 338

முட்டையை விட்டு பருவம் வந்ததும் பறவை பறந்து செல்லுவதைப் போல, உயிரும் இந்த உடலை விட்டு ஒரு நாள் கழன்று ஓடிப் போகும். உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு இதுதான்.

*உறங்குவது போலும், சாக்காடு; உறங்கி*
*விழிப்பது போலும், பிறப்பு.* 339

தூங்கி தன்னை மறப்பது போன்றது மரணம்; தூங்கிப் பிறகு எழுகின்ற விழிப்பைப் போன்றது பிறப்பு.

*புக்கில் அமைந்தின்றுகொல்லோ— உடம்பினுள்*
*துச்சில் இருந்த உயிர்க்கு !* 340

மூப்பும் நோயும் கொண்ட இந்த உடம்பின் ஒருபுறத்தில் ஒண்டுக் குடியாக இருந்த உயிருக்கு, நீங்காமல் குடியிருக்க நிலையாக ஒரு வீடு இன்னும் அமையவில்லை போலும்!

# 35. துறவு

## (ஆசைகளை ஒழித்து விடுவது)

*யாதனின் யாதனின் நீங்கியான், நோதல்
அதனின் அதனின் இலன்.* 341

எந்தப் பொருளின் மீதும் ஆசை இல்லாதவனுக்குத் துன்பம் உண்டாகாது.

*வேண்டின், உண்டாகத் துறக்க; துறந்தபின்,
ஈண்டு இயற்பால பல.* 342

துன்பம் இல்லாமல் இருக்க வேண்டுமானால், எல்லாப் பொருள்களும் இருக்கின்ற காலத்திலேயே, அவற்றில் உள்ள ஆசைகளை விலக்கி விட வேண்டும். அதனால் நன்மைகள் பல உண்டு.

*அடல் வேண்டும், ஐந்தன் புலத்தை; விடல் வேண்டும்,
வேண்டிய எல்லாம் ஒருங்கு.* 343

ஐந்து பொறிகளின் வழியே வருகின்ற ஆசையை அடக்க வேண்டும். அவற்றிற்கு ஏற்ற பொருள்களை எல்லாம் ஒருங்கே விட்டு விட வேண்டும்.

*இயல்பு ஆகும், நோன்பிற்கு ஒன்று இன்மை; உடைமை
மயல் ஆகும், மற்றும் பெயர்த்து.* 344

ஆசை இல்லாமல் இருப்பது தவம் செய்கின்றவருக்கு இயல்பு, ஆசை வைத்தால் மீண்டும் மனக்கலக்கத்துக்கு இடம் உண்டாகும்.

*மற்றும் தொடர்பாடு எவன்கொல்? பிறப்பு அறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை.* 345

பிறப்பின் பயனையும் அதனால் வரும் துன்பத்தையும் விட்டு விட நினைப்பவர்களுக்கு உடம்பும் கூட ஒரு சுமை ஆகும். அப்படியிருக்க, அதற்கு மேல் வேறு தொடர்பு எதற்காக?

*'யான்', 'எனது', என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு*
*உயர்ந்த உலகம் புகும்.* 346

'என் உடம்பு' 'என்னுடைய பொருள்' என்று நினைக்கின்ற மயக்கத்தை விட்டவன் தேவர்களுக்கும் மேலான புகழ் அடைவான்.

*பற்றி விடாஅ, இடும்பைகள் — பற்றினைப்*
*பற்றி, விடாஅதவர்க்கு.* 347

'நான்', 'எனது' என்னும் ஆசைகளை இறுகப் பிடித்துக் கொண்டு விடாதவர்களைத் துன்பங்கள் விட மாட்டா.

*தலைப்பட்டார், தீரத் துறந்தார்; மயங்கி*
*வலைப்பட்டார், மற்றையவர்.* 348

ஆசைகளை எல்லாம் விட்டு விட்டவரே உயர்ந்தவர். அப்படி ஆசையை விடாதவர் துன்பங்களில் சிக்கி மயங்குவார்.

*பற்று அற்றகண்ணே பிறப்பு அறுக்கும்; மற்றும்*
*நிலையாமை காணப்படும்.* 349

ஆசையை விட்டு விட்ட பொழுதே, பிறவித் துன்பமும் விடுபட்டுப் போகும். இல்லையென்றால், துன்பம் தரும் புகழற்ற வாழ்வு தொடர்ந்து வரும்.

*பற்றுக, பற்றுஅற்றான் பற்றினை! அப் பற்றைப்*
*பற்றுக, பற்று விடற்கு!* 350

ஆசைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட கடவுளிடம் கொள்ளும் ஆசை யை வளர்க்க வேண்டும். அந்த ஆசையானது, கீழான ஆசைகளை எல்லாம் விட்டு விட உதவும்.

# 36. மெய் உணர்தல்

## (மெய்ப் பொருளை உணருவது)

**பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும்**
**மருளான் ஆம், மாணாப் பிறப்பு. 351**
ஒரு பொருட்டாக எண்ணத் தகாதவைகளை எல்லாம் மதித்து, ஒரு பொருட்டாக என்றும் மயக்க உணர்வால் பிறவித் துன்பங்கள் பெருகும்.

**இருள் நீங்கி இன்பம் பயக்கும்—மருள் நீங்கி**
**மாசு அறு காட்சியவர்க்கு. 352**
தெளிந்த அறிவு உடையோருக்கு, அவருடைய உண்மையான அறிவானது, மயக்கமான நிலையை நீக்கி இன்பத்தைத் தரும்.

**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணியது உடைத்து. 353**
ஐயங்களிலிருந்து விடுபட்ட, உண்மை அறிவு உடையோருக்கு வான் உலகமானது இந்த உலகத்தைவிட மிக நெருங்கி இருக்கும் (புகழ் உலகம் எளிதாகக் கிடைக்கக் கூடியது).

**ஐஉணர்வு எய்தியக் கண்ணும் பயம் இன்றே—**
**மெய் உணர்வு இல்லாதவர்க்கு. 354**
உண்மை அறிவு இல்லாதவருக்கு ஐந்து புலன்களும் தம் வசமான போதிலும் பயன் இல்லை.

**எப் பொருள் எத் தன்மைத்துஆயினும், அப் பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு. 355**
பொருள் எப்படிப்பட்ட தன்மையுடையது என்றாலும் அதன் உண்மை நிலையையும், இயல்பையும் அறிந்து கொள்ளுவதே அறிவுத் தெளிவு.

*கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்*
*மற்று ஈண்டு வாரா நெறி.* 356

படிக்க வேண்டியவற்றைப் படித்து, அவற்றின் உண்மைப் பொருளை அறிந்து தெளிந்தவர் மறுபடியும் வந்து அடைகின்ற பிறவித் துன்பத்திலிருந்து விடுபடுவார்.

*ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒருதலையா,*
*பேர்த்து உள்ளவேண்டா பிறப்பு.* 357

உண்மைப் பொருளை ஆராய்ந்து அறிந்து தெளிகின்ற நிலையை மனம் பெற்று விட்டால், பிறவிச் சங்கடத்தால் வருகின்ற துன்பம் அதனைச் சாராது.

*பிறப்பு என்னும் பேதைமை நீங்க, சிறப்பு என்னும்*
*செம்பொருள் காண்பது அறிவு.* 358

பிறவியோடு தொடர்கின்ற அறியாமைநீங்கி, புகழ் தரும் மெய்ப் பொருளைக் காண்பதே உண்மையான அறிவு.

*சார்பு உணர்ந்து, சார்பு கெட ஒழுகின், மற்று அழித்துச்*
*சார்தரா, சார்தரும் நோய்.* 359

எல்லாப் பொருள்களும் சார்ந்துள்ள உண்மைப் பொருளை உணர்ந்து, தீயவை சேராமல் நடந்தால் துன்பங்கள் வந்து சேராது.

*காமம், வெகுளி, மயக்கம், இவை மூன்றன்*
*நாமம் கெட, கெடும் நோய்.* 360

விருப்பு, வெறுப்பு, குழப்பம் ஆகிய மூன்றையும் விட்டு ஒழித்தால், துன்பங்கள் வந்து அடையாது.

## 37. அவா அறுத்தல்

## (ஆசையை ஒழித்து விடுவது)

*'அவா' என்ப—'எல்லா உயிர்க்கும், எஞ் ஞான்றும்,
தவாஅப் பிறப்பு ஈனும் வித்து.'* 361

ஆசை என்பது எல்லா உயிருக்கும் எப்போதும் இடைவிடாமல் வருகின்ற பிறவித் துன்பத்துக்கு இடுகின்ற விதையாகும்

*வேண்டுங்கால், வேண்டும் பிறவாமை; மற்று அது
வேண்டாமை வேண்ட, வரும்.* 362

ஏதாவது ஒன்றை விரும்பிப் பெற வேண்டுமானால், பிறவாத நிலையைப் பெற விரும்ப வேண்டும். அது ஆசையை விட்ட நிலையில் கிடைக்கும்.

*வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டு இல்லை;
யாண்டும் அஃது ஒப்பது இல்.* 363

ஆசையை விட்டு விடுவது என்பது பெரிய செல்வத்தைப் பெறுவது போன்றது. இத்தகைய செல்வத்துக்கு ஈடான பெரிய செல்வம் இங்கு மட்டும் அல்ல, வேறு எங்கேயும் இல்லை.

*தூஉய்மை என்பது அவா இன்மை; மற்று அது
வாஅய்மை வேண்ட, வரும்.* 364

மேலான புனிதத் தன்மை என்பது ஆசையை விடுகின்ற நிலை. அந்த நிலையும் பொய் பேசாத உண்மையால் கைகூடும்.

*அற்றவர் என்பார் அவா அற்றார்; மற்றையார்
அற்று ஆக அற்றது இலர்.* 365

பற்றை விட்டவர் என்பவர் ஆசையை விட்டவர். அப்படி ஆசையை விடாதவரை பற்றை விட்டவராகச் சொல்லுவதற்கு இல்லை.

*அஞ்சுவது ஓரும் அறனே; ஒருவனை*
*வஞ்சிப்பது ஓரும் அவா.* 366

ஒருவனை, அவன் அறியாமலேயே கெடுத்துத் துன்பம் தருவது ஆசை தான். ஆதலால், ஆசையை விட்டு ஒழித்து வாழ்வதே நல்வாழ்வு.

*அவாவினை ஆற்ற அறுப்பின், தவா வினை*
*தான்வேண்டும் ஆற்றான் வரும்.* 367

ஆசையை விட்டு ஒழித்தால்தான் விரும்பியபடி வாழ்கின்ற துன்பம் இல்லாத நிலை வந்து அடையும்

*அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம்; அஃது உண்டேல்*
*தவாஅது மேன்மேல் வரும்.* 368

ஆசையை முற்றும் விட்டு ஒழித்தவருக்கு துன்பமே இல்லை. ஆனால், ஆசை இருந்து விட்டாலோ, துன்பங்கள் மேலும் மேலும் தொடர்ந்து வரும்.

*இன்பம் இடையறாது, ஈண்டும்—அவா என்னும்*
*துன்பத்துள் துன்பம் கெடின்.* 369

துன்பத்தில் எல்லாம் கொடிய துன்பமான ஆசையைவிட்டு விட்டால், இடைவிடாது தொடர்ந்து இன்பம் பெற்று இந்த உலகத்தில் வாழ முடியும். 369

*ஆரா இயற்கை அவா நீப்பின், அந் நிலையே*
*பேரா இயற்கை தரும்.* 370

போதும் என்ற மனநிறைவைத் தராத ஆசையை விட்டு ஒழித்து விட்டால், அப்படி விட்டு விட்ட அந்த நிலையானது, எப்பொழுதும் நீங்காத பெருவாழ்வைத் தரும்.

# 38. ஊழ்

## (நல்ல செயல், தீய செயல்)

*ஆகு ஊழால் தோன்றும், அசைவு இன்மை; கைப்பொருள்
போகு ஊழால் தோன்றும், மடி.* 371

கைப்பொருள் சேருவதற்கான இடைவிடாத முயற்சி ஊழ் காரணமாக வரும். அதேபோல் கைப்பொருள் கரைவதற்குக் காரணமான சோம்பலும் ஊழால் வரும்.

*பேதைப் படுக்கும், இழவு ஊழ்; அறிவு அகற்றும்,
ஆகல் ஊழ் உற்றக்கடை.* 372

பொருள் இழப்பதற்குக் காரணமான தீவினை, அறியாமையை வளர்க்கும், பொருள் சேருவதற்கு உதவும் நல்வினை அறிவைப் பெருக்கும்.

*நுண்ணிய நூல் பல கற்பினும், மற்றும் தன்
உண்மை அறிவே மிகும்.* 373

நுட்பமான பல நூல்களைப் படித்துத் தெளிந்தாலும், ஊழ்வினைக்கு ஏற்றபடி அவனுக்கு உள்ள அறிவே மேலோங்கி நிற்கும்.

*இரு வேறு, உலகத்து இயற்கை; திரு வேறு;
தெள்ளியர் ஆதலும் வேறு.* 374

செல்வம் உடையவராகவும், அறிவு உடையவராகவும் இரண்டு வக யைாக இருக்கின்ற இந்த உலகத்தின் இயற்கை, அவரவர் செய்த நல்வினை, தீவினை ஆகிய இருவேறு காரணத்தால் அமைந்தது.

*நல்லவை எல்லாஅம் தீய ஆம்; தீயவும்
நல்ல ஆம்;– செல்வம் செயற்கு.* 375

செல்வம் தேடுகையில் ஊழ்வினை காரணமாக, நல்லவை எல்லாம் தீயவை ஆவதும் உண்டு. தீயவை எல்லாம் நல்லவை ஆவதும் உண்டு.

பரியினும் ஆகாவாம், பால் அல்ல; உய்த்துச்
சொரியினும் போகா, தம. 376

ஊழ்வினை காரணமாக, உரிமை இல்லாத பொருள்களை எப்படிக் காப்பாற்றினாலும் நிலைக்காது. உரிமையான பொருள்களை வெறுத்து ஒதுக்கினாலும் போகாது.

வகுத்தான் வகுத்த வகை அல்லால், கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. 377

நல்ல செயல், தீய செயல் வகுத்தபடிதான் வாழ முடியுமே தவிர, கோடி கோடியாகச் செல்வத்தைச் சேர்த்து வைத்திருந்தாலும், அவற்றை நம் விருப்பம்போல் அனுபவிக்க முடியாது.

துறப்பார்மன், துப்புரவு இல்லார்—உறற்பால
ஊட்டா கழியும் எனின் 378

துன்பங்கள் வந்து தொல்லைப் படுத்தாமல் நீங்கி விடும் என்றால், பொருள் வசதி இல்லாத வறுமை யாளர்கள் கூட துறவிகள் ஆகி விடுவார்கள்.

நன்று ஆம் கால் நல்லவாக் காண்பவர், அன்று ஆம் கால்,
அல்லற்படுவது எவன்? 379

நன்மைகள் உண்டாகும்போது நல்வினை என்று கருதி மகிழ்கின்றவர், தீவினை தருகின்ற தீமைகளைக் கண்டு துன்புற்றுக் கலங்குவது ஏனோ?

ஊழின் பெருவலி யா உள—மற்று ஒன்று
சூழினும், தான் முந்துறும்? 380

ஊழ்வினையைவிட மிகவும் வலிமை உடையது வேறு என்ன இருக்கிறது? ஊழ் வினையிலிருந்து தப்பிப்போக வேறு வழியைத் தேடினாலும் அங்கேயும் அதுவே முந்திக்கொண்டு வந்து நிற்கும்.

*(திருவள்ளுவர் 'ஊழ்' என்று குறிப்பிடுகிறார். அதை நல்ல செயல், தீய செயல், நல்வினை, தீவினை, விதி, நியதி என்று அர்த்தம் கொள்ளலாம்.)*

# 39. இறைமாட்சி

## (அரசனின் பெருமை)

*படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண், ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு.* 381

வலிமை பொருந்திய படை ஒழுக்கம் உள்ள குடிமக்கள், உணவுப் பொருள், திரண்ட செல்வம், திறமையான அமைச்சர்கள், அண்டை நாடுகளின் நட்பு, உறுதியான பாதுகாப்பு ஆகிய ஆறு பிரிவுகளை உடையவன் அரசர்களுள் சிறந்தவன்.

*அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், இந் நான்கும்*
*எஞ்சாமை—வேந்தற்கு இயல்பு.* 382

அஞ்சாத வலிமை, கொடை, தெளிந்த அறிவு, மன எழுச்சி இந்த நான்கு குணங்களும் குறைவு இல்லாமல் இருப்பதே அரசருக்கு உரிய சிறப்பு.

*தூங்காமை, கல்வி, துணிவுடைமை, இம் மூன்றும்*
*நீங்கா—நிலன் ஆள்பவற்கு.* 383

சுறுசுறுப்பு, கல்வி, துணிவு ஆகிய மூன்றும் நாட்டை ஆட்சி செய்யும் அரசருக்கு முக்கியமாக இருக்க வேண்டியவை.

*அறன் இழுக்காது, அல்லவை நீக்கி, மறன் இழுக்கா*
*மானம் உடையது—அரசு.* 384

ஆட்சி முறைக்கு ஏற்ற நன்மைகள் தவறாமல், தீமைகளை நீக்கி, வீரத்தில் குறைவு இல்லாமல், மானத்தை உடையவனே சிறந்த அரசன்.

*இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த*
*வகுத்தலும், வல்லது—அரசு.* 385

வருவாய்க்கு உரிய வழியை ஆராய்ந்து பொருள்களைப் பெருக்கி, வந்த பொருள்களைப் பாதுகாத்து, அவற்றை அளவு அறிந்து செலவு செய்வதிலும் திறமை உடையவனே அரசன்.

**காட்சிக்கு எளியன், கடுஞ் சொல்லன் அல்லனேல்,**
**மீக்கூறும், மன்னன் நிலம்.** 386

எளிதில் காணக்கூடியவனாகவும், இனிமையாகப் பேசுகின்றவனாகவும் உள்ள அரசனின் ஆட்சியில் இருக்கும் நாட்டின் புகழ் எங்கும் பரவும்.

**இன் சொலால் ஈத்து, அளிக்க வல்லாற்குத் தன் சொலால்**
**தான் கண்டனைத்து, இவ் உலகு.** 387

இனிமையாகப் பேசி, ஏழைகளுக்கு உதவி செய்து வருகின்ற அரசன் எண்ணியபடி உலக வாழ்வு அமையும்; புகழும் கிடைக்கும்.

**முறை செய்து காப்பாற்றும் மன்னவன், 'மக்கட்கு**
**இறை' என்று வைக்கப்படும்.** 388

நீதியோடு நடந்து, குடிமக்களைக் காப்பாற்றுகின்ற மன்னன், மக்களின் தலைவன் என்று போற்றப் படுவான்.

**செவி கைப்பச் சொற் பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ்த் தங்கும், உலகு.** 389

காது வெறுக்கும்படி குறை கூறித் திரிகின்றவரின் சொற்களையும் பொறுத்துக் கொள்ளும் பெருந்தன்மை மிக்க அரசன் உலகத்தை வென்று ஆட்சி செலுத்துவான்.

**கொடை, அளி, செங்கோல், குடி—ஓம்பல், நான்கும்**
**உடையான் ஆம், வேந்தர்க்கு ஒளி.** 390

உதவி செய்வது, கருணை காட்டுவது, நீதியோடு நடப்பது, குடிமக்களைப் பாதுகாப்பது ஆகிய நான்கு குணங்களும் பொருந்திய அரசன் மற்ற அரசர்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்குப் போன்றவன்.

*(அரசன் என்பதை ஆட்சியாளர் என்றும் கொள்ளலாம்.)

## 40. கல்வி

### (படித்து அறிவு பெறுவது)

*கற்க, கசடு அற, கற்பவை! கற்றபின்,*
*நிற்க, அதற்குத் தக!* 391

தன்னுடைய குற்றம் நீங்குவதற்காக, சிறந்த நூல்களைத் தெரிந்து எடுத்துப் படித்து அறிவு பெற வேண்டும். படித்த பிறகு, அந்த நூல்களில் கூறியுள்ளபடி நடந்து கொள்ள வேண்டும்.

*எண் என்ப, ஏனை எழுத்து என்ப, இவ் இரண்டும்*
*கண் என்ப, வாழும் உயிர்க்கு.* 392

எண் என்ற கணக்கும், எழுத்து என்ற இலக்கியமும் ஆகிய இரண்டு கலைகளும், வாழ்கின்ற மக்கள் அறிவு பெறுவதற்கு வழிகாட்டும் இரண்டு கண்களைப் போன்றவை.

*கண் உடையர் என்பவர் கற்றோர்; முகத்து இரண்டு*
*புண் உடையர், கல்லாதவர்.* 393

கண் உள்ளவர் என்று சொன்னால், அவர் படித்தவர். படிக்காதவர் என்றால், முகத்தில் இரண்டு புண் உள்ளவர்.

*உவப்பத் தலைக்கூடி, உள்ளப் பிரிதல்*
*அனைத்தே—புலவர் தொழில்.* 394

மகிழ்ச்சி ஏற்படும்படி, பழகிப் பேசி, பிறகு பிரிந்து செல்லும் போது, “இனிமேல் இவரை எப்போது காண்போம்?” என்று ஏக்கத்தோடு நினைப்பது அறிவாளியின் செயல்.

*உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்;*
*கடையரே, கல்லாதவர்.* 395

பணக்காரர் முன் ஏழை உதவி பெறுவதற்கு நிற்பது போல, படித்தவர் முன் வணங்கி நின்று கற்றுக் கொண்டவர் உயர்ந்தவர். அவ்வாறு, கற்றுக் கொள்ளாதவர் இழிவானவர்.

*தொட்டனைத்து ஊறும், மணற்கேணி;—மாந்தர்க்குக்*
*கற்றனைத்து ஊறும், அறிவு.* 396

மணல் கேணியில் தோண்டிய அளவுக்குத் தண்ணீர் பெருகி வரும். அதுபோல, படித்த அளவுக்கு மக்களுக்கு அறிவு வளர்ச்சி அடையும்.

*யாதானும் நாடு ஆமால்; ஊர் ஆமால்; என், ஒருவன்*
*சாம் துணையும் கல்லாதவாறு?* 397

படித்தவனுக்கு எந்த நாடும், எந்த ஊரும் சொந்த நாடும், சொந்த ஊரும் போல இருக்கும். இப்படி இருக்கும் போது, ஒருவன் சாகும் வரையும்கூட, படிக்காமல் இருப்பது ஏன்?

*ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து.* 398

இந்தப் பிறப்பில் ஒருவர் கற்ற கல்வி, அடுத்து வருகின்ற ஏழு தலை முறைக்கும் நன்மை தரும்.

*தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு*
*காமுறுவர், கற்று அறிந்தார்.* 399

தாங்கள் இன்பம் அடைவதற்குக் காரணமான கல்வி அறிவினால், உலகமும் இன்பம் அடைவதைப் பார்த்து, அறிவாளி, அவர்கள் மேலும் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்.

*கேடு இல் விழுச் செல்வம் கல்வி; ஒருவற்கு*
*மாடு அல்ல, மற்றையவை.* 400

ஒருவருக்கு அழியாத சிறந்த செல்வம் கல்விதான்! மற்ற பொருள்கள் யாவும் சிறப்புடையவை அல்ல.

## 41. கல்லாமை

### (கல்வி அறிவு இல்லாமல் இருப்பது)

*அரங்கு இன்றி வட்டு ஆடியற்றே—நிரம்பிய*
*நூல் இன்றிக் கோட்டி கொளல்.* 401

உயர்ந்த நூல்களைப் படித்து, கல்வி அறிவில் தேறாதவர், அறிவாளிகள் சபையில் சென்று பேச முற்படுவது, கோடுகள் இல்லாமல் தாயக் காயை உருட்டுவதைப் போன்றது.

*கல்லாதான் சொல் காமுறுதல், முலை இரண்டும்*
*இல்லாதாள் பெண் காமுற்றற்று.* 402

படிக்காத ஒருவன், படித்தவர் கூட்டத்தில் பேசப் போவது, பருவ வளர்ச்சி அடையாத பெண், இன்ப நுகர்ச்சிக்கு ஆசைப்படுவது போன்றது.

*கல்லாதவரும் நனி நல்லர்—கற்றார்முன்*
*சொல்லாது இருக்கப்பெறின்* 403

படித்தவர் கூடியுள்ள இடத்துக்கு படிக்காதவர் சென்று, ஏதேனும் உளறாமல் இருந்தால், அதுவரையிலும் அவர் மிகவும் நல்லவர் என்று நினைப்பார்.

*கல்லாதான் ஒட்பம் கழிய நன்று ஆயினும்,*
*கொள்ளார், அறிவு உடையார்.* 404

படிக்காதவன் சொல்லும் கருத்து ஒரு சமயம், மிகவும் நன்றாக இருந்தாலும், அறிவுடையோர் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

*கல்லா ஒருவன் தகைமை, தலைப்பெய்து*
*சொல்லாட, சோர்வுபடும்.* 405

படிக்காத ஒருவன், படித்தவனைப் போல் பெருமையாகப் பாசாங்கு செய்தாலும், உரையாடும் பொழுது, அவனுடைய பெருமை கெட்டுவிடும்.

*உளர் என்னும் மாத்திரையர் அல்லால், பயவாக்*
*களர் அனையர்—கல்லாதவர்.* 406

படிக்காதவர், உயிரோடு இருக்கின்றார் என்று சொல்லலாமே தவிர, அவர், எதுவும் விளையாத உவர் நிலத்தைப் போன்றவர்.

*நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம்*
*மண் மாண் புனை பாவை அற்று.* 407

நூல்களை நுட்பமாக ஆராயக்கூடிய அறிவு இல்லாதவன் சிறப்புமிக்க அழகு உடையவனாக இருந்தாலும், அவன் அழகான மண் பொம்மையைப் போன்றவன்.

*நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே—*
*கல்லார்கண் பட்ட திரு.* 408

நல்லவர்கள் வறுமையால் வாடுகினற துன்பத்தை விடக் கொடுமையானது, படிக்காதவரிடம் மிகுதியாகப் பணம் சேர்ந்திருப்பது.

*மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார், கீழ்ப்பிறந்தும்*
*கற்றார் அனைத்து இலர் பாடு.* 409

படிக்காதவர் உயர்ந்த பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவராக இருந்தாலும் ஏழைக் குடும்பத்தில் பிறந்திருந்தும் படித்ததால் பெருமை அடைந்ததைப் போல் அடைய முடியாது.

*விலங்கொடு மக்கள் அனையர்—இலங்கு நூல்*
*கற்றாரொடு ஏனையவர்.* 410

அறிவு வளர்ச்சிக்குக் காரணமான நூல்களைப் படித்தவர்களோடு ஒப்பிடுகையில் படிக்காதவர்கள் மிருகத்துக்குச் சமமானவர்கள்.

# 42. கேள்வி

## (படித்தவரிடம் கேட்டு அறிவது)

*செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச் செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.* **411**

செல்வங்களில் சிறப்பான செல்வம் காதால் கேட்டு அறிந்து கொள்ளும் கேள்விச் செல்வமே. இந்தச் செவிச் செல்வமானது எல்லாச் செல்வங்களையும் விட மேலானது.

*செவிக்கு உணவு இல்லாத போழ்து, சிறிது,
வயிற்றுக்கும் ஈயப்படும்.* **412**

காதுக்கு, கேட்டு அனுபவிக்கக் கூடிய உணவு இல்லாத போது அதற்கு உதவியாக, உடலை வளர்க்கக் கூடிய வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.

*செவியுணவின் கேள்வி உடையார், அவியுணவின்
ஆன்றாரொடு ஒப்பர், நிலத்து.* **413**

செவி உணவாகிய கேள்வியை உடையவர், இந்த உலகில் வாழ்பவரானாலும் தேவரோடு ஒப்பாவார்.

*கற்றிலன் ஆயினும் கேட்க; அஃது ஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்று ஆம் துணை.* **414**

நூல்களைப் படிக்க முடியாவிட்டாலும், படித்தவரிடம் கேட்டு அறிந்து, அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அது ஒருவருக்குத் தடுமாற்றம் ஏற்படும் சமயங்களில் தக்க துணையாகும்.

*இழுக்கல் உடை உழி ஊற்றுக்கோல் அற்றே—
ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல்.* **415**

ஒழுக்கம் உடைய சான்றோரின் அறிவுரை, சேற்று நிலத்தில் நடக்க உதவும் ஊன்றுகோல் போல் வாழ்க்கையில் உதவும்.

*எனைத்தானும் நல்லவை கேட்க! அனைத்தானும்*
*ஆன்ற பெருமை தரும்.* *416*
எவ்வளவு சிறிது ஆனாலும் நல்ல கருத்துக்களைக் கேட்டு அறிய வேண்டும். அவை சிறிதாயினும் நிறைந்த பெருமையைத் தரும்.

*பிழைத்து உணர்ந்தும் பேதைமை சொல்லார்—இழைத்து உணர்ந்து*
*ஈண்டிய கேள்வி யவர்.* *417*
கல்வி கேள்விகளில் சிறந்தவர், ஒருவேளை தவறாகப் புரிந்து கொண்டிருந்தாலும், அறிவுக்குப் பொருந்தாத கருத்தைச் சொல்ல மாட்டார்.

*கேட்பினும் கேளாத் தகையவே—கேள்வியால்*
*தோட்கப் படாத செவி.* *418*
கேள்வி அறிவால் பயன் அடையாத காதுகள், வேறு ஓசைகளைக் கேட்டு உணர்ந்தாலும் அவை செவிட்டுக் காதுகளே.

*நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய*
*வாயினர் ஆதல் அரிது.* *419*
நுட்பமான புத்தியும், சிறந்த கேள்வி அறிவும் இல்லாதவர், பணிவான சொற்களைப் பேசுகின்றவராக இருப்பது அரிது.

*செவியின் சுவை உணரா, வாய் உணர்வின், மாக்கள்*
*அவியினும் வாழினும் என்?* *420*
காதால் கேள்வி அறிவின் சுவை அறியாமல், வாயினால் உண்ணும் சுவையை மட்டும் உணரும் மக்கள் இறந்தாலும் என்ன? உயிரோடு இருந்தாலும் என்ன?

# 43. அறிவு உடைமை

## (அறிவு உள்ளவராக இருப்பது)

*அறிவு, அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்*
*உள் அழிக்கல் ஆகா அரண்.* 421

அறிவு, ஆபத்திலிருந்து காப்பாற்றக்கூடிய ஆயுதம் போன்றது. பகைவராலும் அழிக்க முடியாத உள்பாதுகாப்பு ஆகும்.

*சென்ற இடத்தால் செலவிடா, தீது ஒரீஇ,*
*நன்றின்பால் உய்ப்பது—அறிவு.* 422

மனம் போன இடத்தில் போக விடாமல், தீமைகளிலிருந்து விலக்கி, நல்ல வழியில் செலுத்துவதே உண்மையான அறிவு.

*எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும், அப்பொருள்*
*மெய்ப் பொருள் காண்பது—அறிவு.* 423

எந்தப் பொருளைப்பற்றி எவர் சொல்லக் கேட்டாலும், அந்தப் பொருளின் உண்மையான தன்மையை ஆராய்ந்து உணர்வதே அறிவு.

*எண் பொருளவாகச் செலச் சொல்லி, தான் பிறர்வாய்*
*நுண் பொருள் காண்பது—அறிவு.* 424

எளிமையாக, பிறருக்குப் புரியும்படி சொல்லுவதும், பிறரிடம் தான் கேட்டவைகளில் சிறந்த பொருளை மட்டும் கண்டு அறிவது அறிவு.

*உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்*
*கூம்பலும் இல்லது—அறிவு.* 425

உயர்ந்தவரை விரும்பி நட்புக் கொள்ளச் செய்வது அறிவு. அந்த அறிவு. முன்னே மகிழ்ந்து விரிதலும், பின்னே வருந்திக் குவிதலும் இல்லாதது.

*எவ்வது உறைவது உலகம், உலகத்தொடு*
*அவ்வது உறைவது—அறிவு.* 426

உலகம் எப்படி நடக்கின்றதோ, அப்படி, உலகத்தோடு பொருந்தி வாழ்வதே அறிவு.

*அறிவு உடையார் ஆவது அறிவார்; அறிவு இலார்*
*அஃது அறிகல்லாதவர்.* 427

நடக்க வேண்டியதைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளுகின்றவரே அறிவு உள்ளவர். அத்தகைய திறமை இல்லாதவர் அறிவு இல்லாதவர்.

*அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது*
*அஞ்சல், அறிவார் தொழில்.* 428

பயப்பட வேண்டிய தீமைக்குப் பயப்படாமல் இருப்பது, அறிவு இல்லாதவர் செய்கை; பயப்பட வேண்டிய தீமைக்குப் பயப்படுவது அறிவு உள்ளவர் செய்கை.

*எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை—*
*அதிர வருவதோர் நோய்.* 429

வரப்போகும் தீமையை முன்கூட்டியே அறிந்து, அதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளக் கூடிய அறிவு உள்ளவருக்கு நடுங்கும்படியான எந்த ஒரு துன்பமும் உண்டாகாது.

*அறிவு உடையார் எல்லாம் உடையார்; அறிவு இலார்*
*என் உடையரேனும் இலர்.* 430

அறிவு உடையோர், வேறு எது ஒன்றும் இல்லாமல் இருந்தாலும், எல்லாம் உள்ளவராகவே கருதப்படுவார். அறிவு இல்லாதவர் வேறு எதைப் பெற்று இருந்தாலும், அறிவைப் பெறாததால் ஒன்றும் இல்லாதவராகவே எண்ணப்படுவார்.

# 44. குற்றம் கடிதல்

## (குற்றம் செய்யாமல் இருப்பது)

*செருக்கும், சினமும், சிறுமையும், இல்லார்*
*பெருக்கம் பெருமித நீர்த்து.* 431

கர்வம், கோபம், சிறுமை ஆகியவை இல்லாதவருடைய செல்வம புகழ் உடையது.

*இவறலும், மாண்பு இறந்த மானமும், மாணா*
*உவகையும்,—ஏதம், இறைக்கு.* 432

கருமித்தனம், போற்றத் தகுதியில்லாத மானம், அற்பத்தனமான மகிழ்ச்சி ஆகியவை தலைவராக இருப்பவருக்குக் குற்றங்கள்.

*தினைத் துணையாம் குற்றம் வரினும், பனைத் துணையாக்*
*கொள்வர், பழி நாணுவார்.* 433

பழிக்குப் பயப்படுகின்றவர், தினை அளவான குற்றம் தம்மிடம் உண்டானாலும், அதனால் ஏற்படக்கூடிய தீமையைப் பனை அளவாக எண்ணிக் குற்றம் செய்ய மாட்டார்.

*குற்றமே காக்க, பொருளாக—குற்றமே,*
*அற்றம் தரூஉம் பகை!* 434

குற்றம் ஒருவருக்கு அழிவை உண்டாக்கக் கூடிய பகை. ஆகையால், குற்றம் செய்யாமல் இருப்பதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

*வரும் முன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரி முன்னர்*
*வைத்தூறு போல, கெடும்.* 435

குற்றம் வருவதற்கு முன்பே, அது வராமல் தடுத்துக் கொள்ளாதவனுடைய வாழ்வு, நெருப்புக்கு முன்னே உள்ள வைக்கோல் போர் போல அழிந்து விடும்.

*தன் குற்றம் நீக்கி, பிறர் குற்றம் காண்கிற்பின்,*
*என் குற்றம் ஆகும் இறைக்கு?* 436

முதலில் தன்னிடம் உள்ள குற்றங்களை நீக்கிவிட்டு, அதன் பிறகு, பிறருடைய குற்றங்களைக் காண்கின்ற தலைவனுக்கு ஒரு குற்றமும் வராது.

*செயற்பால செய்யாது இவறியான் செல்வம்*
*உயற்பாலது அன்றிக் கெடும்.* 437

செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்யாமல் சேர்த்து வைத்திருப்பவனுடைய செல்வம், அனுபவிக்க முடியாமல் அழிந்து விடும்.

*பற்று உள்ளம் என்னும் இவறன்மை, எற்றுள்ளும்*
*எண்ணப்படுவது ஐஒன்று அன்று.* 438

பொருளில் ஆசை வைத்து, உதவி செய்யாமல் வாழ்கின்ற கருமித்தனம், எல்லாக் குற்றங்களையும் போல சேர்த்து எண்ணப்படாத தனிக் குற்றம்.

*வியவற்க, எஞ்ஞான்றும் தன்னை! நயவற்க,*
*நன்றி பயவா வினை!* 439

எப்போதும் தன்னை உயர்வாகக் கருதிப் புகழ்ந்து கொள்ளக் கூடாது. எப்போதும் நன்மை தராத, தீய காரியங்களை மனத்தாலும் நினைக்கக் கூடாது.

*காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்,*
*ஏதில, ஏதிலார் நூல்.* 440

தன்னுடைய விருப்பங்களைப் பிறர் அறிந்து கொள்ள முடியாமல் அனுபவிக்க வல்லவன் ஆனால், பகைவர் தன்னை கவஞ்சிக்க நினைக்கும் சூழ்ச்சி பலிக்காமல் போகும்.

# 45. பெரியாரைத் துணைக்கோடல்

## (பெரியாரைத் துணையாகக் கொள்ளுவது)

*அறன் அறிந்து மூத்த அறிவு உடையார் கேண்மை,*
*திறன் அறிந்து, தேர்ந்து, கொளல்.* 441

நன்மையை அறிந்த மூத்தவராய் உள்ள அறிவு உடையவரின் நட்பை, அவருடைய அருமையான திறமையை அறிந்து தேடிப் பெற வேண்டும்.

*உற்ற நோய் நீக்கி, உறாஅமை முன் காக்கும்*
*பெற்றியார்ப் பேணிக் கொளல்.* 442

வந்த துன்பத்தை நீக்கி, இனிமேல் துன்பம் வராமல், முன்னதாகத் தடுக்கக்கூடிய தன்மை உள்ளவரைப் போற்றித் துணையாகக் கொள்ளவேண்டும்.

*அறியவற்றுள் எல்லாம் அரிதே—பெரியாரைப்*
*பேணித் தமராக் கொளல்.* 443

பெரியோரைப் போற்றி மகிழச் செய்து தனக்கு உறவாக்கிக் கொள்வது, பெறக்கூடிய செல்வங்களில் எல்லாம் மிகச் சிறப்பான செல்வம்.

*தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்,*
*வன்மையுள் எல்லாம் தலை.* 444

தம்மைவிட வயதில், அறிவில் மூத்த பெரியவரைத் தமக்குத் துணையாகக் கொண்டு, அவர் சொற்படி நடப்பது, எல்லா வல்லமைகளிலும் சிறந்தது.

*சூழ்வார் கண் ஆக ஒழுகலான், மன்னவன்*
*சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.* 445

தகுந்த வழிமுறைகளை ஆராய்ந்து அறிகின்றவர் களைக் கண்ணாகக் கொண்டு உலகம் நடப்பதால், அரசனும் அப்படிப்பட்ட அறிவு உள்ளவர்களைத் துணையாகப் பெறவேண்டும்.

*தக்கார் இனத்தனாய், தான் ஒழுக வல்லானைச்*
*செற்றார் செயக்கிடந்தது இல்.* 446

தகுதி உள்ள பெரியோர்களின் துணையைப் பெற்று, அவர்களுடைய ஆலோசனைப்படி நடக்கக் கூடியவனுக்குப் பகைவர் செய்யக்கூடிய தீங்கு எதுவும் இல்லை.

*இடிக்கும் துணையாரை ஆள்வாரை, யாரே,*
*கெடுக்கும் தகைமையவர்?* 447

குற்றத்தைக் கண்டித்து, அறிவுரை கூறத்தக்க பெரியோரின் துணை யோடு நடக்கின்றவரைக் கெடுத்துவிட யாரால் முடியும்?

*இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்,*
*கெடுப்பார் இலானும், கெடும்.* 448

தீமைகளைக் கண்டித்து அறிவுரை கூறத்தக்க பெரியோரின் துணையைப் பெறாத அரசனைக் கெடுக்கத்தக்க பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் தானே கெட்டுப் போவான்.

*முதல் இலார்க்கு ஊதியம் இல்லை;– மதலைஆம*
*சார்பு இலார்க்கு இல்லை, நிலை.* 449

மூலதனம் இல்லாத வர்த்தகருக்கு லாபம் கிடைக்காது. அதுபோல, தம்மை ஆதரித்துப் பாதுகாக்கும் பெரியோரின் துணை இல்லாதவருக்கு நிலையான பெருமை இல்லை.

*பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்தே–*
*நல்லார் தொடர்கை விடல்.* 450

நல்ல பெரியோருடைய நட்பைக் கைவிடுவது, பலருடைய பகையைத் தேடிக் கொள்ளுவதைவிடப் பல மடங்கு தீமையைத் தரும்.

# 46. சிற்றினம் சேராமை

## (கெட்டவர்களோடு சேராமல் இருப்பது)

*சிற்றினம் அஞ்சும், பெருமை; சிறுமைதான்*
*சுற்றமாச் சூழ்ந்துவிடும்.* 451

அறிவும் ஒழுக்கமும் இல்லாத கெட்டவர் கும்பலைக் கண்டு பெருமை உடைய பெரியோர் பயந்து ஒதுங்கி விடுவார். சிறுமை உடையோர் அந்தக் கும்பலோடு சேர்ந்து உறவாடுவார்.

*நிலத்து இயல்பான் நீர் திரிந்து, அற்று ஆகும்;— மாந்தர்க்கு*
*இனத்து இயல்பது ஆகும், அறிவு.* 452

தண்ணீர், எந்த நிலத்தைச் சேர்ந்திருக்கின்றதோ, அந்த மண்ணின் தன்மைக்கு ஏற்ப, நிறமும், சுவையும் பெறும். அதுபோல, மனிதரும், சேர்ந்திருக்கும் இனத்தை ஒட்டியே அவரவர் குணமும் மாறுபடும்.

*மனத்தான் ஆம், மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தான் ஆம்,*
*இன்னான் எனப்படும் சொல்.* 453

மனிதருக்கு, மனத்துக்கு ஏற்ப உணர்வு அமையும். 'இப்படிப் பட்டவன்' என்று உலகத்தாரால் மதிக்கப்படுவது அவரவர் சேர்ந்திருக்கும் இனத்தைப் பொறுத்து அமையும்.

*மனத்து உளது போலக் காட்டி, ஒருவற்கு*
*இனத்து உளது ஆகும்—அறிவு.* 454

உள்ளத்தால் நோக்கும் போது, ஒருவன் சிறப்பாகப் பெற்றிருக்கின்றதாகக் காட்டும் அறிவு, அவன் சேர்ந்திருக்கின்ற இனத்திற்கு ஏற்ப அமைந்ததே ஆகும்.

*மனம் தூய்மை, செய்வினை தூய்மை, இரண்டும்*
*இனம் தூய்மை தூவா வரும்.* 455

ஒருவனுடைய மனம் சுத்தமாக இருப்பது, செய்கை சுத்தமாக இருப்பது ஆகிய இரண்டும் அவன் சேர்ந்திருக்கின்ற இனத்தின் சுத்தத்தால் அமையும்.

*மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும்; இனம் தூயார்க்கு இல்லை, நன்று ஆகா வினை.* 456

மனம் சுத்தமாக உள்ளவர் அடைந்த புகழ், அவருக்கு நன்மை தரும். இனம் சுத்தமாக அமைந்தவருக்கு துன்பம் ஏற்படாது.

*மன நலம் மன் உயிர்க்கு ஆக்கம்; இன நலம் எல்லாப் புகழும் தரும்.* 457

உள்ளத்தில் நன்மை, வாழும் உயிருக்குப் பெருமை தரும் இனத்தின் நன்மை எல்லாப் புகழையும் அளிக்கும்.

*மன நலம் நன்கு உடையர் ஆயினும், சான்றோர்க்கு இன நலம் ஏமாப்பு உடைத்து.* 458

உள்ளத்தின் நன்மையை உறுதியாகப் பெற்று இருந்தாலும் சான்றோருக்கு, சார்ந்திருக்கும் இனத்தின் நன்மை மேலும் அதிகமான வலிமையைத் தரும்.

*மன நலத்தின் ஆகும், மறுமை; மற்று அஃதும் இன நலத்தின் ஏமாப்பு உடைத்து.* 459

மனத்தின் நன்மையால் இந்தப் பிறவியில் மட்டும் அல்ல இனி வரும் பிறவியிலும் நன்மை தரும். அதுவும் சார்ந்திருக்கும் இனத்தின் தன்மையால் மேலும் சிறப்பு உண்டாகும்.

*நல் இனத்தின் ஊங்கும் துணை இல்லை; தீ இனத்தின் அல்லற்படுப்பதூஉம் இல்.* 460

நல்ல இனத்தைதவிடச் சிறந்த துணை உலகில் வேறு இல்லை. தீய இனத்தை விடத் துன்பப்படுத்தும் பகையும் இல்லை.

## 47. தெரிந்து செயல் வகை

### (செய்யத் தக்க காரியத்தை ஆராய்ந்து செய்வது)

*அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி, வழிபயக்கும்*
*ஊதியமும் சூழ்ந்து, செயல்!* 461

ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன், அதனால் ஏற்படும் செலவு, வரவு, பிறகு கிடைக்கும் லாபம் இவைகளை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

*தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு*
*அரும் பொருள் யாது ஒன்றும் இல்.* 462

தெரிந்த மனிதரோடு, காரியத்தை ஆராய்ந்து, தானும் யோசித்துப் பார்த்துச் செய்கின்றவருக்கு முடியாத காரியம் எதுவும் இல்லை.

*ஆக்கம் கருதி, முதல் இழக்கும் செய்வினை*
*ஊக்கார், அறிவு உடையார்.* 463

பிறகு வரக்கூடிய லாபத்தை எண்ணி, தற்போது கையில் உள்ள மூலதனத்தை இழக்கக் கூடிய காரியத்தை அறிவுள்ளவர் செய்ய மாட்டார்.

*தெளிவு இலதனைத் தொடங்கார்—இளிவு என்னும்*
*ஏதப்பாடு அஞ்சுபவர்.* 464

இழிவு உண்டாக்கும் குற்றத்துக்குப் பயப்படுகின்றவர், 'இவ்வளவு லாபம் வரும்' என்று ஆராய்ந்து தீர்மானிக்காமல், காரியத்தைத் தொடங்க மாட்டார்.

*வகை அறச் சூழாது எழுதல், பகைவரைப்*
*பாத்திப் படுப்பது ஓர் ஆறு.* 465

செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி, எல்லா விவரங்களையும் முடிவாக எண்ணாமல், தொடங்கி விடுவது பகைவரை வளர்த்துக் கொள்ள வழி அமைத்துக் கொடுத்தது போன்றது (தொழிலில் போட்டியையும், போலிச்சரக்கு உற்பத்தியாளரையும் குறிப்பிடடுப் பகைவர் என்று கூறுகிறார் போலும்).

*செய்தக்க அல்ல செயக் கெடும்; செய்தக்க
செய்யாமையானும் கெடும்.* 466

ஒருவன் செய்யத்தகாத செயலைச் செய்வதனால் கெட்டுப் போவான்; செய்யத்தகுந்த செயல்களை உடனே செய்யாமல் விட்டாலும் கெட்டுப் போவான்.

*எண்ணித் துணிக, கருமம்; துணிந்தபின்,
எண்ணுவம் என்பது இழுக்கு.* 467

செய்ய வேண்டிய காரியத்தை எண்ணி, அதற்கான வழியை ஆராய்ந்து தொடங்க வேண்டும். தொடங்கிய பிறகு, ஆராய்ந்து கொள்ளலாம் என்று நினைப்பது குற்றம்.

*ஆற்றின் வருந்தா வருத்தம், பலர் நின்று
போற்றினும், பொத்துப்படும்.* 468

தகுந்த வழி முறையில் சென்று, காரியத்தை நிறைவேற்ற முடியாத முயற்சியைப் பிறகு, பலருடைய உதவியோடு செய்ய முயன்றாலும் முடியாமல் பாழாகிவிடும்.

*நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு—அவரவர்
பண்பு அறிந்து ஆற்றாக்கடை.* 469

அவரவருடைய குணத்தை ஆராய்ந்து அறிந்து, அதற்கு ஏற்றவாறு செய்யாவிட்டால், நன்மை செய்வதிலும்கூட குற்றம் உண்டாகும்.

469

*எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும்—தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.* 470

தம்முடைய தகுதிக்குப் பொருத்தம் இல்லாத காரியத்தைச் செய்தால், உலகம் ஒத்துக் கொள்ளாது. ஆகையால், உலகம் இழிவாகக் கருதாத காரியத்தைச் செய்ய வேண்டும்.

## 48. வலி அறிதல்

### (திறமையை அறிந்து காரியம் செய்வது)

*வினை வலியும், தன் வலியும், மாற்றான் வலியும்,*
*துணை வலியும், தூக்கிச் செயல்.* 471

செய்ய நினைக்கின்ற செயலின் தன்மை, தன்னுடைய திறமை, எதிரியின் பலம், தனக்கும் எதிரிக்கும் துணை நிற்பவர் வலிமை ஆகியவற்ற ை ஒப்பிட்டு ஆராய்ந்து செய்யவேண்டும்.

*ஒல்வது அறிவது அறிந்து, அதன்கண் தங்கிச்*
*செல்வார்க்குச் செல்லாதது இல்.* 472

தம்மால் இயன்றதையும், தெரிய வேண்டியதையும் தெரிந்து கொண்டு, அதில் மனத்தைச் செலுத்தி, முயற்சியுடன் செய்கின்றவருக்கு முடியாத காரியம் ஒன்றும் இல்லை.

*உடைத் தம் வலி அறியார், ஊக்கத்தின் ஊக்கி,*
*இடைக்கண் முரிந்தார் பலர்.* 473

தன்னுடைய ஆற்றல் என்னஎன்பதைத் தெரியாமல் ஊக்கத்தினால், ஒரு காரியத்தைச் செய்ய முற்பட்டு, இடையில் அதை முடிக்க முடியாமல் கெட்டுப் போனவர் பலர்.

*அமைந்து ஆங்கு ஒழுகான், அளவு அறியான், தன்னை*
*வியந்தான், விரைந்து கெடும்.* 474

மற்றவர்களோடு ஒத்துப்போகாமல், தனக்கு உள்ள ஆற்றலையும் உணராமல், தன்னைப் பெரிதாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறவன் விரைவில் கெட்டுப் போவான்.

*பீலி பெய் சாகாடும் அச்சு இறும்—அப் பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்.* 475

மயில் இறகு மிகவும் மெல்லியது. அதையும் அளவுக்கு அதிகமாக வண்டியில் ஏற்றினால் பாரம் தாங்காமல் அச்சுமுறிந்து விடும். ஒரு பொருளின் தன்மையைவிட அதனுடைய வலிமை மிகவும் முக்கியம்.

*நுனிக் கொம்பர் ஏறினார் அஃது இறந்து ஊக்கின்,*
*உயிர்க்கு இறுதி ஆகிவிடும்.* 476

மரத்தின் உச்சிக் கிளையில் ஏறியவர், அதையும் கடந்து மேலும், செல்ல நினைத்தால், கீழே விழுந்து உயிர்விட நேரிடும். வலிமைக்கு மிஞ்சிய காரியத்தைச் செய்யக் கூடாது.

*ஆற்றின் அளவு அறிந்து ஈக; அது பொருள்*
*போற்றி வழங்கும் நெறி.* 477

தன்னிடம் இருக்கின்ற செல்வத்தின் அளவை அறிந்து, மற்றவருக்குக் கொடுத்து உதவ வேண்டும். அதுவே செல்வத்தைப் பாதுகாத்து வாழும் முறை.

*ஆகு ஆறு அளவு இட்டிது ஆயினும், கேடு இல்லை—*
*போகு ஆறு அகலாக்கடை.* 478

செல்வம் வருகின்ற வழி (வருமானம்) அளவு சிறிதானாலும் சரி; போகின்ற வழி (செலவு) அதிகம் ஆகாவிட்டால், செல்வத்துக்கு அழிவு இல்லை.

*அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல*
*இல்லாகி, தோன்றாக் கெடும்.* 479

தன்னிடம் இருக்கின்ற செல்வத்தின் அளவைத் தெரிந்து, அதற்குத் தகுந்தபடி வாழாதவன் வாழ்க்கை ஆடம்பரமாக (சிறப்பாக) இருப்பதுபோல் காணப்பட்டு, பிறகு இல்லாமல் மறைந்து விடும்.

*உள வரை தூக்காத ஒப்புரவு ஆண்மை,*
*வள வரை வல்லைக் கெடும்.* 480

தன்னிடம் உள்ள செல்வம், எவ்வளவு என்ற கணக்குத் தெரியாமல், உதவிகள் செய்து கொண்டிருந்தால், இருப்பு இல்லாமல் போய் வறுமை வந்து விடும்.

# 49. காலம் அறிதல்

## (காலத்தை அறிந்து காரியம் செய்வது)

*பகல் வெல்லும், கூகையைக் காக்கை;— இகல் வெல்லும்*
*வேந்தர்க்கு வேண்டும், பொழுது.* 481

காக்கை பகல் பொழுதில், அதைவிட வலிமையுள்ள கோட்டானை வென்று விடும். (இரவில் கோட்டான் காக்கையை வென்று விடும்.) பகலில் கோட்டானுக்குக் கண் தெரியாது; இரவில் காக்கைக்குக் கண் தெரியாது. அதுபோல், பகைவரை வெல்ல எண்ணுகின்ற அர சன் தகுந்த நேரத்தைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

*பருவத்தொடு ஒட்ட ஒழுகல்—திருவினைத்*
*தீராமை ஆர்க்கும் கயிறு.* 482

காலத்துக்கு ஏற்றபடி காரியம் செய்யும் திறமை, செல்வம் அழியாமல் கட்டி வைக்கும் கயிறு போன்றது.

*அரு வினை என்ப உளவோ—கருவியான்*
*காலம் அறிந்து செயின்?* 483

தகுந்த கருவிகளுடன், காலத்தையும் அறிந்து தொழிலைச் செய்தால், எளிதில் நிறைவேற்ற முடியாத செயல் ஒன்றும் இல்லை.

*ஞாலம் கருதினும், கைகூடும்—காலம்*
*கருதி, இடத்தான் செயின்.* 484

காலத்தை அறிந்து தொழிலுக்கான இடத்தையும் தேர்ந்து எடுத்துச் செய்தால், உலகம் முழுவதும் பிரபலம் அடையக் கூடிய எண்ணம் நிறைவேறும்.

*காலம் கருதி இருப்பர்—கலங்காது*
*ஞாலம் கருதுபவர்.* 485

உலகப் பிரபலம் அடையக் கருதுகின்றவர், அதை நினைத்துக் கலங்கிக் கொண்டிருக்காமல் அதற்குத் தகுந்த காலத்தைக் கருதிப் பொறுமையுடன் இருப்பார்.

*ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொரு தகர்*
*தாக்கற்குப் பேரும் தகைத்து.* 486
மிகுந்த தைரியம் உடையவன், ஒரு காரியத்தைச் செய்யக் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பது, சண்டைக் கடா எதிர்த்துப் பாய்வதற்காகப் பின்வாங்கு வதைப் போன்றது.

*பொள்ளென ஆங்கே புறம் வேரார்; காலம் பார்த்து*
*உள் வேர்ப்பர், ஒள்ளியவர்.* 487
அறிவில் சிறந்தவர், பிறர் செய்த தீங்கை நினைத்து கோபத்தை வெளியே காட்டிக் கொள்ள மாட்டார். தீங்கு செய்தவரை வெல்வதற்கு ஏற்ற காலத்தை எதிர்பார்த்து, மனத்தில் கோபம் கொள்வார்.

*செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை*
*காணின் கிழக்காம் தலை.* 488
பகைவரைக் கண்டால் பொறுத்துக் கொள்ள வேண்டும். அவருக்கு முடிவு காலம் வந்தபோது அவருடைய தலை, தானாகவே விழுந்து விடும். (பகை ஒழியும் போது, தலை கவிழ்ந்து விடும்.)

*எய்தற்கு அரியது இயைந்தக்கால், அந் நிலையே*
*செய்தற்கு அரிய செயல்.* 489
தகுந்த சந்தர்ப்பம் வாய்க்கும்போது, அதைப் பயன்படுத்திக் கொண்டு, அப்போதே சிறப்பான காரியங்களை செய்து முடித்துவிட வேண்டும்.

*கொக்கு ஒக்க, கூம்பும் பருவத்து; மற்று அதன்*
*குத்து ஒக்க, சீர்த்த இடத்து.* 490
கொக்கு குளக்கரையில் காத்திருந்து மீனைக் கொத்திப் பிடிப்பதைப் போல, தகுந்த காலம் வரும் வரை காத்திருந்து, காலம் வாய்த்ததும், காரியத்தை தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

# 50. இடன் அறிதல்

## (இடத்தை அறிந்து காரியத்தைச் செய்வது)

*தொடங்கற்க எவ் வினையும்; எள்ளற்க—முற்றும்*
*இடம் கண்டபின் அல்லது!* 491

எதிரியை வளைத்து வெற்றி கொள்ளத் தக்க இடத்தைக் கண்டு அறிவதற்குமுன், எந்தக் காரியத்தையும் தொடங்கக் கூடாது. எதிரியை எளிதாகக் கருதி, இகழவும் கூடாது.

*முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் அரண் சேர்ந்து ஆம்*
*ஆக்கம் பலவும் தரும்.* 492

பலவிதத்திலும் வலிமை மிகுந்தவருக்கும் பாதுகாப்போடு ஏற்படுகின்ற வெற்றியானது பல நன்மைகளைத் தரும்.

*ஆற்றாரும் ஆற்றி அடுப—இடன் அறிந்து*
*போற்றார்கண் போற்றிச் செயின்.* 493

வலிமை இல்லாதார் தகுந்த இடத்தைக் கண்டு அறிந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டு, பகைவரிடம் சென்று காரியத்தைச் செய்வாரானால் வலிமை உடையவராக வெற்றி அடைவார்.

*எண்ணியார் எண்ணம் இழப்பர்—இடன் அறிந்து*
*துன்னியார் துன்னிச் செயின்.* 494

தக்க இடசத்தை அறிந்து, பாதுகாப்புடன் காரியத்தை உறுதியோடு செய்வாரானால் அப்படிப்பட்டவரை வெற்றி கொள்ள நினைத் திருந்த பகைவர் தம் எண்ணத்தை கை விடுவார்.

*நெடும் புனலுள் வெல்லும் முதலை; அடும், புனலின்*
*நீங்கின், அதனைப் பிற.* 495

ஆழமான தண்ணீரில் இருக்கின்ற முதலையானது, மற்ற பிராணிகளைக் கொன்று தின்று விடும். ஆனால், தண்ணீரை விட்டு, முதலை வெளியே வந்தால், மற்ற பிராணிகள் அதைக் கொன்று விடும். (இடமே முக்கியமான காரணம்).

*கடல் ஓடா, கால் வல் நெடுந் தேர்; கடல் ஓடும்
நாவாயும் ஓடா, நிலத்து.* 496

உறுதியான சக்கரங்களைக் கொண்ட பெரிய தேர் கடலில் ஓட இயலாது. கடலில் செல்லும் கப்பலும் தரையில் ஓட முடியாது (எவ்வளவு வலிமை இருந்தாலும், இடத்துக்கு ஏற்றபடிதான் இயங்கும்).

*அஞ்சாமை அல்லால், துணை வேண்டா—எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின்.* 497

தகுந்த இடத்தை அறிந்து, குறைவு இல்லாமல், செய்ய வேண்டியதைச் செய்தால், பயப்படாத மன உறுதியைத் தவிர, வேறு துணை வேண்டியது இல்லை.

*சிறு படையான் செல் இடம் சேரின், உறு படையான்
ஊக்கம் அழிந்து விடும்.* 498

சிறு படையைக் கொண்டவன் ஆனாலும், தகுந்த இடத்தை அறிந்து செயல்பட்டால், பெரிய படையைக் கொண்டவன் வெல்ல நினைக்கும் முயற்சி பலிக்காது.

*சிறை நலனும் சீரும் இலர் எனினும், மாந்தர்
உறை நிலத்தொடு ஒட்டல் அரிது.* 499

பகைவர் தக்க பாதுகாப்பும், வலிமையும் இல்லாதவர் ஆனாலும், அவர் இருக்கும் இடம் தேடிச் சென்று அங்கே அவரை வெல்ல முடியாது.

*கால் ஆழ் களரின் நரி அடும், கண் அஞ்சா
வேல் ஆள் முகத்த களிறு.* 500

வேல் ஏந்திய வீரரைத் தன் கொம்புகளால் குத்தித் தூக்கிக்கொண்டு வரும் அஞ்சாத பெரிய யானை, கால் அழுந்தும் சேற்று நிலத்தில் சிக்கியபோது சிறு நரி அதைக் கொன்று விடும். (வலிமை மிகுந்தவர் ஆனாலும், தகாத இடத்துக்குச் சென்றால் அழிவு ஏற்படும்).

# 51. தெரிந்து தெளிதல்

## (ஆராய்ந்து அறிந்து நம்புவது)

*அறம், பொருள், இன்பம், உயிரச்சம், நான்கின்*
*திறம் தெரிந்து தேறப் படும்.* 501

நன்மைகளைக் கடைப்பிடித்து நடப்பவனா, நேர்மையான வழியில் சம்பாதித்து வாழ்க்கை நடத்துகின்றவனா, தவறான வழியில் இன்பம் விரும்பாதவனா, சமயம் நேர்ந்தால் உயிருக்கு அஞ்சாமல் உதவக் கூடியவனா என்ற நான்கையும் அறிந்த பிறகே ஒருவனை நம்ப வேண்டும்.

*குடிப் பிறந்து, குற்றத்தின் நீங்கி, வடுப் பரியும்*
*நாண் உடையான்கட்டே தெளிவு.* 502

நல்ல குடும்பத்தில் பிறந்தவனாகவும், குற்றங்கள் செய்யாதவனாகவும், பழிக்கு அஞ்சி நாணம் உடையவனாகவும் இருப்பவனிடமே நம்பிக்கை கொள்ள வேண்டும்.

*அரிய கற்று, ஆசு அற்றார்கண்ணும், தெரியுங்கால்*
*இன்மை அரிதே, வெளிறு.* 503

மிகச் சிறந்த நூல்களைக் கற்று, குற்றம் இல்லாதவரிடத்திலும் ஆராய்ந்து பார்த்தால், அறியாமை இல்லாமல் இருப்பது அரிது (ஏதாவது ஒரு முட்டாள்தனம் இருக்கும்).

*குணம் நாடி, குற்றமும் நாடி, அவற்றுள்*
*மிகை நாடி, மிக்க கொளல்!* 504

ஒருவனுடைய குணங்களையும், குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றில் எது அதிகமோ அவற்றைக் கொண்டு அவனைத் தீர்மானிக்க வேண்டும்.

*பெருமைக்கும், ஏனைச் சிறுமைக்கும், தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்.* 505

நல்ல குணம் உள்ளவன் என்ற பெருமைக்கும், கெட்ட குணம் உள்ளவன் என்ற சிறுமைக்கும் உரைகல்லாக இருப்பது அவனவனுடைய செயலே (தங்கத்தை கல்லில் உரைத்துப் பார்த்து, அதன் தரத்தை அறிவது போன்றது).

*அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்று அவர்*
*பற்று இலர்; நாணார் பழி.* **506**

சுற்றத்தார் தொடர்பு இல்லாதவர் பற்று இல்லாதவர்; பழிக்கு அஞ்சாதவர்; அப்படிப்பட்டவரை நம்பக் கூடாது.

*காதன்மை கந்தா, அறிவு அரியார்த் தேறுதல்*
*பேதைமை எல்லாம் தரும்.* **507**

தனக்குப் பிரியமானவர் என்ற காரணத்துக்காக மட்டும், தெரிந்து கொள்ள வேண்டியவைகளைச் சரிவரத் தெரிந்து கொள்ளாதவரை நம்பி காரியத்தை அவரிடம் ஒப்படைப்பது, எல்லா வகையாலும் அறியாமையால் வரும் துன்பத்தைத் தரும்.

*தேரான், பிறனைத் தெளிந்தான் வழிமுறை*
*தீரா இடும்பை தரும்.* **508**

ஒருவனுடைய குணநலன்களை ஆராய்ந்து, தெரிந்து கொள்ளாமல், அவனிடம் நம்பிக்கை கொள்ளுவது, தனக்கு மட்டும் அல்லாமல், தன்னுடைய தலைமுறையினருக்கும் தீராத துன்பத்தைத் தரும்.

*தேறற்க யாரையும், தேராது; தேர்ந்த பின்,*
*தேறுக, தேறும் பொருள்.* **509**

ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல் எவரையும் நம்பி விடக் கூடாது. ஆராய்ந்த பிறகு. அவருடைய திறமைக்குத் தகுந்த காரியத்தை நம்பி அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

*தேரான் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும்,*
*தீரா இடும்பை தரும்.* **510**

ஆராயாமல் ஒருவனை நம்புவதும், நம்பிய பிறகு, அவனிடம் சந்தேகம் கொள்வதும் தீராத துன்பத்தைத் தரும்.

# 52. தெரிந்து வினையாடல்
## (தொழில் வல்லவரை நம்பி ஒப்படைப்பது)

*நன்மையும் தீமையும் நாடி, நலம் புரிந்த*
*தன்மையான் ஆளப்படும்.* **511**

நன்மையையும் தீமையையும் ஆராய்ந்து, அவற்றில் நன்மையை விரும்பி அதன்படி நடப்பவன் நல்ல காரியம் செய்கின்றவனாகக் கருதப்படுவான்.

*வாரி பெருக்கி, வளம் படுத்து, உற்றவை*
*ஆராய்வான் செய்க வினை!* **512**

வருமானத்தை அதிகரித்து செழிப்பான வாழ்வைப் பெற்று, வரக்கூடிய தொல்லைகளை ஆராய்ந்து, நீக்கத் திறமை உள்ளவனே எந்தச் செயலையும் செய்ய வேண்டும்.

*அன்பு, அறிவு, தேற்றம், அவா இன்மை, இந் நான்கும்*
*நன்கு உடையான்கட்டே தெளிவு* **513**

அன்பு, கூர்மையான அறிவு, சந்தேகம் இல்லாத தெளிவு, பொருளில் ஆசை இல்லாமை-ஆகிய இந்த நான்கு குணங்கள் நன்கு அமைந்தவனிடத்தில் நம்பிக்கை கொள்ளலாம்.

*எனை வகையான் தேறியக்கண்ணும், வினை வகையான்*
*வேறாகும் மாந்தர் பலர்.* **514**

பலவகையாலும் ஆராய்ந்து தெளிந்த பிறகும், செயலைச் செய்யும்போது செயலின் செய்முறையால், மாறுபடக்கூடிய மக்கள் பலர் உலகத்தில் இருக்கின்றனர்.

*அறிந்து, ஆற்றி, செய்கிற்பாற்கு அல்லால், வினைதான்*
*சிறந்தான் என்று ஏவற்பாற்று அன்று.* **515**

செயல் வழி முறைகளை அறிந்து, ஏற்படக்கூடிய இடையூறுகளை விலக்கி, காரியத்தைச் செய்து முடிக்கக்கூடிய திறமை சாலியைவிட, வேறு ஒருவன் சிறந்தவன் என்று நினைத்து, காரியத்தைச் செய்யும்படி அவனை ஏவக்கூடாது.

*செய்வானை நாடி, வினை நாடி, காலத்தோடு
எய்த உணர்ந்து, செயல்!* 516

ஒரு செயலைச் செய்கின்றவனுடைய குணத்தை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தகுந்த காலத்தோடு பொருந்தும்படி, அந்தச் செயலைச் செய்விக்க வேண்டும்.

*'இதனை, இதனால், இவன் முடிக்கும்' என்று ஆய்ந்து,
அதனை அவன்கண் விடல்!* 517

இந்தக் காரியத்தை, இந்த முறையில் இவன் செய்து முடிப்பான் என்று ஆராய்ந்து, அவனிடமே அந்தக் காரியத்தை ஒப்படைக்க வேண்டும் (அப்படி ஆராயாமல் ஒப்படைப்பது அறிவீனம்).

*வினைக்கு உரிமை நாடிய பின்றை, அவனை
அதற்கு உரியன் ஆகச் செயல்!* 518

ஒரு காரியத்தைச் செய்து முடிக்க ஒருவனுக்கு உள்ள தகுதியை ஆராய்ந்த பிறகு, அவனை அந்தக் காரியத்தைச் செய்வதற்கு உரிமை உள்ளவனாக உயர்த்த வேண்டும்.

*வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக
நினைப்பானை நீங்கும், திரு.* 519

தான் மேற்கொண்டிருக்கும் தொழிலிலே அக்கறை செலுத்துகின்றவனுடைய உறவைப் பற்றிச் சந்தேகப் படுபவனுடைய செல்வம் அழிந்து போகும்.

*நாள்தோறும் நாடுக, மன்னன்—வினைசெய்வான்
கோடாமைக் கோடாது உலகு.* 520

தொழில் செய்கின்றவன் தவறு செய்யாமல் இருக்கும் வரையில் உலகம் வளமாக இருக்கும். ஆகையால், தொழில் செய்கின்றவன் தளராமல் இருக்கும்படி நாள்தோறும் அரசன் கவனித்துக் கொள்ள வேண்டும்.

## 53. சுற்றம் தழால்

### (சுற்றத்தார் உறவு விலகாமை ஆதரிப்பது)

பற்று அற்றகண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள. 521

ஒருவன் செல்வத்தை இழந்து வறுமையில் இருக்கின்ற போதும், அவனோடு இருந்த பழைய உறவைப் பாராட்டிப் பேசுகின்ற குணம் சுற்றத்தாரிடமே உண்டு.

விருப்பு அறாச் சுற்றம் இயையின், அருப்பு அறா
ஆக்கம் பலவும் தரும். 522

அன்பு அகலாத உறவு ஒருவனுக்கு அமையுமானால், அத்தகைய உறவு குறையாத செல்வத்தையும், வளமான வாழ்வையும் அவனுக்குத் தரும்.

அளவளாவு இல்லாதான் வாழ்க்கை—குளவளாக்
கோடு இன்றி நீர் நிறைந்தற்று. 523

உறவினரோடு கூடி, அன்போடு மகிழ்ந்து பழகாதவனுடைய வாழ்க்கை, கரையில்லாத நீர் நிறைந்திருக்கின்ற குளத்தைப் போன்றது (கரை இல்லாத குளத்தில் நீர் தங்காமல் வீணாகும்).

சுற்றத்தால் சுற்றப்பட்ட ஒழுகல், செல்வம்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 524

உறவினர் சூழ்ந்திருந்து, உறவு கொண்டாடும்படி அன்புடன் வாழ்வது, ஒருவன் செல்வத்தைப் பெற்றதனால் அடைகின்ற சிறந்த நன்மை.

கொடுத்தலும் இன் சொலும் ஆற்றின், அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப்படும். 525

பொருள் கொடுத்து உதவுவதும், இனிமையாகப் பேசி மகிழ்வதும் ஆகிய நல்ல குணங்கள் உள்ளவனைச் சுற்றத்தார் விலகாமல், சூழ்ந்து கொண்டிருப்பார்கள்.

*பெருங் கொடையான், பேணான் வெகுளி, அவனின்*
*மருங்கு உடையார் மா நிலத்து இல்.* **526**
பெரிய கொடை வள்ளலாகவும், கோபம் கொள்ளாத வனாகவும் இருந்தால், அவனைப் போலச் சுற்றத்தார் களை நிறையப் பெற்றி ருப்பவர் உலகத்தில் யாரும் இல்லை.

*காக்கை கரவா கரைந்து உண்ணும்; ஆக்கமும்*
*அன்ன நீரார்க்கே உள.* **527**
காக்கை தனக்குக் கிடைத்த இரையை மறைத்து வைத்துத் தின்னாமல், சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும். அதைப் போல, சுற்றமாகிய செல்வமும் அத்தகைய தன்மை உள்ளவருக்கே உண்டு.

*பொதுநோக்கான், வேந்தன் வரிசையா நோக்கின்,*
*அது நோக்கி வாழ்வார் பலர்.* **528**
அரசன், எல்லோரையும் சமமாகப் பார்க்காமல், அவனவன் சிறப்புக்கு ஏற்றபடி பார்த்தால், அதை விரும்பி சுற்றத்தாராக வாழ்கின்றவர் பலர்.

*தமர் ஆகி, தன்—துறந்தார் சுற்றம் அமராமைக்*
*காரணம் இன்றி வரும்.* **529**
சுற்றத்தாராக இருந்தவர் பிறகு, ஏதோ ஒரு காரணத்தால் விலகி பொருத்தமற்ற காரணம் மறைந்ததும் மீண்டும் வந்து சேருவார்.

*உழைப் பிரிந்து காரணத்தின் வந்தானை, வேந்தன்*
*இழைத்து இருந்து, எண்ணிக் கொளல்.* **530**
காரணம் இல்லாமல், தன்னை விட்டுப் பிரிந்து சென்று, பிறகு ஒரு காரணமாக, தன்னிடம் வந்து சேருகின்றவனை விரும்பியதைக் கொடுத்து ஆராய்ந்து அவனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## 54. பொச்சாவாமை

### (மறதி இல்லாமல் இருப்பது)

*இறந்த வெகுளியின் தீதே—சிறந்த*
*உவகை மகிழ்ச்சியின் சோர்வு.* 531

உள்ளம் மிகவும் களிப்பு அடைந்து, மகிழ்ச்சியில் திளைத்து இருக்கும் போது, ஒருவனுக்கு ஏற்படும் மறதியினால் உண்டாகும் சோர்வு, அளவுக்கு மீறி வரும் கோபத்தை விடத் தீமையானது.

*பொச்சாப்புக் கொல்லும் புகழை—அறிவினை*
*நிச்சம் நிரப்புக் கொன்றாங்கு.* 532

நாள்தோறும் தொடர்ந்து வருகின்ற வறுமையானது, அறிவைக் கொல்லுவது போல, ஒருவனுடைய புகழையும் அவனுடைய மறதி கொன்று விடும்.

*பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை; அது உலகத்து*
*எப் பால் நூலோர்க்கும் துணிவு.* 533

மறதியால் சோர்ந்து நடக்கின்றவருக்குப் புகழுடன் வாழ்கின்ற சந்தர்ப்பம் இல்லை. இது உலகத்தில் எந்த நாட்டிலும் உள்ள அறிவாளிகள் கண்ட உண்மை.

*அச்சம் உடையார்க்கு அரண் இல்லை; ஆங்கு இல்லை,*
*பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.* 534

மனத்தில் பயம் உள்ளவருக்கு வெளியே எப்படிப்பட்ட பாதுகாப்பு இருந்தாலும், அதனால் பயன் இல்லை. அதுபோல, மறதி உள்ளவருக்கு எவ்வளவு உயர்ந்த நிலை கிடைத்த போதிலும், அதனால் நன்மை இல்லை.

*முன்னுறக் காவாது இழுக்கியான், தன் பிழை,*
*பின் ஊறு, இரங்கிவிடும்.* 535

வரக்கூடிய இடையூறுகளை முன்னதாக அறிந்து, அதைத் தடுத்துக் காத்துக் கொள்ள மறந்து சோர்ந்தவன் பிறகு துன்பம் வந்த போது, தன் குற்றத்தை நினைத்து வருந்துவான்.

*இழுக்காமை, யார்மாட்டும், என்றும், வழுக்காமை*
*வாயின், அஃது ஒப்பது இல்.* 536

எவரிடத்திலும் எக்காலத்திலும் மறதியும், சோம்பலும் இல்லாத் தன்மை இருக்குமானால், அதற்கு இணையான சிறப்பு வேறு எதுவும் இல்லை.

*அரிய என்று ஆகாத இல்லை—பொச்சாவாக்*
*கருவியான் போற்றிச் செயின்.* 537

மறவாது இருத்தல் என்னும் கருவியைக் கொண்டு கடமையை கவனித்துச் செய்கின்றவனுக்குச் செய்ய முடியாத காரியம் ஒன்றும் இல்லை.

*புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்; செய்யாது*
*இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.* 538

சான்றோர் புகழ்ந்து கூறிய நல்ல காரியங்களைக் கவனத்துடன் செய்ய வேண்டும், அப்படிச் செய்யாமல், மறந்தவருக்கு ஏழேழு தலைமுறைக்கும் நன்மை இல்லை.

*இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக—தாம் தம்*
*மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து!* 539

தன்னுடைய மகிழ்ச்சிப் பெருக்கினால் ஆணவத்தோடு கடமையை மறந்து இருக்கும்போது, அப்படி மறந்து இருந்த காரணத்தினால் கெட்டுப் போனவர்களுடைய வரலாற்றை நினைத்துப் பார்க்க வேண்டும்.

*உள்ளியது எய்தல் எளிதுமன்—மற்றும் தான்*
*உள்ளியது உள்ளப்பெறின்.* 540

ஒருவன் எண்ணியதை மறவாமல் சிந்தனை செய்து கொண்டே இருந்தால், நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிக்கலாம்.

# 55. செங்கோன்மை

## (நீதியோடு ஆட்சி புரிவது)

*ஓர்ந்து, கண்ணோடாது, இறை புரிந்து, யார்மாட்டும்*
*தேர்ந்து, செய்வஃதே முறை.* 541

குற்றம் குறைகளை அறிந்து, பாரபட்சம் இல்லாமல் நடு நிலையில் இருந்து ஆராய்ந்து செய்வதே நீதிமுறை.

*வான்நோக்கி வாழும் உலகு எல்லாம்;—மன்னவன்*
*கோல் நோக்கி வாழும் குடி.* 542

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்து வாழ்கின்றன. அதுபோல, குடிமக்கள் எல்லாரும் அரசனுடைய நீதி தவறாத ஆட்சியை எதிர்பார்த்து வாழ்கின்றனர்.

*அந்தணர் நூற்கும், அறத்திற்கும், ஆதியாய்*
*நின்றது—மன்னவன் கோல்.* 543

அறவோருக்கு உரிய வேத நூலுக்கும், அறத்துக்கும், அடிப்படையாக இருப்பது, அரசனுடைய நீதி தவறாத ஆட்சி முறை ஆகும்.

*குடி தழீஇக் கோல் ஓச்சும் மாநில மன்னன்*
*அடி தழீஇ நிற்கும், உலகு.* 544

குடிமக்களை அன்போடு நடத்தி, நீதிமுறை தவறாமல் ஆட்சி செய்கின்ற அரசனை உலகம் போற்றும்.

*இயல்புளிக் கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட—*
*பெயலும் விளையுளும் தொக்கு.* 545

நீதிமுறையோடு ஆட்சி செய்யும் அரசனுடைய நாட்டில், பருவ மழை தவறாமல் பெய்து, பயிர் வளமும் ஒருங்கே உண்டாகும்.

*வேல் அன்று, வென்றி தருவது; மன்னவன்*
*கோல்; அதூஉம், கோடாது எனின்.* 546

அரசனுக்கு வெற்றி தேடித் தருவது அவனுடைய ஆயுதம் அல்ல; அவனுடைய ஆட்சி முறையே. அந்த ஆட்சி முறையும், நீதி தவறாத ஆட்சியாக இருந்தால்தான் வெற்றி தரும்.

*இறை காக்கும், வையகம் எல்லாம்; அவனை*
*முறை காக்கும், முட்டாச் செயின்.* 547

தன்னுடைய ஆட்சிக்கு உட்பட்ட உலகத்தை எல்லாம் அரசன் காப்பாற்றுகிறான் என்றால், அப்படிப்பட்ட அரசனையும் கூட நீ முறை தவறாது நடத்துகின்ற ஆட்சிமுறையே காப்பாற்றும்.

*எண் பதத்தான் ஓரா, முறை செய்யா, மன்னவன்*
*தண் பதத்தான் தானே கெடும்.* 548

எந்தச் சமயத்திலும், யாரும் காணக்கூடிய எளிமையும், ஆராய்ச்சி அறிவும், நீதி தவறாத தன்மையும் இல்லாத அரசன் தாழ்ந்த நிலை அடைந்து (பகைவர் இல்லாமல்) தானே கெட்டுப் போவான்.

*குடி புறங்காத்து, ஓம்பி, குற்றம் கடிதல்*
*வடு அன்று; வேந்தன் தொழில்.* 549

குடிமக்களைப் பிறர் துன்புறுத்தாமலும், தன்னால் வருத்தம் உண்டாகாமலும் பாதுகாத்துக் குற்றம் செய்தவரைத் தக்கபடி தண்டித்து, ஆட்சி செய்வது அரசனுக்கு உரிய கடமையே அல்லாமல் குற்றம் அல்ல.

*கொலையின், கொடியாரை, வேந்து ஒறுத்தல் பைங்கூழ்*
*களை கட்டதனொடு நேர்.* 550

கொடியவருக்கு அரசன் மரண தண்டனை கொடுப்பது, விளைகின்ற நிலத்தில் வளர்கின்ற களையை ஒழித்துப் பாதுகாப்பதைப் போன்றது.

# 56. கொடுங்கோன்மை

## (நீதி தவறிய கொடுமையான ஆட்சி)

*கொலை மேற்கொண்டாரின் கொடிதே—அலை மேற்கொண்டு*
*அல்லவை செய்து ஒழுகும் வேந்து.* 551

குடிமக்களைத் துன்பப்படுத்தி, முறையற்ற காரியங்களைச் செய்து வாழ்கின்ற அரசன் கொலை பாதகர்களை விடக் கொடியவன்

*வேலொடு நின்றான், 'இடு' என்றது போலும்—*
*கோலொடு நின்றான் இரவு.* 552

ஆட்சி செய்கின்ற அரசன், குடிமக்களிடம் அநியாயமாக வரிகளைப் போட்டு வசூலிப்பது, கொள்ளைக்காரன் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு, பயணிகளிடம் வழிப் பறி செய்வதைப் போன்றது.

*நாள்தொறும் நாடி, முறைசெய்யா மன்னவன்*
*நாள்தொறும் நாடு கெடும்.* 553

நாள்தோறும், தன்னுடைய ஆட்சியில் நடைபெறுகின்ற நன்மை தீமைகளை ஆராய்ந்து, ஒழுங்குபடுத்தாத அரசன், மெல்ல மெல்லத் தன் நாட்டை இழந்து விடுவான்.

*கூழும் குடியும் ஒருங்கு இழக்கும்—கோல் கோடி,*
*சூழாது, செய்யும் அரசு.* 554

எதையும் ஆராயாமல் மனம் போனபடி ஆட்சி செய்யும் கொடுங்கோல் அரசன், பொருளையும், குடிமக்களையும் ஒருங்கே இழந்து விடுவான்.

*அல்லற்பட்டு, ஆற்றாது, அழுத கண்ணீர் அன்றே—*
*செல்வத்தைத் தேய்க்கும் படை.* 555

கொடுங்கோல் ஆட்சியினால், துன்பம் அடைந்து, பொறுக்க முடியாமல், குடிமக்கள் அழுது வடித்த கண்ணீரே, அந்த ஆட்சியின் செல்வத்தை அழிக்கக்கூடிய ஆயுதம் போன்றது.

**மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃது இன்றேல்,
மன்னாவாம், மன்னர்க்கு ஒளி. 556**

அரசனுக்குப் புகழ் நிலைத்து நிற்பதற்குக் காரணம், நீதி தவறாத ஆட்சிமுறைதான். அது இல்லையானால், அரசனுக்குப் புகழ் நிலைக்காது.

**துளி இன்மை ஞாலத்திற்கு எற்று அற்றே, வேந்தன்
அளி இன்மை வாழும் உயிர்க்கு. 557**

மழை பெய்யாவிட்டால், உலகம் என்ன ஆகும்? அதைப் போலத்தான், நாட்டில் வாழும் குடிமக்களுக்கு, அரசனுடைய அன்பு இல்லாத (முறையில்லாத) ஆட்சி.

**இன்மையின் இன்னாது, உடைமை—முறை செய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். 558**

நீதி தவறிய அரசனுடைய கொடுமையான ஆட்சியில், ஏழ்மையாக இருப்பதை விடச் செல்வந்தனாக இருப்பது, அதிகமான துன்பத்தைத் தரும்.

**முறை கோடி மன்னவன் செய்யின், உறை கோடி
ஒல்லாது, வானம் பெயல். 559**

அரசன் முறை தவறி நாட்டை ஆட்சி செய்தால், அந்த நாட்டில் மேகம் மழை பொழியாது (பஞ்சமும், பட்டினியும் கொள்ளையும் ஏற்படும்).

**ஆ பயன் குன்றும்; அறுதொழிலோர் நூல் மறப்பர்;—
காவலன் காவான் எனின். 560**

நாட்டை ஆளும் அரசன் முறைப்படி ஆட்சி செய்யா விட்டால், பசுக்கள் பால் தரக்கூடிய பயன்களும், கல்வி போதித்தல், பொது நல வேள்வி செய்தல், உழவு செய்தல், கொடுப்பது, வாங்குவது ஆகிய ஆறு வகையான தொழில்களும் அவற்றின் அறிவும் இல்லாமல் போகும்.

## 57. வெருவந்த செய்யாமை
## (குடிமக்கள் அஞ்சும்படியான காரியங்கள்)

தக்காங்கு நாடி, தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. 561

ஒருவன் செய்த குற்றத்தை முறையாக விசாரித்து, அந்தக் குற்றம் மீண்டும் செய்யாதபடி, குற்றத்துக்கு ஏற்ற தண்டனை கொடுப்பவனே அரசன்.

கடிது ஓச்சி, மெல்ல எறிக—நெடிது ஆக்கம்
நீங்காமை வேண்டுபவர். 562

ஆட்சி நீண்டகாலம் நீடித்திருக்க விரும்புகின்றவர், குற்றம் செய்தவருக்கு அதிகமான தண்டனை அளிக்கப் போவதாகப் பயமுறுத்தி, குறைவான தண்டனை கொடுக்க வேண்டும்.

வெருவந்த செய்து ஒழுகும் வெங் கோலன் ஆயின்,
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். 563

குடிமக்கள் பயந்து நடுங்கும்படியான கொடுமைகளைச் செய்து ஆட்சி செய்கின்ற கொடுங்கோலனான அரசன் நிச்சயமாக விரைவில் அழிந்து விடுவான்.

'இறை கடியன்' என்று உரைக்கும் இன்னாச் சொல் வேந்தன்
உறை கடுகி ஒல்லைக் கெடும். 564

'நம்முடைய அரசன் கொடுமையானவன்' என்று குடிமக்கள் கூறுகின்ற இழிவான சொல்லைத் தேடிக் கொண்ட அரசன் ஆயுள் குறைந்து விரைவில் அழிந்து போவான்.

அருஞ் செவ்வி, இன்னா முகத்தான் பெருஞ் செல்வம்
பேஎய் கண்டன்னது உடைத்து. 565

எளிதில் பார்க்க முடியாத கெடுபிடியும், கடுகடுத்த முகத்தை உடையவனிடம் இருக்கின்ற திரண்ட செல்வம், பேய் கண்டு பாதுகாத்திருப்பதைப் போன்றது. (எவருக்கும் பயன்படாத செல்வத்தை 'தனம் காத்த பூதம்' என்று மக்கள் கூறுவர்.)

கடுஞ் சொல்லன், கண் இலன் ஆயின், நெடுஞ் செல்வம்
நீடு இன்றி, ஆங்கே கெடும். 566

கடுமையாகப் பேசுகிறவன், இரக்கம் இல்லாதவன், எவ்வளவு பெரிய செல்வம் பெற்றிருந்தாலும் அது நிலைக்காமல் அழிந்து போகும்.

*கடு மொழியும், கையிகந்த தண்டமும், வேந்தன்*
*அடு முரண் தேய்க்கும் அரம்.* 567

கொடூரமான பேச்சும் முறையற்ற தண்டனையும் அரசனுடைய வெற்றிக்குக் காரணமான வீரத்தை அழிக்கும் அரம் (ரம்பம்) போன்றது.

*இனத்து ஆற்றி, எண்ணாத வேந்தன் சினத்து ஆற்றிச்*
*சீறின், சிறுகும் திரு.* 568

தன்னைச் சேர்ந்த தக்கவர்களிடம் கலந்து ஆலோசிக்காமல் கோபம் கொண்டு கொதித்து எழுந்து செய்யும் அரசனுடைய செல்வமும், புகழும் குறைந்து விடும்.

*செரு வந்த போழ்தில், சிறை செய்யா வேந்தன்,*
*வெருவந்து, வெய்து கெடும்.* 569

முன்னெச்சரிக்கையோடு பாதுகாப்புச் செய்து கொள்ளாத அரசன், போர் ஏற்பட்ட போது, தற்காப்பு இல்லாமல், பயந்து அழிந்து போவான்.

*கல்லார்ப் பிணிக்கும், கடுங் கோல்; அது அல்லது*
*இல்லை, நிலக்குப் பொறை.* 570

ஆட்சிமுறை இன்னது என்று அறியாத மூடர்களை ஆலோசகர்களாகக் கொண்ட அரசனுடைய ஆட்சியைவிடப் பூமிக்குப் பாரம் வேறு இல்லை.

## 58. கண்ணோட்டம்

## (இளகிய மனத்தோடு இருப்பது)

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான், உண்டு இவ் உலகு. 571

தாட்சணியம் என்னும் மிகச்சிறந்த அழகான பண்பு இருக்கின்ற காரணத்தால்தான் இந்த உலக சமுதாயம் இன்னும் அழியாமல் இருக்கின்றது.

கண்ணோட்டத்து உள்ளது உலகியல்; அஃது இலார்
உண்மை நிலக்குப் பொறை. 572

தாட்சணியத்தால்தான் உலக வாழ்வு நடைபெற்று வருகின்றது. அந்தப் பண்பு இல்லாதவர் உயிரோடு இருப்பது பூமிக்குச் சுமையே தவிர, வேறு எவருக்கும் எந்த விதமான பயனும் இல்லை.

பண் என் ஆம், பாடற்கு இயைபு இன்றேல்?—கண் என் ஆம்,
கண்ணோட்டம் இல்லாத கண்? 573

பாட்டோடு பொருந்தாத இசையால் என்ன இன்பம் உண்டாகும்? அதுபோல தாட்சணியம் இல்லா விட்டால், என்ன நன்மையைத் தரும்?

உளபோல் முகத்து எவன் செய்யும்—அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்? 574

எதையும் பார்த்து அறியக்கூடிய கண்ணோட்டம் இல்லாத கண்கள் முகத்தில் இருப்பவை போல் தோன்றுகிறதே தவிர, அவற்றால் என்ன நன்மை?

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃது இன்றேல்,
புண் என்று உணரப்படும். 575

கண்ணுக்கு அணிகலமாக இருப்பது கண்ணோட்டம் என்னும் அன்பு நோக்கு; அந்த அன்புப் பார்வை இல்லா விட்டால், கண் அல்ல புண் என்று உணர வேண்டும்.

*மண்ணொடு இயைந்த மரத்து அனையர்— கண்ணொடு இயைந்து, கண்ணோடாதவர்.* 576

கண் இருந்தும் கண்ணோட்டம் இல்லாதவர், மண்ணில் நிற்கின்ற மரத்தைப் போன்றவர்.

*கண்ணோட்டம் இல்லவர் கண் இலர்; கண் உடையார் கண்ணோட்டம் இன்மையும் இல்.* 577

கண்ணோட்டம் இல்லாதவர் கண் இல்லாதவரே. கண் உள்ளவர் கண்ணோட்டம் இல்லாதவராக இருக்க முடியாது.

*கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு உரிமை உடைத்து, இவ் உலகு.* 578

தம்முடைய கடமையில் தவறாமல், கண்ணோட்டத்துடன் செய்யும் காரியம், ஆற்றல் உள்ளவருக்கு இந்த உலகம் சொந்தமானது.

*ஒறுத்தாற்றும் பண்பினார்கண்ணும், கண்ணோடிப் பொறுத்தாற்றும் பண்பே தலை.* 579

தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்தவர் ஆனாலும் கண்ணோட்டத்தால், அவர் செய்த குற்றத்தை மன்னித்துக் காக்கும் தன்மையே சிறப்பானது.

*பெயக் கண்டும், நஞ்சு உண்டு அமைவர்—நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்.* 580

பலருக்கு நன்மை உண்டாகும் என்றால், தாட்சணியத்தை விரும்புகின்றவர், பழகினவர் தனக்கு நஞ்சு இடுவதைப் பார்த்தும், அதைக் குடிக்க சம்மதிப்பார்.

**(கண்ணோட்டம் என்பதற்குத் 'தாட்சணியம்' 'அன்புநோக்கு' என்ற அர்த்தத்தோடு மேலும், விளக்கமாகக் கூறினால் 'பழகினவரிடத்தில் நெகிழ்ந்து நடந்து கொள்ளும் பண்பு' 'பிறருடைய கருத்துக்கு ஏற்ப நடப்பது' என்றும் கூறலாம்.)*

## 59. ஒற்று ஆடல்

### (உளவாளியைக் கொண்டு உளவு அறிவது)

*ஒற்றும், உரை சான்ற நூலும், இவை இரண்டும்*
*தெற்றென்க, மன்னவன் கண்.* 581

வேவு பார்ப்பவரும், அரசியல் அறிவை விளக்குகின்ற நீதி நூலும் ஆகிய இரண்டும் அரசனுக்குத் தெளிவாகக் காட்டும் கண்கள்.

*எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்*
*வல்லறிதல், வேந்தன் தொழில்.* 582

எல்லாரிடத்திலும் நடக்கின்ற எல்லா நிகழ்ச்சிகளையும், உடனுக்குடன் ஒற்றர் மூலம் அறிந்து கொள்வது அரசனுடைய கடமை.

*ஒற்றினான் ஒற்றி, பொருள் தெரியா மன்னவன்*
*கொற்றம் கொளக் கிடந்தது இல்.* 583

ஒற்றர் மூலமாக நாட்டு நடப்புகளை அறிந்து, அவற்றின் நிலைமையை ஆராய்ந்து உணராத அரசன் வெற்றி பெறுவதற்கான வழி வேறு இல்லை.

*வினைசெய்வார், தம் சுற்றம், வேண்டாதார், என்று ஆங்கு*
*அனைவரையும் ஆராய்வது—ஒற்று.* 584

ஒற்றர் தொழில் செய்கின்றவர், தம்முடைய சுற்றத்தார், தம்முடைய பகைவர் என்று சொல்லப்படும் அனைவரையும் ஆராய்ந்து அறிகின்றவரே ஒற்றர்.

*கடாஅ உருவொடு கண் அஞ்சாது, யாண்டும்*
*உகாஅமை வல்லதே—ஒற்று.* 585

சந்தேகத்து இடம் இல்லாத உருவத்தோடு, பிறர் கண் பார்வைக்கு அஞ்சாமல், எந்த இடத்திலும் மனத்தில் உள்ளதை வெளிப்படுத்தாமல், இருக்க வல்லவனே ஒற்றன்.

*துறந்தார் படிவந்தர் ஆகி இறந்து, ஆராய்ந்து,*
*என் செயினும் சோர்வு இலது—ஒற்று.* 586

துறவி போல் வேடம் கொண்டு, தடைகளை கடந்து சென்று உண்மையை அறிந்து பகைவர் என்ன துன்பம் தந்தாலும், தளர்ந்து விடாமல் இருப்பவரே ஒற்றர்.

*மறைந்தவை கேட்க வற்று ஆகி, அறிந்தவை*
*ஐயப்பாடு இல்லதே—ஒற்று.* 587

இரகசியமான செய்திகளைக் கேட்டு அறியக் கூடிய திறமை உள்ளவனாய், அறிந்த செய்தியை சந்தேகப் படாமல் இருப்பவனே ஒற்றன்.

*ஒற்றுஒற்றித் தந்த பொருளையும், மற்றும் ஓர்*
*ஒற்றினால் ஒற்றி, கொளல்.* 588

ஓர் ஒற்றன் உளவு அறிந்து கேட்டுத் தெரிவித்த செய்தியை மற்றோர் ஒற்றனால் உளவு அறிந்து வரச் செய்து, ஒப்பிட்டுப் பார்த்த பிறகே, உண்மை என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.

*ஒற்றுஒற்று உணராமை ஆள்க; உடன் மூவர்*
*சொல் தொக்க தேறப்படும்.* 589

ஓர் ஒற்றனை மற்றோர் ஒற்றன் தெரிந்து கொள்ளாதபடி ஏற்படுத்த வேண்டும்; அப்படி ஒற்றர்கள் மூவர் கொண்டு வந்த செய்திகள் ஒத்திருந்தால், அவை உண்மை என்று தீர்மானிக்கலாம்.

*சிறப்பு அறிய ஒற்றின்கண் செய்யற்க; செய்யின்,*
*புறப்படுத்தான் ஆகும், மறை.* 590

அரசன், தன்னுடைய ஒற்றர்களைப் பாராட்டி பரிசு அளிக்கும் சிறப்பைப் பிறர் அறியும்படி செய்யக்கூடாது; அப்படிச் செய்தால், இரகசியத்தை தானே வெளிப் படுத்தியவன் ஆவான்.

*(நாட்டின் நன்மைக்காக, உளவு அறிகிறவர் ஒற்றர், ஒற்றன், வேவுகாரன் என்று சொல்லப்படுவர்.)*

# 60. ஊக்கம் உடைமை

## (ஊக்கத்துடன் உழைப்பது)

*உடையர் எனப்படுவது ஊக்கம்; அஃது இல்லார்*
*உடையது உடையரோ, மற்று?* 591

ஒருவர் ஒன்றைப் பெற்றுள்ளார் என்று சிறப்பாகச் சொன்னால், அது ஊக்கம் என்பதுதான். அப்படிப்பட்ட ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும், பெற்றவர் ஆவாரோ?

*உள்ளம் உடைமை உடைமை; பொருள் உடைமை*
*நில்லாது நீங்கிவிடும்.* 592

ஒருவர், தனக்குச் சொந்தம் என்று சொல்லக் கூடிய நிரந்தரமான செல்வம் ஊக்கம்தான்; பிற பொருள்கள் எல்லாம் நிலைக்காமல் போய் விடும்.

*ஆக்கம் இழந்தேம்!' என்று அல்லாவார்—ஊக்கம்*
*ஒருவந்தம் கைத்து உடையார்.* 593

உறுதியாக ஊக்கத்தைக் கைக்கொண்டிருப்பவர், செல்வத்தை எல்லாம் இழந்து விட்டோமே என்று கலங்க மாட்டார்.

*ஆக்கம் அதர் வினாய்ச் செல்லும்—அசைவு இலா*
*ஊக்கம் உடையானுழை.* 594

தளராத ஊக்கம் உள்ளவன் இருக்கும் இடத்தைத் தேடிச் செல்வமானது வழி விசாரித்துக் கொண்டு வந்து சேரும்.

*வெள்ளத்து அனைய, மலர் நீட்டம்;—மாந்தர்தம்*
*உள்ளத்து அனையது, உயர்வு.* 595

தண்ணீர் இருக்கின்ற அளவுக்குத்தான் பூக்களின் தண்டு நீண்டு இருக்கும். அதேபோல, மக்களின் ஊக்கத்தின் அளவைப் பொறுத்துதான் அவர்களுடைய வாழ்வின் சிறப்பு அமையும்.

*உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்! மற்று அது*
*தள்ளினும், தள்ளாமை நீர்த்து.* 596

நினைப்பதை எல்லாம் உயர்வானதைப் பற்றியே நினைக்க வேண்டும். அப்படி நினைத்தபடி உயர்வு கைகூடா விட்டாலும், நினைப்பதை நிறுத்தி விடக் கூடாது.

*சிதைவிடத்து ஒல்கார், உரவோர்;—புதை அம்பின்*
*பட்டுப் பாடு ஊன்றும் களிறு.* 597

உடல் முழுவதும் அம்பு புதைந்து புண்பட்டபோதும், யானை தன் பெருமையை நிலைநிறுத்தும், அதுபோல, ஊக்கம் உள்ளவர் துன்பம் வந்தபோதும் தளர மாட்டார்.

*உள்ளம் இலாதவர் எய்தார்—'உலகத்து*
*வள்ளியம்' என்னும் செருக்கு.* 598

ஊக்கம் இல்லாதவர், 'இந்த உலகத்தில் நாம் பெருமை உடையவர்' என்று தம்மைப் புகழக்கூடிய மதிப்பை அடைய மாட்டார்.

*பரியது கூர்ங் கோட்டது ஆயினும், யானை*
*வெரூஉம், புலி தாக்குறின்.* 599

யானை மிகப்பெரிய உடம்பையும் கூர்மையான தந்தங்களையும் கொண்டது. ஆனாலும், ஊக்கம் உள்ள புலியின் தாக்குதலுக்கு அஞ்சும் (ஊக்கம் முக்கியமானது, உருவம் அல்ல).

*உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை; அஃது இல்லார்*
*மரம்; மக்கள் ஆதலே வேறு.* 600

ஒருவனுக்கு உள்ள வலிமை எல்லாம் அவனிடம் இருக்கின்ற அதிகமான ஊக்கமே, ஊக்கம் இல்லாதவன், உருவத்தில் மனிதர்களைப் போல் இருந்தாலும், அவன் மரத்தைப் போன்றவனே.

*(ஊக்கம் என்பது மன எழுச்சி, மன உற்சாகம், மனம் தளராமல் காரியத்தைச் செய்வது.)*

# 61. மடி இன்மை

## (சோம்பல் இல்லாமல் இருப்பது)

*குடி என்னும் குன்றா விளக்கம், மடி என்னும்*
*மாசு ஊர, மாய்ந்து கெடும்* 601

ஒருவனுடைய குடும்பம் என்னும் மங்காத விளக்கு சோம்பல் என்ற மாசு படிந்து விட்டால், ஒளி மங்கிக் கெட்டுப் போகும்.

*மடியை மடியா ஒழுகல்—குடியைக்*
*குடியாக வேண்டுபவர்!* 602

தம்முடைய குடும்பம் சிறப்பான குடும்பமாக விளங்கச் செய்ய விரும்புகின்றவர், சோம்பலை விட்டு ஒழித்து, முயற்சியுடன் நடக்க வேண்டும்.

*மடி மடிக் கொண்டு ஒழுகும் பேதை பிறந்த*
*குடி மடியும், தன்னினும் முந்து.* 603

சோம்பேறித்தனம் ஒருவனை அழித்து விடக் கூடியது. அந்தச் சோம்பேறித்தனத்தை உடைய அறிவு இல்லாதவன் அழியும் முன், அவன் பிறந்த குடும்பம் அழிந்து போகும்.

*குடி மடிந்து, குற்றம் பெருகும்—மடி மடிந்து,*
*மாண்ட உஞற்று இலவர்க்கு.* 604

சோம்பலில் சிக்கி, குடும்பத்துக்கான முயற்சி எதுவும் செய்யாமல்வாழ்கின்றவருக்கு குடும்பப் பெருமை கெட்டுப் போவதோடு, குற்றங்கள் பலவும் செய்ய நேரிடும்.

*நெடு நீர், மறவி, மடி, துயில், நான்கும்*
*கெடும் நீரார் காமக் கலன்.* 605

காரியம் செய்வதில் தாமதம், கடமையை மறந்து இருப்பது, சோம்பேறித்தனம், சதா தூங்கிக் கொண்டிருப்பது ஆகிய நான்கு குணங்களும் கெட்டுப் போகும் தன்மை உள்ளவர் விரும்பி ஏறிச் செல்லும் ஓட்டைப் படகு.

*படி உடையார் பற்று அமைந்தக்கண்ணும், மடி உடையார்*
*மாண் பயன் எய்தல் அரிது.* 606

நாட்டை ஆட்சி செய்கின்ற அரசனுடைய ஆதரவு வலிய வந்தாலும், சோம்பேறித்தனம் உள்ளவர் சிறப்பான நன்மையை அடைய மாட்டார்.

*இடி புரிந்து, எள்ளும் சொல் கேட்பர்—மடி புரிந்து*
*மாண்ட உஞற்று இலவர்.* 607

சோம்பலில் சிக்கி சிறப்பான காரியம் செய்யாமல் வாழ்கின்றவர், பிறர் கண்டித்துக் கூறி, இகழ்ந்துப் பேசும் கேவலமான நிலையை அடைவார்.

*மடிமை குடிமைக்கண் தங்கின், தன் ஒன்னார்க்கு*
*அடிமை புகுத்திவிடும்.* 608

நல்ல குடும்பத்தில் பிறந்தவனிடம் சோம்பல் குடிகொண்டால் அந்தச் சோம்பலானது அவனைப் பகைவருக்கு அடிமை ஆக்கி விடும்.

*குடி, ஆண்மையுள் வந்த குற்றம், ஒருவன்*
*மடி ஆண்மை மாற்ற, கெடும்.* 609

ஒருவன் தன்னிடம் அதிகாரம் செய்யும் சோம்பேறித் தனத்தை மாற்றிக் கொண்டால், அவனுடைய குடும்பத்திலும் திறமையிலும் ஏற்பட்ட குற்றம் மறைந்து விடும்.

*மடி இலா மன்னவன் எய்தும்—அடி அளந்தான்*
*தாஅயது எல்லாம் ஒருங்கு.* 610

சோம்பல் இல்லாத அரசன் நாட்டின் நிலப்பரப்பை அளந்து பாதுகாப்புச் செய்த எல்லாவற்றையும் ஒருங்கே அடைவான் (மற்றவர்கள் ஆக்கிரமிப்புச் செய்ய மாட்டார்கள்).

## 62. ஆள்வினை உடைமை

### (விடா முயற்சியோடு காரியம் செய்வது)

*அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்;*
*பெருமை முயற்சி தரும்.* 611
செய்ய முடியாத காரியம் என்று சோர்ந்து விடாமல், முயற்சி செய்ய வேண்டும். அப்படிப்பட்ட அருமையான காரியம், முயற்சியினால் பெருமை உண்டாகும்.

*வினைக்கண் வினைகெடல் ஓம்பல்—வினைக் குறை*
*தீர்ந்தாரின் தீர்ந்தன்று, உலகு!* 612
ஆரம்பித்த ஒரு காரியத்தை முடிக்காமல், அரை குறையாக விட்டு விடுகின்றவரை உலகத்தாரும் கைவிட்டு விடுவார்கள் ஆகையால், செய்யும் காரியத்தில் முயற்சி எடுக்காமல் இருக்கக் கூடாது.

*தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே—*
*வேளாண்மை என்னும் செருக்கு.* 613
மற்றவருக்கு உதவி செய்வது என்னும் உயர்ந்த குணம், முயற்சி என்னும் சிறந்த பண்பில் அடங்கி இருக்கிறது.

*தாளாண்மை இல்லாதான் வேளாண்மை, பேடி கை*
*வாள் ஆண்மை போல, கெடும்.* 614
முயற்சியே செய்யாமல் இருக்கின்றவன், பிறருக்கு உதவி செய்ய ஆசைப்படுவது, வலிமை இல்லாதவன் (பேடி) வாளைக் கையில் ஏந்திப் போர் புரிய நிற்பது போல, பயன் இல்லாமல் போகும்.

*இன்பம் விழையான், வினை விழைவான் தன் கேளிர்*
*துன்பம் துடைத்து ஊன்றும் தூண்.* 615
தன்னுடைய இன்பத்தை மட்டும் விரும்பாமல் தான் எடுத்துக் கொண்ட காரியத்தை முடிக்க விரும்புகின்றவன், தன்னுடைய சுற்றத்தாரின் துன்பங்களைப் போக்கி, தாங்கி நிற்கும் தூண் போன்றவன்.

*முயற்சி திருவினை ஆக்கும்; முயற்று இன்மை
இன்மை புகுத்திவிடுதம்.* 616

முயற்சி செய்து கொண்டே இருப்பவருக்குச் செல்வம் பெருகிக் கொண்டே இருக்கும். முயற்சி இல்லாதவருக்கு (இருக்கின்ற செல்வமும் அழிந்து) வறுமை துன்புறுத்தும்.

*'மடி உளாள், மா முகடி' என்ப; மடி இலான்
தாள் உளாள், தாமரையினாள்.* 617

சோம்பறித்தனம் உள்ளவனிடம் மூதேவி குடியிருப்பாள்; சோம்பல் இல்லாதவன் முயற்சியிலே திருமகள் வாழ்கின்றாள் (வறுமை, சோம்பல் முதலியவற்றை மூதேவி என்றும், முயற்சி, செல்வம் முதலியவற்றை திருமகள் என்றும் கூறுவது முன்னோர் வழக்கம்).

*பொறி இன்மை யார்க்கும் பழி அன்று; அறிவு அறிந்து,
ஆள்வினை இன்மை பழி.* 618

நன்மை தருகின்ற காலத்தையும், உரிய இடத்தையும் அறியாமல் இருப்பது குற்றம் ஆகாது. ஆனால், அறிய வேண்டியதை அறிந்து, முயற்சி செய்யாமல் இருப்பதே குற்றம்.

*தெய்வத்தான் ஆகாதுஎனினும், முயற்சி தன்
மெய் வருத்தக் கூலி தரும்.* 619

தெய்வத்தால்கூட முடியாது என்றாலும் சிரமப்பட்டு உழைக்கின்ற முயற்சி இருக்குமானால், அந்த முயற்சிக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.

*ஊழையும் உப்பக்கம் காண்பர்—உலைவு இன்றித்
தாழாது உஞற்றுபவர்.* 620

சோர்வு அடையாமல், முயற்சியில் தளராமல் காரியத்தைச் செய் கின்றவன் விதியையும் வென்று விடுவான்.

# 63. இடுக்கண் அழியாமை

## (துன்பம் ஏற்படும்போது மனம் கலங்காமல் இருப்பது)

*இடுக்கண் வருங்கால் நகுக! அதனை*
*அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல்.* 621

துன்பம் வரும்போது, அதை மகிழ்ச்சியோடு பொறுத்துக் கொள்ள வேண்டும். ஏன் என்றால், அந்தத் துன்பத்தை அடுத்து வரும் இன்பத் துக்கு நிகாரனது வேறு இல்லை.

*வெள்ளத்து அனைய இடும்பை, அறிவு உடையான்*
*உள்ளத்தின் உள்ள, கெடும்.* 622

வெள்ளம் போல அளவற்ற துன்பம் வந்தபோதும் அறிவு உடையோர் மன உறுதியால், அதைப் பொறுத்துக் கொள்வார். அதனால், அந்தத் துன்பம் நீங்கி விடும்.

*இடும்பைக்கு இடும்பை படுப்பர்–இடும்பைக்கு*
*இடும்பை படாஅதவர்.* 623

துன்பம் வந்தபோது அதற்காக வருத்தப்பட்டு, மனம் கலங்காத மன உறுதி உள்ளவர், அந்தத் துன்பத்துக்கே துன்பம் உண்டாக்கி, அதை வெற்றி கொள்வார்.

*மடுத்த வாய் எல்லாம் பகடு அன்னான் உற்ற*
*இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.* 624

மேடு பள்ளமான இடங்களில் எல்லாம், தன் பலத்தால் பாரமான வண்டியை இழுத்துச் செல்கின்ற காளைபோல, விடா முயற்சி உடையவனுக்கு வந்த துன்பமானது தானே துன்பப்பட்டு விடும்.

*அடுக்கி வரினும், அழிவு இலான் உற்ற*
*இடுக்கண் இடுக்கண் படும்.* 625

மனம் கலங்காத ஆற்றல் உடையவனுக்கு அடுத்து அடுத்து தொடர்ந்து துன்பம் வந்த போதிலும் அதுவே (அவனை ஒன்றும் செய்யாது) ஒன்றை ஒன்று துன்பப்படுத்திக் கொள்ளும்.

*'அற்றேம்!' என்று அல்லற்படுபவோ—'பெற்றேம்!' என்று ஓம்புதல் தேற்றாதவர்.* 626

செல்வம் சேர்ந்தபோது, 'பெற்றிருக்கிறோம்' என்று ஆசை வைத்துக் காத்துக் கொள்ள அறியாதவர், வறுமை ஏற்பட்டபோது 'இருந்ததை இழந்து விட்டோமே' என்று துன்பப்படுவாரோ? (மாட்டார்)

*'இலக்கம், உடம்பு இடும்பைக்கு' என்று, கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதாம், மேல்.* 627

உடம்பானது துன்பத்துக்கு இடமாகும் என்று உணர்ந்த பெரியோர் துன்பம் வந்த போது, அதற்காக வருந்த மாட்டார்.

*இன்பம் விழையான், 'இடும்பை இயல்பு' என்பான், துன்பம் உறுதல் இலன்.* 628

இன்பத்தைப் பெரிதாக விரும்பாதவன், துன்பம் ஏற்பட்ட போது அது இயற்கைதான் என்று உணர்ந்தவன். ஆகையால் வருத்தப்பட மாட்டான்.

*இன்பத்துள் இன்பம் விழையாதான், துன்பத்துள் துன்பம் உறுதல் இலன்.* 629

இன்பத்தை அனுபவிக்கும்போது, அதிலே ஆழ்ந்து விடாமல் இருப்பவன், துன்பம் வந்தபோதும் அதனால், துயரம் அடைவது இல்லை

*இன்னாமை இன்பம் எனக் கொளின், ஆகும், தன் ஒன்னார் விழையும் சிறப்பு.* 630

துன்பத்தை இன்பமாக எண்ணிக் கொள்வானானால், அவனுடைய பகைவரும் விரும்பத்தக்க மதிப்பு ஏற்படும்.

## 64. அமைச்சு

### (அமைச்சரின் தகுதி)

*கருவியும், காலமும், செய்கையும், செய்யும்*
*அருவினையும், மாண்டது—அமைச்சு.* 631

செயலுக்குத் தகுந்த, சாதனமும், பருவகாலமும், செய்யும் வகையில், பயன்தரக்கூடிய செயலும் இவற்றைச் சிறப்பாகச் செய்ய திறமை உள்ளவனே அமைச்சன்.

*வன்கண், குடிகாத்தல், கற்று அறிதல், ஆள்வினையோடு,*
*ஐந்துடன் மாண்டது—அமைச்சு.* 632

சுறுசுறுப்பு, குடும்பச் சிறப்பு, குடிமக்களைக் காப்பது, நூல்களைக் கற்று அறிந்த அரசியல் அறிவு, முயற்சி ஆகிய ஐந்திலும் வல்லவனே சிறந்த அமைச்சன்.

*பிரித்தலும், பேணிக்கொளலும், பிரிந்தார்ப்*
*பொருத்தலும், வல்லது—அமைச்சு.* 633

பகைவருக்குத் துணையாக இருப்பவரைப் பிரிப்பது, தன்னைச் சேர்ந்தவரை ஆதரிப்பது, பிரிந்தவரைச் சேர்த்துக் கொள்வது ஆகியவற்றில் திறமை உள்ளவனே அமைச்சன்.

*தெரிதலும், தேர்ந்து செயலும், ஒருதலையாச்*
*சொல்லலும் வல்லது—அமைச்சு.* 634

காரியத்தைச் செய்வதற்கான வழிமுறைகளை ஆராய்வது, ஆராய்ந்த செயலைச் செய்வது, தன் கருத்தைத் துணிந்து சொல்லுவது ஆகியவற்றில் வல்லவனே அமைச்சன்.

*அறன் அறிந்து, ஆன்று அமைந்த சொல்லான், எஞ்ஞான்றும்*
*திறன் அறிந்தான், தேர்ச்சித் துணை.* 635

நன்மையைச் செய்கின்ற தன்மையும், அறிவு நிறைவும், சொல்வன்மையும், செயல் திறனும் எப்போதும் அமைந்தவனே ஆலோசனை சொல்லத்தக்க துணைவன்.

*மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதி நுட்பம்*
*யா உள, முன் நிற்பவை?* 636

புத்தி கூர்மையும், நூல்களைக் கற்றுத் தேர்ந்த அறிவும் நிறைந்தவரை, எதிர்த்து வெல்லக் கூடிய சூழ்ச்சித் திறம் என்ன இருக்கிறது?

*செயற்கை அறிந்தக்கடைத்தும், உலகத்து*
*இயற்கை அறிந்து, செயல்!* 637

செய்ய வேண்டியதை ஆராய்ந்து அறிந்த பிறகும், உலக நடைமுறைக்கு அந்தக் காரியம் பொருந்துமா என்பதையும் அறிந்து செய்ய வேண்டும்.

*அறி கொன்று, அறியான் எனினும், உறுதி*
*உழையிருந்தான் கூறல் கடன்* 638

பிறர் கூறும் அறிவுரைகளைக் கேட்காமலும், தானும் தெரியாதவனாக அரசன் இருந்தாலும், அவனுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறுவது உடன் இருக்கும் அமைச்சனின் கடமை.

*பழுது எண்ணும் மந்திரியின், பக்கத்துள் தெவ் ஓர்*
*எழுபது கோடி உறும்.* 639

அருகில் இருந்து தவறான ஆலோசனைகளைக் கூறி, அரசனைத் தீய வழியில் நடக்கச் செய்யும் அமைச்சனை விட பகைவர் எழுபது கோடி ஆனாலும் நன்மையே.

*முறைப்படச் சூழ்ந்தும், முடிவிலவே செய்வர்—*
*திறப்பாடு இலா அதவர்.* 640

செயல்களைச் செய்வதைப் பற்றி முறையாக எண்ணி இருந்தாலும், திறமை இல்லாத அமைச்சர்கள், அது முடியாதபடி செய்து விடுவார்கள்.

*(அந்தக் காலத்தில் அரசன். இப்பொழுது மத்திய, மாநில அரசு, அமைச்சர்கள் என்று கொள்ளலாம்.)*

## 65. சொல் வன்மை

## (திறமையாகப் பேசுவது)

*'நா நலம்' என்னும் நலன் உடைமை; அந் நலம்*
*யா நலத்து உள்ளதூஉம் அன்று.* 641

நாவன்மை நலம் தரும் செல்வம், மற்ற எந்தச் செல்வங்களையும் விட, தனிச் சிறப்பு உடையது இந்த நாவன்மை.

*ஆக்கமும், கேடும், அதனால் வருதலால்,*
*காத்து ஓம்பல், சொல்லின்கண் சோர்வு* 642

வாழ்வும் தாழ்வும் அவரவர் வாய்ச் சொல்லால் வருவது, அதனால், சொல்லுகின்ற சொல்லில் குற்றம் ஏற்படாமல், பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

*கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய், கேளாரும்*
*வேட்ப, மொழிவது ஆம்–சொல்.* 643

கேட்டவரை தன்வசப்படுத்தி, கேட்காதவரும் கேட்க ஆசைப்படும் விதத்தில் சொல்லுவதே நாவன்மையின் சிறப்பு.

*திறன் அறிந்து சொல்லுக, சொல்லை; அறனும்*
*பொருளும் அதனின் ஊங்கு இல்.* 644

சொல்லும் சொல்லைக் கேட்பவர் தகுதி அறிந்து சொல்ல வேண்டும். அதைவிட நன்மையும், செல்வமும் தருவது வேறு இல்லை.

*சொல்லுக சொல்லை–பிறிது ஓர் சொல் அச் சொல்லை*
*வெல்லும் சொல் இன்மை அறிந்து.* 645

தான் சொல்லும் சொல்லை, வேறு ஒரு சொல் வெல்லக் கூடிய சொல்லாக இல்லாமல், அறிந்து சொல்ல வேண்டும்.

*வேட்பத் தாம் சொல்லி, பிறர் சொல் பயன் கோடல்*
*மாட்சியின் மாசு அற்றார் கோள்.* 646

பிறர் விரும்பிக் கேட்கும்படி, பயன் உள்ளதைச் சொல்வதும், பிறர் சொல்லுவதில் பயனை அறிந்து கொள்ளுவதும் குற்றமற்ற சிறப்பு உடையவரின் கொள்கை.

*சொலல் வல்லன், சோர்வு இலன், அஞ்சான், அவனை*
*இகல் வெல்லல் யார்க்கும் அரிது.* 647

தன்னுடைய கருத்தைச் சொல்லத் திறமை உள்ளவனாய், சொல்லும் போது தவறாகச் சொல்லாதவனாய், பயப்படாதவனாய் இருப்பவனை எவராலும் வெல்ல முடியாது.

*விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்—நிரந்து இனிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்.* 648

கருத்துக்களை முறையாக இணைத்து, இனிமையாகச் சொல்லக் கூடிய திறமைசாலி இடும் கட்டளைய், மக்கள் தட்டாமல் கேட்டு நடப்பார்கள்.

*பல சொல்லக் காமுறுவர் மன்ற—மாசு அற்ற*
*சில சொல்லல் தேற்றாதவர்.* 649

பயன்தரும் சொற்களைச் சுருக்கமாகச் சொல்லத் தெரியாதவர் , நீண்ட நேரம் வளவள, என்று பேச ஆசைப்படுவார்.

*இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர்—கற்றது*
*உணர விரித்து உரையாதார்.* 650

பல நூல்களைப் படித்தவர், நூல்களின் கருத்தைத் தெளிவாகச் சொல்ல முடியாதவர், மலர்ந்திருந்தும் மணம் கமழாத மலரைப் போன்றவர்.

## 66. வினைத் தூய்மை

### (நல்ல காரியத்தைச் செய்வது)

*துணை நலம் ஆக்கம் தருஉம்; வினை நலம்*
*வேண்டிய எல்லாம் தரும்.* 651

ஒருவனுக்குக் கிடைத்திருக்கின்ற துணையின் நன்மை செல்வத்தைத் தரும்; செய்கின்ற காரியத்தின் நன்மை அவன் விரும்பிய எல்லாவற்றையும் தரும்.

*என்றும் ஒருவுதல் வேண்டும்—புகழொடு*
*நன்றி பயவா வினை.* 652

நன்மையும் புகழையும் தராத தீய காரியங்களை ஒருவன் என்றைக்குமே செய்யாமல் விட்டு ஒழிக்க வேண்டும்.

*ஓஒதல் வேண்டும், ஒளி மாழ்கும் செய்வினை—*
*'ஆஅதும் !' என்னுமவர்.* 653

மேலும் மேலும் உயர்வு பெற வேண்டும் என்று விரும்புகின்றவர், தம்முடைய புகழைக் கெடுக்கின்ற காரியத்தைச் செய்யக்கூடாது.

*இடுக்கண் படினும், இளிவந்த செய்யார்—*
*நடுக்கு அற்ற காட்சியவர்.* 654

கலக்கமற்ற அறிவு உடையவர், துன்பத்தில் சிக்கி அவதிப் பட்டாலும், அதை நீக்கிக் கொள்வதற்காக இழிவான காரியங்களைச் செய்ய மாட்டார்.

*'எற்று !' என்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்,*
*மற்று அன்ன செய்யாமை நன்று.* 655

செய்ததை நினைத்துப் பிறகு வருத்தப்படுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யக் கூடாது. அப்படிப்பட்ட காரியத்தைத் தவறுதலாக ஒருமுறை செய்ய நேர்ந்தாலும், மீண்டும் அந்தக் காரியத்தைச் செய்யாமல், கவனமாக இருப்பது நல்லது.

*ஈன்றாள் பசி காண்பான் ஆயினும், செய்யற்க—*
*சான்றோர் பழிக்கும் வினை.* 656

தன்னைப் பெற்ற தாய் பட்டினியால் துன்பப்படுகிறாள் என்றாலும், சான்றோர் பழி சொல்லுவதற்குக் காரணமான இழிவான செயலைச் செய்யக் கூடாது.

*பழி மலைந்து எய்திய ஆக்கத்தின், சான்றோர்*
*கழி நல்குரவே தலை.* 657

பழிக்கு ஆளாகி, இழிவான செயலைச் செய்து அதனால், பெறுகின்ற வளமான செல்வ வாழ்வை விட, அத்தகைய செயலைச் செய்யாததால், சான்றோர் அடைகின்ற துன்பமான வறுமையே மேலானது.

*கடிந்த கடிந்து ஒரார் செய்தார்க்கு அவைதாம்*
*முடிந்தாலும், பீழை தரும்.* 658

தீயவை என்று வெறுத்து ஒதுக்கப்பட்ட செயல்களை நீக்காமல் செய்தவருக்கு, அவை வெற்றியாக முடிந்தாலும் முடிவில் அதனால் துன்பமே ஏற்படும்.

*அழக் கொண்ட எல்லாம் அழப் போம்; இழப்பினும்,*
*பிற்பயக்கும், நற்பாலவை.* 659

பிறர் வருந்தி அழும்படிப் பறித்துக் கொண்ட செல்வம் எல்லாம் அப்படிப் பறித்துக் கொண்டவனை அழ வைத்து விட்டுப்போய்விடும். நல்ல வழியில் வந்த செல்வத்தை இழந்து விட்டாலும் பிறகு வந்து நன்மை தரும்.

*சலத்தால் பொருள் செய்து ஏமாக்கல்—பசு மண்—*
*கலத்துள் நீர் பெய்து, இரீஇயற்று.* 660

வஞ்சனையால்-தீயவழியில் செல்வத்தைச் சேர்த்து, அதைக் காப்பாற்றி வைப்பது, வேக வைக்காத பச்சை மண்குடத்தில் தண்ணீரை ஊற்றி வைப்பது போன்றது.

# 67. வினைத் திட்பம்

## (செயலில் உறுதியோடு இருப்பது)

*வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத் திட்பம்;*
*மற்றைய எல்லாம் பிற.* 661

ஒரு தொழிலின் சிறப்பு என்பது செய்கின்றவனுடைய மன வலிமையே ஆகும். மற்றவை எல்லாம் அத்தகைய சிறப்பு ஆகா.

*ஊறு ஒரால், உற்றபின் ஒல்காமை, இவ் இரண்டின்*
*ஆறு என்பர்—ஆய்ந்தவர் கோள்.* 662

துன்பம் வருவதற்கு முன்பே அறிந்து அதைக் காப்பது, வந்து விட்டால், மனம் தளராமல் இருப்பது, ஆகிய இரு வழியே தொழில் உறுதி பற்றி ஆராய்ந்தவரின் கொள்கை.

*கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை; இடைக் கொட்கின்,*
*எற்றா விழுமம் தரும்.* 663

செய்கின்ற காரியத்தை, முடிவில் தெரியும்படி, மறைவாகச் (பிறருக்குத் தெரியாதபடி) செய்வதே வெற்றி ஆகும். இடையில் வெளிப்பட்டு விடுமானால், நீங்காத துன்பத்தைத் தரும்.

*சொல்லுதல் யார்க்கும் எளிய; அரிய ஆம்,*
*சொல்லிய வண்ணம் செயல்.* 664

'இந்தக் காரியத்தை இப்படிச் செய்து முடிக்கலாம்' என்று சொல்லுவது எவருக்கும் எளிது. ஆனால் சொல்லியபடி செய்து முடிப்பது அரிது. (முடியாது)

*வீறு எய்தி மாண்டார் வினைத் திட்பம், வேந்தன்கண்*
*ஊறு எய்தி, உள்ளப்படும்.* 665

செயல் திறமையால், பெருமை அடைந்தவரின் தொழில் சிறப்பை அரசன் கேள்விப்பட்டு மதிப்பு அளிப்பான்.

***எண்ணிய எண்ணியாங்கு எய்துப—எண்ணியார்***
***திண்ணியர் ஆகப்பெறின். 666***

நினைத்ததை நினைத்தபடியே செயல்புரிவதில் உறுதி உடையவராக இருந்தால், அவர் நினைத்ததை நினைத்தபடியே பெறுவார்.

***உருவு கண்டு எள்ளாமை வேண்டும்—உருள் பெருந் தேர்க்கு***
***அச்சு ஆணி அன்னார் உடைத்து. 667***

உருண்டு செல்லுகின்ற பெரிய தேருக்கு ஆதாரமானது சிறிய அச்சாணிதான். அதைப் போன்றவர் உலகத்தில் இருக்கின்றனர். அவர்களுடைய சிறிய உருவத்தைக் கண்டு இகழக்கூடாது.

***கலங்காது கண்ட வினைக்கண், துளங்காது***
***தூக்கம் கடிந்து செயல். 668***

மனம் கலங்காமல், தெளிந்து, துணிந்து மேற்கொண்ட ஒரு செயலை மனம் தளராமல், காலம் கடத்தாமல், செய்து முடிக்க வேண்டும்.

***துன்பம் உறவரினும் செய்க, துணிவு ஆற்றி—***
***இன்பம் பயக்கும் வினை. 669***

இன்பம் தரக் கூடிய செயலைச் செய்யும்போது மிகுந்த துன்பம் வந்த போதிலும் துணிந்து அதைச் செய்து முடிக்க வேண்டும்.

***எனைத் திட்பம் எய்தியக்கண்ணும், வினைத் திட்பம்***
***வேண்டாரை வேண்டாது, உலகு. 670***

வேறு எத்தகைய உறுதி உடையவராக இருந்தாலும், செய்யும் காரியத்தில் உறுதி இல்லாதவரை உலகத்தார் விரும்ப மாட்டார்கள்.

## 68. வினை செயல் வகை

### (காரியத்தை வெற்றியுடன் செய்வது)

*சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல்; அத் துணிவு*
*தாழ்ச்சியுள் தங்குதல் தீது.* 671

ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குமுன், அதைச் செய்வதா வேண்டாமா என்று ஆலோசிக்க வேண்டும். செய்வதற்குத் துணிந்தபின், தாமதம் செய்தால் தீமை ஏற்படும்.

*தூங்குக, தூங்கிச் செயற்பால; தூங்கற்க,*
*தூங்காது செய்யும் வினை.* 672

தாமதமாகச் செய்ய வேண்டியதைத் தாமதமாகவும், விரைவில் செய்ய வேண்டியதை விரைவாகவும் செய்ய வேண்டும்.

*ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்றே; ஒல்லாக்கால்,*
*செல்லும் வாய் நோக்கிச் செயல்.* 673

முடியும் இடத்தில் எல்லாம் காரியங்களைச் செய்து முடிப்பது நல்லது. இயலாமல் போனால், பயன் படக்கூடிய இடத்தைக் கருதியாவது செய்ய வேண்டும்.

*வினை, பகை, என்று இரண்டின் எச்சம், நினையுங்கால்,*
*தீ எச்சம் போலத் தெறும்.* 674

விடுபட்டுப்போன-எடுத்த செயல், ஏற்பட்ட விரோதம் ஆகிய இரண்டும் எஞ்சி நிற்பதை ஆராய்ந்து பார்த்தால், முழுவதும் அணைக்காத நெருப்புப் போல தெரியாமல் வளர்ந்து கெடுத்து விடும்.

*பொருள், கருவி, காலம், வினை, இடனொடு ஐந்தும்*
*இருள் தீர எண்ணிச் செயல்!* 675

தேவையான பொருள், ஏற்ற கருவி, தகுந்த காலம், செய்யக் கூடிய காரியம், அதற்கான இடம் ஆகிய ஐந்தையும் தீர ஆலோசித்துப் பிறகு செய்ய வேண்டும்.

*முடிவும், இடையூறும், முற்றியாங்கு எய்தும்*
*படுபயனும், பார்த்துச் செயல்!* 676

ஒரு காரியத்தைத்தொடங்கு முன், அதைச் செய்து முடிக்கும் வகை, வரக்கூடிய இடையூறு, முடிந்தபின் கிடைக்கும் பலன் ஆகியவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

*செய்வினை செய்வான் செயல்முறை, அவ் வினை*
*உள் அறிவான் உள்ளம் கொளல்.* 677

ஒரு காரியத்தைச் செய்கின்றவன், செய்ய வேண்டிய விதம், அதன் தன்மை, இவற்றில் அனுபவம் உள்ளவன் கருத்தை ஏற்று அதன்படி நடப்பது நல்லது.

*வினையான் வினை ஆக்கிக்கோடல்—நனை கவுள்*
*யானையால் யானை யாத்தற்று.* 678

ஒரு காரியத்தைச் செய்யும்போது, அதனுடன் தொடர்பு உடைய வேறொரு காரியத்தையும் செய்து முடித்துக் கொள்ளுவது, ஒரு யானையைக் கொண்டு, மத யானையைக் கட்டிப் பிடிப்பது போன்றது.

*நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே—*
*ஒட்டாரை ஒட்டிக்கொளல்.* 679

பகைவராக இருப்பவரை வெல்லுவதற்காக, அவருக்கு வேண்டியவரிடம் சென்று, அவர் மகிழும்படி உதவிகளைச் செய்வதைவிட, பகைவரையே நண்பராக்கிக் கொள்வது விரைவில் பலன் அளிக்கும்.

*உறை சிறியார் உள் நடுங்கல் அஞ்சி குறை பெறின்,*
*கொள்வர் பெரியார்ப் பணிந்து.* 680

வலிமை இல்லாத பலவீனர், தம்மைச் சுற்றி இருப்பவர்கள் நடுங்கு வதற்காகத் தாம் பயந்து, வேண்டிய பலம் கிடைக்கும் என்றால், வலிமை மிக்க பெரியோரைப் பணிந்து, பலத்தைப் பெற்றுக் கொள்வார்.

# 69. தூது

## (தூது செல்லுகின்றவர் தகுதி)

*அன்பு உடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், வேந்து அவாம்*
*பண்பு உடைமை, — தூது உரைப்பான் பண்பு.* 681
அன்பு உடையவனாகவும், தகுதியுள்ள குடும்பத்தில் பிறந்தவனாகவும், அரசன் விரும்பும் சிறந்த பண்பு உடையவனாகவும் இருப்பது தூதனாகச் சென்று பேசுகின்றவனுடைய தகுதிகள்.

*அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை—தூது உரைப்பார்க்கு*
*இன்றியமையாத மூன்று.* 682
அன்பு, அறிவு, ஆராய்ந்து கூறும் பேச்சுத் திறமை ஆகிய மூன்றும் தூது போய்ப் பேசுகின்றவனுக்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்புகள்.

**நூலாருள் நூல் வல்லன் ஆகுதல்—வேலாருள்**
**வென்றி வினை உரைப்பான் பண்பு.** 683
வேற்று அரசர்களிடம் சென்று, தன் அரசனுடைய வெற்றி கருதி, தூது சொல்லுகிறவனுக்கு இருக்க வேண்டிய தகுதி நூல்களைப் படித்து தேர்ந்த திறமைசாலியாக இருப்பது.

*அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி, இம் மூன்றன்*
*செறிவு உடையான் செல்க, வினைக்கு.* 684
இயல்பான அறிவு, கம்பீரமான தோற்றம், ஆராய்ச்சிக் கல்வி ஆகிய மூன்றும் அமைந்தவனே, தூது செல்லும் வேலைக்குத் தகுந்தவன்.

*தொகச் சொல்லி, தூவாத நீக்கி, நகச் சொல்லி,*
*நன்றி பயப்பது ஆம்—தூது.* 685
பல செய்திகளைத் தொகுத்து, அவற்றில் தீயவைகளை நீக்கி, கேட்பவர் மகிழும்படி நல்லவற்றைச் சொல்லி, தன் அரசனுக்கு நன்மை உண்டாக்குகின்றவன் சிறந்த தூதன்.

*கற்று, கண் அஞ்சான், செலச் சொல்லி, காலத்தால்*
*தக்கது அறிவது ஆம்—தூது.* 686

படிக்க வேண்டியவற்றைப் படித்து அறிந்து, பகையான பார்வைக்குப் பயப்படாமல், பிறர் மனதில் பதியும்படி காலத்திற்குப் பொருத்தமாக அறிந்து நடப்பவனே தூதன்.

*கடன் அறிந்து, காலம் கருதி, இடன் அறிந்து,*
*எண்ணி உரைப்பான் தலை.* 687

தன் கடமையைத் தெளிவாக அறிந்து, அதைச் செய்வதற்குத் தகுந்த காலத்தை எதிர் நோக்கி, ஏற்ற இடத்தை அறிந்து தெளிந்து சொல்லக்கூடியவனே தூதன்.

*தூய்மை, துணைமை, துணிவு உடைமை, இம் மூன்றின்*
*வாய்மை—வழி உரைப்பான் பண்பு.* 688

நல்ஒழுக்கம், பக்கத் தூணை, உள்ளத் துணிவு ஆகிய மூன்றும் அமைந்தவன் சிறந்த தூதன்.

*விடு மாற்றம் வேந்தர்க்கு உரைப்பான்—வடு மாற்றம்*
*வாய் சோரா வன்கணவன்.* 689

வாய் தவறிக்கூட தீய சொற்களைச் சொல்லாத உறுதி உடையவனே, அரசன் சொல்லி அனுப்பிய செய்தியை வேற்று அரசனுக்குச் சொல்லும் தகுதி உடையவன்.

*இறுதி பயப்பினும், எஞ்சாது, இறைவற்கு*
*உறுதி பயப்பது ஆம்—தூது.* 690

தன் உயிருக்கே அழிவு வருவதானாலும் அதற்காகப் பயந்து காரியத்தை விட்டுவிடாமல், தன்னுடைய அரசனுக்கு நன்மை உண்டாகும்படி செய்வதே தூதனின் சிறப்பு.

*(தூது அனுப்பும் முறை அரசனுக்கு மட்டும் அல்லாமல் அரசியல், பொதுக்காரியம் ஆகியவைகளுக்கும் பொருந்தும்.)*

# 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்
## (அரசருடன் சேர்ந்து வாழ்வது)

*அகலாது, அணுகாது, தீக் காய்வார் போல்க—*
*இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்.* 691

அரசருடன் சேர்ந்து வாழ்கின்றவர், அவரை விட்டு மிகவும் விலகி இருக்காமலும், அவருடன் அதிகமாக நெருங்கி இருக்காமலும் நெருப்பின் முன் இருந்து குளிர் காய்வது போல இருக்க வேண்டும்.

*மன்னர் விழைப விழையாமை, மன்னரான்*
*மன்னிய ஆக்கம் தரும்.* 692

அரசர் அனுபவிக்க-அடைய விரும்புகின்றவற்றை அரசரோடு சேர்ந்து இருப்பவர் விரும்பாமல் இருப்பது, அரசரால் நிலையான வாழ்வைப் பெற உறுதி செய்யும்.

*போற்றின் அரியவை போற்றல்—கடுத்தபின்,*
*தேற்றுதல் யார்க்கும் அரிது!* 693

மன்னரைச் சேர்ந்தவர்கள் தங்களைக் காத்துக் கொள்ள விரும்பினால், பெரிய குற்றங்களுக்கு இடம் தராமல், இருக்க வேண்டும். சந்தேகம் ஏற்பட்டு விட்டால், பிறகு மன்னரை தெளிவிக்க எவராலும் இயலாது.

*செவிச் சொல்லும், சேர்ந்த நகையும், அவித்து ஒழுகல்—*
*ஆன்ற பெரியார் அகத்து!* 694

மதிப்புமிக்க அரசன் இருக்கும்போது, அவன் காண வேறொருவன் காதில் இரகசியமாகப் பேசுவதையும், சேர்ந்து சிரிப்பதையும் அடியோடு தவிர்க்க வேண்டும்.

*எப் பொருளும் ஓரார், தொடரார், மற்று அப் பொருளை*
*விட்டக்கால் கேட்க, மறை!* 695

மன்னர் அந்தரமாகப் பேசும் போது அதை ஒட்டுக் கோளாமல், பின் அது பற்றி யாதும் வற்புறுத்திக் கேளாமல் மன்னரே சொல்லும் போது அறிந்து கொள்ளலாம் என்று இருந்து விட வேண்டும்.

**குறிப்பு அறிந்து, காலம் கருதி, வெறுப்பு இல
வேண்டுப, வேட்பச் சொலல்! 696**

மன்னருடைய குறிப்பை உணர்ந்து, தகுந்த சமயத்தை எதிர்நோக்கி, வெறுப்பானவற்றைச் சொல்லாமல், விருப்பமான வற்றை, அவர் விரும்பும் முறையில் சொல்ல வேண்டும்.

**வேட்பன சொல்லி, வினை இல எஞ்ஞான்றும்
கேட்பினும், சொல்லா விடல்! 697**

மன்னர் விரும்புகின்றதை மட்டுமே சொல்லி, வேண்டாத பயன் இல்லாததை அவரே கேட்ட போதிலும் எப்போதும் சொல்லாமல் இருக்க வேண்டும்.

**'இளையர், இன முறையர்' என்று இகழார், நின்ற
ஒளியொடு ஒழுகப்படும். 698**

'மன்னர் எனக்கு இளையவர், இன்ன உறவு முறை' என்று கூறி இகழாமல், அவருடைய தகுதிக்குத் தக்க புகழுடன் பொருந்தி நடந்து கொள்ள வேண்டும்.

**'கொளப்பட்டேம்' என்று எண்ணி, கொள்ளாத செய்யார்—
துளக்கு அற்ற காட்சியவர். 699**

'மன்னர், தம்மிடம் மிகுந்த மதிப்பு உள்ளவர்' என்று எண்ணி, மன்னர் விரும்பாதவைகளை அறிவுத் தெளிவுடையவர் செய்ய மாட்டார்.

**பழையம் எனக் கருதி, பண்பு அல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும். 700**

'மன்னரும் தானும் நீண்ட காலப் பழக்கம் உள்ளவர்' என்று கருதி, தகாத காரியங்களைச் செய்யும் உரிமை கெடுதியை உண்டாக்கும்.

*(இந்தப் பகுதி, மன்னர் என்று குறிப்பிட்டாலும், முதலாளி வர்க்கத்தினர், செல்வந்தர் ஆகியோருக்கும் பொருந்தும்.)*

# 71. குறிப்பு அறிதல்

## (முகக் குறிப்பால் எண்ணத்தை அறிவது)

*கூறாமை நோக்கி, குறிப்பு அறிவான், எஞ்ஞான்றும்*
*மாறா நீர் வையக்கு அணி.* 701

ஒருவர் வாய் திறந்து சொல்லாமலே, அவருடைய முகத்தைப் பார்த்து, அவர் உள்ளக் கருத்தைப் புரிந்து கொள்கின்றவன், உலகத்துக்கு எப்போதும் ஆபரணம் போன்றவன்.

*ஐயப்படாஅது அகத்தது உணர்வானைத்*
*தெய்வத்தோடு ஒப்பக் கொளல்!* 702

சந்தேகப்படாமல், ஒருவனுடைய எண்ணத்தை உணரக் கூடியவனைத் தெய்வத்துக்குச் சமமாக மதிக்க வேண்டும்.

*குறிப்பின் குறிப்பு உணர்வாரை, உறுப்பினுள்*
*யாது கொடுத்தும், கொளல்!* 703

ஒருவருடைய முகம், கண் இவற்றின் குறிப்பால் உள்ளக் கருத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய திறமைசாலிக்கு நிலம், வீடு, பதவி, பொருள் எதைக் கொடுத்தாவது அவரை மன்னர் தம்மிடம் வைத்துக் கொள்ள வேண்டும்.

*குறித்தது கூறாமைக் கொள்வாரொடு, ஏனை*
*உறுப்பு ஓரனையரால், வேறு.* 704

ஒருவர் மனதில் எண்ணியதை அவர் கூறாமலே குறிப்பால் அறிந்து கொள்ளக் கூடியவர் உருவத்தில் எல்லாரையும் போல இருந்தாலும், அறிவினால் மேம்பட்டவராக இருப்பார்.

*குறிப்பின் குறிப்பு உணராஆயின், உறுப்பினுள்*
*என்ன பயத்தவோ, கண்?* 705

ஒருவருடைய முகத்தையும் கண்ணையும் கொண்டு அவருடைய கருத்தைப் புரிந்து கொள்ள முடியாவிட்டால் கண் இருந்தும் என்ன பயன்?

*அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சம்
கடுத்தது காட்டும், முகம்.* **706**

எதிரில் உள்ளவரைப் பளிச்சென்று காட்டும் கண்ணாடி போல், ஒருவர் உள்ளத்தில் உள்ளதை, அவருடைய எண்ணத்தை அவருடைய முகம் தெளிவாகக் காட்டி விடும்.

*முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ—உவப்பினும்
காயினும், தான் முந்துறும்?* **707**

மகிழ்ச்சியையும், துன்பத்தையும் முகத்தோற்றமானது உடனே வெளிப்படுத்துவதுபோல், அறிவு மிகுந்தது வேறு இல்லை.

*முகம் நோக்கி நிற்க அமையும்—அகம் நோக்கி,
உற்றது உணர்வார்ப் பெறின்.* **708**

ஒருவருடைய உள்ளத்தை ஊகித்து அறியக் கூடிய திறமை உள்ளவர் அவருடைய முகத்தைச் சிறிது கூர்ந்து பார்த்தால், எண்ணத்தை அறிய அதுபோதும்.

*பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும்—கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்.* **709**

பகையையும், நட்பையும் கண் காட்டி விடும்; கண்ணைக் கொண்டு' குறிப்பு அறியும் வகை உணர்ந்தவர் ஒருவர் மனத்தில் உள்ள பகையையும், நட்பையும் புரிந்து கொள்ளலாம்.

*'நுண்ணியம்' என்பார் அளக்கும் கோல், காணுங்கால்,
கண் அல்லது, இல்லை பிற.* **710**

நுட்பமான அறிவு உடையவர், பிறரை அறிந்து கொள்ளக் கையாளும் அளவு கோல் எது என்று எண்ணிப் பார்த்தால், அது அவருடைய கண்ணைத் தவிர வேறு இல்லை.

# 72. அவை அறிதல்

## (சபையை அறிந்து பேசுவது)

*அவை அறிந்து, ஆராய்ந்து, சொல்லுக—சொல்லின்*
*தொகை அறிந்த தூய்மையவர்!* 711
வார்த்தைகளை இணைத்துப் பேசத் தெரிந்த மேலோர், சபையின் தன்மை அறிந்து அதற்கு ஏற்றபடி வார்த்தைகளை ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

*இடை தெரிந்து, நன்கு உணர்ந்து, சொல்லுக—சொல்லின்*
*நடை தெரிந்த நன்மையவர்!* 712
சபையின் நடைமுறையையும், பேச வேண்டிய காலத்தையும், சொற்களின் எளிமையையும், திறனையும் உணர்ந்து நல்லவர் பேச வேண்டும்.

*அவை அறியார், சொல்லல் மேற்கொள்பவர் சொல்லின்*
*வகை அறியார்; வல்லதூஉம் இல்.* 713
சபையின் தகுதியை அறியாமல், ஒன்றைச் சொல்ல முன் வருகின்றவர் பேச்சுத் திறமை இல்லாதவரே தவிர, அவர் பேசிச் சாதிக்கப் போவது ஒன்றும் இல்லை.

*ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்! வெளியார்முன்*
*வான் சுதை வண்ணம் கொளல்!* 714
அறிவாளிகள் முன்னிலையில், அறிவுத் திறமையோடு பேச வேண்டும். அறிவு இல்லாதவர்களின் மத்தியில், தாமும் அறிவு இல்லாதவரைப் போல், காட்டிக் கொள்ள வேண்டும்.

*'நன்று' என்றவற்றுள்ளும் நன்றே—முதுவருள்*
*முந்து கிளவாச் செறிவு.* 715
அறிவாளிகள் நிறைந்துள்ள சபையில் அவர்களை முந்திக் கொண்டு எதுவும் பேசாமல் அடக்கத்தோடு இருப்பது, நல்லது என்று கூறப்பட்ட எல்லாவற்றையும் விட நல்லது.

*ஆற்றின் நிலைதளர்ந்தற்றே—வியன் புலம்*
*ஏற்று, உணர்வார்முன்னர் இழுக்கு.* *716*

விரிவான ஆராய்ச்சி அறிவு உடையோர்முன், ஒருவன் குற்றமாகப் பேசி அவமானப்படுவது, நல்ல வழியிலிருந்து தவறிக் கெடுவது போன்றது.

*கற்று அறிந்தார் கல்வி விளங்கும்—கசடு அறச்*
*சொல் தெரிதல் வல்லார் அகத்து.* *717*

குறை சொல்ல இயலாமல், கற்றுத் தேர்ந்த திறமையாளர் சபையில், பல நூல்களைப் படித்து அறிந்தவருடைய கல்வியானது சிறப்புப் பெறும்.

*உணர்வது உடையார்முன் சொல்லல்—வளர்வதன்*
*பாத்தியுள் நீர் சொரிந்தற்று.* *718*

உணர்ந்து அறிந்து கொள்ளும் தன்மை உள்ளவர்முன், படித்தவர் பேசுவது, தானாக வளர்கின்ற பாத்தியிலே தண்ணீரைப் பாய்ச்சுவது போன்றது.

*புல் அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க—நல் அவையுள்*
*நன்கு செலச் சொல்லுவார்!* *719*

நல்ல அறிஞர்கள் சபையில், அவர்கள் மனத்தில் பதியும்படி பேசக் கூடிய திறமைசாலி, மூடர்கள் (கல்வி அறிவு இல்லாதவர்) கும்பலில் மறந்தும் பேசக் கூடாது.

*அங்கணத்துள் உக்க அமிழ்து அற்றால்—தம் கணத்தர்*
*அல்லார்முன் கோட்டி கொளல்!* *720*

தன்னுடைய வர்க்கத்தைச் சேராத (அறிவு இல்லாதவர்) கூட்டத்தில், ஒரு பொருளைப் பற்றிக் கூறுவது, கழிவு நீர்ச் சாக்கடையில் சிந்திய அமுதத்தைப் போன்றது.

## 73. அவை அஞ்சாமை
## (சபையில் பயப்படாமல் பேசுவது)

*வகை அறிந்து, வல் அவை, வாய்சோரார்—சொல்லின்*
*தொகை அறிந்த தூய்மையவர்.* 721

சொற்களின் தொகுதி (இலக்கணம்) அறிந்த சிறப்பு மிக்கவர் உள்ள சபையின் தரத்தை அறிந்து, அங்கே வாய் தவறிக்கூட தவறாகச் சொல்ல மாட்டார்.

*கற்றாருள் கற்றார் எனப்படுவர்—கற்றார்முன்*
*கற்ற செலச் சொல்லுவார்.* 722

கற்றவர் முன் தான் படித்தவைகளை, அவர் மனத்தில் பதியும்படி சொல்லக்கூடிய திறமையாளர், கற்றவர் எல்லாரையும் விட நன்றாகக் கற்றவர் என்ற மதிப்பைப் பெறுவார்.

*பகையகத்துச்சாவார் எளியர்; அரியர்,*
*அவையகத்து அஞ்சாதவர்.* 723

போர் முனைக்குத் துணிந்து சென்று சாகக் கூடியவர்கள் உலகத்தில் ஏராளமாக இருக்கின்றனர். ஆனால், படித்தவர் சபைக்குச் சென்று, தைரியமாகப் பேசக்கூடியவர்கள் ஒரு சிலர்தான் இருப்பார்கள்.

*கற்றார்முன் கற்ற செலச் சொல்லி, தாம் கற்ற,*
*மிக்காருள், மிக்க கொளல்!* 724

தான் படித்தவைகளை, படித்தவரின் மனத்தில் பதியுமாறு விவாதித்துத் தன்னைவிட அதிகமாகப் படித்தவரிடம் உள்ள சிறப்பான அறிவை அறிந்து கொள்ள வேண்டும்.

*ஆற்றின், அளவு அறிந்து கற்க—அவை அஞ்சா*
*மாற்றம் கொடுத்தற்பொருட்டு!* 725

சபையில் ஒன்றைக் கேட்கின்றவருக்குத் தைரியமாக விடை அளிப்பதற்காகக் கற்க வேண்டிய முறையிலே நூல்களைக் கற்பதோடு, தருக்க நூலையும் ஆழ்ந்து படிக்க வேண்டும்.

*வாளொடு என், வன்கண்ணர் அல்லார்க்கு?—நூலொடு என்,
நுண் அவை அஞ்சுபவர்க்கு?* 726

வீரம் இல்லாதவருக்கு (வாள்) கத்தியோடு என்ன தொடர்பு இருக்க முடியும்? அதுபோல, நுட்பமான அறிவுடையோர் சபையைக் கண்டு நடுங்குகின்றவருக்கு அறிவு நூலோடு என்ன தொடர்பு இருக்க முடியும்?

*பகையகத்துப் பேடி கை ஒள் வாள்—அவையகத்து
அஞ்சுமவன் கற்ற நூல்.* 727

படித்தவர் கூட்டத்தில் பேசப் பயப்படுகின்றவன், படித்த நூல் அறிவானது, போர் முனையில் பயம் கொள்ளியான பேடியின் கையில் ஏந்திய கூர்மையான வாள் போன்றது.

*பல்லவை கற்றும், பயம் இலரே—நல் அவையுள்
நன்கு செலச் சொல்லாதார்.* 728

நல்லோர் கூடியிருக்கின்ற சபையில், நல்ல கருத்தை விரும்பிக் கேட்கும்படி சிறப்பாகச் சொல்ல இயலாதவர், பல நூல்களைப் படித்து இருந்தாலும், பயன் இல்லாதவரே.

*'கல்லாதவரின் கடை' என்ப—'கற்று அறிந்தும்,
நல்லார் அவை அஞ்சுவார்.'* 729

பல நூல்களைப் படித்து அறிந்திருந்த போதிலும், நல்ல அறிஞர் சபையில் பேசப் பயப்படுகின்றவர், படிக்காத மூடர்களைவிடத் தாழ்ந்தவர் என்று கூறுவார்கள்.

*உளர் எனினும், இல்லாரொடு ஒப்பர்—களன் அஞ்சி,
கற்ற செலச் சொல்லாதார்.* 730

சபைக்குப் பயந்து தான் படித்தவைகளைக் கேட்பவர் மனம் களிக்கும்படி சொல்ல முடியாதவர் உயிரோடு வாழ்ந்தாலும் இறந்தவருக்கு ஒப்பானவர்.

*("செல்வத்தைப் பெற்றிருந்தாலும் (ஏழை போல்) இல்லாதவர் என்று கூறலாம்.")*

# 74. நாடு

## (நாட்டின் சிறப்பு)

*தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்வு இலாச்*
*செல்வரும், சேர்வது—நாடு.* 731

விளை பொருள்களைச் செழிப்பாகத் தரக்கூடிய நிலங்களும், அதில் பாடுபட்டு உழைக்கும் விவசாயிகளும், நியாயமான வழிகளில் பொருள் சம்பாதித்த செல்வந்தர்களும் ஒருங்கே அமைந்து சிறப்பு அடைவதே நல்ல நாடு.

*பெரும் பொருளான் பெட்டக்கது ஆகி, அருங் கேட்டால்,*
*ஆற்ற விளைவது—நாடு* 732

பலவகையான பண்டங்களும் உற்பத்தி ஆகக்கூடிய இடம் என்று பிற நாட்டினரும் விரும்பி வரக்கூடியதாயும், அழிவு இல்லாமல், மிகுதியாக விளையக்கூடிய நிலங்களும் உடையதே சிறந்த நாடு.

*பொறை ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி, இறைவற்கு*
*இறை ஒருங்கு நேர்வது—நாடு.* 733

மற்ற நாட்டு மக்கள் வந்து குடியேறுவதால், ஏற்படுகின்ற துன்பத்தையும், பொறுப்பையும் தாங்கி, அரசனுக்கு வரி முழுவதையும் முறையாக செலுத்தக் கூடிய குடிமக்களைக் கொண்டதே நல்ல நாடு.

*உறு பசியும், ஓவாப் பிணியும், செறு பகையும்,*
*சேராது இயல்வது—நாடு.* 734

மிகுதியான பசியும், நீங்காத நோயும், அழிவு செய்யும் பகைவரின் தொல்லையும் வந்து சேராமல், நல்ல நிலையில் இருப்பதே நாடு.

*பல் குழுவும், பாழ்செய்யும் உட்பகையும், வேந்து அலைக்கும்*
*கொல் குறும்பும், இல்லது—நாடு.* 735

குடிமக்களுக்குள் பல கட்சிகளும், நாட்டைப் பாழாக்கக் கூடிய உள்நாட்டுத் துரோகிகளும், சமயம் நேரும்பொழுது அரசனைக் கொலை செய்யக்கூடிய சிற்றரசர்களும் இல்லாததே நாடு.

*கேடு அறியா, கெட்ட இடத்தும் வளம் குன்றா*
*நாடு, என்ப, நாட்டின் தலை.* 736
பகைவரால் செய்யப்படாததாய், அப்படி ஒரு சமயம் கேடு நேர்ந்துவிட்ட போதிலும், பயிர் வளம், செல்வ வளம் குறையாததாய் உள்ள நாடுதான் எல்லா நாடுகளையும் விட முதன்மையானது என்ற சொல்லுவார்கள்.

*இரு புனலும், வாய்ந்த மலையும், வரு புனலும்,*
*வல் அரணும்,—நாட்டிற்கு உறுப்பு.* 737
மழை நீர், ஊற்று நீர் ஆகிய இருவகை நீர்வளமும், சகல வாய்ப்புகளும் வாய்ந்த மலையும் அதிலிருந்து அருவியாக ஓடிவருகின்ற நீர்வளமும் உறுதியான கோட்டையும் நாட்டின் உறுப்புகள்.

*பிணி இன்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்—*
*அணி என்ப, நாட்டிற்கு—இவ் ஐந்து.* 738
நோய் அணுகாமல் இருத்தல், செல்வச் சிறப்பு, வளமான விளைபொருள், இன்ப வாழ்வு, உறுதியான பாதுகாப்பு ஆகிய ஐந்தும் நாட்டுக்கு அழகு என்று கூறுவார்கள்.

*நாடு என்ப, நாடா வளத்தன; நாடு அல்ல,*
*நாட, வளம் தரும் நாடு.* 739
நாடு என்று சொல்லப்படுவது, தேவையான பொருள்களுக்கும் மற்ற நாடுகளை நம்பிக் கொண்டிருக்காமல், தன்னிறைவு பெற்று இருப்பதே சிறந்த நாடு. முயற்சி செய்து தேடி, பொருளைப் பெறும் நாடு சிறப்பான நாடு அல்ல.

*ஆங்கு அமைவு எய்தியக்கண்ணும் பயம் இன்றே—*
*வேந்து அமைவு இல்லாத நாடு.* 740
நாட்டுக்கு நல்ல அரசன் அமையாவிட்டால், மேலே கூறப்பட்ட நன்மைகள் எல்லாம் நிறைந்து இருந்த போதிலும், அதனால் பயன் இல்லை.

# 75. அரண்

## (நாட்டுக்குப் பாதுகாப்பு)

*ஆற்றுபவர்க்கும் அரண் பொருள்; அஞ்சித் தற்*
*போற்றுபவர்க்கும் பொருள்.* 741

படையெத்துப் போர் தொடுக்க வருகிறவர்களுக்குக் கோட்டை சிறந்தது. அதே போல், படையெடுப்புக்குப் பயந்து, பாதுகாப்புத் தேடி அடைய விரும்புகின்றவர்களுக்கும் கோட்டை சிறந்தது.

*மணி நீரும், மண்ணும், மலையும், அணி நிழற்*
*காடும், உடையது—அரண்.* 742

தெளிந்த அகழி நீரும், விரிந்த நிலப்பரப்பும், உயர்ந்த மலையும், நிழல் தரும் அழகான காடும் சூழ்ந்து இருப்பதே பாதுகாப்பான கோட்டை.

*'உயர்வு, அகலம், திண்மை, அருமை, இந் நான்கின்*
*அமைவு அரண்' என்று உரைக்கும் நூல்.* 743

உயரம், அகலம், உறுதி, பகைவர் நெருங்க முடியாத இடம் இந்த நான்கும் அமைந்து இருப்பதே கோட்டை என்று அரசியல் நூல் வல்லவர்கள் கூறுவார்கள்.

*சிறு காப்பின் பேர் இடத்தது ஆகி, உறு பகை*
*ஊக்கம் அழிப்பது—அரண்.* 744

சிறிய பாதுகாப்பைத் தருவதாயினும், பெரிய நிலப்பரப்பு உள்ளதாய், பகைவரின் வீரத்தை அழிக்கக் கூடியதாய் இருப்பது கோட்டை.

*கொளற்கு அரிதாய், கொண்ட கூழ்த்து ஆகி, அகத்தார்*
*நிலைக்கு எளிது ஆம் நீரது—அரண்.* 745

பகைவரால் கைப்பற்ற முடியாததாய், போர்க் காலத்தில் உள்ளே இருப்பவர்க்கு உணவு நிறைந்து இருப்பதாய் நிலையாகத் தங்குவதற்கு எளிதான தன்மை உடையது கோட்டை.

*எல்லாப் பொருளும்உடைத்தாய், இடத்து உதவும்*
*நல் ஆள் உடையது—அரண்.* 746

பகைவரால் முற்றுகையிடப்பட்டபோது, உள்ளே இருப்போர் வாழ்வுக்கு வேண்டிய எல்லாப் பொருளும் உடையதாய், பாதுகாப்புக்குச் சிறந்த வீரர்களைக் கொண்டதாய் இருப்பது கோட்டை.

*முற்றியும், முற்றாது எறிந்தும், அறைப்படுத்தும்,*
*பற்றற்கு அரியது—அரண்.* 747

முற்றுகையிட்டும், முற்றகையிடாமல் பதுங்கிப் போர் செய்தும், எப்படியும் பகைவர் கைப்பற்ற முடியாத உறுதி வாய்ந்ததே கோட்டை.

*முற்று ஆற்றி முற்றியவரையும், பற்று ஆற்றி,*
*பற்றியார் வெல்வது—அரண்.* 748

முற்றுகையிடுவதில் வலிமை கொண்டு முற்றுகை இட்டவரையும் உள்ளே இருப்போர் பாதுகாப்போடு போர் செய்து வெற்றி பெறுவதற்கு வசதி உடையது கோட்டை.

*முனை முகத்து மாற்றலர் சாய, வினைமுகத்து*
*வீறு எய்தி மாண்டது—அரண்.* 749

உள்ளே இருப்பவர் செய்யும் போர் முறையால் பகைவர் போர் முனையில் அழியும்படி பெருமையும் சிறப்பும் மிக்கதே கோட்டை.

*எனை மாட்சித்து ஆகியக்கண்ணும், வினை மாட்சி*
*இல்லார்கண் இல்லது—அரண்.* 750

எவ்வளவு பெருமைகளைக் கொண்டதாக இருந்தபோதிலும் செயல் திறமை இல்லாதவர்களிடம் இருக்கும் கோட்டையால் ஒரு பயனும் இல்லை.

# 76. பொருள் செயல் வகை

## (செல்வத்தைச் சம்பாதிக்கும் முறை)

*பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருள் அல்லது, இல்லை பொருள்.* 751

மதிக்கப்படாதவரையும் மதிக்கச் செய்வது செல்வம்; அதை விட ஒருவர் தேட வேண்டிய பொருள் வேறு இல்லை.

*இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை*
*எல்லாரும் செய்வர், சிறப்பு.* 752

பணம் இல்லாதவன், என்ன நன்மை செய்திருந்தாலும் அவனை எல்லாரும் அலட்சியம் செய்வார்கள். பணக்காரரை(நன்மை செய்யா விட்டாலும்) எல்லாரும் மதிப்பாகப் பேசுவார்கள்.

*பொருள் என்னும் பொய்யா விளக்கம், இருள் அறுக்கும்—*
*எண்ணிய தேயத்துச் சென்று.* 753

செல்வம் என்னும் அணையா விளக்கு மட்டும் ஒருவன் கைவசம் இருந்தால், அதைக் கொண்டு அவன் நினைத்தபடி எந்த நாட்டுக்குச் சென்றாலும், அவனுக்கு வழிகாட்டி ஒளி உண்டாகச் செய்யும்.

*அறன் ஈனும்; இன்பமும் ஈனும்;—திறன் அறிந்து,*
*தீது இன்றி வந்த பொருள்.* 754

தீய வழியில் செல்லாமல், திறமையைக் கொண்டு சம்பாதித்த செல்வம் அவனுக்கு நன்மையைத் தரும்; இன்பத்தையும் தரும்.

*அருளொடும், அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம்*
*புல்லார், புரள விடல்!* 755

அன்போடும், கருணையோடும் வராத செல்வப் பெருக்கத்தைப் பெற்று மகிழாமல், நீக்கி விட வேண்டும் (கெட்ட வழிகளில் தேடிய செல்வத்தால் கேவலம் உண்டாகும்).

*உறு பொருளும், உல்கு பொருளும், தன் ஒன்னார்த்*
*தெறு பொருளும்,—வேந்தன் பொருள்.* 756
வாரிசு இல்லாதவர்களுடைய சொத்தும், சுங்க வரியும், பகைவரிடமிருந்து பெறும் நஷ்ட ஈடும், அரசனுக்குச் சொந்த மானவை.

*அருள் என்னும் அன்பு ஈன் குழவி, பொருள் என்னும்*
*செல்வச் செவிலியால்,உண்டு.* 757
நன்மை செய்ய வேண்டும் என்னும் அன்பு உள்ளத்தில் தோன்றிய கருணை என்னும் குழந்தை, பொருளாகிய செல்வம் உள்ள செவிலித்தாயால் வளர்க்கப்படுகிறது.

*குன்று ஏறி யானைப் போர் கண்டற்றால்—தன் கைத்து ஒன்று*
*உண்டாகச் செய்வான் வினை.* 758
தன்னுடைய கையில் பொருளை வைத்துக் கொண்டு முயற்சி செய்கின்ற காரியம், உயரமான இடத்தில் நின்று யானைச் சண்டையைப் பார்ப்பதைப் போன்றது (பாதுகாப்பானது).

*செய்க பொருளை! செறுநர் செருக்கு அறுக்கும்*
*எஃகு அதனின் கூரியது இல்.* 759
செல்வத்தைச் சம்பாதிக்க வேண்டும். (ஏன் என்றால்) அது பகைவருடைய கர்வத்தை அழிக்கும் வாள்! அதை விட கூர்மையான ஆயுதம் வேறு இல்லை.

*ஒண் பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு, எண் பொருள்—*
*ஏனை இரண்டும் ஒருங்கு.* 760
நல்ல வழியில் சிறப்பு மிக்க செல்வத்தை அதிகமாகச் சம்பாதித்தவருக்கு அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றில், மற்ற இரண்டு லட்சியங்களான அறம் (என்னும் நன்மையும்) இன்ப வாழ்வும் ஒருங்கே எளிதாகக் கைகூடும்.

# 77. படை மாட்சி

## (அரசனுடைய படையின் பெருமை)

*உறுப்பு அமைந்து, ஊறு அஞ்சா, வெல் படை—வேந்தன்*
*வெறுக்கையுள் எல்லாம் தலை.* 761

அனைத்து அங்கங்களும் நிறைந்ததாய், பகைவருக்கு அஞ்சாத வெற்றி தரும் படை, அரசனுடைய எல்லாச் செல்வங்களையும் விடச் சிறந்தது. (படை என்பது போர் வீரர்களைக் குறிப்பது.)

*உலைவு இடத்து ஊறு அஞ்சா வன்கண், தொலைவு இடத்து,*
*தொல் படைக்கு அல்லால், அரிது.* 762

போரிடும்போது வலிமை குறைந்தாலும், அழிவு ஏற்பட்டாலும், மனம் தளராமல் நின்ற போரிடுகின்ற தைரியம் பரம்பரைப் பெருமை உடைய படை வீரர்களைத் தவிர வேறு எவராலும் முடியாது.

*ஒலித்தக்கால் என் ஆம், உவரி எலிப்பகை?*
*நாகம் உயிர்ப்ப, கெடும்.* 763

எலிகள் பகை கொண்டு திரண்டு கடல் போல் சப்தம் இட்டால் என்ன கெடுதல் ஏற்படும்? பாம்பு சீறி மூச்சுவிட்டாலும் எலிகள் அனைத்தும் ஓடிவிடும் (கூட்டத்தின் ஆரவாரத்துக்கு வீரன் பயப்பட மாட்டான்).

*அழிவு இன்று, அறைபோகாது ஆகி, வழிவந்த*
*வன்கணதுவே—படை.* 764

போரில் பின்வாங்கி ஓடாமல், பகைவரின் வஞ்சனைக்குப் பலி ஆகாமல், பரம்பரையாய் அந்த வீரம் உடையதே திறமையான படை.

*கூற்று உடன்று மேல்வரினும், கூடி, எதிர் நிற்கும்*
*ஆற்றலதுவே—படை.* 765

எமனே கோபத்தோடு வந்து போர் செய்தாலும், அணி வகுத்து எதிர்த்துத் தாக்கும் ஆற்றலை உடையதே படை.

*மறம், மானம், மாண்ட வழிச் செலவு, தேற்றம்,*
*என நான்கே ஏமம், படைக்கு.* 766

வீரம், கௌரவம், சிறப்பான வழியில் செல்லுதல், அரசனின் நம்பிக்கைக்கு ஆளாதல் ஆகிய நான்கு குணங்களும் படைக்குப் பாதுகாப்பு.

*தார் தாங்கிச் செல்வது தானை—தலைவந்த*
*போர் தாங்கும் தன்மை அறிந்து.* 767

பகைவர் அணிவகுத்து தன்மேல் எதிர்த்து வந்த போரைத் தடுக்கும் வகை அறிந்து, அந்தத் தூசிப் படையை எதிர்த்துப் போர் செய்ய வெற்றி அடைவதே சேனை.

*அடல்தகையும், ஆற்றலும், இல் எனினும், தானை*
*படைத் தகையான் பாடு பெறும்.* 768

பகைவருடன் போர் செய்யும்போது, எதிர்ப்பைத் தாங்கும் வீரமும், திறமையும் இல்லாத போதிலும், போர்முறை அறிந்த தன்னுடைய அணிவகுப்பால் படை பெருமை அடையும்.

*சிறுமையும், செல்லாத் துனியும், வறுமையும்,*
*இல்லாயின் வெல்லும், படை.* 769

படையின் அளவு சுருங்குதல், அரசனிடம் நீங்காத வெறுப்பு, வறுமை (வீரர்களுக்கு உணவு, உடை, ஊதியம் கிடைக்காதது) ஆகியவை இல்லாவிடில் படை வெற்றி அடையும்.

*நிலை மக்கள் சால உடைத்துஎனினும், தானை*
*தலைமக்கள் இல்வழி இல்.* 770

வழிவழி வந்த நிலையான போர் வீரர்கள் மிகுந்த படை என்றாலும், அதனை நடத்திச் செல்லக்கூடிய திறமையான தளபதிகள் இல்லையானால் படைக்கு வெற்றி இல்லை.

## 78. படைச் செருக்கு
### (படை வீரரின் பெருமை)

*என்னை முன் நில்லன்மின்—தெவ்வீர் !—பலர், என்னை முன் நின்று கல் நின்றவர்.* 771

"பகைவனே! என் அரசனை எதிர்த்து நின்ற போர் செய்யாதீர். ஏற்கனவே, அவனை எதிர்த்துப் போராடி, மாண்டு போய் கல்லானவர் பலர்" (போர்க்களத்தில் பகைவனுக்கு இப்படி எச்சரிக்கை செய்வான் உண்மையான படைவீரன்).

*கான முயல் எய்த அம்பினில், யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது.* 772

காட்டில் ஓடித் திரிகின்ற முயலைக் குறி தவறாமல் எய்த அம்பை வைத்திருப்பதைவிட, யானை மீது வேலை எறிந்து அது தப்பி ஓடிவிட்டாலும், அந்த வேலைக் கையில் வைத்திருப்பது சிறந்தது.

*பேர் ஆண்மை என்ப, தறுகண்; ஒன்று உற்றக்கால், ஊராண்மை மற்று அதன் எஃகு.* 773

போர் முனையிலே பகைவரை எதிர்க்கும் வீரத்தையே ஆண்மை என்பார்கள். ஆனால், பகைவருக்கு ஒரு துன்பம் வந்தபோது, அவருக்கு உதவுவது அந்த ஆண்மையிலும் மேலான ஆண்மை ஆகும் (ஆண்மை என்பது ஆற்றல்).

*கை வேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய் வேல் பறியா, நகும்.* 774

போர் வீரன் கையில் உள்ள வேலை ஒரு யானைமேல் எறிந்து, அதைத் துரத்திவிட்டு வேறு வேலைத் தேடி வருகின்றவன், தன் உடலில் பாய்ந்திருக்கின்ற வேலைப் பார்த்து மகிழ்கின்றான்.

*விழித்த கண் வேல்கொண்டு எறிய, அழித்து இமைப்பின், ஒட்டு அன்றோ, வன்கணவர்க்கு?* 775

கோபத்தோடு பகைவரைப் பார்த்த கண், அவர் எறிந்த வேலைக் கண்டு பயந்து கண்ணை மூடித் திறந்தாலும், அது வீரனுக்குத் தோல்வி போன்றது.

*விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள்*
*வைக்கும், தன் நாளை எடுத்து.* 776

சிறந்த போர் வீரன், தன் முகத்திலும் மார்பிலும் காயம் படாத நாட்கள் எல்லாம், வீணாகக் கழித்த நாட்கள் என்று எண்ணுவான் (போரிட்டு காயம்படுவது வீரனின் லட்சியம்).

*சுழலும் இசை வேண்டி, வேண்டா உயிரார்*
*கழல் யாப்புக் காரிகை நீர்த்து.* 777

சரித்திர புகழை விரும்பி, உயிர் வாழ்வதைக் கருதாத போர் வீரர், தம் கால்களில் வீரச் சலங்கைகையைக் கட்டிக் கொள்ளுவதே சிறப்பான செயல்.

*உறின், உயிர், அஞ்சா மறவர், இறைவன்*
*செறினும், சீர் குன்றல் இலர்.* 778

போர் வந்ததும், உயிரைப் பெரிதாகக் கருதாது அஞ்சாமல் போரிடும் வீரர், அரசன் கோபித்தாலும்கூட தம்முடைய கடமையில் தவறமாட்டார்.

*இழைத்தது இகவாமைச் சாவாரை, யாரே,*
*பிழைத்தது ஒறுக்கிற்பவர்?* 779

தான் கூறிய சபதப்படி போர் செய்து, உயிரை இழக்கத் துணிந்த போர் வீரரைத் தவறு செய்ததாகக் கூறி அவரைத் தண்டிக்கத் கூடியவர் யார்? (படையில் சேரும்போது உயிரையும் கொடுப்பேன் என்ற எடுத்துக் கொள்ளும் சபதம்).

*புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின், சாக்காடு*
*இரந்து கோள்—தக்கது உடைத்து.* 780

நாட்டையும், தன்னையும் ஆதரித்த அரசன் கண்கலங்கும்படி ஒரு வீரன் சாகப் பெற்றால், அப்படிப்பட்ட சாவைக் கெஞ்சி பெற்றுக் கொள்ளும் பெருமை உடையது.

# 79. நட்பு

## (நட்பின் சிறப்பு)

*செயற்கு அரிய யா உள, நட்பின்?—அதுபோல்*
*வினைக்கு அரிய யா உள, காப்பு?* 781
நட்பைப்போல் தேடிச் செய்து கொள்ளக்கூடிய சிறப்பு மிகுந்தது வேறு என்ன இருக்கின்றது? அதைப்போல, செய்கின்ற காரியத்துக்குச் சிறப்பான பாதுகாப்பு, வேறு என்ன இருக்கின்றது?

*நிறை நீர, நீரவர் கேண்மை, பிறை; மதிப்*
*பின் நீர, பேதையார் நட்பு.* 782
நல்லவருடைய (அறிவாளி) நட்பு பிறைச் சந்திரனைப் போல நாள் தோறும் வளரும். மூடருடைய நட்பு, முழுநிலவு தேய்வது போல், நாளுக்கு நாள் குறைந்து போகும்.

*நவில்தொறும் நூல் நயம் போலும்—பயில்தொறும்,*
*பண்பு உடையாளர் தொடர்பு.* 783
நயமான ஒரு நூலைப் படிக்கப் படிக்க, அதன் சிறப்பு அதிகமாகத் தெரிவது போல். நல்ல குணம் உள்ளவருடைய நட்பானது பழகப் பழக இன்பம் தரும்.

*நகுதற்பொருட்டு அன்று, நட்டல்; மிகுதிக்கண்*
*மேற்சென்று இடித்தற்பொருட்டு.* 784
ஒருவரோடு ஒருவர் நட்புக் கொள்வது சிரித்துப் பேசி மகிழ்வதற்காக மட்டும் அல்ல. ஒருவர் தவறாக நடந்தால், அதை எடுத்துக் கூறி, தடுத்துக் கண்டிப்பதே சிறந்த நட்பு.

*புணர்ச்சி, பழகுதல், வேண்டா; உணர்ச்சிதான்*
*நட்பு ஆம் கிழமை தரும்.* 785
நட்புக் கொள்வதற்குப் பலமுறை கண்டு பேச வேண்டியது இல்லை . ஒத்த உணர்ச்சி இருந்தால், நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைத் தரும்.

*முகம் நக,நட்பது நட்பு அன்று; நெஞ்சத்து*
*அகம் நக, நடப்பது–நட்பு.* 786

காணும்போது முகம் மலர்ந்து சிரித்து விடுவது நட்பு ஆகிவிடாது. உள்ளம் மலரும்படி உள்ளன்போடு உறவு கொள்வதே உண்மையான நட்பு.

*அழிவினவை நீக்கி, ஆறு உய்த்து, அழிவின்கண்*
*அல்லல் உழப்பது ஆம்–நட்பு.* 787

கெடுதியைத் தரும் தீமைகளிலிருந்து விலக்கி, நல்ல வழியில் நடக்கச் செய்து, துன்பம் வந்தபோது கூடஇருந்து துன்பப் படுவதே நட்பு.

*உடுக்கை இழந்தவன் கை போல, ஆங்கே*
*இடுக்கண் களைவது ஆம்–நட்பு.* 788

இடுப்பில் உடுத்தியுள்ள உடை அவிழ்ந்ததும், ஒருவருடைய கை உடனே அதைச் சரிப்படுத்தி மானத்தைக் காப்பது போல, நண்பனுக்குத் துன்பம் ஏற்பட்டால், உடனே சென்று அத்துன்பத்தை நீக்குவதுதான் நட்பு.

*'நட்பிற்கு வீற்றிருக்கை யாது?' எனின், கொட்பு இன்றி*
*ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.* 789

நட்பு என்பதற்கு உயர்வான இருப்பிடம் எது என்றால், மனம் கோ ணாமல் அவசியமானபோதெல்லாம் உதவி செய்து ஆதரிக்கும் தன்மை.

*'இனையர், இவர் எமக்கு; இன்னம் யாம்' என்று*
*புனையுனும், புல்லென்னும்–நட்பு.* 790

'இவர் எனக்கு இன்ன முறையில் வேண்டியவர்', 'நான் அவருக்கு மிகவும் நெருங்கியவன்' என்று பொய்யான பெருமை பேசுவதனால், நட்பின் பெருமை குறைந்து போகும்.

# 80. நட்பு ஆராய்தல்
## (ஆராய்ந்து நட்புக் கொள்ளுவது)

*நாடாது நட்டலின் கேடு இல்லை; நட்டபின்,*
*வீடு இல்லை, நட்பு ஆள்பவர்க்கு.* 791

ஒருவருடன் நட்புக் கொண்டபின், அவரை விட்டு விடுவது முடியாத காரியம். அதனால், சரிவரத் தெரிந்து கொள்ளாமல் நட்புக் கொள்ளுவதைப் போல் கெடுதி வேறு இல்லை.

*ஆய்ந்து ஆய்ந்து கொள்ளதான் கேண்மை, கடைமுறை,*
*தான் சாம் துயரம் தரும்.* 792

பலமுறை, பல வழிகளிலும் ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளாதவனுடைய நட்பானது, முடிவில் தான் சாவதற்குக் காரணமான துன்பத்தை ஏற்படுத்தி விடும்.

*குணனும், குடிமையும், குற்றமும், குன்றா*
*இனனும், அறிந்து யாக்க நட்பு.* 793

ஒருவனுடைய குணத்தையும், குடும்பத்தின் தன்மையையும், அவனிடம் உள்ள குற்றங்களையும் குறைவற்ற சுற்றத் தாரையும் ஆராய்ந்து தெளிந்து அவனோடு நட்புக் கொள்ள வேண்டும்.

*குடிப் பிறந்து, தன்கண் பழி நாணுவானைக்*
*கொடுத்தும் கொளல் வேண்டும், நட்பு.* 794

உயர்ந்த குடும்பத்தில் பிறந்து தன் மீது வரக்கூடிய பழிக்குப் பயப்படுகின்றவனைப் பொருள் கொடுத்தாகிலும் நட்புக் கொள்ள வேண்டும். (அப்படிப்பட்டவன் பொருளை வாங்குவானா? அவன் விருப்பம் போல் நடந்து அல்லது அவனுடைய விருப்பத்துக்கு விட்டுக் கொடுத்து நண்பனாக்கிக் கொள்வதே பொருத்தமாகும்).

*அழச் சொல்லி, அல்லது இடித்து, வழக்கு அறிய*
*வல்லார் நட்பு ஆய்ந்து கொளல்!* 795

தீய காரியத்தைச் செய்யும்போது வருத்தப்படும் படியாகச் சொல்லி இனிமேல் அப்படிச் செய்யக்கூடாது என்று கண்டித்து, உலக இயல்பை அறியக் கூடியவரின் நட்பை ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

*கேட்டினும் உண்டு, ஓர் உறுதி—கிளைஞரை*
*நீட்டி அளப்பது ஓர் கோல்.* 796

கெடுதல் வந்தாலும், அதனால் ஒரு நன்மை உண்டு. நண்பரின் இயல்பை (நிலத்தை நீட்டி அளக்கும் கோல் போல்) சரியாகத் தெரிந்து கொள்ளலாம்.

*ஊதியம் என்பது ஒருவருக்கு பேதையார்*
*கேண்மை ஒரீஇ விடல்.* 797

ஒருவனுக்கு லாபம் என்பது, அறிவு இல்லாதவருடன் கொண்டிருந்த நட்பிலிருந்து விலகி, அவரைக் கைவிடுவது.

*உள்ளற்க, உள்ளம் சிறுகுவ! கொள்ளற்க,*
*அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு!* 798

உள்ளம் வருந்துவதற்குக் காரணமான காரியங்களை நினைக்காமல் இருக்க வேண்டும். அதுபோல், துன்பம் ஏற்பட்ட போது, உதவி செய்யாதவரின் நட்பை வைத்துக் கொள்ள கூடாது.

*கெடும் காலைக் கைவிடுவார் கேண்மை, அடும் காலை*
*உள்ளினும், உள்ளம் சுடும்.* 799

கெடுதல் வரும் சமயத்தில், தன்னைக் கைவிட்டு ஓடுகின்றவரின் நட்பை, மரண காலத்தில் அந்தத் துரோகச் செயலை நினைத்தாலும் மனம் கொதிக்கும்.

*மருவுக, மாசு அற்றார் கேண்மை! ஒன்று ஈத்தும்*
*ஒருவுக, ஒப்பு இலார் நட்பு!* 800

குற்றமற்றவருடைய நட்பை விட்டுவிடாமல், இணைத்துக் கொள்ள வேண்டும். பொருத்தமற்றவர் (ஒத்த பண்பு இல்லாத) நட்பை எதைக் கொடுத்தாவது விட்டு ஒழிக்க வேண்டும்.

## 81. பழமை

## (பழைய நண்பர்கள்)

*'பழமை எனப்படுவது யாது?' எனின், யாதும்*
*கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.* 801

பழைமை என்பது என்ன என்றால், நீண்ட காலம் பழகியவர் உரிமை பாராட்டி செய்யும் காரியத்தை ஒதுக்கிவிடாமல் ஏற்றுக் கொள்ளுவது நட்பு.

*நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை; மற்று அதற்கு*
*உப்பு ஆதல் சான்றோர் கடன்.* 802

நட்புக்குச் சிறப்பு, ஒருவருக்கு ஒருவர் பாராட்டும் உரிமை, அந்த உரிமைக்கு இணங்கிப்போவது அறிவாளியின் கடமை.

*பழகிய நட்பு எவன் செய்யும்—கெழுதகைமை*
*செய்தாங்கு அமையாக்கடை?* 803

பழைய நண்பர் உரிமையோடு செய்யும் ஒரு காரியத்தைத் தானே செய்ததாகக் கருதி அதற்குச் சம்மதிக்காவிட்டால், அவரோடு பழகிய நட்புக்கு என்ன பலன்?

*விழைதகையான் வேண்டியிருப்பர்—கெழுதகையான்*
*கேளாது நட்டார் செயின்.* 804

நண்பர் உரிமையால் தன்னைக் கேட்காமலே ஒரு காரியத்தைச் செய்தால் அறிவுடையோர் அந்த உரிமையையும் பாராட்டி அதை விரும்புவார்.

*பேதைமை ஒன்றோ, பெருங் கிழமை என்று உணர்க—*
*நோ தக்க நட்டார் செயின்!* 805

பழைய நண்பர் வருத்தம் தரக்கூடிய ஒரு காரியத்தைச் செய்தால், அதற்குக் காரணம் அறியாதனால் செய்தாரோ உரிமையோடு செய்தாரோ என்று உணர வேண்டும்.

*எல்லைக்கண் நின்றார் துறவார்—தொலைவிடத்தும்,*
*தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.* 806

அளவுகடந்த உறவு கொண்டவர், தனக்குத் துன்பம் வந்த போதும் நீண்ட காலமாக நட்புக் கொண்டிருப்பவரின் தொடர்பைக் கைவிட மாட்டார்.

*அழிவந்த செய்யினும், அன்பு அறார்—அன்பின்*
*வழிவந்த கேண்மையவர்.* 807

பழகிய நண்பர் தீமையைச் செய்தபோதிலும் அன்போடு நீண்ட நாள் உறவு உடையவர் அவரிடம் கொண்ட அன்பை விட்டுவிட மாட்டார்.

*கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு*
*நாள், இழுக்கம் நட்டார் செயின்.* 808

பழகிய நண்பர் தவறு செய்ததைப் பற்றிப் பிறர் சொன்னாலும், காதில் வாங்காத தன்மை உள்ளவருக்கு, நண்பர் தவறு செய்வாரானால், தவறு செய்த அந்த நாள், பயன் உள்ள நாள் போன்றது.

*கெடா அர், வழிவந்த கேண்மையார் கேண்மை*
*விடாஅர் விழையும், உலகு.* 809

உரிமை மாறாமல், நீண்ட நாள் பழகி வந்த உறவு உள்ளவருடைய நட்பைக் கைவிடாத நல்லவரை உலகத்தார் பாராட்டுவார்.

*விழையார் விழையப்படுப—பழையார்கண்*
*பண்பின் தலைப்பிரியாதார்.* 810

பழகிய நண்பர் தவறு செய்தபோதும், தம்முடைய நட்புப் பண்பிலிருந்து மாறாத பெருந்தன்மை உடையவரைப் பகைவரும்கூடப் பாராட்டுவார்.

# 82. தீ நட்பு

## (கெட்ட குணம் உள்ளவர் நட்பு)

*பருகுவார் போலினும், பண்பு இலார் கேண்மை.*
*பெருகலின் குன்றல் இனிது.* 811

அன்பு மிகுதியால் அப்படியே விழுங்குபவர் காணப்பட்டாலும், கெட்டவர் நட்பு வளர்வதைவிடக் குறைவதே நல்லது.

*உறின் நட்டு, அறின் ஒருஉம் ஒப்பு இலார் கேண்மை*
*பெறினும், இழப்பினும், என்?* 812

தனக்கு ஒரு காரியம் இருக்கும் போது நட்புக் கொண்டாடி, அது முடிந்ததும் நம்மை விட்டு ஓடும் கெட்டவரின் நட்பு இருந்தால்தான் என்ன? இல்லாமல் போனால்தான் என்ன?

*உறுவது சீர்தூக்கும் நட்பும், பெறுவது*
*கொள்வாரும், கள்வரும், நேர்.* 813

தனக்குக் கிடைக்கக் கூடிய நன்மையை அளந்து பார்க்கும் நண்பரும், பணத்தை வாங்கும் விலைமகளும், திருடரும் ஒரே மாதிரியானவர் (சுய நலம் கொண்டவர்கள்)

*அமரகத்து ஆற்றறுக்கும் கல்லா மா அன்னார்*
*தமரின், தனிமை தலை.* 814

போர்முனையில் தன்மீது உள்ள வீரனைக் கீழே தள்ளிவிட்டு ஓடுகின்ற பயிற்சி இல்லாத குதிரையைப் போல ஆபத்துக் காலத்தில் உதவி செய்யாத நண்பர் தன்னுடன் இருப்பதை விடத் தான் தனியாக இருப்பதே சிறந்தது.

*செய்து ஏமம் சாரா, சிறியவர் புன் கேண்மை*
*எய்தலின் எய்தாமை நன்று.* 815

வாழ்க்கைக்குப் பாதுகாப்பாக நன்மை செய்து வைத்தாலும், அதைப் பாதுகாத்துக் கொள்ளாத கீழ்மக்களின் தீய நட்பு ஏற்படுவதைவிட இல்லாமல் இருப்பதே நன்மை.

*பேதை பெருங் கெழீஇ நட்பின், அறிவுஉடையார்*
*ஏதின்மை கோடி உறும்.* *816*
அறிவு இல்லாதவரின் நெருங்கிய நட்பைவிட, அறிவாளியின் விரோதம் கோடி மடங்கு நன்மை தரும்.

*நகை வகையர் ஆகிய நட்பின், பகைவரான்*
*பத்து அடுத்த கோடி உறும்.* *817*
உள்ளத்தில் அன்பு இல்லாமல், வெளிப் பகட்டுக்காகச் சிரித்துப் பேசுகின்றவரின் நட்பைவிட, பகைவரால் கிடைப்பவை பத்துக் கோடி நன்மை உண்டாகும்.

*ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை*
*சொல்லாடார், சோரவிடல்!* *818*
முடிகின்ற காரியத்தை முடியாதபடி கெடுக்கின்ற வருடைய உறவை அவரிடம் செல்லாமலே விட்டு ஒழிக்க வேண்டும்.

*கனவினும் இன்னாது மன்னோ—வினை வேறு*
*சொல் வேறு பட்டார் தொடர்பு!* *819*
செய்வது வேறாகவும், சொல்வது வேறாகவும் உள்ளவர் தொடர்பு கனவில் கூடத் துன்பம் தரும்.

*எனைத்தும் குறுகுதல் ஓம்பல்—மனைக் கெழீஇ,*
*மன்றில் பழிப்பார் தொடர்பு!* *820*
வீட்டிலே இருக்கும்போது நெருங்கிப் பழகி, பலர் கூடிய சபையில் இகழ்ந்து பேசுவோரின் நட்பை, எள்ளளவும் அருகில் நெருங்க விடக்கூடாது.

## 83. கூடா நட்பு

### (சேரக்கூடாத நட்பு)

*நீர் இடம் காணின், எறிதற்குப் பட்டடை—*
*நேரா நிரந்தவர் நட்பு.* 821

விரோதியாக இருந்தவர் திடீரென்று உறவாட வந்தால், தகுந்த சந்தர்ப்பம் பார்த்து தன்னை நீக்குவதற்கான பட்டடைக் கல்லா கக் கருதி அவரிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

*இனம் போன்ற இனம் அல்லார் கேண்மை, மகளிர்*
*மனம் போல, வேறுபடும்.* 822

நண்பரைப் போலவே இருந்து, உள்ளத்தில் உண்மையான அன்பு இல்லாதவரின் நட்பு. விலைமகளின் மனம் போல சமயத்திற்கு தகுந்தபடி மாறக் கூடியது (விலைமகள் என்பதற்குப் பதிலாக பெண்கள் என்று சிலர் கருகின்றனர்)

*பல நல்ல கற்றக்கடைத்தும், மனம் நல்லர்*
*ஆகுதல் மாணார்க்கு அரிது.* 823

பலவகையான சிறந்த நூல்களைப் படித்துத் தெளிந்த போதிலும், நல்ல மனம் உள்ளவராகப் பழகுவது உள்ளன்பு இல்லாதவருக்கு (பகைவருக்கு) இயலாது.

*முகத்தின் இனிய நகாஅ, அகத்து இன்னா*
*வஞ்சரை அஞ்சப்படும்.* 824

முகத்தில் இனிமை காட்டி, சிரித்துப் பேசி மனத்தில் தீமை கொண்டிருக்கும் வஞ்சகருடன் பழகப் பயப்பட வேண்டும்.

*மனத்தின் அமையாதவரை, எனைத்து ஒன்றும்*
*சொல்லினான் தேறற்பாற்று அன்று.* 825

உள்ளத்தில் அன்பு இல்லாதவர் (தன்னோடு ஒன்று படாதவர்) பேச்சை நம்பி, எந்த காரியத்தையும் செய்யக் கூடாது.

*நட்டார்போல் நல்லவை சொல்லினும், ஒட்டார் சொல்*
*ஒல்லை உணரப்படும்.* 826

நண்பரைப்போல நடித்து, நன்மையானதைச் சொன்னாலும்கூட பகைமை உள்ளவர் பேசும் சொற்கள் நன்மை அளிக்காது என்ற உண்மையை சீக்கிரமாகத் தெரிந்து கொள்ளலாம்.

*சொல் வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க—வில் வணக்கம்*
*தீங்கு குறித்தமையான்!* 827

வில் வளைந்திருக்கிறது என்றாலும் அது தீங்கு செய்ய (அம்பு எய்வதற்கு) தயாராக உள்ளது, அதுபோல், பகையாளி வணக்கத்தோடு பேசுகின்ற சொற்கள் நன்மை தரும் என்று நம்பிவிடக்கூடாது.

*தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்; ஒன்னார்*
*அழுத கண்ணீரும், அனைத்து.* 828

பகையாளி வணங்கிக் கும்பிட்ட கைகளுக்குள்ளும் கொலை செய்யும் ஆயுதம் மறைந்து இருக்கும். அதைப்போல பகையாளி அழுது வடித்த கண்ணீரும் வஞ்சனை உள்ளதாக இருக்கும்.

*மிகச் செய்து, தம் எள்ளுவாரை நகச் செய்து,*
*நட்பினுள் சாப் புல்லற்பாற்று.* 829

வெளிப்பார்வைக்கு மிகுந்த நட்புக் காட்டி, மனத்துக்குள் இகழும் பகையாளியை, தானும் அவருடைய நட்பால் மகிழ்ந்து இருப்பது போல வெளியே காட்டி பிறகு அந்த நட்பை விட்டு ஒழித்து விடவேண்டும்.

*பகை நட்பு ஆம் காலம் வருங்கால், முகம் நட்டு*
*அகம் நட்பு ஓரீஇவிடல்!* 830

பகையாளி, நண்பரைப்போல் வரும் சந்தர்ப்பத்தில், முகத்தால் நட்புக் காட்டி, மனத்தால் அவர் தொடர்பை நீக்கி பிறகு, அந்த முக நட்டையும் விட்டு விட வேண்டும்.

## 84. பேதைமை

### (முட்டாளாக இருக்கக் கூடாது)

*பேதைமை என்பது ஒன்று; 'யாது?' எனின், ஏதம் கொண்டு,*
*ஊதியம் போகவிடல்,* 831

முட்டாள்தனம் என்று சொல்லக் கூடியது எது என்றால், குற்றமான காரியத்தைச் செய்து நன்மையான காரியத்தைச் செய்யாமல் கைவிடுவது.

*பேதைமையுள் எல்லாம் பேதைமை, காதன்மை*
*கை அல்லதன்கண் செயல்.* 832

முட்டாள்தனம் எல்லாவற்றிலும் பெரிய முட்டாள் தனமானது, கெட்ட காரியங்களில் ஆசை வைத்து அதனால் அவதிப்படுவது.

*நாணாமை, நாடாமை, நார் இன்மை, யாது ஒன்றும்*
*பேணாமை, – பேதை தொழில்.* 833

தகாததை (கெட்டதை) செய்ய வெட்கப்படாமல் ஒரு தொழிலைத் தேடாமல் இருப்பது நல்ல காரியம் எதையும் விரும்பாமல் இருப்பது, அன்பு செலுத்தாமல் இருப்பது இவை எல்லாம் முட்டாள்தனத்தின் அடையாளங்கள்.

*ஓதி உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும், தான் அடங்காப்*
*பேதையின் பேதையார் இல்.* 834

நல்ல நூல்களைப் படித்தும், அவற்றின் கருத்தை அறிந்தும், பிறருக்கு அவற்றை எடுத்துச் சொல்லியும், தான் அந்த வழியில் நடக்காத முட்டாளைப் போல் பெரிய முட்டாள் எவரும் இல்லை.

*ஒருமைச் செயல் ஆற்றும், பேதை—எழுமையும்*
*தான் புக்கு அழுந்தும் அளறு!* 835

முட்டாள்தனத்தின் காரணமாக மூடன் ஏழு தலைமுறைகளிலும் இகழ்ந்து பேசப்படும் துன்பத்தை இந்தப் பிறப்பிலேயே ஒருவன் அனுபவித்து விடுவான்.

*பொய்படும் ஒன்றோ; புனை பூணும்;—கை அறியாப்*
*பேதை வினை மேற்கொளின்.* 836

வகை தெரியாத மூடன் ஒரு காரியத்தைச் செய்யப் போனால் அது முடியாமல் கெட்டுப் போகும். அதைத் தவிர, அவன் குற்றவாளி ஆகி, கையில் விலங்கு மாட்ட நேரிடும்.

*ஏதிலார் ஆர, தமர் பசிப்பர் – பேதை*
*பெருஞ் செல்வம் உற்றக்கடை.* 837

மூடனுக்குப் பெரும் செல்வம் கிடைத்து விட்டால், வேற்று மனிதர்கள் உண்டு கொழுப்பார்கள்; உறவினர்களும், நண்பர்களும் பசியால் துன்புறுவார்கள்.

*மையல் ஒருவன் களித்தற்றல் – பேதை தன்*
*கை ஒன்று உடைமை பெறின்.* 838

முட்டாள் கையில் செல்வம் கிடைத்து விட்டால், பைத்தியம் பிடித்தவன் மது அருந்தி விட்டதுபோல, என்ன செய்வது என்று தெரியாமல் திரிந்து சுற்றுவான்.

*பெரிது இனிது, பேதையார் கேண்மை – பிரிவின்கண்*
*பீழை தருவது ஒன்று இல்!* 839

மூடருடைய தொடர்பு கூட மிகவும் இன்பம் தரக்கூடியதே. ஏன் என்றால், அந்தத் தொடர்பு பிரியும்போது வருத்தம் ஏற்படாது (நல்லவர் நட்பு பிரியும்போது துன்பமாக இருக்கும்).

*கழா அக் கால் பள்ளியுள் வைத்தற்றால் – சான்றோர்*
*குழாஅத்துப் பேதை புகல்.* 840

அறிவாளிகள் கூடியுள்ள சபையில் மூடன் நுழைந்து பேச முற்படுவது, கழுவாத அசுத்தமான காலை, சுத்தமான படுக்கையில் வைப்பதைப் போன்றது.

# 85. புல்லறிவாண்மை
## (அற்பப் புத்தி உள்ளவர்)

*அறிவு இன்மை, இன்மையுள் இன்மை; பிறிது இன்மை*
*இன்மையா வையாது, உலகு.* 841

வறுமைகளில் எல்லாவற்றையும் விட பெரிய வறுமை, அறிவு இல்லாத வறுமைதான். ஏன் என்றால், மற்ற வறுமை எதையும் அப்படிப்பட்ட வறுமையாக உலகம் கருத மாட்டாது.

*அறிவு இலான் நெஞ்சு உவந்து ஈதல், பிறிது யாதும்*
*இல்லை, பெறுவான் தவம்.* 842

அறிவு இல்லாதவன் மன மகிழ்ச்சியோடு ஒரு பொருளைக் கொடுப்பதற்குக் காரணம் வேறு எதுவும் இல்லை. அதை வாங்கிக் கொள்ளுகின்றவனின் நன்மையான செயல்தான்.

*அறிவு இலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை*
*செறுவார்க்கும் செய்தல் அரிது.* 843

அறிவு இல்லாதவர் தங்களைத் தாங்களே துன்புறுத்திக் கொள்ளும் துன்பத்தை அவருடைய எதிரியாலும் கூடச் செய்ய முடியாது.

*'வெண்மை எனப்படுவது யாது' எனின்,'ஒண்மை*
*உடையம் யாம்! என்னும் செருக்கு.* 844

'அற்பப் புத்தி' என்று சொல்லுவது எது என்றால், 'நான் அறிவு உடையவன்' என்று தன்னை மதித்துக் கொள்ளுகின்ற கர்வமே (எனக்கு எல்லாம் தெரியும் என்ற இறுமாப்பு).

*கல்லாத மேற்கொண்டு ஒழுகல், கசடு அற*
*வல்லதூஉம், ஐயம் தரும்.* 845

ஒருவர் படித்து அறியாத நூல்களைப் பற்றி படித்தவர் போல் பாவனை செய்து பேசுவது அவர் நன்றாகப் படித்திருந்ததிலும் கூட மற்றவர்களுக்குச் சந்தேகம் ஏற்படும்.

*அற்றம் மறைத்தலோ புல்லறிவு — தம்வயின்*
*குற்றம் மறையாவழி.* *846*

தங்களிடம் உள்ள குற்றம் குறைகளை அறிந்து அதை நீக்கிக் கொள்ளாமல் மறைத்துக் கொண்டிருப்பவர்கள், உடம்பில் மறைக்க வேண்டிய பகுதியை மட்டும் உடையால் மறைத்துக் கொள்ளுவது அற்பப் புத்தி ஆகும்.

*அரு மறை சோரும் அறிவு இலான் செய்யும்,*
*பெரு மிறை, தானே தனக்கு.* *847*

மிகச் சிறப்பான அறிவுரைகளைப் பெற்றபோதிலும், அதை மனத்தில் வைத்துக் கொள்ளாமல் மறந்து விடும் அறிவு இல்லாதவன் தனக்குத் தானே பெரிய தீங்கைச் செய்து கொள்வான்.

*ஏவவும் செய்கலான், தான் தேறான், அவ் உயிர்*
*போஒம் அளவும் ஓர் நோய்.* *848*

அறிவுடையோர் நன்மை தரும் புத்திமதியை, சொன்னாலும் கேட்கமாட்டான். தானாகவும் அறிந்து நடக்க மாட்டான். அப்படிப்பட்ட அறிவு இல்லாதவனை அவன் சாகும் வரை விடாமல் பிடித்திருக்கின்ற நோய் போன்றது.

*காணாதாற் காட்டுவான் தான் காணான்; காணாதான்*
*கண்டான் ஆம், தான் கண்ட ஆறு.* *849*

அறிவு இல்லாதவனுக்கு, அறிவு புகட்டப் போகின்றவனே அறிவு இல்லாதவன் ஆகிவிடுகின்றான். ஆனால், அறிவு இல்லாதவனோ, தான் அறிந்த வழியிலேயே நடப்பதால், அவன் மட்டுக்கு அறிவு உள்ளவனாக இருப்பான்.

*உலகத்தார் 'உண்டு' என்பது 'இல்' என்பான் வையத்து*
*அலகையா வைக்கப்படும்.* *850*

உலகத்தில் உயர்ந்தோர் பலரும் 'உண்டு' என்று கூறுகின்றதை 'இல்லை' என்று மறுக்கும் அறிவு இல்லாதவனை உலகத்தார் மனிதனாக மதிக்காமல், பேய் என்று எண்ணுவார்கள்.

# 86. இகல்

## (பகைமை கொள்ளாமல் இருப்பது)

*இகல் என்ப – எல்லா உயிர்க்கும் பகல் என்னும்
பண்புஇன்மை பாரிக்கும் நோய்.* 851

பகைமை என்னும் வேறுபாடு எது என்றால், எல்லா மனிதர்களுக்கும் விரோதம் என்னும் அன்பு இல்லாமையை உண்டாக்கி, அதை வளரச் செய்கின்ற நோய் என்று கூறுவார்கள்.

*பகல் கருதிப் பற்றா செயினும், இகல் கருதி,
இன்னா செய்யாமை தலை.* 852

தன்னோடு பகைமை ஏற்படுவதைக் கருதி வெறுக்கத்தக்க காரியத்தை ஒருவன் செய்தாலும் தான் பகைமை கொண்டு அவனுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பது சிறந்தது.

*இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின், தவல் இல்லாத்
தா இல் விளக்கம் தரும்.* 853

பகைமை என்னும் துன்பம் தரக்கூடிய நோயை, ஒருவன் மனத்திலிருந்து நீக்கிவிட்டால் அது அவனுக்கு நிலையான புகழைத் தரும்.

*இன்பத்துள் இன்பம் பயக்கும் – இகல் என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.* 854

துன்பத்தில் எல்லாம் கொடுமையான துன்பமான பகைமை இல்லை என்றால், இன்பத்தில் எல்லாம் சிறந்த இன்பம் கிடைக்கும்.

*இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை, யாரே,
மிகல் ஊக்கும் தன்மையவர்?* 855

பகைமையை எதிர்த்துப் போராட நினைக்காமல், அதனை விட்டு விலகி நடக்கும் வல்லமை உள்ளவரை வெல்லக் கூடிய ஆற்றல் உள்ளவர் யார்?

*இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை*
*தவலும் கெடலும் நணித்து.* 856

பகைமை அதிகரிப்பது நல்லது என்று நினைப்பவனுடைய வாழ்க்கை அழிவதற்கும் கெடுவதற்கும் சந்தர்ப்பம் விரைவில் ஏற்படும்.

*மிகல் மேவல் மெய்ப்பொருள் காணார்—இகல் மேவல்*
*இன்னா அறிவினவர்.* 857

பகைமையை விரும்புகின்ற அறிவு இல்லாத தீயவர், வாழ்வின் வெற்றிக்குக் காரணமான நீதிநூல் கருத்தை அறிய மாட்டார்.

*இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம்; அதனை*
*மிகல் ஊக்கின், ஊக்குமாம் கேடு.* 858

உள்ளத்தில் பகைமை ஏற்பட்டதும், அதை ஏற்றுக் கொள்ளாமல் விலகி நடப்பதே நன்மை தரும். அதை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டே போனால் கேடு நெருங்கிக் கொண்டே வரும்.

*இகல்காணான், ஆக்கம் வருங்கால்; அதனை*
*மிகல் காணும், கேடு தரற்கு.* 859

ஒருவனுக்குச் செல்வம் வரும்போது பகைமையை நினைக்க மாட்டான். தனக்குக் கேடு வரவழைத்துக் கொள்ளும்போது அதை எதிர்த்து வெற்றி பெற நினைப்பான்.

*இகலான் ஆம், இன்னாத எல்லாம்; நகலான் ஆம்,*
*நல் நயம் என்னும் செருக்கு.* 860

பகைமை ஒன்றினாலேயே எல்லாம் ஏற்படும். நட்பால் நல்ல நீதி என்னும் செல்வம் கிடைக்கும்.

*(இகல் என்பதற்குப் பகைமை, விரோதம், குரோதம் மாறுபாடு, வேறுபாடு, மனத்தாங்கல், மனஸ்தாபம் அனைத்தும் ஒரே அர்த்தம் தருவது).*

## 87. பகைமாட்சி

### (பகைமையால் உண்டாகும் கேடு)

*வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக! ஓம்பா,*
*மெலியார்மேல் மேக, பகை!* 861

தன்னைவிட வலிமையாளர்மேல் பகைகொண்டு எதிர்ப்பதைக் கைவிட வேண்டும். தன்னைவிட மெல்லியவர் மேல் பகை கொள்வதை விடாமல் விரும்பி மேற்கொள்ளலாம். (அதாவது: வலிமையாளர் என்றால், பண வசதி, உடல் பலம், அதிகாரம் ஆகியவை.)

*அன்பு இலன்; ஆன்ற துணை இலன்; தான் துவ்வான்;—*
*என் பரியும், ஏதிலான் துப்பு?* 862

அன்பு இல்லாதவன், சிறந்த துணை இல்லாதவன், தானும் வலிமை இல்லாதவன் இப்படிப்பட்டவன் பகைவனுடைய வலிமையை எப்படி ஒழிக்க முடியும்?

*அஞ்சும்; அறியான்; அமைவு இலன்; ஈகலான்;—*
*தஞ்சம் எளியன், பகைக்கு.* 863

எதற்கும் பயப்படுகின்றவன், அறிவு இல்லாதவன், நல்லவரோடு சேராதவன், ஈயாத கஞ்சன், இப்படிப்பட்டவன் பகைவரால் வெற்றி கொள்ளுவதற்கு எளிதாக இருப்பான்.

*நீங்கான் வெகுளி; நிறை இலன்;—எஞ்ஞான்றும்,*
*யாங்கணும், யார்க்கும், எளிது.* 864

நீங்காத கோபம் உடையவன், பேச்சிலும் செயலிலும் தடுமாறும் மனநிலை உள்ளவன். இப்படிப்பட்டவன் எப்போதும், எங்கும், எவர் முன்னிலையிலும் சாமான்ய மானவனாகவே கருதப்படுவான்.

*வழி நோக்கான்; வாய்ப்பன செய்யான்; பழி நோக்கான்;*
*பண்பு இலன்; பற்றார்க்கு இனிது.* 865

நியாயமான வழியில் நடந்து கொள்ளாதவன், செய்ய வேண்டிய காரியத்தை உடனுக்கு உடன் செய்யாதவன், பழி பாவச் செயலுக்குப் பயப்படாதவன், நல்ல குணம் இல்லாதவன், அத்தகையவனை பகைவர் தோற்கடிப்பதில் மகிழ்வார்.

*காணாச் சினத்தான்; கழி பெருங் காமத்தான்,—*
*பேணாமை பேணப்படும்.* 866
கண்மூடித்தனமான கோபம் கொள்பவன், மிதமிஞ்சிய காம இச்சை உடையவன் மிக விரைவில் பகைவரைத் தேடிக் கொள்வான்.

*கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற — அடுத்து இருந்து,*
*மாணாத செய்வான் பகை.* 867
தன்னை அடுத்து, தன்னோடு இருந்து, தனக்குத் தீமை செய்கின்றவனுடைய பகையை, எதையாவது கொடுத்து பெற வேண்டும் (அவன் பகைவனாகி விட்டால், விலகிப் போய் விடுவான், தீமை இல்லை)

*குணன் இலனாய், குற்றம் பல ஆயின், மாற்றார்க்கு,*
*இனன் இலன் ஆம்; ஏமாப்பு உடைத்து,* 868
நல்ல குணம் இல்லாததோடு பல குற்றங்கள் உள்ளவனாகவும் இருப்பானாகில், அவனுக்குத் துணைவர்களே இருக்க மாட்டார்கள். அந்த நிலை அவனுடைய பகைவருக்கு நன்மை தரும்.

*செறுவார்க்குச் சேண், இகவா, இன்பம்—அறிவு இலா*
*அஞ்சும் பகைவர்ப் பெறின்.* 869
அறிவு இல்லாத பயப்படிக்கூடிய பகைவன் கிடைத்தால், அவனை எதிர்த்து வெற்றி கொள்பவருக்கு அளவற்ற இன்பம் உண்டாகும்.

*கல்லான் வெகுளும் சிறு பொருள், எஞ்ஞான்றும்,*
*ஒல்லானை ஒல்லாது, ஒளி.* 870
படிக்காதவனைப் பகைத்து எளிதாக வெற்றிகொள்ள முடியாதவனிடம் எக்காலத்திலும் புகழ் வந்து சேராது.

# 88. பகைத் திறம் தெரிதல்

## (பகையைத் தெரிந்து கொள்ளுவது)

*பகை என்னும் பண்புஇலதனை, ஒருவன்*
*நகையேயும், வேண்டற்பாற்று அன்று.* 871

பகை என்னும் பண்பு இல்லாத தீமையை ஒருவன் சிரித்து விளையாடிப் பொழுது போக்குவதற்காகக் கூட விரும்பக் கூடாது.

*வில் ஏர் உழவர் பகை கொளினும், கொள்ளற்க—*
*சொல் ஏர் உழவர் பகை!* 872

வில்லை ஏராக உடைய உழவருடன் பகை கொண்ட போதிலும், சொல்வன்மை மிகுந்த அறிவாளிகளிடம் பகை கொள்ளக் கூடாது. ('வில் ஏர் உழவர்' என்பதை, 'வில் ஏந்தும் போர் வீரர்' என்றும் கூறுகின்றனர் சிலர்.)

*ஏமுற்றவரினும் ஏழை – தமியனாய்ப்*
*பல்லார் பகை கொள்பவன்.* 873

தன்னந்தனியாக இருக்கின்ற ஒருவன் பலருடைய பகையைத் தேடிக் கொள்பவன் பைத்தியக் காரனைவிட பரிதாபத்துக்கு உரியவன்.

*பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்பு உடையாளன்*
*தகைமைக்கண் தங்கிற்று, உலகு.* 874

பகையையும் நட்பாக்கிக் கொண்டு நடக்கும் பண்பு உடையவனின் பெருந்தன்மையால் உலகம் நிலைத்து உள்ளது.

*தன் துணை இன்றால்; பகை இரண்டால்; தான் ஒருவன்*
*இன் துணையாக் கொள்க, அவற்றின் ஒன்று!* 875

தனக்குத் துணை ஒருவருமே இல்லை, பகையோ இரண்டு பக்கங்களிலும் இருந்து வருகின்றது. அவனோ தனி ஆள், இந்த இக்கட்டான சமயத்தில் இரண்டு பகைகளில் ஒன்றை இனிய துணையாக்கிக் கொள்வது தான் சிறப்பு.

*தேறினும், தேறாவிடினும், அழிவின்கண்*
*தேறான் பகாஅன் விடல்!* 876

ஒருவனுடைய பகையைப் பற்றி முன்னதாக ஆராய்ந்து அறிந்திருந்தாலும் அறியாவிட்டாலும் துன்பம் வந்த சமயத்தில், அவனை நெருங்காமலும் பிரியாமலும் விட்டு வைக்க வேண்டும்.

*நோவற்க, நொந்தது அறியார்க்கு! மேவற்க,*
*மென்மை, பகைவரகத்து!* 877

தனக்கு ஏற்பட்ட துன்பங்களை, அறியாதவர்களிடம் சொல்லக்கூடாது. தன்னுடைய மென்மையை (வலிமை இல்லாமை) பகைவரிடத்தில் காட்டிக் கொள்ளக் கூடாது.

*வகை அறிந்து, தற் செய்து, தற் காப்ப, மாயும்—*
*பகைவர்கண் பட்ட செருக்கு.* 878

செய்ய வேண்டிய வகையை அறிந்து, தன்னைப் பலப்படுத்திக் கொண்டு, பாதுகாப்புத் தேடிக் கொண்டால், பகைவரிடத்தில் ஏற்பட்ட கர்வம் தானாகவே அழிந்து போகும்.

*இளைதாக முள்மரம் கொல்க — களையுநர்*
*கை கொல்லும் காழ்த்த இடத்து!* 879

முள்மரம், சிறிதாக இருக்கும்போதே வெட்டிவிட வேண்டும். அது முற்றி பெரிதான பின் வெட்டினால், வெட்டுகின்றவருடைய கையைக் காயப்படுத்தும். (பகை எளிதாயிருக்கும் போதே ஒழித்து விட வேண்டும்).

*உயிர்ப்ப உளர் அல்லர் மன்ற — செயிர்ப்பவர்*
*செம்மல் சிதைக்கலாதார்.* 880

பகைவருடைய கொட்டத்தைக் கெடுக்க முடியாதவர், பிறகு அவர் மூச்சு விட்டாலே நிச்சயமாக அழிந்து போவார்.

# 89. உட்பகை

## (உடன் இருந்து உள்ளத்தில் பகை கொள்ளுவது)

*நிழல் நீரும் இன்னாத இன்னா– தமர் நீரும்,*
*இன்னா ஆம், இன்னா செயின்.* *881*

நிழலும் கண்ணீரும், ஒருவனுக்கு முன்பு இனிமை தந்தாலும், பிறகு நோயை ஏற்படுத்துமானால் அவை தீமையே. அதுபோல, சுற்றத்தாரின் நடத்தை துன்பம் தருமானால் அவர்கள் விலக்கிவிட வேண்டிய தீயவர்களே.

*வாள்போல் பகைவரை அஞ்சற்க! அஞ்சுக,*
*கேள்போல் பகைவர் தொடர்பு!* *882*

வாள் (கத்தி) போல், வெளிப்படையான பகைவருக்குப் பயப்பட வேண்டியது இல்லை. ஆனால், சுற்றத்தாரைப் போல் கூடவே இருந்து, உள்ளத்தில் பகை கொண்டு கெடுப்பவரின் உறவுக்குப் பயப்பட வேண்டும்.

*உட்பகை அஞ்சித் தற் காக்க! உலைவு இடத்து,*
*மட்பகையின் மாணத் தெறும்.* *883*

வேண்டியவர் போல் இருந்து, உள்பகை கொண்டு, துன்புறுத்துகின்றவரிடம் இருந்து முதலில், தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில், குயவர் மண்பாண்டத்தை அறுத்து எடுப்பது போல், ஏமாந்த சமயத்தில், அந்த உட்பகையாளர் தவறாமல் அழித்து விடுவார்.

*மனம் மாணா உட்பகை தோன்றின், இனம் மாணா*
*ஏதம் பலவும் தரும்.* *884*

மனம் மாறாத உள்பகை ஒருவனுக்கு ஏற்பட்டு விடுமானால், அது அவனுக்குச் சுற்றத்தாரின் உறவு நீங்குவதற்குக் காரணமான துன்பங்கள் பலவற்றை உண்டாக்கும்.

*உறல் முறையான் உட்பகை தோன்றின், இறல் முறையான்*
*ஏதம் பலவும் தரும்.* 885

உறவு முறையோடு உள்பகை ஏற்படுமானால், அது அவனுக்கு இறந்து போகும் அளவுக்குப் பல துன்பங்களை உண்டாக்கும்.

*ஒன்றாமை ஒன்றியார்கண் படின், எஞ்ஞான்றும்,*
*பொன்றாமை ஒன்றல் அரிது.* 886

உள்பகை, ஒருவனுடைய சுற்றத்தாரிடம் இருந்தே ஏற்படுமானால், அந்த உள்பகையால் அவன் எப்பொழுதும் அழியாமல் இருக்க முடியாது.

*செப்பின் புணர்ச்சிபோல் கூடினும், கூடாதே—*
*உட்பகை உற்ற குடி.* 887

சொம்பும் மூடியும் சேர்ந்திருப்பதுபோல வெளியே தெரிந்தாலும், தனித்தனியாகப் பிரியக் கூடியது. அது போல, உள்பகை உள்ள குடும்பத்தினர் மனம் ஒத்து வாழ மாட்டார்கள் (பிரிந்து செல்லக் கூடியவர்களே)

*அரம் பொருத பொன் போல, தேயும் உரம், பொருது—*
*உட்பகை உற்ற குடி.* 888

உள்பகை ஏற்பட்ட குடும்பமானது, அரத்தினால் தேய்க்கப்பட்ட பொன்போல, (ஒற்றுமை இல்லாமல்) வலிமை குறைந்து போகும்.

*எட் பகவு அன்ன சிறுமைத்தேஆயினும்,*
*உட்பகை, உள்ளது ஆம், கேடு.* 889

எள்ளின் பிளவுபோல, உள்பகையானது மிகச் சிறிதாக இருந்தாலும், ஒரு குடும்பத்தை அழிக்கக்கூடிய கேட்டை ஏற்படுத்தும்.

*உடம்பாடு இலாதவர் வாழ்க்கை — குடங்கருள்*
*பாம்போடு உடன் உறைந்தற்று.* 890

மனத்தில் ஒற்றுமை இல்லாமல், சேர்ந்து வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் பாம்போடு கூடி வாழ்வதைப் போன்றது.

## 90. பெரியாரைப் பிழையாமை

### (அறிவு மிகுந்த பெரியோர்களை அவமதியாமை)

*ஆற்றுவார் ஆற்றல் இகழாமை; போற்றுவார்*
*போற்றலுள் எல்லாம் தலை.* 891

எடுத்துக் கொண்ட காரியத்தைச் செய்து முடிக்கின்ற திறமையாளரின் வல்லமையை இகழாமல் இருப்பதுதான் தீங்கு வராமல் தன்னைக் காத்துக் கொள்ளுவதற்கான தலைசிறந்த பாதுகாப்பு.

*பெரியாரைப் பேணாது ஒழுகின், பெரியாரால்*
*பேரா இடும்பை தரும்.* 892

அறிவும் ஆற்றலும் நிறைந்த பெரியோரின் சொல் கேளாமல், அவமதித்து நடந்தால், அவரால் நீங்காத துன்பங்கள் உண்டாகும்.

*கெடல்வேண்டின், கேளாது செய்க—அடல் வேண்டின்,*
*ஆற்றுபவர்கண் இழுக்கு!* 893

செய்ய வேண்டிய காரியம் கெட்டுப் போக வேண்டு மானால், பெரியோரிடம் செல்லாமல் செய்யலாம். தனக்கே அழிவு நேர வேண்டுமானால் அப்பெரியோருக்கு குற்றம் செய்வது.

*கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் – ஆற்றவார்க்கு*
*ஆற்றதார் இன்னா செயல்.* 894

வல்லமை மிகுந்தவருக்கு வலிமை இல்லாதவர் தீமை செய்வது. எமனைக் கைதட்டி வா என்று கூப்பிடுவதைப் போன்றது.

*யாண்டுச் சென்று யாண்டும் உளர் ஆகார்—வெந் துப்பின்*
*வேந்து செறப்பட்டவர்.* 895

கொடிய வலிமையுள்ள வேந்தனின் கோபத்துக்கு ஆளானவர் அவனிடமிருந்து ஓடி, எங்கே சென்றாலும், எப்படியும் வாழ முடியாது.

*எரியான் சுடப்படினும், உய்வு உண்டாம்; உய்யார்,*
*பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார்.* 896
தீயால் சுடப்பட்டாலும் ஒரு சமயம் உயிர் பிழைத்து வாழ முடியும். ஆற்றல் மிக்க பெரியோரிடத்தில் குற்றம் செய்து நடப்பவர் தப்பிப் பிழைக்க முடியாது.

*வகை மாண்ட வாழ்க்கையும், வான் பொருளும் என் ஆம்—*
*தகை மாண்ட தக்கார் செறின்?* 897
தகுதியால் பெருமை வாய்ந்த பெரியார், ஒருவனைக் கோபித்தால், அவனுக்கு வகை வகையான சிறப்புக்கள் உள்ள சுக வாழ்வும் அளவற்ற செல்வமும் இருந்து என்ன பயன்?

*குன்று அன்னார் குன்ற மதிப்பின், குடியொடு,*
*நின்றன்னார் மாய்வர், நிலத்து.* 898
மலைபோன்ற பெருமை உடைய பெரியார் மனம் நொந்து கோபிக்க நேரிட்டால், உலகில் நிலைத்தவர் போல் உள்ளவர் குடும்பத்தோடு அழிந்து போவார்.

*ஏந்திய கொள்கையார் சீறின், இடை முரிந்து,*
*வேந்தனும் வேந்து கெடும்.* 899
உயர்வான தவக்கொள்கை உடைய பெரியார் கொதித்து எழுந்தால், நாட்டை ஆட்சி செய்கின்ற அரசன் ஆனாலும் பதவி இழந்து கெடுவான்.

*இறந்து அமைந்த சார்புஉடையார் ஆயினும், உய்யார்—*
*சிறந்து அமைந்த சீரார் செறின்.* 900
மிகுந்த சிறப்பான தவத்தை உடையவர் கோபித்தால், எத்தகைய துணை உள்ளவரானாலும் தப்பிப் பிழைக்க இயலாது.
(பெரியார் என்பவர்; தவ வலிமை உள்ளவா, ஒழுக்க சீலரான முனிவர், மகான், தனக்கென வாழாப் பெருந்தகையாளர்).

# 91. பெண்வழிச் சேறல்

## (மனைவி சொல் கேட்டு நடப்பது)

*மனை விழைவார் மாண் பயன் எய்தார்; வினை விழைவார்*
*வேண்டாப் பொருளும் அது.* 901

மனைவியின் ஆசைக்கு உட்பட்டு அவள் சொன்னபடி, நல்லது கெட்டது ஆராயாமல் நடப்பவர் சிறந்த பயனை அடைய மாட்டார். காரியத்தைச் செய்ய விரும்புகிறவர் விரும்பத்தகாத நடத்தையும் அதுவே.

*பேணாது பெண் விழைவான் ஆக்கம் பெரியதோர்*
*நாணாக, நாணுத் தரும்.* 902

கடமையைக் கருதாமல், மனைவியின் பெண்மையை விரும்பி நடப்பவனுடைய வாழ்க்கை பெரிய அவமானத் துக்கு உள்ளாகி, வெட்கத்தால் தலைகுனிய நேரிடும்.

*இல்லாள்கண் தாழ்ந்த இயல்புஇன்மை, எஞ்ஞான்றும்,*
*நல்லாருள் நாணுத் தரும்.* 903

மனைவியிடம் பணிந்து நடக்கும், முறை கெட்ட செயல் ஒருவனுக்கு எப்போதும் நல்லவர்கள் மத்தியில் வெட்கத்தால் தலைகுனிவு ஏற்படும்.

*மனையாளை அஞ்சும் மறுமைஇலாளன்*
*வினை ஆண்மை வீறு எய்தல் இன்று.* 904

மனைவிக்குப் பயந்து நடக்கின்ற புகழ் இல்லாத வாழ்க்கை உடையவனுக்குக் காரியத்தை முடிக்கும் திறமை இருந்தாலும், அது பெருமையாக இருக்காது. (பணிந்து நடப்பது வேறு, பயந்து நடப்பது வேறு)

*இல்லாளை அஞ்சுவான், அஞ்சும் மற்று எஞ்ஞான்றும்,*
*நல்லார்க்கு நல்ல செயல்.* 905

மனைவிக்குப் பயந்து நடக்கின்றவன் எப்போதும் எதற்கும் நல்லவர்களுக்கு நன்மை செய்வதற்குப் பயப் படுவான்.

*இமையாரின் வாழினும், பாடு இலரே – இல்லாள்*
*அமை ஆர் தோள் அஞ்சுபவர்.* 906
மனைவியின் மென்மையான தோளைத் தழுவும் ஆசையினால் அவளுக்குப் பயப்படுகின்றவர் தேவரை விடச் சுகபோகமாக வாழ்ந்தபோதிலும் பெருமை இல்லாதவரே.

*பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின், நாணுடைப்*
*பெண்ணே பெருமை உடைத்து.* 907
மனைவி இட்ட வேலையைச் செய்து திரிகின்றவனுடைய ஆண் தன்மையைவிட, நாணத்தை இயல்பாக உடைய பெண் தன்மையே பெருமை உடையது.

*நட்டார் குறை முடியார்; நன்று ஆற்றார்;– நன்னுதலாள்*
*பெட்டாங்கு ஒழுகுபவர்.* 908
மனைவி விருப்பம்போல், அவள் சொல்படி நடக்கின்றவர், தன்னுடைய நண்பர்களுக்கு நேரிடும் குறைகளைக் தீர்க்க மாட்டார். வேறு நல்ல காரியங்கள் எதையும் செய்ய மாட்டார்.

*அறவினையும், ஆன்ற பொருளும், பிற வினையும்–*
*பெண் ஏவல் செய்வார்கண் இல்.* 909
தரும காரியமும், செல்வமும் தேடும் முயற்சியும் வேறு இன்பமான காரியங்களும் மனைவியின் கட்டளைப்படி நடக்கின்றவருக்கு நிறைவேறாது.

*எண் சேர்ந்த நெஞ்சத்து, இடன் உடையார்க்கு, எஞ்ஞான்றும்,*
*பெண் சேர்ந்து ஆம் பேதைமை இல்.* 910
லட்சியத்தோடு வாழ வேண்டும் என்ற மன உறுதி உள்ளவருக்கு மனைவிக்கு அடிமை ஆகிவிடும் மூடத்தனம் எப்போதும் உண்டாகாது.

# 92. வரைவு இன் மகளிர்

## (வரைமுறை இல்லாத விலைமாதர்)

*அன்பின் விழையார், பொருள் விழையும் ஆய்தொடியார்
இன் சொல் இழுக்குத் தரும்.* 911

அன்புக்காக விரும்பாமல் பணத்துக்காக ஆசைப்படும் அழகான விலைமகள் பேசுவது இனிமையாக இருந்தாலும், அதனால் ஒருவனுக்குத் துன்பத்தையே தரும்.

*பயன் தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர்
நயன் தூக்கி, நள்ளா விடல்!* 912

வாங்கும் பணத்தை எண்ணிப் பார்த்து அதற்கு ஏற்றபடி, இனிமையாகப் பேசுகின்ற கெட்ட குணம் உள்ள விலை மாதரின் நடத்தையை அறிந்து, அவளுடைய உறவை விட்டு விடவேண்டும்.

*பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் – இருட்டு அறையில்
ஏதில் பிணம் தழீஇயற்று.* 913

பணத்துக்காக ஆசைப்பட்டு, தன் உடலைத் தழுவுவதற்குத் தருகின்ற விலைமாதரின் பொய்யான அணைப்புக்கு ஆசைப்படுவது, இருட்டு அறையில் செத்த பிணத்தைப் போன்றது.

*பொருட்பொருளார் புன் நலம் தோயார்–அருட் பொருள்
ஆயும் அறிவினவர்.* 914

பணத்தையே குறியாகக் கொண்ட விலைமாதரின் அற்ப சுகத்தை, அருள் என்னும் புனிதத்தை ஆராயும் அறிவுடையோர் தீண்ட மாட்டார்.

*பொது நலத்தார் புன் நலம் தோயார் – மதி நலத்தின்
மாண்ட அறிவினவர்.* 915

பணம் தருகின்ற பலருக்கும் பொதுவாக இன்பத்தைப் பகிர்ந்து அளிக்கும் விலைமாதரின் அற்ப சுகத்தை, நல்லறிவில் சிறந்த அறிவு உடையார் விரும்ப மாட்டார்.

*தம் நலம் பாரிப்பார் தோயார் — தகை செருக்கி,*
*புன் நலம் பாரிப்பார் தோள்.* 916

ஆடல் பாடல் அழகு முதலியவற்றால் மகிழ்ச்சியை உண்டாக்கி மயக்கி தன்னுடைய அற்ப சுகத்தை விற்கக் கடை விரிக்கின்ற விலைமாதரின் தோளைத் தன்னுடைய புகழை உலகில் பரவச் செய்யும் உயர்ந்தோர் தொட மாட்டார்.

*நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் — பிற நெஞ்சில்*
*பேணி, புணர்பவர் தோள்.* 917

மனத்தை அடக்கி ஆளும் உறுதி இல்லாதவர், உள்ளத்தால் பணத்துக்கு ஆசைப்பட்டுச் சேருகின்ற விலைமாதரை விரும்புவார்.

*'ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு' என்ப—*
*'மாய மகளிர் முயக்கு.'* 918

ஆடல் பாடல் முதலியவற்றால் வஞ்சனை செய்யும் விலைமாதரின் சேர்க்கையானது, ஆராய்ந்து அறியும் அறிவு இல்லாதவருக்கு, மோகினியின் தாக்குதல் என்று கூறுவர்.

*வரைவு இலா மாண் இழையார் மென் தோள் — புரை இலாப்*
*பூரியர்கள் ஆழும் அளறு.* 919

பணம் கொடுக்கும் யாருக்கும் வரைமுறை இல்லாமல் சேரும் விலைமாதரின் மென்மையான தோளை குற்றத்தை உணரக்கூடிய அறிவு இல்லாத கீழ் மக்கள் ஆழ்ந்து கிடக்கின்ற நரகம் போன்றது.

*இரு மனப் பெண்டிரும், கள்ளும், கவறும்—*
*திரு நீக்கப்பட்டார் தொடர்பு.* 920

ஒருவனோடு கூடியிருக்கும்போதே அடுத்தவனை நினைக்கும் இருவகை மனம் உள்ள விலைமாதரும், மதுவும், சூதாட்டமும் ஆகிய இம்மூன்றும் திருமகளால் விலக்கப்பட்டவருடைய உறவுகள்.

## 93. கள்ளுண்ணாமை

### (மது அருந்தாமல் இருப்பது)

*உட்கப் படாஅர், ஒளி இழப்பர், எஞ்ஞான்றும்–*
*கள் – காதல் கொண்டு ஒழுகுவார்.* 921

எப்பொழுதும் மதுவின் மீது ஆசை கொண்டு குடிப்பவர் தன் புகழை இழப்பர். அவரை கண்டு பகைவர் பயப்பட மாட்டார்.

*உண்ணற்க, கள்ளை ! உணில், உண்க, சான்றோரான்*
*எண்ணப்பட வேண்டாதார் !* 922

மதுவைக் குடிக்கக் கூடாது. சான்றோர் மதிக்க வேண்டாம் என்று எண்ணுகிறவர் மதுவைக் குடிக்க வேண்டுமானால் குடிக்கலாம்.

*ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என், மற்றுச்*
*சான்றோர் முகத்துக் களி !* 923

மதுவைக் குடித்து மயங்கியவன் முகத்தைக் காணுகின்ற, பெற்று எடுத்த தாயே துன்பம் அடைகிறாள் என்றால், ஒழுக்கத்தை விரும்பும் சான்றோர் முகத்தில் எத்தகைய வேதனை ஏற்படும்!

*நாண் என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் – கள் என்னும்*
*பேணாப் பெருங் குற்றத்தார்க்கு.* 924

மதுவைக் குடிப்பது என்னும் விரும்பத்தகாத பெரிய குற்றத்தைச் செய்கிறவனை நாணம் என்ற நல்ல பெண் பயந்து ஓடிவிடுவாள். (குடியருக்கு வெட்கம், மானம் கிடையாது)

*கை அறியாமை உடைத்தே – பொருள் கொடுத்து,*
*மெய் அறியாமை கொளல்.* 925

விலை கொடுத்து தன் உடம்பும் அறிவும் மயங்கக் கூடிய மதுவைக் குடிப்பது, செய்வது இன்னது என்று தெரியாத மடத்தனம்.

*துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர்;– எஞ்ஞான்றும்*
*நஞ்சு உண்பார் கள் உண்பவர்.* 926

தன்னை மறந்து தூங்குகிறவர் செத்தவரைப் போலத் தான். இருவருக்கும் மிகுந்த வேறுபாடு இல்லை அதுபோல, மதுக்குடிப்பவரும் அறிவு மயங்குவதால், எப்போதும் கொஞ்சம் கொஞ்சமாக விஷம் குடிப்பவர் ஆகிறார்.

*உள் ஒற்றி உள்ளூர் நகப்படுவர் – எஞ்ஞான்றும்*
*கள் ஒற்றிக் கண் சாய்பவர்.* 927

மறைந்து இருந்து மதுக்குடித்து அறிவு இழப்பவரின் செய்தி வெளியாகி அவரை எந்த நாளும் ஊரார் ஏளனம் செய்வார்கள்.

*'களித்து அறியேன்' என்பது கைவிடுக – நெஞ்சத்து*
*ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்!* 928

மதுக்குடிப்பவன், 'நான் ஒரு போதும் மதுக்குடித்து அறியேன்' என்று பொய் சொல்லுவதை விட்டு விட வேண்டும். ஏனென்றால், மனத்தில் மறைத்து வைத்திருக் கின்ற குற்றங்கள், மதுக் குடித்து மயங்கியபோது வெளியாகி விடும்.

*களித்தானைக் காரணம் காட்டுதல் – கீழ் நீர்க்*
*குளித்தானைத் தீத் துரீஇயற்று.* 929

மதுக்குடித்து மயங்கியவனிடம், குடியினால் ஏற்படும் தீமைகளை எடுத்துச் சொல்லித் திருத்த முயல்வது நீருக்குள் மூழ்கியவனை விளக்குக் கொண்டு தேடிப்பார்ப்பது போன்றது.

*கள் உண்ணாப் போழ்தில், களித்தானைக் காணுங்கால்,*
*உள்ளான்கொல், உண்டதன் சோர்வு!* 930

தான் மதுவை குடித்திருக்காதபோது, தன் எதிரில் குடித்து அறிவு மயங்கி வருகின்றவனைக் கண்டாவது அவன் நினைத்துப் பார்க்க மாட்டானா?

# 94. சூது

## (சூதாட்டத்தால் ஏற்படும் தீமை)

*வேண்டற்க, வென்றிடினும் சூதினை! வென்றதூஉம்,*
*தூண்டில்–பொன் மீன் விழுங்கியற்று.* 931

வெற்றியே கிடைக்குமானாலும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது. சூதில் வென்ற பொருளும் தூண்டில் இரும்பை உணவு என்று மயங்கி மீன் ஏமாந்தது போன்றது.

*ஒன்று எய்தி, நூறு இழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்–*
*நன்று எய்தி வாழ்வதோர் ஆறு?* 932

ஒரு தடவை வெற்றி பெற்று, நூறு மடங்கு பொருளை இழந்து தவிக்கும் சூதாடிகள் நல்லபடியாய் வாழ வழி கிடையாதா?

*உருள் ஆயம் ஓவாது கூறின், பொருள் ஆயம்*
*போஒய்ப் புறமே படும்.* 933

உருண்டு ஓடும் சூதாடும் கருவியால் வரும் வருமானத்தை இடைவிடாமல் சொல்லிச் சூதாடுவானாகில் பொருள் வருமானம் அவனை விட்டுப் போய் பகைவரிடம் சேர்ந்து விடும்.

*சிறுமை பல செய்து, சீர் அழிக்கும் சூதின்,*
*வறுமை தருவது ஒன்று இல்.* 934

துன்பம் பலவற்றையும் உண்டாக்கி, வாழ்வைச் சீரழிக்கும் சூதைப் போல வறுமை தருவது வேறு எதுவுமே இல்லை.

*கவறும், கழகமும், கையும், தருக்கி*
*இவறியார் – இல்லாகியார்.* 935

சூது கருவியும், ஆடும் களமும், சூதாடும் கைத்திறமையையும் பெருமையாக எண்ணி அதை விட்டு ஒழிக்காதவர், எவ்வளவு செல்வம் உள்ளவராக இருந்தாலும் அவ்வளவையும் இழந்து விடுவார்.

*அகடு ஆரார்; அல்லல் உழப்பர்;– சூது என்னும்*
*முகடியான் மூடப்பட்டார்.* 936

சூதாட்டம் என்னும் மூதேவியால் விழுங்கப்பட்டவர் வயிறாரச் சாப்பிடமாட்டார். பல துன்பங்களையும் அனுபவிப்பார்.

*பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்–*
*கழகத்துக் காலை புகின்.* 937

ஒருவனுடைய நேரம் சூதாடும் இடத்திலேயே கழியுமானால் அவனுடைய பரம்பரைச் செல்வமும், நல்ல குணமும் அழிந்து விடும்.

*பொருள் கெடுத்து, பொய் மேற்கொளீஇ, அருள் கெடுத்து,*
*அல்லல் உழப்பிக்கும் – சூது.* 938

சூதாட்டமானது, கைவசம் இருக்கின்ற செல்வத்தை அழித்து, பொய் பேசும்படி செய்து கருணையையும் கெடுத்து பலவகையாலும் துன்பம் அடையச் செய்து வருத்தும்.

*உடை, செல்வம் ஊண், ஒளி, கல்வி, என்று ஐந்தும்*
*அடையாவாம் – ஆயம் கொளின்.* 939

சூதாடுவதில் ஒருவன் ஈடுபட்டால், உடை, செல்வம், உணவு, கல்வி, புகழ் ஆகிய ஐந்தும் அவனை விட்டு நீங்கி விடும்.

*இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல், துன்பம்*
*உழத்தொறூஉம் காதற்று, உயிர்.* 940

உடல் துன்பப்பட்டு வருத்தம் அதிகரிக்கும்போது, உயிர் மேல் ஆசை மிகும். அதுபோல சூதாட்டத்தில் பணத்தை இழக்க இழக்க மேலும் மேலும் ஆட வேண்டும். இழந்ததை மீட்க வேண்டும் என்ற ஆசையை உண்டாக்கும்.

## 95. மருந்து

### (நோயற்று வாழ்வதற்கு மருந்து)

*மிகினும் குறையினும், நோய் செய்யும் – நூலோர்*
*வளி முதலா எண்ணிய மூன்று.* 941
உணவும் உழைப்பும் அதிகமானாலும் குறைந்தாலும் மருத்துவ அறிஞர் கூறும் வாதம், பித்தம், சிலேத்துமம் என எண்ணிய மூன்றும் அளவுக்கு மிகுந்தாலும், குறைந்தாலும் நோய் உண்டாகும். (அதற்குப் பதிலாக, காற்று, நீர், உணவு ஆகிய மூன்று என சிலர் கூறுகின்றனர்.)

*மருந்து என வேண்டாவாம், யாக்கைக்கு – அருந்தியது,*
*அற்றது போற்றி உணின்.* 942
முன்பு சாப்பிட்ட உணவு செரிமானம் ஆனதை அறிந்து, தகுந்த அளவு உணவு சாப்பிட்டால் மருந்து என்பது உடலுக்கு வேண்டியது இல்லை.

*அற்றல், அளவு அறிந்து உண்க ! அஃது உடம்பு*
*பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு.* 943
முதலில் சாப்பிட்ட உணவு சீரணம் ஆகிவிட்டதை அறிந்து, பிறகு உண்ண வேண்டிய அளவை அறிந்து சாப்பிட வேண்டும். அப்படிச் செய்வதே, உடம்பைப் பெற்றவன், அதை நீண்ட காலம் வைத்துக் காப்பாற்றுவதற்கு உரிய வழி.

*அற்றது அறிந்து, கடைப்பிடித்து, மாறு அல்ல*
*துய்க்க, துவரப் பசித்து !* 944
முன் உண்டது செரித்ததை அறிந்து, பிறகு உண்ணும் உணவில் மாற்றம் இல்லாமல், உடம்புக்கு ஏற்ற உணவைக் கடைப்பிடித்து, அதையும் நன்றாகப் பசித்த பிறகே சாப்பிட வேண்டும்.

*மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்,*
*ஊறுபாடு இல்லை, உயிர்க்கு.* 945

மாறுபாடு இல்லாத உணவை, மனம் விரும்பும் அளவை விட்டு (நிறைய உண்ணாமல்) போதுமான அளவில் உண்டால், உயிர் உடம்பில் வாழ்வதற்கு, நோய்த் துன்பம் உண்டாகாது.

*இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல், நிற்கும்,*
*கழி பேர் இரையான்கண் நோய்.* 946

குறைவான அளவு நல்லது என்று அறிந்து, உண்பவனிடம் இன்பம் தங்குவது போல், நினைத்தபோது எல்லாம் விழுங்கும் பெருந்தீனிக் காரனிடம் நோய் குடிகொண்டிருக்கும்.

*தீ அளவு அன்றித் தெரியான் பெரிது உண்ணின்,*
*நோய் அளவு இன்றிப் படும்.* 947

பசியின் அளவுக்கு மீறி, உடலுக்கு ஏற்ற உணவையும் ஆராயாமல், அதிகமாக உண்பானாகில் அதனால் நோயும் அளவு இல்லாமல் உண்டாகும்.

*நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும்*
*வாய் நாடி, வாய்ப்பச் செயல்!* 948

நோய் இன்னது என்று அறிந்து, நோய் ஏற்பட்ட காரணத்தை அறிந்து, அதை நீக்கும் வழியை ஆராய்ந்து, உடம்புக்குப் பொருந்தும்படியாக மருத்துவம் செய்ய வேண்டும்.

*உற்றான் அளவும், பிணி அளவும், காலமும்,*
*கற்றான், கருதிச் செயல்!* 949

நோயாளியின் வயது, நோயின் அளவு, மருந்து கொடுப்பதற்கான காலம் முதலியவற்றை தீர ஆராய்ந்து, மருத்துவம் கற்றவன் வைத்தியம் செய்ய வேண்டும்.

*உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான், என்று*
*அப்பால் நாற் கூற்றே மருந்து.* 950

நோயாளி, நோய் தீர்க்கும் மருந்து, மருத்துவன், நோயாளியின் அருகில் இருப்பவன் என்று நான்கு பகுதிகளை உடையது மருத்துவ முறை.

## 96. குடிமை
## (உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர் குணம்)

*இற் பிறந்தார்கண் அல்லது இல்லை—இயல்பாகச்*
*செப்பமும் நாணும் ஒருங்கு.* 951

நடுநிலைமையோடு நடப்பதும், பழி பாவங்களுக்கு நாணப்படும் குணமும், உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்களிடத்தில் அல்லாமல் மற்றவர்களிடத்தில் இயல்பாக ஒருங்கே இருப்பதில்லை.

*ஒழுக்கமும், வாய்மையும், நாணும், இம் மூன்றும்*
*இழுக்கார்—குடிப் பிறந்தார்.* 952

உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர், ஒழுக்கத்தையும் உண்மையையும், நாணத்தையும்-இம்மூன்றையும் தவறாமல் இயல்பாகவே கொண்டு வாழ்வார்.

*நகை, ஈகை, இன்சொல், இகழாமை, நான்கும்*
*வகை என்ப—வாய்மைக் குடிக்கு.* 953

முகமலர்ச்சியோடு பழகுவது, இல்லாதவருக்கு உதவுவது, இனிமையாகப் பேசுவது, எவரையும் இகழ்ந்து பேசாமல் இருப்பது-ஆகிய நான்கும் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவருக்கு நல்ல குணங்கள் என்று கூறுவர்.

*அடுக்கிய கோடி பெறினும், குடிப் பிறந்தார்*
*குன்றுவ செய்தல் இலர்.* 954

பலகோடிச் செல்வம் கிடைப்பதாக இருந்தாலும், உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர் குடும்பத்தின் பெருமை கெடக் காரணமான குற்றங்களைச் செய்யமாட்டார்.

*வழங்குவது உள்வீழ்ந்தக்கண்ணும், பழங்குடி*
*பண்பின் தலைப்பிரிதல் இன்று.* 955

மற்றவர்களுக்கு உதவும் வள்ளல் தன்மை, வறுமையால் சுருங்கிய போதிலும், பரம்பரைப் பெருமைமிக்க உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர், தம்முடைய குணத்திலிருந்து நீங்க மாட்டார்.

*சலம் பற்றிச் சால்பு இல செய்யார் — 'மாசு அற்ற*
*குலம் பற்றி வாழ்தும்' என்பார்.* 956

மாசற்ற குடும்பச் சிறப்புடன் வாழ்வோம் என்று எண்ணி வாழ்கின்றவர் வறுமை அடைந்தாலும், வஞ்சனை கொண்டு குடும்பப் பெருமைக்குத் தகுதியற்ற காரியங்களைச் செய்ய மாட்டார்.

*குடிப்பிறந்தார்கண்—விளங்கும்—குற்றம், விசும்பின்*
*மதிக்கண் மறுப்போல், உயர்ந்து.* 957

உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவரிடத்தில் ஏற்படும் குற்றம், வானத்தில் சந்திரனிடம் காணப்படும் களங்கம் போல் பலர் அறியத் தெரியும்.

*நலத்தின்கண் நார் இன்மை தோன்றின், அவனைக்*
*குலத்தின்கண் ஐயப்படும்.* 958

ஒருவனுடைய நல்ல குணங்களுக்கு மத்தியில் அன்பு இல்லாத தன்மை இருக்கக் கண்டால், அவன் நல்ல குடும்பத்தில் பிறந்தவன் அல்லன் என்று சந்தேகப்பட நேரிடும்.

*நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்;—காட்டும்,*
*குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல்.* 959

நிலத்தின் தன்மையை அதிலிருந்து வெளிக் கிளம்பும் முளை காட்டி விடும். அதுபோல, ஒருவனுடைய குடும்பப் பிறப்பின் தன்மையை, அவனுடைய வாயிலிருந்து வரும் வார்த்தை காட்டி விடும்.

*நலம் வேண்டின், நாண் உடைமை வேண்டும்; குலம் வேண்டின்,*
*வேண்டுக, யார்க்கும் பணிவு!* 960

ஒருவனுக்கு நல்ல வாழ்வு வேண்டுமானால், பழி பாவங்களுக்கு நாணம் உடையவனாக இருக்க வேண்டும். குடும்பப் பெருமை வேண்டுமானால் எல்லோரிடமும் பணிவாக நடந்து கொள்ள வேண்டும்.

# 97. மானம்

## (குடும்பப் பெருமைக்கு இழிவு வராமல் காப்பது)

*இன்றி அமையாச் சிறப்பினஆயினும்,*
*குன்ற வருப விடல்!* 961

மிக அவசியமான சிறப்பு உடைய காரியங்கள் ஆனாலும், குடும்பப் பெருமைக்கு மதிப்புக் குறைவு ஏற்படக் கூடிய காரியங்களைச் செய்யாமல் விட்டு விட வேண்டும்.

*சீரினும், சீர் அல்ல செய்யாரே – சீரொடு*
*பேராண்மை வேண்டுபவர்.* 962

புகழுடன் வல்லமையையும் விரும்புகின்றவர், புகழைத் தேடும் போதும், குடும்பப் பெருமைக்குப் பொருந்தாத காரியங்களைச் செய்யமாட்டார்.

*பெருக்கத்து வேண்டும், பணிதல்; சிறிய*
*சுருக்கத்து வேண்டும், உயர்வு.* 963

மிகுந்த செல்வம் உள்ள காலத்தில் ஒருவனுக்குப் பணிவான குணம் இருக்க வேண்டும். செல்வம் குறைந்து வறுமை ஏற்பட்டபோது, பணியாத உயர்வு வேண்டும். (பணத் திமிரால் தலைக்கணம் கொள்ளாமலும், வறுமையால் கைகட்டி பல்லிளித்து நிற்காமலும் இருக்க வேண்டும்.)

*தலையின் இழிந்த மயிர் அனையர்–மாந்தர்*
*நிலையின் இழிந்தக்கடை.* 964

மனிதர்கள் உயர்வான குடும்ப நிலையிலிருந்து, தாழ்ந்து விட்ட போது, தலையிலிருந்து உதிர்ந்து விட்ட மயிரைப் போல் ஆகிவிடுவார்கள் (தேடுவார் இல்லாமல் போய் விடுவார்)

*குன்றின் அனையாரும் குன்றுவர்–குன்றுவ*
*குன்றி அனைய செயின்.* 965

மலைபோல் உயர்வான நிலையில் உள்ளவர், குன்றிமணி அளவு குற்றத்துக்குக் காரணமான காரியத்தைச் செய்தாலும், மதிப்பை இழந்து விடுவார் (பெரிய பதவியில் இருப்பவருக்கும் இது பொருந்தும்).

*புகழ் இன்றால்; புத்தேள் நாட்டு உய்யாதால்; என் மற்று,*
*இகழ்வார்பின் சென்று நிலை?* 966

தன்னை மதியாமல், இகழ்கின்றவர் பின்னால் சென்று, பணிந்து நிற்பதால் புகழும் இல்லை. தேவலோகத்துக்கு அனுப்பவும் முடியாது. வேறு என்ன பயன்?

*ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தலின், அந் நிலையே*
*கெட்டான் எனப்படுதல் நன்று.* 967

பகைவர் பின்னால் சென்று, அவர் இடும் வேலையைச் செய்து உயிர் வாழ்வதை விட, வறுமை நிலையிலே அவன் இறந்தான் என்று சொல்லுவது நல்லது.

*மருந்தோ, மற்று ஊன் ஓம்பும் வாழ்க்கை—பெருந்தகைமை*
*பீடு அழிய வந்தஇடத்து?* 968

உயர் குடும்பத்தில் பிறந்தவனுக்கு பெருமை தரக்கூடிய மானம் போன பிறகு, உடம்பை மட்டும் காப்பாற்றிக் கொள்ளும் வாழ்க்கை சாகாமல் இருப்பதற்கு மருந்து ஆகுமா? (உயிர் போவதே மேலானது.)

*மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
*உயிர் நீப்பர், மானம் வரின்.* 969

உடலில் உள்ள மயிர்த் திரளிலிருந்து ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர் மானக்கேடு வந்தால் உயிரையே விட்டு விடுவார்.

*இளி வரின், வாழாத மானம் உடையார்*
*ஒளி தொழுது ஏத்தும், உலகு.* 970

அவமானம் ஏற்பட்டால் உயிர் வாழாத மானம் உள்ளவரின் மங்காத புகழை உலகத்தார் வணங்கிப் போற்றுவார்கள்.

# 98. பெருமை

## பெருமையோடு வாழ்வது

*ஒளி, ஒருவற்கு உள்ள வெறுக்கை; இளி ஒருவற்கு, 'அஃது இறந்து வாழ்தும்' எனல்.* 971

ஒருவனுக்கு பெருமை தருவது, அவனிடம் உள்ள தன்னம்பிக்கை-அதாவது மற்றவர்களால் செய்ய முடியாததைத் துணிந்து செய்து வெற்றி பெறுவது. ஒருவனுக்கு இழிவானது எது என்றால், அந்தத் தன்னம்பிக்கை (ஊக்கம்-முயற்சி) இல்லாமல் 'வாழலாம்' என்ற அசட்டு நினைப்பு.

*பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பு ஒவ்வா, செய்தொழில் வேற்றுமையான்.* 972

எல்லா மனிதர்களும் பிறப்பினால் ஒரே மாதிரியானவர்களே. ஆனால், ஒவ்வொருவரும் செய்யக்கூடிய தொழிலின் வேறுபாடு காரணமாகச் சிறப்பு ஒரே தன்மையாக இருக்காது. (உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்று பேசுவது மூடத்தனம்.)

*மேல் இருந்தும், மேல் அல்லார் மேல் அல்லர்; கீழ் இருந்தும், கீழ் அல்லார், கீழ் அல்லவர்.* 973

தகுதி இல்லாதவர் பணத்தால், பதவியால் உயர்வாக இருந்தாலும் அவர் உயர்ந்தவர் ஆக மாட்டார். உயர்ந்தவர்கள் பணம், பதவி இல்லாமல் இருந்தாலும், அவர் தாழ்ந்தவர் என்று எண்ணக்கூடாது.

*ஒருமை மகளிரே போல, பெருமையும், தன்னைத்தான் கொண்டு ஒழுகின், உண்டு.* 974

ஒழுக்கத்தில் உறுதியாக இருக்கின்ற மங்கையரைப் போல், தீய காரியங்களைச் செய்யாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்கின்றவனுக்குப் பெருமை ஏற்படும்.

*பெருமை உடையவர் ஆற்றுவார்—ஆற்றின்*
*அருமை உடைய செயல்.* 975

பெருமை உள்ளவர், பிறரால் செய்வதற்கு அருமையான காரியங்களை அதற்கான வழி வகைகளைக் கண்டு சிறப்பாகச் செய்ய வல்லவர்.

*சிறியார் உணர்ச்சியுள் இல்லை—'பெரியாரைப்*
*பேணிக் கொள்வேம்' என்னும் நோக்கு.* 976

பெரியாரை வணங்கி தெரியாதவற்றைத் தெரிந்து கொள்வோம் என்னும் உயர்ந்த நோக்கம் சின்ன உள்ளம் கொண்டவரிடம் தோன்றாது.

*இறப்பே புரிந்த தொழிற்றுஆம்—சிறப்பும்தான்*
*சீர் அல்லவர்கண் படின்.* 977

தகுதி இல்லாத கீழ் மக்களிடம் செல்வம், பதவி ஆகிய சிறப்பான நிலைமை ஏற்பட்டால் வரம்பு மீறிய செயலை உண்டாக்கும்.

*பணியுமாம், என்றும் பெருமை; சிறுமை*
*அணியுமாம், தன்னை வியந்து.* 978

பெருமை உடையவர், எப்பொழுதும் பிறரிடம் பணிந்து நடப்பார். ஆனால் சிறுமை உடையவர், தன்னைத் தானே புகழ்ந்து பாராட்டிக் கொள்வார்.

*பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை*
*பெருமிதம் ஊர்ந்துவிடல்.* 979

பெருமை குணமாவது கர்வம் இல்லாமல் இருப்பது, சிறுமைக் குணமாவது கர்வத்திலே சென்று விடும்.

*அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்*
*குற்றமே கூறிவிடும்.* 980

பெருமைக் குணம் உள்ளவர், பிறருடைய குற்றத்தைச் சொல்லாமல் மறைத்து விடுவார். சிறுமைக்குணம் உள்ளவர், பிறர் குற்றத்தையே எடுத்துச் சொல்லுவார்.

# 99. சான்றாண்மை

## (நல்ல குணங்கள் நிறைந்து இருப்பது)

*கடன் என்ப, நல்லவை எல்லாம்—கடன் அறிந்து,*
*சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு* 981

தங்களுடைய கடமைகளை அறிந்து, நல்ல குணங்களுடன் வாழ்கின்றவர்களுக்கு, நல்ல குணங்கள் எல்லாமே இயல்பான கடமைகளாகவே இருக்கும் என்று நூலோர் கூறுவர்.

*குண நலம், சான்றோர் நலனே; பிற நலம்*
*எந் நலத்து உள்ளதூஉம் அன்று.* 982

சான்றோர்களின் நன்மை என்பது, அவர்களின் குணங்களின் நன்மையே. பிற நன்மை, வேறு எந்த நன்மையிலும் சேர்ந்தது அல்ல.

*அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையோடு*
*ஐந்து—சால்பு ஊன்றிய தூண்.* 983

அன்புடன் இருப்பது, பழி பாவங்களுக்கு நாணப்படுவது, உதவி செய்வது, கருணை காட்டுவது, உண்மை பேசுவது - இவை ஐந்தும் நல்ல குணங்கள் என்னும் பாரத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள்.

*கொல்லா நலத்தது, நோன்மை;—பிறர் தீமை*
*சொல்லா நலத்தது, சால்பு.* 984

தவம் என்பது எந்த உயிரையும் கொல்லாத தன்மையைக் கொண்டது. பிறருடைய தீமையை எடுத்துச் சொல்லாத நன்மை உடையது நல்ல குணம்.

*ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அது சான்றோர்*
*மாற்றாரை மாற்றும் படை.* 985

ஒரு காரியத்தைச் செய்கின்றவரின் வலிமையானது பணிவோடு நடந்து பிறருடைய ஒத்துழைப்பைப் பெறுவது. அந்தப் பணிவானது, அறிவுடையோர் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றும் கவசம் போன்றது.

*'சால்பிற்குக் கட்டளை யாது?' எனின், தோல்வி*
*துலை அல்லார்கண்ணும் கொளல்.* 986

நல்ல குணத்தை அறிவதற்கு மதிப்பிடும் உரைகல் எது என்றால் தன்னைவிடத் தாழ்ந்தவரிடத்திலும் ஏற்பட்ட தோல்வியை ஏற்றுக் கொள்ளும் குணம்.

*இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்,*
*என்ன பயத்ததோ, சால்பு?* 987

தனக்குத் துன்பம் செய்தவருக்கும் அன்பு காட்டாவிட்டால் சான்றோரின் நல்ல குணத்தால் என்ன நன்மை?

*இன்மை ஒருவற்கு இளிவு அன்று—சால்பு என்னும்*
*திண்மை உண்டாகப்பெறின்.* 988

நல்ல குணம் என்னும் வலிமை அமையப் பெற்ற ஒருவருக்கு, இல்லாமை என்னும் வறுமை இகழ்ச்சி தரக்கூடியது அல்ல. 988

*ஊழி பெயரினும், தாம் பெயரார்—சான்றாண்மைக்கு*
*ஆழி எனப்படுவார்.* 989

நல்ல குணங்களுக்குக் கடல் என்று புகழப்பட்டவர், உலகமே அழியும் காலம் நேர்ந்தாலும் தம்முடைய உறுதியான நிலையிலிருந்து மாறமாட்டார்.

*சான்றவர் சான்றாண்மை குன்றின், இரு நிலம்தான்*
*தாங்காது மன்னோ, பொறை!* 990

நல்ல குணங்கள் நிறைந்த சான்றோரின் தன்மை குறைபடுமானால், பரந்த இந்தப் பூமி தன்னுடைய பாரத்தைத் தாங்க முடியாமல் வருந்தும். சான்றோரின் அறிவுரைகளால் உலக மனித சமுதாயம் சீர் பெறுகின்றது. அத்தகையோர் நன்மை இழந்தால், கெட்டவர்கள் தொகை அதிகரிக்கும். ஆனால் உலகம் துன்பம் அடையும்.

## 100. பண்பு உடைமை

### (எல்லாரிடமும் பண்போடு நடப்பது)

*எண் பதத்தால், எய்தல் எளிது என்ப, யார்மாட்டும்,*
*பண்பு உடைமை என்னும் வழக்கு.* 991

எல்லாராலும் எளிதில் பார்க்கக் கூடியவராக இருப்பவர், பண்பு உடையவராக வாழக்கூடிய நல்ல வழியை அடைவது எளிது என்று நூலோர் கூறுவர்.

*அன்பு உடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், இவ் இரண்டும்*
*பண்பு உடைமை என்னும் வழக்கு.* 992

அன்பு உடையவராக இருப்பது, உயர்ந்த குடும்பத்தில் பிறப்பது ஆகிய இரண்டும் பண்பு உடையவராக வாழ்வதற்கு உரிய நல்ல வழி.

*உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்றால்; வெறுத்தக்க*
*பண்பு ஒத்தல், ஒப்பது ஆம் ஒப்பு.* 993

உடம்பால் ஒத்திருப்பதால், மக்களோடு, (ஒருவரோடு ஒருவர்) சமமானவர் அல்லர். குணத்தால், ஒத்திருப்பதே சிறந்த ஒப்பு நோக்குவதற்கு ஏற்றது.

*நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார்*
*பண்பு பாராட்டும், உலகு.* 994

நியாயத்தையும், நன்மையையும் விரும்பி, பிறருக்குப் பயன்படும்படி வாழும் சான்றோரின் குணத்தை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவார்கள்.

*நகையுள்ளும் இன்னாது, இகழ்ச்சி; பகையுள்ளும்*
*பண்பு உள, பாடு அறிவார்மாட்டு.* 995

விளையாட்டுக்காகிலும், ஒருவரை இகழ்ந்து பேசுவது துன்பம் தரும். பிறர் குணத்தை அறிந்து நடந்து கொள்கின்றவர்கள் பகைவரிடம் கூட நல்ல குணங்களைக் காண்பார்கள்.

*பண்பு உடையார்ப் பட்டு, உண்டு உலகம்; அது இன்றேல்,*
*மண் புக்கு மாய்வதுமன்.* 996

நல்ல குணங்கள் நிரம்பிய சான்றோர்களின் நன்மையான செயல்களினால், உலகம் நல்வாழ்வு பெற்று இயங்குகிறது. இல்லாவிட்டால் அது மண்ணில் புதைந்து அழிந்து போய் விடும்.

*அரம் போலும் கூர்மையரேனும், மரம் போல்வர்,*
*மக்கட் பண்பு இல்லாதவர்.* 997

அரத்தைப் போல, கூர்மையான அறிவு உள்ளவர் ஆனாலும் மக்களுக்கு உரிய குணம் இல்லாதவர் மரத்தைப் போன்றவரே!

*நண்பு ஆற்றார் ஆகி, நயம் இல செய்வார்க்கும்,*
*பண்பு ஆற்றாராதல் கடை.* 998

தம்மோடு நட்புக் கொள்ளாமல், தீமை செய்கின்ற வரிடத்தில், பண்போடு நடந்து கொள்ளாதது இழிவைத் தரும்.

*நகர் வல்லர் அல்லார்க்கு மா இரு ஞாலம்,*
*பகலும், பாற் பட்டன்று, இருள்.* 999

பிறரோடு கூடிப் பேசி, மகிழ்ச்சியோடு வாழ முடியாதவருக்குப் பரந்த உலகமானது சூரிய வெளிச்சம் உள்ள பகல் பொழுதுகூட, இருள் போலத் தோன்றும். (இன்பம் அனுபவிக்க முடியாதவருக்குத் துன்பமாகத் தெரியும்.)

*பண்பு இலான் பெற்ற பெருஞ் செல்வம் – நன் பால்*
*கலம் தீமையால் திரிந்தற்று.* 1000

அசுத்தமான பாத்திரத்தில் நல்ல பாலை ஊற்றி வைத்துக் கெட்டுப் போவது போல், நல்ல குணம் இல்லாதவனுக்குக் கிடைத்த பெரும் செல்வமானது யாருக்கும் பயன் தராது.

## 101. நன்றி இல் செல்வம்

### (தனக்கும் பிறருக்கும் பயன்படாத செல்வம்)

*வைத்தான், வாய் சான்ற பெரும் பொருள்; அஃது உண்ணான்*
*செத்தான், செயக்கிடந்தது இல்.* 1001

ஏராளமான செல்வத்தைச் சேர்த்துப் பல இடங்களிலும் வைத்திருப்பவன் கருமித்தனத்தால், உண்டு அனுபவிக்காமல் செத்துப் போனால், அவன் செய்தது ஒன்றும் இல்லை.

*'பொருளான் ஆம், எல்லாம்' என்று, ஈயாது இவறும்*
*மருளான், ஆம், மாணாப் பிறப்பு.* 1002

பணம் மட்டும் இருந்தால் போதும் எல்லாமே நடக்கும் என்று எண்ணி, எவருக்கும் எதற்கும் கொடுத்து உதவாமல் இறுக்கி வைத்திருக்கும், புத்தி கெட்ட கருமிக்குப் புகழ் தரும் பிறவி இல்லை.

*ஈட்டம் இவறி, இசை வேண்டா ஆடவர்*
*தோற்றம் நிலக்குப் பொறை.* 1003

செல்வத்தைத் தேடுவதில் மட்டும் நாட்டம் கொண்டு, அதை நல்ல காரியங்களுக்குக் கொடுத்துப் புகழை விரும்பாத மனிதர் பிறந்து வாழ்வது பூமிக்குப் பாரமே!

*எச்சம் என்று என் எண்ணும் கொல்லோ—ஒருவரால்*
*நச்சப் படாஅதவன்!* 1004

பிறருக்குக் கொடுத்து அறியாத காரணத்தால், ஒருவராலும் விரும்பப்படாத கருமி, தான் இறந்தபின் எஞ்சி நிற்பது எது என்று நினைப்பானோ? (அவன் பெருமைப்படத் தக்கது எதுவும் இல்லை).

*கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு, அடுக்கிய*
*கோடி உண்டாயினும், இல்.* 1005

பிறருக்குக் கொடுத்து உதவுவதும் இல்லை, தான் அனுபவிப்பதுவும் இல்லை. அப்படிப்பட்ட கருமியிடம் பல கோடி செல்வம் பெருகி இருந்தாலும் அதனால் ஒரு பயனும் இல்லை.

*ஏதம், பெருஞ் செல்வம்—தான் துவ்வான், தக்கார்க்கு ஒன்று*
*ஈதல் இயல்பு இலாதான்.* *1006*

தானும் அனுபவிக்க மாட்டான்; தகுதி உடையவருக்கு அவர் வேண்டிய ஒன்றைக் கொடுக்கும் தன்மை இல்லாமல் வாழ்கின்றவன், தன்னிடம் இருக்கும் பெரும் செல்வத்துக்கு ஒரு நோய் போன்றவன்.

*அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம்—மிகு நலம்*
*பெற்றாள் தமியள் மூத்தற்று.* *1007*

வறுமையில் வாடுகிறவருக்கு ஒன்றும் கொடுத்து உதவி செய்யாதவனுடைய செல்வமானது மிக அழகு வாய்ந்த ஒரு பெண் கணவன் இல்லாமல் தனியே வாழ்ந்து, கிழவியானதைப் போன்றது.

*நச்சப்படாதவன் செல்வம்—நடுவூருள்*
*நச்சு மரம் பழுத்தற்று.* *1008*

மற்றவருக்கு உதவாத காரணத்தால், எவராலும் விரும்பப் படாதவனுடைய செல்வமானது ஊரின் மத்தியில் நச்சு மரம் பழுத்திருப்பது போன்றது (விஷம் உள்ள மரம்)

*அன்பு ஒரீஇ, தற் செற்று, அறம் நோக்காது, ஈட்டிய*
*ஒண் பொருள் கொள்வார், பிறர்.* *1009*

சுற்றத்தாரிடம் அன்பு காட்டுவதையும்விட்டு, தன்னையும் துன்புறுத்தி, நல்ல காரியங்களையும் செய்யாமல் சேர்த்து வைத்த பெரும் செல்வத்தைப் பிறர் கொண்டு போய் அனுபவிப்பர்.

*சீருடைச் செல்வர் சிறு துனி—மாரி*
*வறம் கூர்ந்தனையது உடைத்து.* *1010*

பிறருக்கு உதவும் சிறப்புமிக்க செல்வந்தருக்கு ஏற்பட்ட சிறிய வறுமையானது, உலகத்தைக் காக்கக்கூடிய மேகம், வறுமை அடைந்ததைப் போன்றது.

## 102. நாண் உடைமை

### (இழிவான செயலுக்கு வெட்கப்படுவது)

*கருமத்தான் நாணுதல், நாணு; திருநுதல்*
*நல்லவர் நாணு, பிற.* 1011

செய்யத்தகாத காரியத்தைச் செய்ததற்கு வெட்கப்படுவதே உண்மையான வெட்கம். பெண்களுக்கு இயல்பான மற்ற நாணங்கள் வேறு விதமானவை.

*ஊண், உடை, எச்சம், உயிர்க்கு எல்லாம் வேறு அல்ல;*
*நாண் உடைமை மாந்தர் சிறப்பு.* 1012

உணவு, உடை பிற எல்லா மனிதர்களுக்கும் பொதுவானவை. ஆனால் பழிக்கு இடம் தராத மனிதர்களுக்குச் சிறப்பு அளிப்பது வெட்கம் ஒன்றே.

*ஊனைக் குறித்த, உயிர் எல்லாம்; நாண் என்னும்*
*நன்மை குறித்தது, சால்பு.* 1013

உயிர்கள் எல்லாம் உடம்பை ஆதாரமாகக் கொண்டு இயங்குகின்றன. சால்பு என்பது நாணம் என்னும் நல்ல தன்மையை ஆதாரமாகக் கொண்டது.

*அணி அன்றோ, நாண் உடைமை சான்றோர்க்கு! அஃது*
*இன்றேல் பிணி அன்றோ, பீடு நடை!* 1014

வெட்கத்தைப் பெற்றிருப்பது சான்றோருக்கு ஆபரணம் போன்றது அல்லவா? அந்த ஆபரணம் இல்லையானால், நல்ல குணங்கள் உடையவராக இருந்தாலும் அவருடைய பெருமிதம் சமுதாயத்துக்கு நோய் அல்லவா?

*'பிறர் பழியும் தம் பழியும் நாணுவார் நாணுக்கு*
*உறைபதி' என்னும், உலகு.* 1015

தம்மோடு பழகிய ஒருவருக்கு வரும் பழியையும், தமக்கு ஏற்படும் பழியையும் கண்டு வெட்கப்படுகின்றவர், நாணத்துக்கு உறைவிடம் என உலகத்தார் சொல்லுவார்.

*நாண் வேலி கொள்ளாது, மன்னோ, வியல் ஞாலம்*
*பேணலர்—மேலாயவர்.* **1016**

நாணம் என்கிற வேலியைத் தமக்குப் பாதுகாப்புச் செய்து கொள்ளாமல் இந்தப் பரந்த உலகில் உயர்ந்தோர் வாழ்ந்து கொண்டிருப்பதை விரும்ப மாட்டார்கள்.

*நாணால் உயிரைத் துறப்பர்; உயிர்ப்பொருட்டால்*
*நாண் துறவார்;—நாண் ஆள்பவர்.* **1017**

நாணம் என்பதை தமக்கு உரிய பண்பாகக் கொள்கின்றவர், நாணமும் உயிரும் போட்டியிடும் போது நாணம் கெடாமல் இருப்பதற்காக, உயிரையே விட்டு விடுவார். ஆனால் உயிரைப் பெரிதாக எண்ணி நாணத்தைக் கைவிட மாட்டார்.

*பிறர் நாணத்தக்கது தான் நாணான்ஆயின்,*
*அறம் நாணத் தக்கது உடைத்து.* **1018**

கேட்டவரும், கண்டவரும் நாணத்தக்க பழியைச் செய்த ஒருவன் தானறிந்து நாணப்படாமல் இருப்பானாகில், நீதியானது அவன் செயலுக்கு நாணி, அவனைக் கைவிட்டு நீங்கிவிடும் (நீதி கைவிடுவது என்றால், குற்றவாளியாகி தண்டனை அடைவான்).

*குலம் சுடும், கொள்கை பிழைப்பின்; நலம் சுடும்,*
*நாண் இன்மை நின்றக்கடை.* **1019**

ஒருவனுடைய ஒழுக்கம் தவறினால் அது அவனுடைய குடும்பத்தைக் கெடுக்கும். நாணம் இல்லாத நிலை ஏற்பட்டால் அவனுடைய நன்மை எல்லாவற்றையும் கெடுக்கும்.

*நாண் அகத்து இல்லார் இயக்கம்—மரப்பாவை*
*நாணால் உயிர் மருட்டியற்று.* **1020**

மனத்தில் நாணம் இல்லாமல், உயிரோடு நடமாடிக் கொண்டிருப்பது, மரத்தால் செய்த பொம்மையைக் கயிற்றால் கட்டி உயிர் உள்ளதாக இயக்குவதைப் போன்றது. (பொம்மலாட்டத்தைப் பார்த்திருப்பீர்களே!)

## 103. குடி செயல் வகை

## (குடும்பத்தைப் பெருமைப்படுத்துவது)

*'கருமம் செய' – ஒருவன் 'கைதூவேன்' என்னும்
பெருமையின், பீடு உடையது இல்.* *1021*

குடும்பப் பெருமைக்கான கடமையைச் செய்தற்குச் சோர்வு கொள்ள மாட்டேன் என்று, ஒருவன் எண்ணும் பெருமையைப் போல் சிறப்புடையது வேறு ஒன்றும் இல்லை.

*ஆள்வினையும், ஆன்ற அறிவும், என இரண்டின்
நீள் வினையான், நீளும் குடி.* *1022*

விடாமுயற்சி, தெளிந்த அறிவு ஆகிய இரண்டையும் கொண்டு, இடைவிடாமல் செய்யும் காரியம் ஒருவனுடைய குடும்பத்தை மேன்மைப்படுத்தும்.

*'கிடு செய்வல்' என்னும் ஒருவற்கு, தெய்வம்
மடி தற்று, தான் முந்துறும்.* *1023*

குடும்பத்தை உயர்வு அடையச் செய்வேன் என்று எண்ணி, இடைவிட ாது முயற்சி செய்யும் ஒருவனுக்குத் தெய்வமே வரிந்து கட்டிக் கொண்டு தானே முன்வந்து உதவி செய்யும் (தெய்வம் போன்ற பெருமைக்கு உடையவர் அப்படிச் செய்வார்).

*சூழாமல் தானே முடிவு எய்தும்–தம் குடியைத்
தாழாது உஞற்றுபவர்க்கு.* *1024*

தம் குடும்பம் உயர்வதற்குத் தேவையான முயற்சிகளை விரிவாகச் செய்கின்றவருக்குத் தடை இல்லாமல் காரியங்கள் நிறை வேறும்.

*குற்றம் இலனாய், குடி செய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும், உலகு.* *1025*

குற்றம் இல்லாதவனாய் குடும்ப மேன்மைக்கான காரியத்தைச் செய்து வாழ்கின்றவனை உலகத்தார் உறவாக மதித்து அவனைச் சூழ்ந்து கொள்வர்.

*நல் ஆண்மை என்பது ஒருவற்குத் தான் பிறந்த*
*இல் ஆண்மை ஆக்கிக்கொளல்.* *1026*
ஒருவனுக்குத் திறமை என்று சொல்லக் கூடியது, தான் பிறந்த குடும்பத்தை திறமையாக நிர்வகிக்கும் சிறப்பை உண்டாக்கிக் கொள்வது.

*அமரகத்து வன்கண்ணர் போல, தமரகத்தும்*
*ஆற்றுவார் மேற்றே, பொறை.* *1027*
போர் முனையில், பலரோடு நின்று போராடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் வீரரைப் போல, தம் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தாங்க வல்லமை உள்ளவர்களிடமே பொறுப்பும் உள்ளது.

*குடிசெய்வார்க்கு இல்லை, பருவம்; மடி செய்து,*
*மானம் கருத, கெடும்.* *1028*
குடும்பத்தின் நன்மையைக் கருதுகின்றவருக்கு வெயில், மழை, பனி என்ற கால நேரம் எதுவும் இல்லை. சோம்பல் கொண்டு தன்மானத்தைக் கருதுவாரானால், குடும்பப் பெருமை கெட்டுப் போகும்.

*இடும்பைக்கே கொள்கலம்கொல்லோ—குடும்பத்தைக்*
*குற்றம் மறைப்பான் உடம்பு!* *1029*
தன் குடும்பத்துக்கு ஏற்படக்கூடிய குற்றத்தை, வராமல் தடுக்க முயற்சி செய்கின்றவனுடைய உடம்பு துன்பத்துக்கே இருப்பிடம் ஆனதோ? அது ஒழிந்து இன்பம் அடைவது இல்லையோ?

*இடுக்கண் கால் கொன்றிட, வீழும்—அடுத்து ஊன்றும்*
*நல் ஆள் இலாத குடி.* *1030*
துன்பம் ஏற்படும்போது, முட்டுக் கொடுத்து, தாங்கக்கூடிய நல்ல ஆண்மகன் இல்லாத குடும்பமானது, துன்பக் கோடாரி பட்டு வீழும் மரம் போல அழிந்து விடும்.

# 104. உழவு

## (உழவுத் தொழிலின் உயர்வு)

*சுழன்றும் ஏர்ப் பின்னது, உலகம்; அதனால்,*
*உழந்தும் உழவே தலை.* 1031

பல தொழில்கள் செய்து உலகம் இயங்கி வந்தாலும், உழவுத் தொழிலின் பின்னாலேயே அது நிற்கின்றது. ஆகையால், எவ்வளவு துன்பம் ஏற்பட்டாலும் உழவுத் தொழிலே தலை சிறந்தது.

*உழுவார் உலகத்தார்க்கு ஆணி—அஃது ஆற்றாது*
*எழுவாரை எல்லாம் பொறுத்து.* 1032

உழவுத் தொழிலைச் செய்ய முடியாதவர்களையும், வேறு தொழில்களைச் செய்கின்றவர்களையும், சமுதாயத்தின் மேல் பகுதியில் உள்ளவர்களையும் தாங்குவது உழவுத் தொழில்தான். ஆதலால், உழவுத் தொழிலின் மூலம் உணவு அளிப்பவர், உலகமாகிய தேருக்கு அச்சாணி போன்றவர்.

*உழுது, உண்டு, வாழ்வாரே வாழ்வார்; மற்று எல்லாம்*
*தொழுது, உண்டு, பின் செல்பவர்.* 1033

எல்லாரும் உண்ணும்படியான உழவு செய்து, அதனால் தாங்களும் உண்டு வாழ்கின்றவரே சுதந்தரமாக வாழ்கின்றவர். மற்ற எல்லாரும் அவரைப் புகழ்ந்து பணிந்து அதனால் உண்டு, பின் சென்று வாழ்கின்றவரே.

*பல குடை நீழலும் தம் குடைக்கீழ்க் காண்பர்—*
*அலகு உடை நீழலவர்.* 1034

வேந்தர்களின் குடை நிழலில் உள்ள நிலம் முழுவதையும் நெல் கதிர்களை உடைய இரக்க குணம் வாய்ந்த உழவர், தம் குடையின் கீழ் காண வல்லவர்.

*இரவார்; இரப்பார்க்கு ஒன்று ஈவர்—கரவாது*
*கை செய்து ஊண் மாலையவர்.* 1035

தம் கையால் உழவு செய்து, உண்ணும் இயல்பு உடையவர், பிறரிடம் சென்று யாசிக்க மாட்டார். தம்மிடம் யாசிப்பவருக்கு ஒளிக்காமல், அவர் வேண்டியது ஒன்றைக் கொடுத்து உதவுவார்.

*உழவினார் கைம்மடங்கின், இல்லை—'விழைவதூஉம்*
*விட்டேம்' என்பார்க்கு நிலை.* *1036*

உழவர்கள் உழவு செய்யாமல் கையைக் கட்டிக் கொண்டு இருந்து விடுவார்களேயானால் 'எல்லா ஆசைகளையும் விட்டுவிட்டோம்' என்று சொல்லும் துறவிகளுக்குக் கூட வாழ்வு இல்லை.

*தொடிப் புழுதி கஃசா உணக்கின், பிடித்து எருவும்*
*வேண்டாது, சாலப் படும்.* *1037*

ஒரு பலம் புழுதி கால் பலம் ஆகும்படி, ஆழ உழுது ஆறவிட்ட நிலத்திற்கு, ஒரு பிடி எருவும் இடவேண்டாம். எரு இல்லாமலே அந்த நிலத்தில் பயிர் செழிப்பாக விளையும்.

*ஏரினும் நன்றால், எரு இடுதல்; கட்டபின்,*
*நீரினும் நன்று, அதன் காப்பு.* *1038*

உழுவதைவிட எரு இடுவது நல்லது; அதன்பின், களை எடுத்து நீர்பாய்ச்சுவதைவிட விளைந்த பயிரைக் காவல் காப்பது நல்லது.

*செல்லான் கிழவன் இருப்பின், நிலம் புலந்து*
*இல்லாளின் ஊடிவிடும்.* *1039*

நிலத்துக்காரன் நிலத்தைப் போய் பார்த்துக் கண்காணிக்கா விட்டால், அந்த நிலம் அவனுடைய மனைவியைப் போல, அவனை வெறுத்துக் கோபம் கொள்ளும். (பயிர் விளையாது).

*'இலம்!' என்று அசைஇ இருப்பாரைக் காணின்,*
*நிலம் என்னும் நல்லாள் நகும்.* *1040*

கையில் பொருள் இல்லையே என்று சோம்பி இருப்பவரைக் கண்டால், அவனுடைய முட்டாள் தனத்தை நினைத்து நிலமகளான பூமி தனக்குள் சிரிப்பாள்.

# 105. நல்குரவு

## (வறுமையால் ஏற்படும் துன்பம்)

*'இன்மையின் இன்னாதது யாது?' எனின், இன்மையின்*
*இன்மையே இன்னாதது.* 1041

வறுமையைப் போல் துன்பம் எது என்று கேட்டால், வறுமையைப் போல துன்பம் தருவது வறுமையே தவிர வேறு ஒன்றும் இல்லை.

*இன்மை என ஒரு பாவி, மறுமையும்*
*இம்மையும் இன்றி, வரும்.* 1042

வறுமை என்னும் பாவி, ஒருவனை அண்டினால், அவனுக்கு இந்த உலகத்திலும், வேறு உலகத்திலும் இன்பமும், மகிழ்வும் இல்லாமல் போகும்.

*தொல் வரவும் தோலும் கெடுக்கும், தொகையாக—*
*நல்குரவு என்னும் நசை.* 1043

வறுமை என்றும் ஆசை ஒருவனைப் பிடித்து விட்டால், தொன்றுதொட்டு வந்த அவனுடைய குடும்பச் சிறப்பும், புகழும் கெட்டு விடும்.

*இற்பிறந்தார்கண்ணேயும், இன்மை, இளி வந்த*
*சொல் பிறக்கும் சோர்வு தரும்.* 1044

வறுமையானது, உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவரிடத்திலும் அவமானத்தை உண்டாக்கும் வார்த்தை பேசக் கூடிய பலவீனத்தை உண்டாக்கும்.

*நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்*
*துன்பங்கள் சென்று படும்.* 1045

வறுமை என்று சொல்லும் துனபமான ஒரு நிலைமையில் பலவகையான துன்பங்களும் ஏற்பட்டு வளரும்.

*நற் பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார்*
*சொல் பொருட் சோர்வு படும். 1046*
நல்ல நூல்களைப் படித்து அறிந்து தெளிவாக எடுத்துச் சொன்னாலும், அப்படிச் சொல்லுகின்றவர் வறுமையாளர் என்பதால் அவருடைய கருத்தைக் கேட்க ஆள் இல்லாமல், பயன்படாமல் போகும்.

*அறம் சாரா நல்குரவு, ஈன்ற தாயானும்,*
*பிறன் போல நோக்கப்படும். 1047*
நேர்மையான வழியில் ஏற்படாத வறுமையை ஒருவன் அடைந்தால், அவனைப் பெற்ற தாய், அயலானைப் போல் அவனைப் புறக்கணித்து வெறுப்பாள் (நேர்மை இல்லாமை என்பது, சூது, குடி, தாசி, ஆடம்பரம் முதலானவை).

*இன்றும் வருவது கொல்லோ—நெருநலும்*
*கொன்றது போலும் நிரப்பு! 1048*
"நேற்று என்னைக் கொன்றதைப் போலத் துன்புறுத்திய வறுமை இன்றும் என்னிடம் வருமோ? வந்தால் என்ன செய்வேன்?" என்று வறுமையால் வாடுகிறவன் தினமும் புலம்புவான்.

*நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள்*
*யாது ஒன்றும் கண்பாடு அரிது. 1049*
நெருப்பின் மத்தியில் கூட ஒருவன் தூங்க முடியும். ஆனால், வறுமைத் துன்பத்தில் ஆழ்ந்தவன், எந்த வகையிலும் நிம்மதியாகக் கண்ணை மூடித் தூங்க முடியாது.

*துப்புரவு இல்லார் துவரத் துறவாமை*
*உப்பிற்கும் காடிக்கும் கூற்று. 1050*
வசதி இல்லாத தரித்திரர், வாழ்க்கையை விட்டுத் துறவியாக போக வேண்டியவரே. இல்லாவிட்டால் பிறர் வீட்டு கஞ்சிக்கும் உப்புக்கும் கேடாக, பிச்சை எடுக்க வேண்டியது தான்.

## 106. இரவு

### (கொடுப்பவரிடம் உதவி கேட்டுப் பெறுவது)

*இரக்க, இரத்தக்கார்க் காணின்! கரப்பின்,*
*அவர் பழி தம் பழி அன்று.* 1051

மனம் இரங்கித் தரக்கூடியவரைக் கண்டால், அவரிடம் யாசிக்க வேண்டும். அவர் எதுவும் இல்லை என்று கூறினால், (உள்ளதை ஒளித்தால்) அது அவருடைய குற்றமே தவிர, கேட்டவருக்கு அல்ல.

*இன்பம் ஒருவற்கு இரத்தல்—இரந்தவை*
*துன்பம் உறாஅ வரின்.* 1052

ஒருவர் கேட்ட பொருள், தடை இல்லாமல் உடனே கிடைத்து விடுமானால், அப்படிக் கேட்டுப் பெறுவதும் இன்பம் தரக்கூடியது என்று சொல்லலாம்.

*கரப்புஇலா நெஞ்சின் கடன் அறிவார் முன் நின்று,*
*இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து.* 1053

ஒளிக்காமல் வழங்கும் மனமும், கடமை உணர்ச்சியும் இருப்பவரின் எதிரில் நின்று, யாசிப்பதும், வறுமையாளருக்கு ஒரு தோற்றப் பொலிவைத் தரும்.

*இரத்தலும் ஈதலே போலும்—கரத்தல்*
*கனவினும் தேற்றாதார்மாட்டு.* 1054

உள்ளே வைத்துக்கொண்டு இல்லை என்று சொல்லுவதைக் கனவிலும் அறியாதவரிடம் சென்று உதவி கேட்பது பிறருக்குக் கொடுத்து உதவுவது போன்ற சிறப்பு உடையது.

*கரப்பு இலார் வையகத்து உண்மையான், கண் நின்று,*
*இரப்பவர் மேற்கொள்வது.* 1055

தம்மிடம் இருப்பதை இல்லை என்று சொல்லாத நல்லவர்கள் சிலர் உலகத்தில் இருப்பதால்தான், அவரிடமும் சென்று யாசிப்பவர்களும் இருக்கின்றனர்.

*கரப்பு இடும்பை இல்லாரைக் காணின், நிரப்பு இடும்பை*
*எல்லாம் ஒருங்கு கெடும்.* *1056*

தன்னிடம் உள்ளதை மறைப்பதான நோய் இல்லாதவரைக் காணும்போது, யாசிப்பவருடைய வறுமையான துன்பங்கள் எல்லாம் ஒருங்கே நீங்கி விடும்.

*இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின், மகிழ்ந்து உள்ளம்*
*உள்ளுள் உவப்பது உடைத்து.* *1057*

தம்மை அவமதித்து இகழ்ந்து பேசாமல், பொருள் கொடுத்து உதவுகின்றவரைக் கண்டால், யாசிப்பவருடைய உள்ளம் மகிழ்ந்து பொலிவு அடையும்.

*இரப்பாரை இல்லாயின், ஈர்ங்கண் மா ஞாலம்*
*மரப்பாவை சென்று வந்தற்று.* *1058*

வறுமையால் யாசிப்பவர் இல்லையானால், இந்தப் பரந்த உலகம், மரப் பொம்மை இயந்திரக் கயிற்றினால் போய் வருவது போன்றது.

*ஈவார்கண் என் உண்டாம், தோற்றம்—இரந்து கோள்*
*மேவார் இலாஅக்கடை?* *1059*

இல்லை என்று வந்து, ஒன்றை யாசித்துப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் இல்லையானால் பொருள் கொடுப்பவரிடம் என்ன புகழ் உண்டாகும்?

*இரப்பான் வெகுளாமை வேண்டும்; நிரப்பு இடும்பை—*
*தானேயும் சாலும் கரி.* *1060*

"இவன் தனக்கு ஒன்றும் தரவில்லையே" என்று யாசிக்கின்றவன் எவரிடத்திலும் கோபம் கொள்ளாமல் இருக்க வேண்டும். அவன் பெற்றுள்ள வறுமைத் துன்பமே அவனுக்குப் புத்தி புகட்டும் சாட்சி.

(மேற்கண்ட பகுதியில் திருவள்ளுவர், 'இரத்தல்' 'இரப்போர்' என்று குறிப்பிடுவது இல்லை என்று யாசிப்பது, யாசிப்பவர், உதவி கேட்பவர் என்ற அர்த்தம் உடையது).

## 107. இரவு அச்சம்
### (யாசகம் கேட்க கூச்சப்படுவது)

*கரவாது, உவந்து ஈயும் கண் அன்னார்கண்ணும்*
*இரவாமை கோடி உறும்.* *1061*
இருப்பதை இல்லை என்று ஒளிக்காமல், மகிழ்ந்து உதவும் கண் போன்ற சிறந்தவரிடத்தில் சென்று யாசிக்காமல் இருப்பது கோடி மடங்கு நல்லது.

*இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து*
*கெடுக, உலகு இயற்றியான்!* *1062*
யாசகம் பெற்றுத்தான் உயிர் வாழ வேண்டும் என்றால் அப்படிப் பட்ட நிலைமை உள்ளதாக இந்த உலகத்தை உண்டாக்கியவன், யாசகர்களைப்போல் அலைந்து, திரிந்து அழிந்து போகட்டும்.

*'இன்மை இடும்பை இரந்து தீர்வாம்' என்னும்*
*வன்மையின் வன்பாட்டது இல்.* *1063*
வறுமையின் துன்பத்தை யாசகம் வாங்கியே தீர்த்துக் கொள்ளலாம் என்னும் நினைப்பால், முயற்சியையும், உழைப்பையும் கைவிடுவதைப் போன்ற முரட்டுத்தன எண்ணம் வேறு இல்லை.

*இடம் எல்லாம் கொள்ளாத் தகைத்தே—இடம் இல்லாக்*
*காலும், இரவு ஒல்லாச் சால்பு.* *1064*
பிழைக்க வழி இல்லாத போதும் பிச்சை எடுத்துப் பிழைக்க நினைக்காத நல்ல பண்பு. உலகம் முழுதும் கொள்ளாத பெருமை உடையது. (உலக அளவு பெருமை உடையது)

*தெள் நீர் அடு புற்கை ஆயினும், தாள் தந்தது*
*உண்ணலின் ஊங்கு இனியது இல்.* *1065*
தெளிந்த நீர்போல் சமைத்த கூழானாலும், சுய முயற்சியால் கிடைத்ததை உண்பதைவிட இனிமை யானது வேறு இல்லை.

*ஆவிற்கு நீர்' என்று இரப்பினும், நாவிற்கு*
*இரவின் இளிவந்தது இல்.* 1066
தியாகச் சின்னமான பசுவுக்குத் தண்ணீர் வேண்டும் என்று (நன்மையான காரியத்துக்கு) யாசித்துக் கேட்டாலும், அதைவிட நாக்குக்கு அவமானம் வேறு இல்லை.

*இரப்பன், இரப்பாரை எல்லாம்—'இரப்பின்,*
*கரப்பார் இரவன்மின்' என்று.* 1067
"யாசகம் கேட்க வேண்டுமானால், உள்ளதை இல்லை என்று ஒளிப்பவரிடம் சென்று யாசகம் கேட்க வேண்டாம்" என்று யாசகம் வாங்குவோர் எல்லாரையும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

*இரவு என்னும் ஏமாப்புஇல் தோணி, கரவு என்னும்*
*பார் தாக்க, பக்கு விடும்.* 1068
வறுமை என்னும் துன்பக் கடலைக் கடப்பதற்குத் துணை புரியும் யாசகம் என்னும் பாதுகாப்பு இல்லாத மரக்கலம் ஏறி, இல்லை என்று ஒளித்து வைப்போர் என்னும் பாறையில் மோதிச் சிதறிவிடும்.

*இரவு உள்ள, உள்ளம் உருகும்; கரவு உள்ள,*
*உள்ளதூஉம் இன்றிக் கெடும்.* 1069
யாசகம் கேட்கும் கொடுமையை நினைத்தால் உள்ளம் உருகிக் கரையும், ஆனால், உள்ளதை ஒளித்து வைக்கும் கொடுமையை நினைத்தால் உள்ளம் உருகும் நிலை இல்லாமல் அழிந்தே போகிறது.

*கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்கும் கொல்லோ—இரப்பவர்*
*சொல்லாடப் போஒம் உயிர்!* 1070
யாசகம் கேட்பவர் 'இல்லை' என்று வாய் திறந்து சொல்லுகின்ற போதே, உயிர் போய் விடுகின்றதே! உள்ளதை இல்லை என்று சொல்லுகின்றவரின் உயிர் எங்கேதான் ஒளிந்திருக்குமோ? தெரியவில்லை.

## 108. கயமை

### (கெட்ட குணம் உள்ள கயவர்)

***மக்களே போல்வர், கயவர்; அவர் அன்ன***
***ஒப்பாரி யாம் கண்டது இல்.*** *1071*

மக்களைப் போலவே இருப்பார் கயவர். அவரைப் போல மக்களை ஒத்திருப்பவரை (மேல் மக்களிலும் கீழ் மக்களிலும்) நாம் கண்டதில்லை.

***நன்று அறிவாரின் கயவர் திரு உடையர்—***
***நெஞ்சத்து அவலம் இலர்!*** *1072*

நன்மையை அறிந்த நல்லவரை விடக் கயவரே நன்மை உடையவர். ஏனென்றால், அவருடைய மனத்தில் எதற்கும் கவலை தோன்றுவது இல்லை.

***தேவர் அனையர், கயவர்—அவரும் தாம்***
***மேவன செய்து, ஒழுகலான்!*** *1073*

கயவரும்கூட, தேவரைப் போன்றவரே, ஏன் என்றால், கயவரும் தேவரைப் போலவே தாம் ஆசைப்படுகின்றவைகளைச் செய்து மனம் போன போக்கில் நடப்பவர்கள்.

***அகப் பட்டி ஆவாரைக் காணின், அவரின்***
***மிகப்பட்டுச் செம்மாக்கும், கீழ்.*** *1074*

கயவர், தம்கீழ் அகப்பட்டு, தமக்கு பணிந்து நடக்கின்றவரைக் கண்டால், அவரைவிடத் தாம் மேம்பட்டவராக நினைத்துப் பெருமை பாராட்டிக் கொள்வார்.

***அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம்***
***அவா உண்டேல், உண்டாம் சிறிது.*** *1075*

கயவர் ஒழுங்காய் இருக்கிறார் என்றால், அதற்குக் காரணம் தம் செயலைத் தெரிந்து கொண்டால் தண்டனை கிடைக்குமே என்ற பயம். சில வேளைகளில் ஏதேனும் ஒரு பொருளைப் பெற வேண்டும் என்று ஆசை ஏற்படுகின்ற போது ஒழுங்கானவர்போல் நடிப்பார்.

*அறை பறை அன்னர் கயவர்—தாம் கேட்ட*
*மறை பிறர்க்கு உய்த்து உரைக்கலான்.* *1076*
கயவர் தம் காதில் விழுந்த இரகசியங்களை, பிறரிடம் தானாகவே வலியச் சென்று சொல்லுவதால், தம்பட்டம் அடிப்பவரைப் போன்றவர்.

*ஈர்ங் கை விதிரார் கயவர்—கொடிறு உடைக்கும்*
*கூன் கையர் அல்லாதவர்க்கு.* *1077*
கயவர் தம் கன்னத்தில் அடித்துப் பெயர்க்கும் முறுக்கிய கையினருக்கு அல்லாமல் மற்றவருக்கு உணவு உண்ட எச்சில் கையையும் உதற மாட்டார். (வலியவருக்கு எல்லாம் கொடுப்பார்; மெலியாருக்கு ஏதும் கொடுக்க மாட்டார்)

*சொல்ல, பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்*
*கொல்ல, பயன்படும் கீழ்.* *1078*
தங்கள் குறையைச் சொன்ன உடனேயே அவருக்கு உதவி அளிப்பார் சான்றோர். ஆனால் கயவரோ, கரும்பை நசுக்கிப் பிழிவது போல் செய்தால்தான் உதவுவார்.

*உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின், பிறர்மேல்*
*வடுக் காண வற்று ஆகும், கீழ்.* *1079*
யாராவது பட்டு உடை உடுத்துவதையும் சுவைமிகுந்த உணவு உண்பதையும் கயவன் காண நேர்ந்தால், அவர் மேல் பொறாமை கொண்டு, குற்றம் கூறித் தூற்றுவதிலே தன்னுடைய புத்தியைக் காட்டி விடுவான்.

*எற்றிற்கு உரியர் கயவர்—ஒன்று உற்றக்கால்,*
*விற்றற்கு உரியர் விரைந்து!* *1080*
கயவர் எந்த தீய காரியத்தையும் செய்யக் கூடியவர்; ஒரு துன்பம் வந்தால், அதிலிருந்து தப்புவதற்கு தம்மையே விற்று விடவும் தயாராய் விடுவர். (கைக்கூலி ஆவார்).

*(கயவர் என்றால் கீழ்மக்கள் கொடியவர், தீமை செய்யக் கூடியவர்)

# இன்பத்துப் பால்

## 1. களவு இயல்

## 109. தகை அணங்கு உறுத்தல்

### (தகுதி வாய்ந்த பெண்ணைக் கண்டு அச்சமுற்று மயங்குதல்)

*அணங்குகொல் ! ஆய் மயில்கொல்லோ !—கனங்குழை—*
*மாதர்கொல் ! மாலும், என் நெஞ்சு.* *1081*

மலர்ச்சோலையில் மின்னும் காதணிகளை அணிந்துள்ள இந்த அழகி, வண்ணமயிலோ? அல்லது தேவலோகப் பெண்ணோ? அல்லது மானிட மங்கையோ? என்மனம் மயங்குகின்றதே!

*நோக்கினாள் நோக்கு எதிர் நோக்குதல்—தாக்கு அணங்கு*
*தானைக் கொண்டன்னது உடைத்து.* *1082*

அவள் என்னைப் பார்த்தாள்; நானும் அவளை நோக்கினேன்; ஆ! அவள் தன் பார்வையினால் மட்டும் தாக்குவது போதாது என்று போர்ப்படையையும் கொண்டு வந்தது போல் அல்லவா காணப்படுகிறது, அவள் என்னைப் பார்க்கும் அந்தப் பார்வை.

*பண்டு அறியேன், 'கூற்று' என்பதனை; இனி அறிந்தேன்;*
*பெண் தகையான் பேர் அமர்க் கட்டு.* *1083*

'உயிரைக் கொண்டு போகிறவன் எமன்' என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால், இப்போது நேரில் தெரிந்து கொண்டேன் எப்படி என்றால், பெண் தன்மையோடு கூடி போர் புரியும் அந்தப் பெரிய கண்களே எமன் என்பதை அறிந்தேன்.

*கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான், பெண் தகைப்*
*பேதைக்கு, அமர்த்தன கண்.* *1084*

பெண்மைக் குணங்கள் மிக்கவளே இந்த அழகு மங்கை! ஆனால் இவள் கண்களோ பார்த்தவருடைய உயிரை உண்ணக் கூடியவை. அதனால் இவள் குணங்களுக்கும் கண்களுக்கும் எத்தகைய வேறுபாடு!

*கூற்றமோ! கண்ணோ! பிணையோ!—மடவரல்*
*நோக்கம் இம் மூன்றும் உடைத்து.* *1085*

இவள் பார்வை எப்படி இருக்கிறது என்றால், எமனைப் போல் வதைக்கின்ற தன்மையும், இயல்பான கண்ணின் இனிமையும், பெண்மானைப் போன்ற மருளும் தன்மையும் ஆகிய மூன்று வகையான குணங்களும் இணைந்ததாக இருக்கின்றன.

*கொடும் புருவம் கோடா மறைப்பின், நடுங்கு அஞர்*
*செய்யலமன், இவள் கண்.* *1086*

வில்போல் வளைந்த இவளுடைய புருவங்கள், இன்னும் வளையும்படி கண்களை மறைத்தால், என்னைப் பார்க்கின்ற இந்தப் பார்வை எனக்கு முன்போல், நடுங்குவதற்குக் காரணமான துன்பத்தையும் அச்சத்தையும் உண்டாக்காமல் இருக்கும்.

*கடாஅக் களிற்றின்மேல் கண் படாம்—மாதர்*
*படாஅ முலைமேல் துகில்!* *108*

இந்தப் பெண்ணின் நிமிர்ந்து இருக்கின்ற இரண்( கொங்கைகளின்மீது அணியப்பட்டுள்ள மேலாடையானது ஆளைக் கொல்லக் கூடிய மதயானையின் மத்தகங்களின் மேல் போடப் பட்டிருக்கும் முகத்திரை போல் கவர்ச்சி அளிக்கிறது.

*ஒள் நுதற்கு, ஓஒ! உடைந்ததே—ஞாட்பினுள்*
*நண்ணாரும் உட்கும் என் பீடு!* 1088

போர்க்களத்தில், பகைவரும் அஞ்சி ஓடும்படியான என்னுடைய வலிமையானது, இவளுடைய அழகான நெற்றியைக் கண்டதும் அந்தக் கவர்ச்சியால் தோற்று விட்டதே!

*பிணை ஏர் மட நோக்கும், நாணும் உடையாட்கு*
*அணி எவனோ, ஏதில தந்து?* 1089

பெண் மானைப் போன்ற நாணமும், அழகும், இளமையும் மிக்க இந்தப் பெண்ணுக்கு அவைகளே ஆபரணங்களாக இருக்கும் போது, தேவை இல்லாமல், வேறு ஆபரணங்களை எதற்காக அணிவிக்கிறார்கள்?

*உண்டார்கண் அல்லது, அடு நறா, காமம்போல்*
*கண்டார் மகிழ் செய்தல் இன்று.* 1090

தீமையை உண்டாக்கும் மது, அதைக் குடித்தவர்களுக்குத் தான் மகிழ்ச்சியை அளிக்கும். ஆனால், இந்தக் காமத்தைப் போல், அதைக் கண்டவர்கள் இடத்தில் எல்லாம் மயக்கத்தையும், அறிவுத் தடுமாற்றத்தையும் ஏற்படுத்துவது இல்லையே!

## 110. குறிப்பு அறிதல்
### (முகத்தாலும் கண்ணாலும் செயலாலும் குறிப்பு அறிவது)

இரு நோக்கு இவள் உண்கண் உள்ளது; ஒரு நோக்கு
நோய் நோக்கு; ஒன்று அந் நோய் மருந்து. *1091*

இவளுடைய மைதீட்டிய மயக்கும் கண்களில், இரண்டுவித பார்வைகள் இருக்கின்றன. முதல் பார்வை, காம நோயை உண்டாக்குவதாக உள்ளது இரண்டாவது பார்வை, அந்தக் காம நோயைத் தணிக்கும் மருந்தாக இருக்கிறது.

*கண் களவு கொள்ளும் சிறு நோக்கம் காமத்தின்*
*செம்பாகம் அன்று; பெரிது.* 1092

கண்களின் இமைகளைச் சுருக்கிக்கொண்டு, கவர்ந்து கொள்ளும் அந்தச் சிறு பார்வையானது எப்படி இருக்கிறது என்றால், அது இன்ப லீலையில் பாதி அளவு அல்ல; பெரும்பகுதியே அந்தப் பார்வையில் தான் உள்ளது.

*நோக்கினாள், நோக்கி இறைஞ்சினாள்; அஃது அவள்*
*யாப்பினுள் அட்டிய நீர்.* 1093

அவள் என்னைப் பார்த்தாள், நான் அவளைப் பார்த்தேன்; அப்போது அவள் வெட்கத்தால் தலை குனிந்து கொண்டாள். அவள் அப்படிச் செய்தது சம்மதம் என்ற அன்புப் பயிருக்கு நீர் பாய்ச்சியது போல இருந்தது.

*யான் நோக்கும் காலை நிலன் நோக்கும்; நோக்காக்கால்,*
*தான் நோக்கி, மெல்ல நகும்.* 1094

அவளை நான் பார்க்கும்போது, அவள் நாணத்தால் தலையைக் குனிந்துகொண்டு, தரையைப் பார்க்கின்றாள். நான் அவளைப் பார்க்காமல் இருக்கும்போது, அவள் என்னைப் பார்த்து புன்முறுவல் செய்கின்றாள்.

*குறிக்கொண்டு நோக்காமை அல்லால், ஒரு கண்*
*சிறக்கணித்தாள் போல நகும்.* 1095

என்னை குறிப்பாக நேராகப் பார்க்காமல், வேறு எங்கோ பார்ப்பது போல் கடைக்கண்ணால் என்னைப் பார்த்து மனதுக்குள் சிரித்துக் கொள்வாள்.

*உறாஅதவர்போல் சொலினும், செறாஅர் சொல்*
*ஒல்லை உணரப்படும்.* 1096

முன்பின் அறியாத அயலாள்போல், விருப்பம் இல்லாத சொற்களைக் கூறினாலும், வெறுப்பு இல்லாத அந்தச் சொற்களிலிருந்து அவளுடைய விருப்பத்தை அறிந்து கொள்ள முடியும்.

*செறாஅச் சிறு சொல்லும், செற்றார்போல் நோக்கும்,–*
*உறாஅர் போன்று உற்றார் குறிப்பு.* **1097**

பிறர் முன்னிலையிலும், வெளிப்படையாகவும், விருப்பம் இல்லாதவர்போல் பார்ப்பதும், பேசுவதும் அயலார் போல் நடந்து கொள்வதும், உள்ளத்தால் காதல் உடையோர் செயலாகும்.

*அசையியற்கு உண்டு, ஆண்டு ஓர் ஏஎர்; யான் நோக்க,*
*பசையினள், பைய நகும்.* **1098**

அவளை நான் பார்க்கும்போது, என்னிடம் கொண்ட அன்பினால், அவளும் என்னைப் பார்த்து மெதுவாகச் சிரிக்கின்றாள் அந்தச் சிரிப்பில் உண்டாகின்ற சிறு அசைவிலும் கூட ஒரு கவர்ச்சியான அழகு இருப்பதைக் காண்கிறேன்.

*ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்*
*காதலார் கண்ணே உள.* **1099**

பிறர் முன்னிலையில், ஒருவரை ஒருவர் அறியாத அயலார் போல், சாதுர்யமாக நடந்து கொள்ளுகிற கெட்டிக்காரத்தனமானது, உண்மையான காதலர்களிடம் இருக்கக்கூடியதே!

*கண்ணொடு கண் இணை நோக்கு ஒக்கின், வாய்ச் சொற்கள்*
*என்ன பயனும் இல.* **1100**

அன்பினாலும், ஆசையினாலும் கண்ணோடு கண் பொருந்திப் பார்க்கின்ற பார்வை, சம்மதித்துப் போன பின், வாய்ப்பேச்சுக்கு அங்கே என்ன வேலை இருக்கிறது? அதனால் ஒரு பயனும் இல்லையே!

# 111. புணர்ச்சி மகிழ்தல்

## (காதலர் இருவரும் இன்பம் நுகர்ந்த மகிழ்ச்சியைக் கூறுவது)

*கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும்*
*ஒண்டொடி கண்ணே உள.* 1101

ஆசையோடு பார்ப்பது, அன்பான சொற்களைக் கேட்பது, அணைத்து மகிழ்வது, அனுபவித்துச் சுவைப்பது, முத்தம் இடுவது ஆகியவற்றை ஒருங்கே ஒரே நேரத்தில் பெறுகின்ற இன்பம் அழகுமிக்க பெண் இடத்தில் மட்டுமே உள்ளது. (கண், காது, உடல், வாய், மூக்கு ஆகிய ஐந்து புலன்களாலும் ஒரே வேளையில் பெறக்கூடிய இன்பம்)

*பிணிக்கு மருந்து பிறமன்; அணியிழை*
*தன் நோய்க்குத் தானே மருந்து.* 1102

எத்தனையோ நோய்களைக் குணப்படுத்த வெவ்வேறு மருந்துகள் இருக்கின்றன. ஆனால், அழகான பெண்ணினால் உண்டான காம நோயைக் குணப்படுத்தக் கூடிய மருந்து, அவளாகவே இருக்கின்றாள். இது வியப்பாக இருக்கிறது அல்லவா?

*தாம் வீழ்வார் மென் தோள்—துயிலின் இனிதுகொல்—*
*தாமரைக்கண்ணான் உலகு?* 1103

தான் காதலிக்கும் காதலியின் மென்மையான தோளைத் தழுவிக் கொண்டு, தூங்குவதிலே கிடைக்கக் கூடிய இன்பத்தைக் காட்டிலும், திருமாலின் வைகுந்தத்தில் கிடைக்குமா?

*நீங்கின் தெறூஉம், குறுகுங்கால் தண்ணென்னும்,*
*தீ யாண்டுப் பெற்றாள், இவள்?* 1104

காதலி என்னை விட்டுப் பிரிந்து சென்றால், என் உடல் சுடுகிறது; அவள் நெருங்கி வந்ததும் குளிர்ச்சியைத் தருகிறது. இத்தகைய நெருப்பை அவள் எங்கே இருந்து தான் பெற்றாளோ?

*வேட்ட பொழுதின் அவை அவை போலுமே—*
*தோட்டார் கதுப்பினாள் தோள்.* 1105

அழகான மலரின் இதழைப்போல, அருமையான மணமும் மென்மையான கன்னங்களை உடைய காதலியின் சேர்க்கையில், நான் உள்ளத்தில் எந்தெந்தப் பொருளை விரும்பி நினைக்கின்றேனோ, அந்தந்தப் பொருளாகவே அவளுடைய உறுப்புகள் எனக்கு இன்பம் அளிக்கின்றன.

*உறுதோறு உயிர் தளிர்ப்பத் தீண்டலான், பேதைக்கு*
*அமிழ்தின் இயன்றன, தோள்.* 1106

அவளை விரும்பித் தழுவும் போதெல்லாம், உயிரும் உள்ளமும் இன்புற்று திளைப்பதால், இவளுடைய தோள்கள், முதுமை வராமல் தடுத்து, இளமை இன்பம் அளிக்கக் கூடிய அமுதத்தால் செய்யப்பட்டது போலும்!

*தம்இல் இருந்து, தமது பாத்து உண்டற்றால்—*
*அம்மா அரிவை முயக்கு.* 1107

இவளைக் கட்டித் தழுவுகின்ற இன்பம் எப்படிப்பட்டது என்றால், தன்னுடைய சொந்த முயற்சியால் தேடிய பொருளை, தன் இல்லத்தில் இருந்து, பிறருக்குக் கொடுத்து உதவி தானும் பகிர்ந்து உண்டு வாழ்வதைப் போன்றதாகும்.

*வீழும் இருவர்க்கு இனிதே—வளி இடை*
*போழப் படாஅ முயக்கு.* 1108

ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாமல், கட்டித் தழுவிக் கொண்டு, இருப்பதை இருவருமே விரும்புகின்றனர். இருவருக்கும் மத்தியில் காற்றுக் கூடப் புகுந்து, பிளவு உண்டாக்க முடியாதபடி இறுகத் தழுவிக் கொண்டிருப்பது இன்பம் அளிப்பதாகும்.

*ஊடல், உணர்தல், புணர்தல், இவை—காமம்*
*கூடியார் பெற்ற பயன்.* *1109*
புணர்ச்சிக்குப்பின் பிரிவதும், பிரிந்திருக்கும்போது மீண்டும் காம உணர்ச்சி பெறுவதும், மீண்டும் புணர்வதும் ஆகிய இந்த முறை, காமப் புணர்ச்சியில், காதலர்களுடைய அனுபவமாகும்.

*அறிதோறு அறியாமை கண்டற்றால்—காமம்*
*செறிதோறும் சேயிழைமாட்டு.* *1110*
நல்ல நூல்களைப் படிக்கும் தோறும், புதுப்புது அர்த்தம் தோன்றுவதுபோல், அழகான அணிகலன்களை அணிந்திருக்கும் இவளை அணுகும் ஒவ்வொரு தடவையும் முன் அனுபவிக்காத இன்பம் போலவே காணப்படுகிறது.

## 112. நலம் புனைந்து உரைத்தல்

### (கலவிக்குப் பிறகு காதலியின் அழகையும் சிறப்பையும் புகழ்வது)

*நல்நீரை ! வாழி !—அனிச்சமே !—நின்னினும்*
*மெல் நீரள், யாம் வீழ்பவள்.* *1111*
மலர்களிலே மிக மென்மையானது, முகர்ந்தால் வாடிப் போகும் இயல்புடையது அனிச்ச மலர். அதைப் பார்த்து, "அனிச்ச மலரே வாழ்க! நீ மிகவும் மென்மையாக இருக்கின்றாய் ஆனால், நான் விரும்பும் காதலியோ உன்னைக் காட்டிலும் மென்மையானவள். பூவினும் மெல்லிய பூம்பாவை அவள்" என்கிறான் காதலன்.

*மலர் காணின் மையாத்தி—நெஞ்சே!— 'இவள் கண்*
*பலர் காணும் பூ ஒக்கும்!' என்று.* 1112

அவள் கண்கள், பலர் காணுகின்ற மலர்களைப் போன்றே இருப்பதை நினைத்து, பூத்த மலரைப் பார்க்கின்ற போதெல்லாம், மனமே! நீயும் இவள் மையுண்ட கண்ணை நினைத்து வருந்துகிறாயே!

*முறி, மேனி; முத்தம், முறுவல்; வெறி, நாற்றம்;*
*வேல், உண்கண்;—வேய்த்தோளவட்கு.* 1113

என் காதலி, மூங்கில் போன்ற தோள்களையும், இயற்கையான நறு மணத்தையும், வேல் போன்ற கண்களையும் உடையவள்.

*காணின், குவளை, கவிழ்ந்து நிலன் நோக்கும்—*
*'மாணிழை கண் ஒவ்வேம்!' என்று.* 1114

குவளை மலர் என் காதலியைப் பார்த்தால், சிறந்த ஆபரணங்களை அணிந்துள்ள அவளுடைய கண்களுக்கு நாம் இணையாக இல்லாமைக்கு வெட்கப்பட்டு, தலையைக்குனிந்து கொண்டு தரையைப் பார்க்கும்.

*அனிச்சப்பூக் கால் களையாள் பெய்தாள்; நுசுப்பிற்கு*
*நல்ல படாஅ, பறை.* 1115

மிகவும் மென்மையான அனிச்சம் பூவானாலும், அதன் காம்பை நீக்காமல் சூடிக் கொள்வானால், அதன் பிறகு அவளுடைய இடை ஒடிந்து போயிற்று என்ற துன்பச் சொல்தான் பிறக்கும்.

*மதியும் மடந்தை முகனும் அறியா,*
*பதியின் கலங்கிய, மீன்.* 1116

நிலவுக்கும் இவள் முகத்துக்கும் வேறுபாடு தெரியாமல் தான் விண்மீன்கள் வானத்தில் சுற்றிச் சுடர்விட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

*அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப் போல*
*மறு உண்டோ, மாதர் முகத்து!* **1117**

முழுவதும் குறைந்து பிறகு சிறிது சிறிதாக வளருகின்ற நிலவுக்கு இருப்பது போன்ற களங்கம் ஏதேனும் இவளுக்கு இருக்கின்றதா? இல்லையே! பிறகு ஏன் இந்த விண்மீன்கள் தடுமாற வேண்டும்?

*மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்,*
*காதலை—வாழி, மதி!* **1118**

சந்திரனே! உன்னாலும் என் காதலியின் அழகு முகத்தைப் போல் ஒளி வீசும் வல்லமை பெறுவாயானால், நீயும் ஒருவனால் காதலிக்கப்படுவாய். பிறகு, நானும் உனக்கு வாழ்த்துக் கூறுவேன்.

*மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்திஆயின்,*
*பலர் காணத் தோன்றல்!—மதி!* **1119**

நிலவே! மலர் போன்ற கண்ணுள்ள என் காதலியின் முகம் போல், ஒளிவீசும் பெண்ணாக நீ மாறிவிடுவாயானால், அதன் பின், இப்படி பலபேர் உன்னைக் காணும்படி, நீ வெளியே தோன்றக் கூடாது.

*அனிச்சமும் அன்னத்தின் தூவியும், மாதர்*
*அடிக்கு, நெருஞ்சிப் பழம்.* **1120**

மிக மென்மையான அனிச்ச மலரும், அன்னப் பறவையின் மிக மெல்லிய இறகும்கூட, என் காதலியின் பஞ்சுபோன்ற பாதங்களில் நெருஞ்சி முள் போலக் குத்திவிடக் கூடியவை. அவ்வளவு மென்மையானவை என் காதலியின் பாதங்கள்.

## 113. காதல் சிறப்பு உரைத்தல்
### (காதலர் இருவரும் அவரவர் காதல் மிகுதியைக் கூறுவது)

*பாலொடு தேன் கலந்தற்றே—பணிமொழி*
*வால் எயிறு ஊறிய நீர்!* **1121**

இன்பச் சொற்களைப் பேசும் காதலியின் முத்துப் பற்களினிடையே ஊறி வந்த அவளுடைய வாயமுதம் (வாயிதழில் வெளிவரும் நீரானது) பாலோடு தேன்கலந்து சுவையாக உள்ளது.

*உடம்பொடு உயிரிடை என்ன, மற்று அன்ன—*
*மடந்தையொடு எம்மிடை நட்பு.* **1122**

"உடலுக்கும், உயிருக்கும் எத்தகைய உறவோ அத்தகைய உறவே, அவளுக்கும் எனக்கும் உயிரைவிட்டு உடல் பிரிய முடியுமா?" அதுபோலவே அவளும் நானும் ஒன்றானோம்.

*கருமணியின் பாவாய்! நீ போதாய் —யாம் வீழும்*
*திருநுதற்கு இல்லை, இடம்!* **1123**

என் கண்ணின் கருமணியில் இருக்கின்ற பாவையே! நீ போய் விடு; நீ இருப்பதனால், என் காதலிக்கு அதில் இருக்க இடம் இல்லை. ஆதலால், நீ போய் விடுவாயாக! நீ இருக்கும் இடத்தில் அவளை வைக்க எண்ணுகிறேன்.

*வாழ்தல் உயிர்க்கு அன்னள், ஆயிழை; சாதல்*
*அதற்கு அன்னள், நீங்கும் இடத்து.* **1124**

சிறந்த ஆபரணங்களை அணிந்துள்ள என் காதலி, என்னுடன் கூடி இருக்கும் வரையிலும், உயிர் போல இருக்கிறாள். என்னை விட்டு அவள் பிரிந்து செல்லும் போது, என் உயிர் போவது போல் ஆகிவிடுகிறது.

*உள்ளுவன்மன், யான் மறப்பின்; மறப்பு அறியேன்,*
*ஒள் அமர்க் கண்ணாள் குணம்.* **1125**

என் காதலியின் குணநலன்களை நான் ஒரு பொழுதும் மறப்பது இல்லை. மறந்திருந்தால்தானே நினைக்க வேண்டும்? எனவே, எப்பொழுதும் என் நினைவிலேயே இருக்கின்றாள்.

*கண்ணுள்ளின் போகார்; இமைப்பின் பருவரார்;*
*நுண்ணியர் எம் காதலவர்.* **1126**

என் காதலர், என் கண்ணிலிருந்து போகவே மாட்டார், அவர் எப்போதும் இருந்துகொண்டே இருப்பதால், இமைகளை மூடி விழித்தால் கூட, வருந்தமாட்டார். அவ்வளவு நுட்பமானவர்.

*கண் உள்ளார் காதலவராக, கண்ணும்*
*எழுதேம், கரப்பாக்கு அறிந்து.* **1127**

என் காதலர் என் கண்ணுக்குள்ளே குடியிருக்கிறார். அதனால், என் கண்ணுக்கு மை தீட்டுவதில்லை. ஏன் என்றால், மை தீட்டும் அந்த வேளையில், அவர் மறைய நேரிடுமே! என்னால் அதைத் தாங்க இயலாது.

*நெஞ்சத்தார் காதலவராக, வெய்து உண்டல்*
*அஞ்சுதும், வேபாக்கு அறிந்து.* **1128**

என் காதலர் என் கண்ணுக்குள் மட்டும் அல்ல என் நெஞ்சுக்குள்ளேயும் நிலைத்திருக்கிறார். அதனால், சூடான உணவுகளை உண்ண அஞ்சுகிறேன். ஏனென்றால், அவரைச் சுட்டுவிடக் கூடும் அல்லவா?

*இமைப்பின், கரப்பாக்கு அறிவல்; அனைத்திற்கே,*
*'ஏதிலர்' என்னும், இவ் ஊர்.* **1129**

என் இமைகளை மூடித் திறந்தால், என் கண்ணுக்குள்ளே இருக்கின்ற காதலர், மறைந்து விடுவாரோ என கண்ணை இமைக்காமல், விழித்தபடியே இருக்கின்றேன். (உறங்குவது இல்லை) அதனால், இந்த ஊர் மக்கள் அவரை அன்பு இல்லாதவர் என்று இகழ்கிறார்கள்.

*உவந்து உறைவர், உள்ளத்துள் என்றும்; 'இகந்து உறைவர்;*
*ஏதிலர்' என்னும், இவ் ஊர்.* **1130**

என் உள்ளத்தினுள் இருக்கும் காதலருடன் நான் மகிழ்ந்து உறவாடிக் கொண்டிருக்கிறேன். அதை அறியாத இந்த ஊர் மக்கள், அவர் என்னைப் பிரிந்து வாழ்கின்றார் என்று தூற்றுகின்றனரே, என்ன அநியாயம்!

## 114. நாணுத் துறவு உரைத்தல்

## (மனதில் எண்ணிய இரகசிய எண்ணங்களை நாணம் இன்றி கூறுவது)

*காமம் உழந்து வருந்தினார்க்கு, ஏம*
*மடல் அல்லது இல்லை, வலி.* **1131**

காதல் வசப்பட்டு, காதலியின் அன்பைப் பெற இயலாமல் தவிப்பவர்களுக்கு, மடல் ஏறி, அவள் அன்பைப் பெற முயற்சிப்பதைத் தவிர வேறு சிறப்பான வழி இல்லை.

*நோனா உடம்பும் உயிரும், மடல் ஏறும்—*
*நாணினை நீக்கி நிறுத்து.* **1132**

காதலி இல்லாமல், வாழும் துன்பத்தையும் தவிப்பையும் தாங்கிக் கொள்ள இயலாத என் உயிரும், உடலும், வெட்கத்தை விட்டு மடல் ஏறத் துணிந்து விட்டன.

*நாணொடு நல் ஆண்மை பண்டு உடையேன்; இன்று உடையேன்,*
*காமுற்றார் ஏறும் மடல்.* **1133**

நாணத்தையும், நல்ல ஆண்மையையும் பெற்று, நலமுடன் முன்பு இருந்தேன். ஆனால், இப்போது அவற்றை விட்டு விட்டு, காம நோய் மிகுந்தவர் ஏறும் மடல் ஏறிக் கொண்டிருக்கிறேன்.

*காமக் கடும் புனல் உய்க்குமே—நாணொடு*
*நல் ஆண்மை என்னும் புணை.* **1134**

நாணம், ஆண்மை என்னும் என்னுடைய நல்ல தோணிகளை, காமம் என்னும் பெரு வெள்ளம் வந்து கொண்டு போய் விட்டதே! இப்போது, எப்படி எதைக் கொண்டு கரை ஏறுவேன்?

*தொடலைக் குறுந்தொடி தந்தாள், மடலொடு*
*மாலை உழக்கும் துயர்.* **1135**

மாலை போல் வளையணிந்த அந்தப் பெண்ணரசி, மடல் ஏறுகின்ற துன்பத்தை மட்டுமா தந்தாள்? மாலை நேரம் வந்தால், அவளை நினைத்து வருந்துகின்ற துன்பத்தையும் அல்லவா சேர்த்துத் தந்துவிட்டாள்.

*மடல் ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற;—*
*படல் ஒல்லா, பேதைக்கு என் கண்.* *1136*

காதலியை நினைத்து என் கண்கள், இரவு முழுவதும் உறங்கவில்லை. ஆதலால், பாதி இரவிலும் கூட, மடல் ஊர்வதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

*கடல் அன்ன காமம் உழந்தும், மடல் ஏறாப்*
*பெண்ணின் பெருந்தக்கது இல்.* *1137*

கடல் போல விரிந்து வளர்ந்து காம நோய் வருத்தினாலும், மடல் ஏறாமல் பொறுத்துக் கொள்ளுகிற பெண் பிறவியைப் போன்ற பெருமை உடையது வேறு இல்லை.

*'நிறை அரியர்; மன் அளியர்' என்னாது, காமம்*
*மறை இறந்து, மன்று படும்.* *1138*

இவர் மனத்தைக் கட்டுப்படுத்தக் கூடியவர், இவர் கட்டுப்படுத்த இயலாதவர் என எண்ணிப் பார்க்கின்ற தன்மை இந்தக் காமத்துக்கு கிடையாது. பலர் கூடியுள்ள மன்றத்திலே கூட அம்பலமாகி விடுகிறது.

*'அறிகிலார், எல்லாரும்' என்றே, என் காமம்*
*மறுகில் மறுகும், மருண்டு.* *1139*

இந்த ஊரார், என்னை அறியமாட்டார் எனவே, நானே என்னை அறிவித்துக் கொள்வேன் என்று நினைத்து என் காம நோயானது, இந்த ஊர் தெருவிலே மயங்கி, அங்கும் இங்கும் பார்த்து தவிக்கச் செய்து விட்டது.

*யாம் கண்ணின் காண நகுப, அறிவு இல்லார்—*
*யாம் பட்ட தாம் படாவாறு.* *1140*

நான் படும் துன்பங்களை, அவர்கள் பட்டதில்லை. அதனால், அறிவு இல்லாதவர்கள் சிலர், எனக்குத் தெரியும்படி என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கிறார்கள்.

# 115. அலர் அறிவுறுத்தல்

## (ஊரார் தூற்றுவதை அறிந்து காதலர் வருந்துவது)

*அலர் எழ, ஆர் உயிர் நிற்கும்; அதனைப்*
*பலர் அறியார், பாக்கியத்தால். 1141*

என் காதலைப்பற்றி, இந்த ஊர்க்காரர்கள் பலவாறு பேசுகின்றனர். அதனால் இனி என் அருமையான உயிர் நிலைத்து இருக்கும். அவள் என்னைக் காதலிக்க வில்லை என்று கருதி, நான் உயிரை விட்டுவிட எண்ணி இருந்தேன். என் நல்வினைப் பயன் அது பிறருக்குத் தெரியாது.

*மலர் அன்ன கண்ணாள் அருமை அறியாது,*
*அலர் எமக்கு ஈந்தது, இவ் ஊர். 1142*

மலர்போன்ற கண்களை உடைய இந்த மங்கை நல்லாளின் அருமை பெருமை தெரியாமல் அவளை சாதாரணமாகக் கருதி, இந்த ஊரார் தூற்றுகிறார்கள். அது எனக்கு உதவியாக அமைந்தது.

*உறாஅதோ, ஊர் அறிந்த கௌவை? அதனைப்*
*பெறாஅது பெற்றன்ன நீர்த்து. 1143*

ஊராரின் இந்தத் தூற்றுதல், எனக்குப் பொருத்தமானது தானா? எப்படியாயினும், இந்தத் தூற்றுதலால், நான் அடைய முடியாததை அடைந்தது போன்ற தன்மை உடையதாயிற்று.

*கவ்வையான் கவ்விது, காமம்; அது இன்றேல்,*
*தவ்வென்னும், தன்மை இழந்து. 1144*

ஊராரின் தூற்றுதலினாலேயே, எங்கள் காதல் வளர்வதாயிற்று. இல்லையானால் அது, தன் தன்மையை இழந்து சுருங்கிப்போகும். தூற்றுதலாலும் நன்மையே உண்டாயிற்று.

*களித்தொறும் கள் உண்டல் வேட்டற்றால்—காமம்*
*வெளிப்படும்தோறும் இனிது.* *1145*

மது அருந்துகிறவர், மது உண்டு போதை அடைய அடைய, அந்த மதுவை அருந்த மேலும் விரும்புவது போல, நிந்தனைப் பேச்சுகள் பரவப் பரவ, காதலும் இன்பம் தருவதாகும்.

*கண்டது மன்னும் ஒருநாள்; அலர் மன்னும்*
*திங்களைப் பாம்பு கொண்டற்று.* *1146*

நான் அவரைப் பார்த்தது ஒரே ஒரு நாள்தான்! ஆனால், ஊராரின் பரிகாசப் பேச்சு, என்னவோ சந்திரனைப் பாம்பு பிடித்துக் கிரகணம் உண்டானது உலகுக்கே தெரிந்துவிடுவதைப்போல், எங்கும் பரவி விட்டது.

*ஊரவர் கௌவை எருவாக, அன்னை சொல்*
*நீராக, நீளும்—இந் நோய்.* *1147*

ஊரார் பேசுகின்ற ஏளனப் பேச்சு எருவாகவும், என் தாய் சினந்து சொல்லும் கடும் சொல்லானது நீராகவும் கொண்டு, இந்தக் காதல் நோய் செழிப்பாக வளர்கிறது.

*'நெய்யால் எரி நுதுப்பேம்' என்றற்றால்—'கௌவையான்*
*காமம் நுதுப்பேம்' எனல்.* *1148*

ஊரார் பரிகாசம் செய்து, காமத்தை அழித்து விடலாம் என்று நினைப்பது எப்படிப்பட்டது என்றால், நெய்யை ஊற்றி நெருப்பை அணைக்க முற்படுவது போலாகும். (பரிகாசம் செய்வதால், காமம் வளரும்; குறையாது. நெய்யை ஊற்றினால், நெருப்பு அணையாது; மேலும், கொழுந்துவிட்டு எரியும்.)

*அலர் நாண ஒல்வதோ—'அஞ்சல் ஓம்பு!' என்றார்*
*பலர் நாண நீத்தக்கடை* *1149*

'எவர் என்ன சொன்னாலும் நான் இருக்கிறேன், நீ பயப்படாதே' என்று உறுதி கூறிய என் காதலர்,

இப்போது என்னைப் பிரிந்து சென்றிருக்கிறார் என்பதால் பலர் பரிகாசம் செய்வதற்காக நான் பயந்துவிடலாமா?

*தாம் வேண்டின் நல்குவர், காதலர்; யாம் வேண்டும்*
*கௌவை எடுக்கும், இவ் ஊர்.* *1150*

ஊரார் எங்கள் காதலைப் பற்றி ஏளனம் செய்ய முற்பட்டு விட்டனர். நான் விரும்பியதும் அதையேதான். ஏன் என்றால், அந்த ஏளனப் பேச்சை தடுக்கவாவது இனிமேல் என் காதலர் வந்து என் கவலையைத் தீர்ப்பார்.

## 2. கற்பு இயல்

### 116. பிரிவு ஆற்றாமை
### (காதலன் பிரிவை அவள் தாங்க முடியாமல் கூறுவது)

*செல்லாமை உண்டேல், எனக்கு உரை; மற்று நின்*
*வல்வரவு, வாழ்வார்க்கு உரை.* *1151*

என்னை விட்டுப் பிரிந்து செல்வதைத் தவிர, வேறு செய்தி இருப்பின் சொல்லுங்கள். பிரிந்து போய், விரைவில் வந்து விடுவேன் என்பதை எல்லாம், உங்களைப் பிரிந்து, உயிரோடு வாழ்ந்து கொண்டிருப்பவளிடம் வந்து சொல்லிக் கொள்ளுங்கள். (அதாவது அவன் பிரிந்து போனால் அவள் உயிர் போய்விடுமாம்.)

*இன்கண் உடைத்து அவர் பார்வல்; பிரிவு அஞ்சும்*
*புன்கண் உடைத்தால், புணர்வு.* *1152*

முன்பெல்லாம் அவரைப் பார்த்துக் கொண்டிருப்பதே எனக்கு இன்பமாக இருந்தது. இப்பொழுதோ, அவருடைய சேர்க்கைகூட, பிரிவை நினைத்து வருந்தும் துன்பத்தைத் தரக்கூடியதாக உள்ளது.

*அரிதுஅரோ, தேற்றம்—அறிவுடையார்கண்ணும்*
*பிரிவுஓர் இடத்து உண்மையான்.* 1153

காதலரிடையே எப்படியும் பிரிவு என்பது ஓர் சமயம் ஏற்படக் கூடியதே. ஆனால் 'என்றும் உன்னைப் பிரியேன்' என அறிவுடைய காதலர் கூறும் உறுதிமொழியை நம்புவது கடினமானதே.

*அளித்து, 'அஞ்சல்!' என்றவர் நீப்பின், தெளித்த சொல்*
*தேறியார்க்கு உண்டோ, தவறு?* 1154

என்னிடம் மிகுந்த அன்பு செலுத்தி, 'உன்னை என்றும் பிரியேன் அஞ்சாதே' என்று கூறியவர், பிறகு ஏதாவது ஒரு காரணமாகப் பிரிந்து செல்வாரானால் முன்பு அவர் சொன்ன உறுதிமொழியை நம்பியிருப் போர்க்குத் தவறு உண்டோ? (இல்லை)

*ஓம்பின், அமைந்தார் பிரிவு ஓம்பல்! மற்று அவர்*
*நீங்கின், அரிதால், புணர்வு!* 1155

தன்னைக் காத்துக் கொள்ள விரும்பினால், காதலரின் பிரிவு தன்னைவிட்டுப் பிரியாமல் காத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல், அவர் பிரிந்து விட்டால், பிறகு அவரோடு கூடுவது அரிதாகும்.

*பிரிவு உரைக்கும் வன்கண்ணர் ஆயின், அரிது, 'அவர்*
*நல்குவர்' என்னும் நசை.* 1156

காதலர் தான் பிரிந்து செல்லக் கூடியதைச் சொல்லக் கூடிய கல்நெஞ்சர் என்றால், அத்தகைய காதலர், மீண்டும் வந்து அன்பு செலுத்துவார் என்னும் ஆசை பயன் இல்லாதது.

*துறைவன் துறந்தமை தூற்றாகொல்—முன்கை*
*இறை இறவாநின்ற வளை!* 1157

என் காதலர் என்னைவிட்டுப் பிரிந்து விட்ட செய்தியினை என்னுடைய முன்கையில் இருந்து கழல்கின்ற வளையல்கள் ஊர் அறிய பறைசாற்றிவிடாதா?

*இன்னாது, இனன் இல் ஊர் வாழ்தல்; அதனினும்
இன்னாது, இனியார்ப் பிரிவு.* 1158

தன் குறிப்பறிந்து நடக்கும் தோழியர்கள் இல்லாத ஊரில் சென்று வாழ்வது, துன்பம் தருவதாகும். ஆனால், அதைக் காட்டிலும் துன்பமானது, அன்புக்கு இனிய காதலரைப் பிரிந்து இருப்பது.

*தொடின் சுடின் அல்லது, காமநோய் போல,
விடின் சுடல் ஆற்றுமோ, தீ?* 1159

நெருப்பானது, தொட்டால்தான் சுடும். இந்தக் காம நோயான நெருப்பானது, ஒருவரை ஒருவர் தொட்டுக் கொண்டிருக்கும் வரையில் சுடாமல், பிறகு, விட்டுப் பிரிந்த உடனே சுட்டு விடுகிறது.

*அரிது ஆற்றி, அல்லல் நோய் நீக்கி, பிரிவு ஆற்றி,
பின் இருந்து, வாழ்வார் பலர்.* 1160

காதலர் தன்னை விட்டுப்பிரிந்து சென்ற போதும், அந்தப் பிரிவின் துயரத்தைப் பொறுத்துக்கொண்டு, பிறகு பெறக்கூடிய இன்பத்தை நினைத்து, வாழ்கின்ற பெண்கள் உலகில் பலர் இருக்கின்றனர்.

## 117. படர் மெலிந்து இரங்கல்

### (பிரிவினால் ஏற்பட்ட துன்பத்தில் மெலிந்து வருந்துவது)

*மறைப்பேன்மன் யான், இஃதோ, நோயை—இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும்.* 1161

எனக்கு உண்டான காம நோயை பிறர் அறியாமல், அடக்கி அடக்கிப் பார்க்கிறேன். ஆனால், இறைக்க இறைக்க பெருகிவரும் ஊற்று நீர் போல, பெருகி வருகின்றதே, என்ன செய்வது?

*கரத்தலும், ஆற்றேன், இந் நோயை; நோய் செய்தார்க்கு*
*உரைத்தலும் நாணுத் தரும்!* **1162**

எனக்கு உண்டான இந்தக் காமநோயை, முழுவதும் மறைத்து வைக்கவும் எனக்கு வலிமை இல்லை; இந்த நோயைத் தந்த காதலரிடம் இதைச் சொல்லலாம் என்றாலோ எனக்கு வெட்கமாக இருக்கிறது.

*காமமும் நாணும் உயிர் காவாத் தூங்கும், என்*
*நோனா உடம்பினகத்து.* **1163**

இவ்வாறு, காதலும், வெட்கமும் பொறுக்க முடியாத என் உடலின் உயிர், காவடித் தண்டாக்கி, இரு புறமும் தொங்கி என்னை இழுக்கின்றன. உயிர் துடிக்கின்றது!

*காமக் கடல் மன்னும் உண்டே; அது நீந்தும்*
*ஏமப் புணை மன்னும் இல்.* **1164**

என் காமமானது, கடல் போல இருக்கின்றது. ஆனால், அந்தக் கடலைக் கடப்பதற்கு, எனக்குப் பாதுகாப்பான தோணியாகிய என் காதலர் இல்லையே!

*துப்பின் எவன் ஆவர்மன்கொல்—துயர் வரவு*
*நட்பினுள் ஆற்றுபவர்!* **1165**

என் காதலர், என்னிடம் காதல் உள்ளவராக இருக்கும் போதே, எனக்கு இவ்வளவு துன்பம் வரும்படி (பிரிவு) செய்து விட்டாரே; என்னிடத்தில் ஏதேனும் வருத்த முற்று, பிரியம் இல்லாதவராகி விட்டாரானால் இன்னும் எவ்வளவு துன்பம் உண்டாக்குவாரோ! தெரிய வில்லையே!

*இன்பம் கடல் மற்றுக் காமம்; அஃது அடுங்கால்,*
*துன்பம் அதனின் பெரிது.* **1166**

காதலர் என்னுடன் இருக்கும்போது, எனக்கு உண்டாகும் காம உணர்ச்சியானது, மிகப் பெரிய இன்பக்கடலாக இருந்தது. ஆனால், அவர் என்னை

விட்டுப் பிரிந்து சென்ற இப்போது, எனக்கு ஏற்படும் காம உணர்ச்சியானது, அந்த இன்பக் கடலைவிடப் பெரிய துன்பக் கடலாக இருக்கிறது.

*காமக் கடும் புனல் நீந்திக் கரை காணேன்,*
*யாமத்தும், யானே உளேன்.* **1167**

காமம் என்னும் பெரிய கடலில் விழுந்து, நீந்திக் கரை காண முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன். நள்ளிரவிலும்கூட, எல்லோரையும் போல, தூங்க முடியாமல் துன்புறுகின்றேன்.

*மன் உயிர் எல்லாம் துயிற்றி,–அளித்து, இரா !–*
*என் அல்லது இல்லை, துணை.* **1168**

இந்த இரவுதான் என்ன செய்யும்? அதுவும் இரங்கத் தக்கதே! ஏன் எனில், அது எல்லோரையும் தூங்கவைத்து விட்டு, என்னைப் போலவே, அதுவும் வேறு துணையில்லாமல், தவித்துக்கொண்டிருக்கிறதே!

*கொடியார் கொடுமையின் தாம் கொடிய–இந் நாள்*
*நெடிய கழியும் இரா.* **1169**

இந்த இராக்காலமானது, என்னைப் பிரிந்து சென்ற கொடியவரிலும் கொடியது. இல்லை என்றால், பிரிவால் வாடும் இந்தத் துன்ப நாட்களின் இரவு விரைவில் கழியாமல், இப்படி நீளுமா? வளருமா?

*உள்ளம் போன்று உள்வழிச் செல்கிற்பின், வெள்ளநீர்*
*நீந்தல மன்னோ, என் கண்.* **1170**

என் மனம்போல, என் கண்களும், காதலர் இருக்கக் கூடிய இடத்திற்கு விரைந்து சென்றுவிட முடியுமானால் இப்படி கண்ணீர் வெள்ளத்தில் நீந்திக்கொண்டிருக்க வேண்டியதில்லை அல்லவா?

# 118. கண் விதுப்பு அழிதல்
## (காதலனைக் காணாமல் கண்கள் துன்புற்று வருந்துவது)

*கண்தாம் கலுழ்வது எவன்கொலோ—தண்டா நோய்,*
*தாம் காட்ட, யாம் கண்டது!* *1171*

இந்தத் தீராத காம வேதனையை எனக்குக் காட்டியதும் என்னை ஆசை கொள்ளச் செய்ததும் இந்தக் கண்கள் தானே. அப்படி இருக்க, இந்தக் கண்கள் இப்பொழுது ஏன் அழவேண்டும்?

*தெரிந்து உணரா நோக்கிய உண்கண்பரிந்து உணரா,*
*பைதல் உழப்பது எவன்* *1172*

முன்பின் ஆராயாமல், அன்று, பார்த்த உடனே காதல் கொள்ளச் செய்து விட்டது இந்தக் கண்கள் தானே. அப்படி இருக்கும்போது, இப்போது வருந்தி அழுவது ஏன்?

*கதுமெனத் தாம் நோக்கித் தாமே கலுழும்*
*இது நகத்தக்கது உடைத்து.* *1173*

அன்று காதலரை ஆவலோடு பார்த்து, அவர் அழகை அள்ளிக் பருகிய இந்தக் கண்கள், இப்போது, அவர் பிரிவை நினைத்து, அழுகின்றனவே? இது சிரிக்கத் தக்க செயல் அல்லவா?

*பெயல் ஆற்றா நீர் உலந்த, உண்கண்—உயல் ஆற்றா*
*உய்வு இல் நோய் என்கண் நிறுத்து.* *1174*

என்மீது, மீள முடியாத காம நோயைச் சுமத்திவிட்டு இந்தக் கண்கள், இப்போது அழமுடியாமல், அழுது அழுது நீர் வறண்டு வாடுகின்றன.

*படல் ஆற்றா, பைதல் உழக்கும்—கடல் ஆற்றாக்*
*காமநோய் செய்த என் கண்.* *1175*

கடலினும் பெரிய காமநோயை உண்டாக்கிய என் கண்கள், இன்று இமை மூடித் தூங்க முடியாத துன்பத்தால் தவிக்கின்றன.

*ஓஒ, இனிதே!—எமக்கு இந் நோய் செய்த கண்*
*தாஅம் இதற்பட்டது.* **1176**

இந்தக் காம நோயானது, கண்ணால் பார்க்க வந்தது தானே! அப்படியிருக்க, நான் மட்டும் ஏன் துன்பப்பட வேண்டும்? என்னைப் போல, என் கண்களும் துன்புறுவது மிகச் சரியானதே!

*உழந்து உழந்து உள் நீர் அறுக—விழைந்து இழைந்து*
*வேண்டி அவர்க் கண்ட கண்!* **1177**

அவரைத் தேடித் தேடிப் பார்த்து அன்று மகிழ்ந்த கண்கள் தானே இவை! இன்று அவர் இல்லாத துன்பத்தை நினைத்து, அழுது அழுது கண்ணீர் வற்றிப் போகட்டுமே அதனால் எனக்கு என்ன?

*பேணாது பெட்டார் உளர்மன்னோ—மற்று அவர்க்*
*காணாது அமைவு இல கண்.* **1178**

உள்ளத்தால் என்னை விரும்பாமல், உதட்டளவில் பொய் உறவு கொண்டாடியவர். எங்கோ இருக்கின்றார். அத்தகைய காதலரைக் காணாமல், என் கண்கள், உறக்கம் இல்லாமல் அமைதி இன்றி தவிக்கின்றனவே!

*வாராக்கால், துஞ்சா; வரின், துஞ்சா; ஆயிடை*
*ஆர் அஞர் உற்றன, கண்.* **1179**

காதலர் வரவில்லை என்றால் கண்கள் தூங்குவதில்லை; அவர் வந்து விட்டாலும் தூங்குவதில்லை; அதனால், இந்தக் கண்களால் எனக்கு எப்போதும் துன்பமே நேரிடுகின்றன.

*மறை பெறல் ஊரார்க்கு அரிது அன்றால்—எம்போல்*
*அறை பறை கண்ணார் அகத்து.* **1180**

முரசு கொட்டி முழங்குவது போல், நான் படும் துன்பத்தை ஊரில் உள்ளவர்களுக்கு வெளிப்படுத்தும் கண்களை உடைய என்னைப் போன்றவர்களுக்கு மறைக்கக் கூடிய ரகசியச் செய்தி இருக்குமா? கண் ஒன்று போதுமே காட்டிக் கொடுத்துவிட!

## 119. பசப்பு உறு பருவரல்

**(காதலன் பிரிவினால் துன்புற்று உடலின் நிறம் மாறுவது)**

*நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்; பசந்த என்*
*பண்பு யார்க்கு உரைக்கோ, பிற!* *1181*

என்னைவிட்டுப் பிரிந்து செல்ல, அன்று நான் சம்மதித்தேன்; இந்த நிலையில் என் உடல் நிறம் மாறியதை நான் எப்படிப் பிறரிடம் போய்ச் சொல்வேன்? அவருடைய பிரிவும், பசலையும் நானே வரவழைத்துக் கொண்டது தானே?

*அவர் தந்தார் என்னும் தகையால் இவர்தந்து, என்*
*மேனிமேல் ஊரும், பசப்பு.* *1182*

என் காதலர் அளித்த பரிசு இந்தப் பசலை நிறம். அந்த உரிமையிலும், பெருமையிலும் தான் இந்தப் பசலை நிறம் என் மேனி முழுதும் நிறைந்து பரவிவிட்டது.

*சாயலும் நாணும் அவர் கொண்டார்—கைம்மாறா*
*நோயும் பசலையும் தந்து.* *1183*

பிரிந்து சென்ற அவர், என்னுடைய இயல்பான நாணத்தையும், அழகையும் கொண்டு சென்று விட்டார். அதற்குக் கைம்மாறாக பிரிவுத் துயரத்தையும், பசலை நிறத்தையும் எனக்குத் தந்துவிட்டார்.

*உள்ளுவன்மன் யான்; உரைப்பது அவர்திறமால்;*
*கள்ளம் பிறவோ, பசப்பு.* *1184*

நான் அவர் சொற்களையே நினைக்கின்றேன்; பேசுவதும் அவருடைய நல்ல குணங்களைப் பற்றியேதான். அப்படியிருந்தும், எனக்கு இந்தப் பசலை நிறம் வந்தது வஞ்சனையோ, அல்லது எதுவோ தெரியவில்லையே!

*உவக்காண், எம் காதலர் செல்வார்; இவக்காண், என்*
*மேனி பசப்பு ஊர்வது!* *1185*

இதோ என் காதலர் பிரிந்தார்; அதோ என் உடலுக்கு பசலை நிறமும் வந்து விட்டது. அவர் இப்படி பிரிந்தால், அடுத்த விநாடியே என் உடலைப் பசலை நிறம் பற்றிக் கொள்கிறது.

*விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல், கொண்கன்*
*முயக்கு அற்றம் பார்க்கும், பசப்பு.* **1186**

விளக்கின் ஒளி எப்போது மறையும், அப்போது சூழ்ந்து கொள்ளலாம் என்று காத்துக் கொண்டிருக்கின்ற இருளைப் போல, என் காதலர் எப்போது பிரிவார். என் மீது எப்போது படரலாம் என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருப்பதுபோல் இருக்கிறது இந்தப் பசலை நோய்.

*புல்லிக் கிடந்தேன், புடைபெயர்ந்தேன்; அவ் அளவில்,*
*அள்ளிக்கொள்வற்றே, பசப்பு.* **1187**

காதலரோடு தழுவிக்கிடந்தேன். பிறகு, சிறிது விலகிப் படுத்தேன்; அவ்வளவுதான்! அந்தச்சிறிது நேரப் பிரிவுக்குள், பசலை வந்து என்னைப் பற்றிக் கொண்டதே!

*'பசந்தாள் இவள்' என்பது அல்லால், 'இவளைத்*
*துறந்தார் அவர்' என்பார் இல்.* **1188**

என் மேனி, பிரிவுத் துயரால் பசலை அடைந்தது என்று தான் பார்ப்பவர்கள் சொல்கிறார்களே தவிர, என்னை விட்டு என் காதலர் பிரிந்து சென்றார் என்று ஒரு வார்த்தை கூட எவரும் சொல்வார் இல்லையே! என்ன அநியாயம்!

*பசக்கமன் பட்டாங்கு, என்மேனி—நயப்பித்தார்*
*நல் நிலையர் ஆவர்எனின்!* **1189**

என் மேனி பசலை நிறம் அடையட்டுமே தன் பிரிவினால் என்னைச் சம்மதிக்கச் செய்த காதலர் உண்மையிலேயே நல்லவர் என்றால், என் மேனி நன்றாகப் பசலை நிறம் அடையட்டுமே எனக்குக் கவலை இல்லை.

*பசப்பு எனப் பேர் பெறுதல் நன்றே—நயப்பித்தார்*
*நல்காமை தூற்றார்எனின்.* **1190**

என் சம்மதம் பெற்று, என்னைப் பிரிந்து சென்ற காதலர் படும் துன்பத்தை ஊர்மக்கள் தூற்றாமல் இருந்தால் போதும். நான் பசலை நிறம் பெறுவது நன்மைதான். 'ரவாயில்லை.

# 120. தனிப் படர் மிகுதி

## (பிரிவினால் தனிமையில் இருந்து துன்பத்தைக் கூறுவது)

*தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர் பெற்றாரே,*
*காமத்துக் காழ் இல் கனி.* *1191*

ஆசை வைத்த காதலரின் நேசத்தைப் பெறும்பேறு பெற்றவர் காதல் வாழ்வின் பயனான, விதை இல்லாத சுவை மிகுந்த கனியைப் பெற்றவர் ஆவார். விதை இல்லாத பழம் சுவைப்பதற்கு சுவைமிகுந்து இனிக்கும்.

*வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்—வீழ்வார்க்கு*
*வீழ்வார் அளிக்கும் அளி.* *1192*

தம்மை விரும்புகின்ற மகளிர்க்கு, தாம் விரும்பி அளிக்கும் சுகம் எத்தகையது என்றால், உயிர்வாழும் மக்களுக்கு, மேகம் பொழிகின்ற மழைபோல, மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகும்.

*வீழுநர் வீழப்படுவார்க்கு அமையுமே,*
*வாழுநம்' என்னும் செருக்கு.* *1193*

ஒருவரை ஒருவர் விரும்பி, அன்பால் இணைந்து, மகிழ்ந்த இருவரிடையேயும். பிரிவினால் துன்பம் நேரிடுமானாலும், மீண்டும் கூடிமகிழ்வோம் என்னும் நம்பிக்கையே அவர்களுக்குப் பொருத்தமாகும்.

*வீழப்படுவார், கெழீஇயிலர், தாம் வீழ்வார்*
*வீழப்படாஅர் எனின்.* *1194*

தாம் விரும்பும் காதலரால், விரும்பப்படாதவர்கள் பலர் உலகில் விரும்பத்தக்க நல்ல நிலையில் இருந்தாலும்; அதனால், அவருக்குப் பெருமையும், இன்பமும் உண்டாவதில்லையே!

*நாம் காதல் கொண்டார் நமக்கு எவன் செய்பவோ*
*தாம் காதல் கொள்ளாக்கடை!* *1195*

நாம் விரும்பி நேசிக்கின்ற காதலர், நம்மையும் அது போலவே விரும்பி நேசிக்காவிட்டால், அவரால் நமக்கு என்ன பயன்? நாம் மட்டும் காதல் கொள்வது எதற்கு?

*ஒரு தலையான் இன்னாது, காமம்; காப் போல*
*இருதலையானும் இனிது.* 1196

ஒரு தலைக்காமம் துன்பம் தரக்கூடியது. எனவே, ஒருவர்மேல் ஒருவர் கொண்ட காதலானது, இருபக்கமும் சமமாகத் தொங்குகின்ற காவடியின் சுமைபோல, இரண்டு பேரிடமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.

*பருவரலும் பைதலும் காணான்கொல்—காமன்*
*ஒருவர்கண் நின்று ஒழுகுவான்!* 1197

காதல் அம்பு விடும் மன்மதன், காதலர் இருவரிடையேயும் ஒரே மாதிரி இல்லாமல், ஒருவரையே அதிகமாகச் சார்ந்து இருப்பதால் நான் படும் துன்பம் அவன் அறியான் போலும். இல்லை என்றால், என் காதலரையும் இந்தத் துன்பம் வருத்தியிருக்கு மானால், அவர் வந்து என்னை மகிழ்வித்திருப்பார் அல்லவா?

*வீழ்வாரின் இன் சொல் பெறாஅது, உலகத்து*
*வாழ்வாரின் வன்கணார் இல்.* 1198

ஆசை வைத்த காதலரின் அன்பான சொற்களைக் கேளாமல், பிரிவால் உண்டாகும் துன்பத்தையும் பொறுத்துக் கொண்டு, உலகில் வாழும் பெண்களைவிட நெஞ்சு உறுதி உள்ளவர்கள் எவரும் இல்லை.

*நசைஇயார் நல்கார் எனினும், அவர்மாட்டு*
*இசையும் இனிய, செவிக்கு.* 1199

நான் விரும்புகின்ற காதலர், மீண்டும் என்னை வந்து அடைந்து, எனக்கு இன்பம் அளிக்க மாட்டார் என்றாலும், அவருடைய புகழையும் பெருமையையும் பிறர் சொல்லக் கேட்பதே என் காதுகளுக்கு இன்பம் தருகின்றது.

*உறாஅர்க்கு உறு நோய் உரைப்பாய்—கடலைச்*
*செறாஅஅய்!—வாழிய நெஞ்சு!* 1200

நெஞ்சே! நீ வாழிய! நீ பட்ட துன்பத்தைக் கூறிக் கொண்டிருக்கிறாயே! அதை விட்டு கடலைத் தூர்க்கவாவது முயற்சி செய். நீ வாழ்வாய். பிழைத்துப் போவாய்! அன்பு இல்லாதவரிடம் சொல்லும் துன்பக் கதையால் என்ன பலன் ஏற்படக் கூடும்?

# 121. நினைந்தவர் புலம்பல்
## (முன்பு இருவரும் அனுபவித்த இன்பத்தை நினைத்துக் கூறுவது)

*உள்ளினும், தீராப் பெரு மகிழ் செய்தலால்,*
*கள்ளினும் காமம் இனிது.* 1201

நினைத்தாலும் நீங்காத, மிகுந்த மகிழ்ச்சியைத்தருவதால், உண்ட போது மட்டுமே மகிழ்ச்சியைத் தருகின்ற மதுவை விடக் காமமே இனிமையானது.

*எனைத்து ஒன்று இனிதேகாண் காமம்; தாம் வீழ்வார்*
*நினைப்ப, வருவது ஒன்று இல்.* 1202

என்ன துன்பம் தந்தாலும் காமம் இனிமையானதே ஆகும். அன்பில் மகிழ்ந்த அவரை நினைத்தாலே இனிக்கிறதே; இதைப் போல இன்பம் தரக்கூடியது வேறு என்ன இருக்கிறது?

*நினைப்பவர் போன்று நினையார்கொல்—தும்மல்*
*சினைப்பது போன்று கெடும்!* 1203

என்னை நினைப்பது போல் இருந்து, என் காதலர் நினையாமல் விட்டு விட்டாரோ? தும்மல் வருவது போல் தோன்றி அது வராமல் நின்று விட்டதே! அன்பால் பழகியவர் நினைத்துக் கொண்டால், தும்மல் வரும் என்பது வழக்கமாயிற்றே!

*யாமும் உளேம்கொல், அவர் நெஞ்சத்து?—எம் நெஞ்சத்து,*
*ஓஒ! உளரே அவர்!* 1204

நினைப்பதாவது-நினைத்ததை நிறுத்திக் கொள்வதாவது என் உள்ளத்தில் அவர் நீங்காமல் நிலைத்திருக்கிறார். அதைப் போலவே, அவர் உள்ளத்திலும் நான் நீங்காமல் குடியிருக்கிறேன்.

*தம் நெஞ்சத்து எம்மைக் கடி கொண்டார் நாணார்கொல்—*
*எம் நெஞ்சத்து ஓவா வரல்?* 1205

தம்முடைய நெஞ்சில் என்னைக் காப்பாற்றிவைத்திருக்கும் என் காதலர், என் நெஞ்சில் ஓயாமல் வருவதற்கு வெட்கம் அடைய மாட்டாரா?

*மற்று யான் என் உளேன் மன்னோ! அவரொடு யான்*
*உற்ற நாள் உள்ள, உளேன்.* 1206
அவரோடு நான் கூடி மகிழ்ந்திருந்த இன்ப நாட்களை எண்ணித்தான் நான் உயிரோடு இருக்கிறேனே அல்லாமல், வேறு என்ன இருக்கிறது, நான் எண்ணி மகிழ்ந்து உயிர் வாழ்வதற்கு?

*மறப்பின், எவன் ஆவன் மன்கொல்—மறப்பு அறியேன்,*
*உள்ளினும் உள்ளம் சுடும்?* 1207
காதலரை மறக்காமல், நினைத்துக் கொண்டிருக்கையிலேயே, அவர் பிரிவால் உண்டான துன்பம், என்னைச் சுடுகிறது. அவரை நினைக்காமல், மறந்து விட்டால், நான் என்ன ஆவேன்?

*எனைத்தும் நினைப்பினும் காயார்; அனைத்து அன்றோ,*
*காதலர் செய்யும் சிறப்பு?* 1208
அடிக்கடியும், அளவுக்கு மீறியும் அவரை நான் நினைத்துக் கொண்டாலும், என்மீது அவர் கோபம் கொள்ள மாட்டாரே! ஆகா! அதுவன்றோ என் காதலரின் தனிச் சிறப்பு!

*விளியும், என் இன் உயிர்—'வேறு அல்லம்' என்பார்*
*அளி இன்மை ஆற்ற நினைந்து.* 1209
அவர் என்னுடன் இருக்கும்போது, 'உன் உயிரும், என் உயிரும் வேறு அல்ல' என்று முன்பு சொல்லிக் கொண்டிருந்த அவர், இப்போது என்னைவிட்டு பிரிந்து அன்பு செலுத்தாமல் இருப்பதை நினைத்தால், என் இனிய உயிர் அழிகின்றது.

*விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்*
*படாஅதி—வாழி மதி!* 1210
சந்திரனே! ஒளி கெடாமல், நீயாவது எனக்கு உதவி செய். என்னை விட்டுப் பிரியாமல் இருந்து பிரிந்து சென்று விட்ட காதலரை, உன் ஒளியின் உதவியால், நான் தேடிக் கண்டுபிடித்துக் கொள்கிறேன்.

# 122. கனவு நிலை உரைத்தல்

*(காதலனைக் கனவில் கண்ட மகிழ்ச்சியைக் கூறுவது)*

*காதலர் தூதொடு வந்த கனவினுக்கு*
*யாது செய்வேன்கொல், விருந்து!* *1211*

என்னிடம், என் காதலரே தூதாக வந்ததாக, நான் கண்ட கனவுக்கு, விருந்தாக யாது செய்வேன்?

*கயல் உண்கண் யான் இரப்பத் துஞ்சின், கலந்தார்க்கு*
*உயல் உண்மை சாற்றுவேன்மன்.* *1212*

கெண்டை மீன்களைப் போல புரளுகிற மைத்தீட்டிய என் கண்களை, நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன் அவை மீண்டும் உறங்கினால், என் காதலரை மறுபடியும் கனவில் கண்டு, நான் ஏன் இன்னும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன், என்பதைப் பற்றிய உண்மையைச் சொல்லி விடுவேன்.

*நனவினான் நல்காதவரைக் கனவினான்*
*காண்டலின் உண்டு, என் உயிர்* *1213*

நான் விழித்திருக்கும்போது, வந்து இன்பம் அளிக்காத காதலரைக் கனவிலாவது கண்டு மகிழ்வதால்தான், என் உயிர் இன்னும் என்னைவிட்டுப் போகாமல் இருக்கிறது. கனவு இன்பமாவது கிட்டுகிறதே என்று உயிர் காத்திருக்கிறது போலும்!

*கனவினான் உண்டாகும் காமம்—நனவினான்*
*நல்காரை நாடித் தரற்கு.* *1214*

நேரில் வந்து எனக்கு இன்பம் தராத காதலரை, தேடிப் பிடித்து, என்னிடம் கொண்டுவந்து விடுவதனால் கனவிலும் எனக்குக் காம இன்பம் கிடைக்கிறது.

*நனவினான் கண்டதூஉம், ஆங்கே, கனவும்தான்*
*கண்ட பொழுதே இனிது.* *1215*

முன்பு நேரில் அனுபவித்த இன்பம், அப்பொழுது மட்டுமே இனித்தது; கனவில் இப்பொழுது பெறும் இன்பமும் இனிமை உடையதாக இருக்கிறது. ஆகவே, இரண்டிலும் என்ன வேறுபாடு?

*நனவு என ஒன்று இல்லைஆயின், கனவினான்*
*காதலர் நீங்கலர்மன்.* 1216
விழிப்பு வந்து, நான் விழிக்காமலே இருந்திருப்பேனே யானால், என் கனவிலே வந்த என் காதலரும் என்னை விட்டுப் பிரிந்திருக்காமல் இருந்திருப்பார் அல்லவா? கனவைக் கலைப்பதற்கு இந்த விழிப்பு ஏன் வந்ததோ?

*நனவினான் நல்காக் கொடியார் கனவினான்,*
*என், எம்மைப் பீழிப்பது?* 1217
நான் விழித்திருக்கும் போது, ஒரு நாளாவது வந்து, என்னிடம் அன்பைக் காட்டாத கொடியவரான என் காதலர், கனவில் வந்து என்னைத் துன்புறுத்துவது ஏனோ?

*துஞ்சுங்கால் தோள் மேலர் ஆகி, விழிக்குங்கால்*
*நெஞ்சத்தர் ஆவர், விரைந்து.* 1218
நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது, என் தோளைத் தழுவுவதுபோல் காணப்படும் என் காதலர், நான் விழித்துப் பார்க்கும் போது, விரைவாக என் நெஞ்சுக்குள் புகுந்துள்ளார்.

*நனவினான் நல்காரை நோவர்—கனவினான்*
*காதலர்க் காணாதவர்.* 1219
இந்த ஊரில் உள்ள பெண்கள், தங்கள் காதலரைக் கனவில் கண்டு மகிழாதவர்கள் அதனால், நேரில் வந்து அன்பு செலுத்தாத என் காதலரை, அன்பு இல்லாதவர் என்று அவர்கள் நொந்து கொள்கின்றனர்.

*நனவினான், நம் நீத்தார் என்பர்; கனவினான்*
*காணார்கொல், இவ் ஊரவர்!* 1220
இந்த ஊரில் உள்ள பெண்கள், என் காதலர் நாள் தோறும், என் கனவிலே வந்து இன்பம் அளிப்பதை அறியாதவர்கள். அதனால்தான், அவர் வரவில்லை என்று எண்ணி ஏளனம் செய்கின்றனர்.

# 123. பொழுது கண்டு இரங்கல்

**(மாலை நேரத்தைக் கண்டு காதலி வருந்துவது)**

*மாலையோ அல்லை; மணந்தார் உயிர் உண்ணும்*
*வேலை நீ;– வாழி, பொழுது!* *1221*

மாலைப் பொழுதே! நீ மாலைப் பொழுதாகவா இருக்கிறாய்? மணந்தவர் பிரிவுத் துயரால் வாடும் பேதையரின் உயிரை உண்ணும் முடிவு காலமாக அல்லவா, இருக்கிறாய் வாழ்க!

*புன்கண்ணை–வாழி, மருள் மாலை!–எம் கேள்போல்*
*வன்கண்ணதோ, நின் துணை?* *1222*

மயங்குகின்ற மாலைப் பொழுதே! நீயும் துன்பப் படுகின்றாய்; வாழ்க! உன் துணைவனும், என் காதலரைப் போலவே, அன்பு இல்லாதவன் தானா?

*பனி அரும்பிப் பைதல் கொள் மாலை, துனி அரும்பித்*
*துன்பம் வளர, வரும்.* *1223*

பனி அரும்பி, பசந்த நிறம் கொண்ட மாலைப் பொழுது, எனக்கு வாழ்வில் வெறுப்பு உண்டாக்கி, துன்பம் வளரும் படி வருகின்றது.

*காதலர் இல் வழி, மாலை, கொலைக்களத்து*
*ஏதிலர் போல, வரும்.* *1224*

இந்த மாலைப் பொழுதானது, என் காதலர் இல்லாத இப்பொழுது, கொலைக் களத்திலே வரும் கொலையாளியைப் போல, என் உயிரைக் கவர்ந்து செல்ல வருகின்றது.

*காலைக்குச் செய்த நன்று என்கொல்? எவன்கொல், யான்*
*மாலைக்குச் செய்த பகை?* *1225*

காலைப் பொழுது, எனக்குத் துன்பம் செய்யவில்லை; மாலைப் பொழுது துன்பம் செய்கின்றது. காலைப் பொழுதுக்கு நான் செய்த நன்மை என்ன? மாலைப் பொழுதுக்கு நான் செய்த தீமை என்ன?

*மாலை நோய் செய்தல், மணந்தார் அகலாத*
*காலை அறிந்ததிலேன்.* 1226

முன்பு, எனக்கு இன்பம் செய்த மாலைப் பொழுது இப்பொழுது துன்பம் செய்கின்றதே! இதனை, என் காதலர் என்னுடன் இருந்தபோது, நான் அறிய இல்லையே.

*காலை அரும்பி, பகல் எல்லாம் போது ஆகி,*
*மாலை மலரும்—இந்நோய்.* 1227

இந்தக் காம நோயானது, காலைப் பொழுதில் அரும்பாகி, பகல் முழுவதும் மலரும் பருவம் அடைந்து, மாலைப் பொழுதில் பூக்கின்றது. மணம் பரப்புகிறது.

*அழல்போலும் மாலைக்குத் தூது ஆகி, ஆயன்*
*குழல்போலும் கொல்லும் படை.* 1228

நெருப்பைப்போல, என் உடலைக் காம வேதனையால் கொதிக்கச் செய்கின்ற மாலைப் பொழுதானது வருகிறது என்ற செய்தியை அறிவிக்கின்ற இடையருடைய புல்லாங் குழலின் ஓசை கூட, என்னைக் கொல்ல வருகின்ற ஆயுதம் போல, அச்சம் உண்டாக்குகின்றது.

*பதி மருண்டு, பைதல் உழக்கும்—மதி மருண்டு,*
*மாலை படர்தரும் போழ்து.* 1229

அறிவு மயங்கும் படியாக மாலைப் பொழுது வரும்போது, என்னைப் போல் இந்த ஊரும் மயங்கி, துன்பத்தால் வருந்தும்.

*பொருள்மாலையாளரை உள்ளி, மருள் மாலை*
*மாயும், என் மாயா உயிர்.* 1230

பொருள் தேடப் பிரிந்து சென்ற காதலரை நினைத்து, அவர் பிரிந்தபோதும் கூட, என்னை விட்டுப் பிரியாதிருந்த உயிர் மயங்கும் இந்த மாலைப் பொழுதில், என்னை விட்டுப் பிரிகிறதே!

# 124. உறுப்பு நலன் அழிதல்

## (தன்னுடைய உறுப்புகளின் அழகு கெடுவதைக் கூறுவது)

*சிறுமை நமக்கு ஒழியச் சேண் சென்றார் உள்ளி,*
*நறு மலர் நாணின, கண்* 1231

துன்பத்தை எனக்கு மிஞ்சவிட்டுத் தொலை தூரம் சென்ற என் காதலரை நினைத்து அழுது அழுது, என் கண்கள் ஒளி இழந்தன. என் கண்களைப் பார்த்து மலர்கள் வெட்கப்பட்டது போக, இப்போது அவற்றைக் கண்டு என் கண்கள் நாணப்படும் நிலை வந்து விட்டது.

*நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்–*
*பசந்து பனி வாரும் கண்.* 123:

நிறம் வேறுபட்டு, நீரைச் சொரியும் என் கண்கள் காதலரின் அன்பு இல்லாமையைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன போலும்.

*தணந்தமை சால அறிவிப்ப போலும்–*
*மணந்த நாள் வீங்கிய தோள்.* 1233

என் காதலருடன் கூடியிருந்த காலத்தில், பருமனாயிருந்த என் தோள்கள், இப்போது மெலிந்து, அவர் பிரிவை எல்லோருக்கும் எடுத்துச் சொல்கின்றன போலும்!

*பணை நீங்கிப் பைந் தொடி சோரும்–துணை நீங்கித்*
*தொல் கவின் வாடிய தோள்.* 1234

காதலர் பிரிந்து சென்றதால், பழைய இயற்கை அழகு குறைந்தது தோள்கள் பருமனை இழந்து விட்டதால் நான் அணிந்திருந்த பசும்பொன் வளையல்கள், கழன்று விழுகின்ற நிலைமைக்கு வந்து விட்டன.

*கொடியார் கொடுமை உரைக்கும்—தொடியொடு*
*தொல் கவின் வாடிய தோள்.* *1235*

வளையல்கள் கழல, பழைய அழகு நலம் கெட, வாடி மெலிந்த என் தோள்கள், என் துன்ப நிலையை உணராமல், பிரிந்து சென்ற இரக்கமற்றவரின் கொடுமையைப் பிறருக்கு எடுத்துச் சொல்கின்றன.

*தொடியொடு தோள் நெகிழ நோவல்—அவரை,*
*'கொடியர்' எனக் கூறல் நொந்து.* *1236*

வளையல்கள் கழன்று விழ, மெலிந்த தோள்களைக் காணுகின்ற ஊரார், என் காதலரை இரக்கமற்றவர் என்று கூற நேர்ந்ததை நினைத்து, என் உள்ளம் பொறுக்காமல் வருந்துகிறது.

*பாடு பெறுதியோ—நெஞ்சே!—கொடியார்க்கு என்*
*வாடு தோட் பூசல் உரைத்து?* *1237*

நெஞ்சே! என்னுடைய தோள் மெலிவினால், உண்டாகும் ஆரவாரத்தை, இரக்கமற்றவரான என் காதலரிடம் போய்ச் சொல்லி, அதனால், ஒரு பெருமையை பெறுவாயானால், அது சிறப்பாகும். அவ்வாறு செய்வாயா? நெஞ்சை தூதுவிடுகிறாள்.

*முயங்கிய கைகளை ஊக்க, பசந்தது—*
*பைந் தொடிப் பேதை நுதல்!* *1238*

அன்பு மிகுதியால், தழுவிய என் காதலர் கையைத் தளர்த்தியதும், அந்தச் சிறிது நேரம் பிரிவையும் தாங்காததுபோல், (அழகான பொன் வளையல்களை அணிந்துள்ள) பிரிந்து சென்றால், என்ன செய்வோம் என்று கருதி, அவள் நெற்றி பசலை அடைந்து விட்டது.

*முயக்கிடைத் தண் வளி போழ, பசப்பு உற்ற*
*பேதை பெரு மழைக்கண்.* *1239*
இறுகித் தழுவிக்கிடக்கும்போது, இடையே குளிர்காற்று நுழைய, அதனால் உடல் நெகிழ, அவர் சற்றே விலக, அந்தத் துளிநேரப் பிரிவையும் பொறாததுபோல, அவளுடைய பெரிய குளிர்ந்த கண்கள் பசலை நிறம் பெற்றன.

*கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே—*
*ஒள் நுதல் செய்தது கண்டு.* *1240*
காதலியின் ஒளி மிகுந்த நெற்றி, பசலை அடைந்ததைக் கண்டு, கண்கள் பசலையும் துன்பமும் அடைந்தன.

## 125. நெஞ்சொடு கிளத்தல்

***(தன்னுடைய ஆற்றாமையை நெஞ்சுக்கு கூறுவது)***

*நினைத்துஒன்று சொல்லாயோ—நெஞ்சே !எனைத்து ஒன்றும்*
*எவ்வநோய் தீர்க்கும் மருந்து?* *1241*
நெஞ்சே! துன்பம் தரும் இந்தக் காம நோயிலிருந்து, நான் விடுபட (குணம்பெற) ஏதாவது ஒரு மருந்து அது எப்படிப் பட்டாதாயினும் ஆராய்ந்து சொல்ல மாட்டாயா?

*காதல் அவர் இலர் ஆக நீ நோவது*
*பேதைமை—வாழி, என் நெஞ்சு !* *1242*
வாழ்க என் நெஞ்சே! அவர் நம்மிடம் காதல் இல்லாமல் இருக்கும் போது, நீ மட்டும் அவர் வருகையை எதிர்பார்த்து, வருந்துவது அறியாமையாகும்.

*இருந்து உள்ளி, என், பரிதல்?—நெஞ்சே!—பரிந்து உள்ளல்*
*பைதல் நோய் செய்தார்கண் இல்.* **1243**

மனமே! நீ என்னிடமே இருந்து கொண்டு அவரை நினைத்து வருந்துகிறாயே? இந்தத் துன்ப நோயை உண்டாக்கியவரிடம் சென்று, அவருக்கு இந்த நோயை உண்டாக்க மாட்டாயா?

*கண்ணும் கொளச் சேறி—நெஞ்சே!—இவை என்னைத்*
*தின்னும், அவர்க் காணல் உற்று!* **1244**

நெஞ்சே! நீ அப்படி அவரைக் காணச் செல்லும்போது, இந்தக் கண்களையும் உன்னோடு அழைத்துச் செல்வாயாக! அவரைக் காண வேண்டும் என்று அவை என்னைப் பிடுங்கித் தின்னுகின்றன.

*செற்றார் எனக் கைவிடல் உண்டோ—நெஞ்சே!—யாம்*
*உற்றால் உறாஅதவர்?* **1245**

என் நெஞ்சே! நாம் அவரைத் தேடிச் சென்றாலும், அவர் நம்மை விரும்பாமல் வெறுத்து விரட்டி விடுவாரானால், அதுபோல நாமும் அப்படி அவரை நினைக்காமல் விட்டு விட முடியுமா?

*கலந்து உணர்த்தும் காதலர்க் கண்டால், புலந்து உணராய்;*
*பொய்க் காய்வு காய்தி—என் நெஞ்சு!* **1246**

நெஞ்சே! உன்னை நான் அறியமாட்டேனா? புணர்ந்து, இன்பமூட்டும் காதலரைக் கண்டுவிட்டால், பிணக்கத்தை எல்லாம் விட்டு விட்டு, அவரிடம் தாவுகின்ற நீ, இப்போது எதற்காக இந்தப் பொய்ப் பிணக்கைக் காட்டுகிறாய்?

*காமம்விடு, ஒன்றோ; நாண் விடு—நல் நெஞ்சே!—*
*யானோ பொறேன், இவ் இரண்டு!* **1247**

அன்பு நெஞ்சே! நீ அவரிடம் கொண்ட காதலை விட்டு விடு, அல்லது வெட்கத்தை விட்டு விட்டு அவரிடம் போய் விடு; இந்த இரண்டையும் பொறுத்துக் கொண்டு இனி பின்னால் இருக்க முடியாது.

*பரிந்து அவர் நல்கார் என்று, ஏங்கி, பிரிந்தவர்*
*பின் செல்வாய்; பேதை—என் நெஞ்சு!* *1248*

அன்பாக உறவு கொண்டவர் வந்து, உனக்கு இன்பம் தரவில்லையே என்பதற்காக, பிரிந்து சென்ற அவர் பின்னே ஏங்கித்திரிகிறாயே, இது அறியாமை அல்லவா?

*உள்ளத்தார் காதலவர் ஆக, உள்ளி நீ*
*யாருழைச் சேறி?—என் நெஞ்சு!* *1249*

நெஞ்சே! காதலர் உன் உள்ளத்துக்குள்ளேதான் குடியிருக்கிறாரே! அப்படியிருக்கும், அவரைத்தேடிக் கொண்டு நீ எங்கே போகிறாய்?

*துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா,*
*இன்னும் இழத்தும், கவின்.* *1250*

நம்மைச் சேராமல், பிரிந்து சென்ற காதலரை, இன்னும் நெஞ்சத்தில் வைத்துக்கொண்டே ஏங்கியிருந்தால், உறுப்பு நலன் கெட்டதோடு உடல் அழகும் இன்னும் கெட்டுப்போகும்.

## 126. நிறை அழிதல்

### (தன் எண்ணங்களை அடக்க முடியாமல் வெளியே கூறுவது)

*காமக் கணிச்சி உடைக்கும்—நிறை என்னும்*
*நாணுத் தாழ் வீழ்த்த கதவு.* *1251*

பெண்களுக்கு இயல்பான நாணம் என்னும் தாழ்ப்பாளோடு கூடிய கதவை, காமவேட்கை என்னும் கோடரி உடைத்து விடுகிறது.

*காமம் என ஒன்றோ கண் இன்று! என் நெஞ்சத்தை*
*யாமத்தும் ஆளும், தொழில்* *1252*

காமம் என்று சொல்லப்படுகிற ஒன்று, இரக்கம் இல்லாமல், நள்ளிரவிலும் என் உள்ளத்தை அடக்கி ஆட்சி செய்கிறது.

*மறைப்பேன்மன் காமத்தை யானோ; குறிப்பு இன்றித்*
*தும்மல்போல் தோன்றிவிடும்.* 1253

என் காமத்தை நான் அடக்கித்தான் வைக்கிறேன் ஆனால், அது எச்சரிக்கை இல்லாமல், திடீரென்று தும்மல் வருவதுபோல் அடக்கவே முடியாமல் வெளிப்பட்டு விடுகிறதே! என்ன செய்வேன்!

*நிறை உடையேன் என்பேன்மன், யானோ; என் காமம்,*
*மறை இறந்து, மன்றுபடும்.* 1254

நான், 'காமத்தை அடக்கும் திறமை உடையவள்' என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அப்போதே என் காமம் மறைவிடத்திலிருந்து வெளியே வந்து என் சொல்லைப் பொய்யாக்கி விடுகிறது.

*செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை, காம நோய்*
*உற்றார் அறிவது ஒன்று அன்று.* 1255

தன்னை விட்டுப் பிரிந்து சென்றவர் பின்னே, ஏங்கித் திரியாமல், இருக்கும் மன உறுதி, காமநோய் அடைந்தவருக்குத் தெரியாத ஒன்று.

*செற்றவர்பின் சேறல் வேண்டி,—அளித்துஅரோ !—*
*எற்று, என்னை உற்ற துயர் ?* 1256

என்னைவிட்டுப் பிரிந்து சென்றவர் பின்னே வெட்கத்தை விட்டு, நான்திரிய வேண்டியிருக்கிறது என்றால், எனக்கு உண்டான காமநோய் எத்தகையதாயிருக்கும்?

*நாண் என ஒன்றோ அறியலம்—காமத்தான்,*
*பேணியார் பெட்ப செயின்.* 1257

என்னைப் போலவே, என் காதலரும் காம ஆசையோடு என்னைப் புணர்ந்து என் ஆசையைப் பூர்த்தி செய்கிற போது, இந்த வெட்கத்தை மட்டும் அல்ல எல்லாவற்றையுமே மறந்து விடுகிறேன்.

*பல மாயக் கள்வன் பணிமொழி அன்றோ—நம்*
*பெண்மை உடைக்கும் படை!* 1258

பெண்ணின் கட்டுப்பாட்டை உடைத்து, அழிக்கின்ற ஆயுதம் என்ன என்றால், பல பொய்களைப் பேசுவதில், வல்லவரான உள்ளம் கவர் கள்வரான காதலரின் பணிவான சொற்களே அல்லவா?

*'புலப்பல்' எனச் சென்றேன்; புல்லினேன், நெஞ்சம்*
*கலத்தல் உறுவது கண்டு.* 1259

என் காதலர் வந்ததும், அவரோடு இணங்குவதில்லை. ஊடுவதே சரி என்று நினைத்துத்தான் சென்றேன். ஆனால், அவர் வந்ததும் என் நெஞ்சமோ, என்னை விட்டு அவரோடு சேர்ந்துவிட்ட பிறகு, நான் என்ன செய்வேன்? எனவே, அவரைத் தழுவிக் கொண்டேன்.

*நிணம் தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ—*
*புணர்ந்து ஊடி நிற்பேம் எனல்?—* 1260

தீயில் இட்ட கொழுப்பைப்போல உருகும் உள்ளம் கொண்ட என் போன்ற பெண்களுக்கு, காதலரை எதிரே கண்டபிறகு, கூடாமல் ஊடி நிற்பது என்பது நடக்கக் கூடிய செயலா?

## 127. அவர்வயின் விதும்பல்

### காணவேண்டிய வேட்கையில் காதலி கூறுவது

*வாள் அற்றுப் புற்கென்ற, கண்ணும்; அவர் சென்ற*
*நாள் ஒற்றித் தேய்ந்த, விரல்.* 1261

என் காதலர் வரும் வழியைப் பார்த்துப் பார்த்து என் கண்கள் ஒளி இழந்து, அழகை இழந்தன. அவர் பிரிந்து சென்ற நாள்களைச் சுவரில் குறிவைத்துத் தொட்டு, எண்ணுவதால், என் விரல்களும் தேய்ந்து போய் விட்டன.

*இலங்கிழாய்! இன்று மறப்பின், என் தோள்மேல்*
*கலம் கழியும், காரிகை நீத்து.* *1262*

தோழி! என் காதலரை இன்றும் மறப்பேனானால் மேலும், என் அழகும் நீங்கும். என் தோள் வளைகள் கழலும்படி மெலிந்து போகும்.

*உரன் நசைஇ, உள்ளம் துணையாகச் சென்றார்*
*வரல் நசைஇ, இன்னும் உளேன்.* *1263*

ஊக்கத்தையே துணையாகக் கொண்டு, வெற்றியை விரும்பி, தொலை தூரம் சென்ற என் காதலர், திரும்பி வருவதை விரும்பி, இன்னும் நான் உயிரோடு இருக்கின்றேன்.

*கூடிய காமம் பிரிந்தார் வரவு உள்ளி,*
*கோடு கொடு ஏறும், என் நெஞ்சு.* *1264*

பிரிந்து சென்ற என் காதலர் வருவார் என்று நினைத்து, அவர் வருகையை எதிர்பார்த்து, என் நெஞ்சம் மரத்தின் கிளைகளின் மேலும் ஏறிப் பார்க்கிறது.

*காண்கமன், கொண்கனைக் கண் ஆர; கண்டபின்,*
*நீங்கும், என் மென் தோட் பசப்பு.* *1265*

என் காதலரைக் கண்ணாரக் காண்பேனாக, கண்டபின், என் மென்மையான தோள்களின் பசலை நிறம் நீங்கி விடும்.

*வருகமன், கொண்கன் ஒருநாள்; பருகுவன்,*
*பைதல்நோய் எல்லாம் கெட.* *1266*

என்னைப் பிரிந்து சென்ற காதலர், ஒரு நாள் என்னிடம் வருவாராக வந்த பிறகு, என்னைத் துன்புறுத்துகின்ற நோய் முழுவதும் தீர, அவருடன் இன்பம் நுகர்வேன்.

*புலப்பேன்கொல்—புல்லுவேன் கொல்லோ—*
*கலப்பேன்கொல்—*
*கண் அன்ன கேளிர் வரின்?* *1267*
என் கண்ணுக்கு இனிய காதலர் வந்தால், பிணங்குவேனா? தழுவிக்கொள்வேனா? இந்த இரண்டையுமே செய்வேனா? என்னதான் செய்யப் போகிறேன்?

*வினை கலந்து வென்றீக, வேந்தன்! மனை கலந்து*
*மாலை அயர்கம், விருந்து!* *1268*
மன்னன் இந்தப் போரில் வெற்றிவாகை சூடுவானாக! நானும் அவரோடு திரும்பச் சென்று, காதலியைக்கூடி, மாலைப் பொழுதுக்கு விருந்து வைப்போம்.

*ஒருநாள் எழு நாள்போல் செல்லும்—சேண் சென்றார்*
*வரு நாள் வைத்து ஏங்குபவர்க்கு.* *1269*
தனியே தவிக்க விட்டு, தொலை தூரம் சென்ற காதலரை நினைத்து, ஏங்கிக் கொண்டிருக்கும் காதல் மகளிருக்கு, ஒருநாள் என்பது ஏழு நாள்களைப் போல் நீள்கிறது.

*பெறின் என் ஆம்—பெற்றக்கால் என் ஆம்—உறின் என்*
*ஆம்—*
*உள்ளம் உடைந்து உக்கக்கால்?* *1270*
பிரிவை நினைத்து, காதலி வேதனையால், மனம் உடைந்து விட்டால் அதன்பின், நம்மைப் பெறுவதால் தான் என்ன? பெற்றால் தான் என்ன? பெற்றுத் தழுவினாலும் என்ன பயன்?

# 128. குறிப்பு அறிவுறுத்தல்

## (குறிப்பினால் அறிந்து, உணர்ச்சியைக் கூறுவது)

*கரப்பினும், கையிகந்து ஒல்லா, நின் உண்கண்*
*உரைக்கல் உறுவது ஒன்று உண்டு.* *1271*
நீ சொல்லாமல் மறைத்தாலும், உன்னையும் மீறி, மைதீட்டிய உன் கண்கள் எனக்குச் சொல்லக் கூடிய செய்தி ஒன்று இருக்கிறது.

*கண் நிறைந்த காரிகை, காம்பு ஏர் தோள், பேதைக்குப்*
*பெண் நிறைந்த நீர்மை பெரிது.* *1272*
கண் நிறைந்த கட்டழகும், மூங்கில் போன்ற அழகான தோள்களை யும் உடைய காதலிக்குப் பெண் தன்மை நிறைந்து விளங்கும் இயல்பு, மிகுதியாக உள்ளது.

*மணியுள் திகழ்தரும் நூல்போல், மடந்தை*
*அணியுள் திகழ்வது ஒன்று உண்டு.* *1273*
மணிச்சரத்தின் உள்ளே காணப்படுகின்ற நூலைப் போல, காதலியின் அழகுக்குள்ளும் அழகாக இழைவது ஒன்று உள்ளது.

*முகை மொக்குள் உள்ளது நாற்றம்போல், பேதை*
*நகை மொக்குள் உள்ளது ஒன்று உண்டு.* *1274*
இதழ் விரித்து அரும்பு மலரும்போது, அதன் உள்ளே அடங்கியிருக்கும் மணம்போல, காதலியின் புன்சிரிப்பிலும் ஒரு கருத்து அடங்கி உள்ளது.

*செறிதொடி செய்து இறந்த கள்ளம், உறு துயர்*
*தீர்க்கும் மருந்து ஒன்று உடைத்து.* *1275*
காதலி, மறைவாகச் செய்துவிட்டுச் சென்ற கள்ளக் குறிப்பில், என் துன்பத்தைத் தீர்க்கும் மருந்து ஒன்று உள்ளது.

*பெரிது ஆற்றிப் பெட்பக் கலத்தல், அரிது ஆற்றி,*
*அன்பு இன்மை சூழ்வது உடைத்து* *1276*

மிகவும் அன்பு செலுத்தி, அதிகமாக விரும்பும்படி கூடுதல், அரிதாகிய பிரிவை உண்டாக்கி, பிறகு அன்பு இல்லாமல், கைவிட நினைப்பதற்கான குறிப்பை உடையதாகும்.

*தண்ணந் துறைவன் தணந்தமை, நம்மினும்*
*முன்னம் உணர்ந்த, வளை.* *1277*

குளிர்ந்த துறையை உடைய அழகான காதலர், நம்மை விட்டுப் பிரிந்து சென்றது, நமக்கு முன்னே, நம் கை வளையல்களுக்குத் தெரிந்து விட்டன போலும்! அதனால் தான் கையைவிட்டுக் கழன்று ஓடிவிட்டன.

*நெருநற்றுச் சென்றார் எம் காதலர்; யாமும்*
*எழு நாளேம், மேனி பசந்து!* *1278*

என்னுடைய காதலர், நேற்றுத்தான் என்னைவிட்டுப் பிரிந்து சென்றார் ஆயினும், என் மேனி பசலை நிறம் அடைந்து, ஏழு நாள்கள் ஆகிவிட்ட நிலையில் இருக்கின்றேன்.

*தொடி நோக்கி, மென் தோளும் நோக்கி, அடி நோக்கி,*
*அஃது, ஆண்டு அவள் செய்தது.* *1279*

கைவளையல்களைப் பார்த்து, மென்மையான தோள்களைப் பார்த்து, தன் பாதங்களைப் பார்த்து, அங்கே அவள் செய்த குறிப்பானது என்னுடன் வருவதற்குக் காட்டிய குறிப்பாகும்.

*பெண்ணினான் பெண்மை உடைத்து என்ப—கண்ணினான்*
*காம நோய் சொல்லி இரவு.* *1280*

மகளிர், தமது காம நோயைக் கண்ணால் தெரிவித்து, தம்மை விட்டுப் பிரியாமல் இருக்கும்படி, காதலரை வேண்டிக்கொள்வது, பெண் தன்மைக்கு பெருமை தருவது என்று கூறுவர்.

## 129. புணர்ச்சி விதும்பல்

(காதலனும் காதலியும் கூடி வாழஆசைப்படுவது)

*உள்ளக் களித்தலும், காண மகிழ்தலும்,*
*கள்ளுக்கு இல்; காமத்திற்கு உண்டு.* *1281*

நினைத்த உடனே களிப்படையச் செய்வதும், கண்டவுடன் மகிழ்ச்சி அடையச் செய்வதும், மது அருந்துவோர்க்குக் கிடையாது. ஆனால், இந்த இருவகைத் தன்மையும், காமம் உள்ளவர்களுக்கு உண்டு. (நினைத்தாலும், பார்த்தாலும் இன்பம் தரும்)

*தினைத் துணையும் ஊடாமை வேண்டும்—பனைத் துணையும்*
*காமம் நிறைய வரின்.* *1282*

பெண்களுக்கு காம இன்ப வேட்கை, பனையளவிலும் மிகுதியாக உண்டாகி விடுமானால், தம் காதலரோடு தினை அளவும் பிணங்காமல் இருக்க வேண்டும்.

*பேணாது பெட்பவே செய்யினும், கொண்கனைக்*
*காணாது அமையல, கண்.* *1283*

காதலர் என்னை விரும்பாமல் புறக்கணித்து, அவர் விரும்பியதையே செய்வாரானாலும், என் கண்கள், அவரைக் காணாமல் இருக்க மாட்டேன் என்கின்றனவே.

*ஊடற்கண் சென்றேன்மன்;—தோழி !—அது மறந்து*
*கூடற்கண் சென்றது, என் நெஞ்சு.* *1284*

தோழி! காதலரின் குற்றத்தை நினைத்து அவருடன் ஊடுவதற்காகத் தான் சென்றேன். ஆனால், அந்த நோக்கத்தை மறந்து விட்டு, என் நெஞ்சம் அவரோடு கூடுவதற்காகச் சென்று விட்டது.

*எழுதுங்கால் கோல் காணாக் கண்ணேபோல், கொண்கன்*
*பழி காணேன், கண்ட இடத்து.* *1285*

கண்ணுக்கு மைதீட்டும்போது, கோலைக் காணாத கண்களைப்போல், காதலரைக் கண்டதுமே, அவருடைய குற்றத்தை நினைக்காமல், மறந்து விடுகின்றேன்.

*காணுங்கால் காணேன் தவறு ஆய; காணாக்கால்,*
*காணேன், தவறு அல்லவை.* *1286*

காதலரைக் காணும்போது, அவரிடம் குற்றங்களைக் காண்பதில்லை. அவரைக் காணாதபோது, குற்றங்களைத் தவிர, வேறு ஒன்றையும் அவரிடம் காண்பதில்லை நான்.

*உய்த்தல் அறிந்து புனல் பாய்பவரேபோல்,*
*பொய்த்தல் அறிந்து, என் புலந்து?* *1287*

வெள்ளம் நம்மை இழுத்துச் செல்லும் என்பதை அறிந்திருந்தும், அந்த வெள்ளத்தில்பாய்வாரைப்போல், நமது ஊடல் நிலைக்காது என்பதை அறிந்தும், ஊடுவதனால் என்ன பயன்?

*இளித்தக்க இன்னா செயினும், களித்தார்க்குக்*
*கள் அற்றே—கள்வ!—நின் மார்பு.* *1288*

என் உள்ளம் கவர் கள்வ! உன் மார்பு. வெறுக்கத்தக்க துன்பங்களைச் செய்தாலும், குடிகாரர் மேலும் மேலும் குடிக்க விரும்பும் மதுவைப்போல, உன் மார்பு என்னால் விரும்பப்படுகிறது.

*மலரினும் மெல்லிது காமம்; சிலர், அதன்*
*செவ்வி தலைப்படுவார்.* *1289*

காமம் என்பது, பூவிலும் மென்மையுடையது அதன் சிறப்பை அறிந்து, அனுபவிப்பவர் உலகில் மிகச் சிலரே!

*கண்ணின் துனித்தே, கலங்கினாள், புல்லுதல்*
*என்னினும் தான் விதுப்புற்று.* *1290*

என் காதலி தன் கண்ணினால் மட்டுமே ஊடுதல் குறிப்பைக் காட்டினாள்; என்னைக் கண்ட உடனே, என்னை விட, தான் விரைந்து கலங்கினாள். ஊடலை மறந்தாள். என்னைத் தழுவிக் கொண்டாள்.

# 130. நெஞ்சொடு புலத்தல்
## (மனம் வேகமாக ஓடுவதைக் கண்டு கோபப்படுவது)

*அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும், எவன்,—நெஞ்சே!—*
*நீ எமக்கு ஆகாதது?* *1291*
மனமே! அவருடைய மனம், நம்மை நினையாமல், அவருக்குத் துணையாய் நிற்பதை அறிந்தும், நீ எமக்குத் துணையாய் நிற்காதது ஏன்?

*உறாஅதவர்க் கண்ட கண்ணும், அவரைச்*
*செறாஅர் எனச் சேறி—என் நெஞ்சு!* *1292*
நெஞ்சே! நீ என்னிடம் அன்பு இல்லாதவர் என்று அறிந்த போதும், அவர் வெறுக்கமாட்டார் என்று நினைத்து அவரை அடைகின்றாய்!

*'கெட்டார்க்கு நட்டார் இல்' என்பதோ—நெஞ்சே!—நீ*
*பெட்டாங்கு அவர்பின் செலல்?* *1293*
மனமே! நீ என்னிடம் நில்லாமல், விரும்பியபடி, அவரிடம் செல்வதற்குக் காரணம், துன்பத்தால் துயர் அடைந்தவருக்கு நண்பர் இல்லை என்னும் எண்ணமோ!

*இனி, அன்ன நின்னொடு சூழ்வார் யார்—நெஞ்சே!*
*துனி செய்து துவ்வாய்காண் மற்று?* *1294*
நெஞ்சே! நீ அவரிடம் ஊடல் செய்து, பிறகு, இன்பம் நுகரமாட்டாய். ஆதலால், இனி அப்படிப்பட்டவைகளை உன்னுடன் கலந்து பேசி ஆலோசிப்பவர் யார்?

*பெறாஅமை அஞ்சும்; பெறின், பிரிவு அஞ்சும்;*
*அறாஅ இடும்பைத்து—என் நெஞ்சு.* *1295*
காதலர் இல்லாதபோது, அவர் வரவில்லையே என்று கவலை கொள்ளச் செய்கிறது. அவர் வந்துவிட்டால், பிரிந்து போய்விடுவாரோ என்று கவலையாயிருக்கிறது. இப்படியாக, என் மனம் ஓயாத துன்பத்தை உடையதாக இருக்கிறது.

*தனியே இருந்து நினைத்தக்கால், என்னைத்*
*தினிய இருந்தது—என் நெஞ்சு.* *1296*

காதலர் இல்லாமல், நான் தனியாக இருந்து, அவர் செய்த தவறுகளை நினைத்தபோது, என் மனம் என்னைத் தின்பதுபோல், துன்பம் செய்வதாகிறது.

*நாணும் மறந்தேன்—அவர் மறக்கல்லா என்*
*மாணா மட நெஞ்சின் பட்டு.* *1297*

என் காதலரை மறக்க முடியாத என் மட நெஞ்சோடு சேர்ந்து, என் உயிரினும் மேலான நாணத்தையும் மறந்து விட்டேன்.

*'எள்ளின், இளிவாம்' என்று எண்ணி, அவர் திறம்*
*உள்ளும்—உயிர்க் காதல் நெஞ்சு.* *1298*

உயிரின்மேல் காதல் உள்ள என் மனம், பிரிந்து சென்ற காதலரை இகழ்ந்து பேசினால், அது நமக்கே இழிவாகும் என்று நினைத்து, அவருடைய உயர்ந்த பண்புகளையே நினைக்கின்றது மனம்.

*துன்பத்திற்கு யாரே துணை ஆவார்—தாம் உடைய*
*நெஞ்சம் துணை அல்வழி?* *1299*

துன்பம் உண்டானபோது, அதை நீக்குவதற்கு, நம்முடைய மனம் துணைபுரியாதபோது, வேறு யார்தான் வந்து துணை புரிவார்?

*தஞ்சம், தமர் அல்லர் ஏதிலார்—தாம் உடைய*
*நெஞ்சம் தமர் அல்வழி.* *1300*

ஒருவருக்குத் தம்முடைய மனமே உறவு ஆகாதபோது, அயலார் வந்து உறவு கொள்ளாமல் இருப்பது இயல்பானதே ஆகும்.

# 131. புலவி

## (இன்பத்தை நீடித்து துய்ப்பதற்கு சிறிது கோபம் கொள்வது)

*புல்லாது இராஅப் புலத்தை; அவர் உறும்*
*அல்லல் நோய் காண்கம், சிறிது.* *1301*

மனமே, அந்தக் காதலர் அடையும் துன்ப நோயைச் சிறிது காண்போம். ஆதலால், அவரைத் தழுவிக் கொள்ளாமல் இருந்து பிணங்குவாயாக!

*உப்பு அமைந்தற்றால், புலவி; அது சிறிது*
*மிக்கற்றால், நீள விடல்* *1302*

கலவியில் பிணங்குவது, உணவில் உப்புச் சேர்ப்பதைப் போலச் சுவை அளிப்பது. ஆனால், அந்தப் பிணக்கத்தை அளவுக்கு அதிகமாக நீள விட்டால், அந்த உப்பு, அதிகமாகிவிட்ட உணவுபோல் சுவை கெட்டுப்போகும்.

*அலந்தாரை அல்லல் நோய் செய்தற்றால்—தம்மைப்*
*புலந்தாரைப் புல்லா விடல்.* *1303*

தம்முடன் ஊடிய மகளிரை, அவர் ஊடலை நீக்கித் தழுவிக் கொள்ளாமல் இருப்பது, துன்பத்தால் வருந்தியவரை மேலும் மிகுந்த துன்புறச் செய்ததுபோல் ஆகும்.

*ஊடியவரை உணராமை—வாடிய*
*வள்ளி முதல் அரிந்தற்று.* *1304*

ஊடலால் பிணங்கியவரை, ஊடல் உணர்த்தி, கூடி மகிழ்விக்காமல், விட்டுவிடுவது, எப்படிப்பட்டது என்றால், ஏற்கனவே, நீர் இன்றி வாடிப் போயிருக்கும் கொடியைக் கத்தி கொண்டு வேரில் அறுப்பது போல் ஆகும்.

*நலத்தகை நல்லவர்க்கு ஏஎர், புலத் தகை,*
*பூ அன்ன கண்ணார் அகத்து.* *1305*
நல்ல குணங்களை உடைய நல்ல ஆடவருக்கு அழகு, மலர் போன்ற கண்களை உடைய மங்கை நல்லாள் நெஞ்சில் உண்டாகும் ஊடலின் மிகுதியே ஆகும்.

*துனியும் புலவியும் இல்லாயின், காமம்*
*கனியும் கருக்காயும் அற்று.* *1306*
பெரிய பிணக்கும், சிறிய ஊடலும் இல்லையானால், அந்தக் காம இன்பமானது பழுத்த பழமும் இளம் காயும் போல, பயன்படாமல் போகும்.

*ஊடலின் உண்டு ஆங்கு ஓர் துன்பம்—'புணர்வது*
*நீடுவது அன்றுகொல்!' என்று.* *1307*
கூடியிருக்கும் இன்பமானது, நீட்டித்து இருக்குமோ, இல்லையோ என்று ஏங்கி நினைப்பதால், கூடியிருத்தலிலும், காதலருக்கு ஒருவகைத் துன்பம் இருக்கின்றது.

*நோதல்எவன், மற்று--'நொந்தார்' என்று அஃது அறியும்*
*காதலர் இல்லாவழி!* *1308*
இவர் நம்மால் வருந்தினார் என்ற அந்த வருத்தத்தை அறிகின்ற காதலர் இல்லாதபோது, வருந்துவதால் பயன் என்ன?

*நீரும் நிழலது இனிதே; புலவியும்*
*வீழுநர்கண்ணே இனிது.* *1309*
தண்ணீரும் நிழலும் அடுத்தடுத்து இருப்பதே இனிமையானது. அதுபோல், ஊடலும் அன்புள்ளவரிடத்திலே இருப்பது இன்பத்தைத் தரும்.

*ஊடல் உணங்க, விடுவாரொடு, என் நெஞ்சம்,*
*'கூடுவேம்' என்பது அவா.* *1310*
ஊடல் கொண்டு பிணங்கியபோது அதை உணர்த்தி மகிழ்விக்காமல் வாட விட்டவரோடு என் மனம் கூடியிருக்க முயற்சிப்பதற்குக் காரணம் அதன் ஆசையே!

## 132. புலவி நுணுக்கம்

**(பொய்க் காரணம் கூறி, இன்பத்தை அதிகரிப்பது)**

*பெண் இயலார் எல்லாரும் கண்ணின் பொது உண்பர்;*
*நண்ணேன்—பரத்த !—நின் மார்பு.* *1311*

பரத்தையரிடம் (விலைமகளிரிடம்) போகின்றவனே! பெண் தன்மை உள்ளவர் எல்லோரும், தம் கண்களால், பொதுப் பொருளாகக் கொண்டு, உன்னை நுகர்கின்றார்கள். ஆகையால், உன் மார்பை நான் தழுவிக்கொள்ள மாட்டேன்.

*ஊடி இருந்தேமா, தும்மினார்—யாம் தம்மை,*
*'நீடு வாழ்க !' என்பார்க்கு அறிந்து.* *1312*

அவரும் நானும் ஊடிக்கொண்டிருந்தபோது, நான் அவரை, 'நீண்ட நாள் வாழ்க' என்று வாழ்த்துவேன் என்று அவர் தும்மினார்.

*கோட்டுப் பூச் சூடினும் காயும்—'ஒருத்தியைக்*
*காட்டிய சூடினீர் !' என்று.* *1313*

நான் அழகான மலர்மாலையை அணிந்தாலும், 'வேறு ஒருத்திக்குக் காட்டுவதற்காகவே இதை அணிந்துள்ளீர்' என்று கூறி, என்மீது சினம் கொள்வாள் என்காதலி.

*'யாரினும் காதலம்' என்றேனா, ஊடினாள்—*
*'யாரினும் ! யாரினும் !' என்று.* *1314*

'யாரையும்விட நாம் மிகுந்த காதல் கொண்டிருக்கிறோம்' என்று சொன்னேன். என்னால் காதலிக்கப்பட்ட வேறு ஒருத்தி இருப்பதாக எண்ணி, உடனே என் காதலி, 'யாரைவிட யாரைவிட' என்று கேட்டு என்னுடன் பிணங்கினாள்.

*'இம்மைப் பிறப்பில் பிரியலம்' என்றேனா,*
*கண் நிறை நீர் கொண்டனள்.* *1315*

'இப்பிறப்பில் பிரியமாட்டோம்' என்றேன். உடனே 'மறுபிறவியில் பிரிவோமா' என்று வருந்திக் கண்ணீர் விடலானாள் என் காதலி.

*'உள்ளினேன்' என்றேன்; 'மற்று என் மறந்தீர்' என்று என்னைப்*
*புல்லாள், புலத்தக்கனள்.* *1316*

நான் 'பிரிந்திருந்தபோது, உன்னை நினைத்தேன்' என்றேன். உடனே அவள், மறந்தால்தானே நினைக்க வேண்டும்; ஏன் மறந்தீர்? என்று சொல்லி என்னைத் தழுவாமல் ஊடினாள்.

*வழுத்தினாள், தும்மினேனாக; அழித்து அழுதாள்,*
*'யார் உள்ளித் தும்மினீர்?' என்று.* *1317*

என் காதலியுடன் சேர்ந்திருந்தபோது, நான் தும்மினேன் உடனே அவள் 'நூறாண்டு' என வாழ்த்தினாள். உடனே, 'யாரை நினைத்துத் தும்மினீர்?' என்று அழுது ஊடினாள்.

*தும்முச் செறுப்ப, அழுதாள், 'நுமர் உள்ளல்*
*எம்மை மறைத்திரோ?' என்று.* *1318*

காதலியின் ஊடலுக்குப் பயந்து, வந்த தும்மலை நான் அடக்கினேன். உடனே, 'உம்முடைய காதலிகள், உம்மை நினைப்பதை, எனக்கு மறைக்கின்றீரோ?' என்று அழுதாள்.

*தன்னை உணர்த்தினும் காயும், 'பிறர்க்கும் நீர்*
*இந் நீரர் ஆகுதிர்!' என்று.* *1319*

காதலியின் ஊடலை உணர்த்தி, அவளை மகிழ்வித்த போதிலும், 'நீர் பிறமகளிரிடமும் இப்படித்தான் செய்வீர்' என்று சொல்லி கோபம் கொள்வாள்.

*நினைத்திருந்து நோக்கினும், காயும், 'அனைத்தும் நீர்*
*யார் உள்ளி நோக்கினீர்?' என்று.* *1320*

நான் பேசாமல் அவளுடைய அழகான உறுப்புக்களைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தாலும், 'என் உறுப்புக்கள், யாருடைய உறுப்புக்களுக்கு ஒப்பாகாது என்று பார்க்கின்றீர்' என்று சொல்லிக் கோபிப்பாள்.

## 133. ஊடல் உவகை
## (பிரிவும் ஊடலும் இன்பத்துக்கு காரணமாக அமையும்)

*இல்லை தவறு அவர்க்கு ஆயினும், ஊடுதல்*
*வல்லது, அவர் அளிக்குமாறு.* *1321*

காதலரிடம் தவறு ஒன்றும் இல்லையானாலும், அவரோடு ஊடுதல், அவர் நம்மீது மிகுதியாக அன்பு செலுத்தும்படி செய்யும்.

*ஊடலின் தோன்றும் சிறு துனி, நல் அளி*
*வாடினும், பாடு பெறும்.* *1322*

ஊடல் காரணமாக உண்டாகும் சிறு துன்பம், காதலர் செய்கின்ற சிறந்த அன்பு வாடினாலும், அது பெருமை பெறும்.

*புலத்தலின் புத்தேள்–நாடு உண்டோ–நிலத்தொடு*
*நீர் இயைந்தன்னாரகத்து?* *1323*

நிலமும் நீரும் கலந்ததுபோன்ற ஒற்றுமை உள்ள காதலரிடம் பிணங்குவதுபோல் இன்பம் தருகின்ற தேவலோகம் இருக்கின்றதா?

*புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்–என்*
*உள்ளம் உடைக்கும் படை.* *1324*

காதலரை விடாமல், தழுவுவதற்குக் காரணமாகிய ஊடலிலே தான், என் உள்ளத்தை உடைத்து அவரிடம் ஈடுபடுத்தக்கூடிய ஆயுதம் உள்ளது.

*தவறு இலர்ஆயினும், தாம் வீழ்வார் மென் தோள்*
*அகறலின், ஆங்கு ஒன்று உடைத்து.* *1325*

ஆடவர் குற்றம் இல்லாதவர் ஆயினும், குற்றம் உள்ளவர் போல் எண்ணப்பட்டு, தம்மால் விரும்பப் படும் மகளிரின் மென்மையான தோள்களைத் தழுவாமல், நீங்கியிருக்கும் போதும் ஓர் இன்பம் உள்ளது.

*உணலினும், உண்டது அறல் இனிது; காமம்*
*புணர்தலின் ஊடல் இனிது.* 1326

மேலும் உண்பதைவிட, முன் உண்டது செரிப்பது, இன்பமாகும். அதுபோல, மேலும் காமத்தில் கூடுவதை விட, ஊடுதல் காமத்துக்கு இன்பமாகும்.

*ஊடலின் தோற்றவர் வென்றார்; அது மன்னும்*
*கூடலின் காணப்படும்.* 1327

ஊடலில் தோற்றவரே வெற்றி பெற்றவர் ஆவார். அது ஊடல் முடிந்தபின், கூடிமகிழும் நிலையில் தெரிய வரும்.

*ஊடிப் பெறுகுவம் கொல்லோ—நுதல் வெயர்ப்பக்*
*கூடலின் தோன்றிய உப்பு!* 1328

இவளுடைய நெற்றி வியர்க்கும்படி கூடியதனால் உண்டான இன்பத்தை, இவள் மீண்டும் ஊடியிருக்கும் போதுதான் அடைவோமோ?

*ஊடுக மன்னோ, ஒளியிழை! யாம் இரப்ப,*
*நீடுக மன்னோ, இரா!* 1329

ஒளிமிக்க ஆபரணங்களை அணிந்த காதலி, என்னோடு இன்னும் ஊடுவாளாக! இவள் ஊடல் தீர, இவளைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வதற்காக, இரவு நேரம் நீடித்து இருக்க வேண்டும்.

*ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கு இன்பம்,*
*கூடி முயங்கப் பெறின்.* 1330

காமத்துக்கு இன்பம் அளிப்பது ஊடுதலாகும். அந்த ஊடல் முடிந்தபின், கூடித் தழுவப் பெற்றால், அது ஊடலுக்கு இன்பமாகும்.

# குறள் முதல்குறிப்பு அகரவரிசை

## (எண்: செய்யுள் எண்)


| | |
|---|---|
| அஃகாமை | 178 |
| அஃகி அகன்ற | 175 |
| அகடு ஆரார் | 936 |
| அகப்பட்டி | 1074 |
| அகரமுதல | 1 |
| அகலாது | 691 |
| அகழ்வாரைத் | 151 |
| அகன்அமர்ந்து | 92 |
| அகன் அமர்ந்செய் | 84 |
| அங்கணத்துள் | 720 |
| அசைஇயல்கு | 1098 |
| அச்சமுடையார்க்கு | 534 |
| அச்சமே கீழ் | 1075 |
| அஞ்சாமை அல் | 497 |
| அஞ்சாமை ஈகை | 382 |
| அஞ்சும் அறியான் | 863 |
| அஞ்சுவது அஞ்சாமை | 428 |
| அஞ்சுவதோரும் | 366 |
| அடக்கம் | 121 |
| அடல் வேண்டும் | 343 |
| அயற்றகையும் | 768 |
| அடுக்கிய கோடி | 954 |
| அடுக்கிவரினும் | 625 |
| அடுத்தது | 706 |
| அணங்குகொல் | 1081 |
| அணி அன்றோ | 1014 |
| அந்தணர் | 30 |
| அந்தணர் நூற்கும் | 543 |
| அமரகத்து ஆற் | 814 |
| அமரகத்துவன் | 1027 |
| அமிழ்தினும் | 64 |
| அமைந்தாங்கு | 474 |
| அரங்கு இன்றி | 401 |
| அரம்பொருத | 888 |
| அரம்போலும் | 997 |
| அரிது அரோ | 1153 |
| அரிது ஆற்றி | 1160 |
| அரிய என்று | 537 |
| அரிய கற்று | 503 |
| அரியவற்றுள் | 443 |
| அரும் கேடன் | 210 |
| அரும் செவ்வி | 565 |
| அருள் செல்வம் | 241 |
| அருமறை | 847 |
| அருமை உடைத் | 611 |
| அரும் பயன் | 198 |
| அருவினை | 483 |
| அருள் அல்லது | 254 |
| அருள் இல்லார்க்கு | 247 |
| அருள் என்னும் | 757 |
| அருளொடும் | 755 |
| அருள் கருதி | 285 |
| அருள் சேர்ந்த | 243 |
| அருள் வெஃகி | 176 |
| அலந்தாரை | 1303 |
| அலரெழ ஆருயிர் | 1141 |
| அலர் நாண | 1149 |

| | |
|---|---|
| அல்லல் அருள் | 245 |
| அல்லவை தேய | 96 |
| அல்லல் பட்டு | 555 |
| அவர் தந்தார் | 1182 |
| அவர்நெஞ்சு | 1291 |
| அவா இல்லார்க்கு | 368 |
| அவா என்ப | 361 |
| அவா வினைஆற்ற | 367 |
| அவிசொரிந்து | 259 |
| அவை அறிந்து | 711 |
| அவை அறியார் | 713 |
| அவ்வித்து | 167 |
| அவ்விய | 169 |
| அழக்கொண்ட | 659 |
| அழச்சொல்லி | 795 |
| அழல்போலும் | 1228 |
| அழிவதூஉம் | 461 |
| அழிவந்த | 807 |
| அழிவின்அவை | 787 |
| அழிவுஇன்று | 764 |
| அழுக்கற்று | 170 |
| அழுக்காறு அவா | 35 |
| அழுக்காறு உடை | 165 |
| அழுக்காறு உடையான் | 135 |
| அழுக்காறு என | 168 |
| அழுக்காற்றின் | 164 |
| அளவு அல்ல | 289 |
| அளவளாவில்லா | 523 |
| அளவுஅறிந்தார் | 288 |
| அளவு அறிந்து | 479 |
| அளவின் கண் | 286 |
| அளித்து அஞ்சல் | 1154 |
| அறம்கூறான் | 181 |
| அறம் சாரா | 1047 |
| அறம் சொல்லும் | 185 |
| அறத்து ஆறுஇது | 37 |
| அறத்து ஆற்றின் | 46 |
| அறத்தான் | 39 |
| அறத்திற்கே | 76 |
| அறத்தின் ஊங்கு | 32 |
| அறம் பொருள் | 501 |
| அற ஆழி | 8 |
| அறவினை யாது | 321 |
| அறவினையும் | 909 |
| அறன் அழீஇ | 182 |
| அறன் அறிந்து ஆன் | 635 |
| அறன் அறிந்து மூத் | 441 |
| அறன் அறிந்து வெஃ | 179 |
| அறன் இயலான் | 147 |
| அறன் இழுக்கா | 384 |
| அறன் எனப் | 49 |
| அறன் ஆக்கம் | 163 |
| அறன் ஈனும் | 754 |
| அறன்கடை | 142 |
| அறன் நோக்கி | 189 |
| அறன் வரையான் | 150 |

அறிகிலார் 1139
அறிகொன்று 638
அறிதோறு 1110
அறிந்துஆற்றிச் 515
அறிவற்றங் 421
அறிவிலார் 843
அறிவிலான் 842
அறிவினான் 315
அறிவினுள் 203
அறிவு இன்மை 841
அறிவு உடையார் ஆவ 427
அறிவு உடையார் எல் 430
அறிவு உருஆ 684
அறுவாய் 1117
அறைபறை 1076
அற்கா இயல் 333
அற்றது அறிந்து 944
அற்றம் மறைக்கும் 980
அற்றம் மறைத்தலோ 846
அற்றவர் என்பார் 365
அற்றாரைத் 506
அற்றார்அழிபசி 226
அற்றார்க்குஒன்று 1007
அற்றால் அளவறிந்து 943
அற்றேமென்று 626
அனிச்சப்பூக் 1115
அனிச்சமும் 1120
அன்பகத்தில்லா 78
அன்பறிவு ஆராய்ந்த 682
அன்பறிவு தேற்றம் 513
அன்பிலன் 862
அன்பிலார் 72
அன்பிற்கும் 71
அன்பின் வழியது 80
அன்பின் விழைவார் 911
அன்பு ஈனும் 74
அன்பு உடைமை 992
அன்பு உடைமை 681
அன்பு நாண் 983
அன்பும் அறனும் 45
அன்புற்று அமர்ந்த 75
அன்பு ஒரீஇத் 1009
அன்போடு இயைந்த 73
அன்று அறிவாம் 36
ஆகு ஆறுஅளவு 476
ஆகுஊழால் 371
ஆக்கமும் 642
ஆக்கம் அதர் 594
ஆக்கம் இழந் 593
ஆக்கம் கருதி 463
ஆங்கு அமைவு 740
ஆபயன் 560
ஆயும் அறிவினர் 918
ஆய்ந்து ஆய்ந்து 792
ஆரா இயற்கை 370
ஆவிற்கு நீர் 1066
ஆள்வினையும் 1022
ஆற்றாரும் ;93
ஆற்றின் அளவு - நெறி 477
ஆற்றின் அளவு 725
ஆற்றின் ஒழுக்கி 48
ஆற்றின் நிலை 716
ஆற்றின் வருந்தா 468
ஆற்றுபவர்க்கும் 741
ஆற்றுவார் -இக 891
ஆற்றுவார் -பசி 225
ஆற்றுவார் பணி 985
இகலான் ஆம் 860
இகலிற்கு எதிர் 858
இகலின்மிக 856
இகல் எதிர் 855
இகல் என்ப 851
இகல் என்னும் 853
இகல் காணான் 859
இகழ்ச்சியின் 539
இகழ்ந்து எண்ணிது 1057
இடம்எல்லாம் 1064
இடன் இல் 218
இடிக்கும் துணை 447
இடிபுரிந்து 607
இடிப்பாரை 448
இடுக்கண் படினும் 654
இடுக்கண் கால் 1030
இடுக்கண் வருங்கால் 621
இடும்பைக்கு 623
இடும்பைக்கே 1029
இடைதெரிந்து 712
இணர் ஊழ்த்தும் 650
இணர்எரி 308
இதனை இதனால் 517
இனமப்பின் 1129
இமையாரின் 906
இம்மைப் பிறப்பில் 1315
இயல்பாகும் 344
இயல்பினான் 47
இயல்பு உளிக் 545
இயற்றலும் 385
இரக்க இரத் 1051
இரத்தலின் 229
இரத்தலும் 1054
இரந்தும் 1062
இரப்பன் 1067
இரப்பாரை 1058
இரப்பான் 1060
இரவார் 1035
இரவு உள்ள 1069
இரவு என்னும் 1068
இரு நோக்கு 1091
இருந்து உள்ளி 1243
இருந்து ஓம்பி 81
இருபுனலும் 737
இருமனப் பெண் 920
இருமை வகை 23
இருவேறு 374
இருள்சேர் 5
இருள் நீங்கி 352
இலக்கம் 627
இலங்கு இழாய் 1262
இலம் என்று 1040
இலம் என்று வெஃ 174
இலர் பலர் 270
இலன் என்னும் 223

இலன் என்று 205
இல்லது என் 53
இல்லாரை 752
இல்லாளை 905
இல்லாள் கண் 903
இல்லை தவறு 1321
இல்வாழ்வான் 41
இவறலும் 432
இழத்தொறும் 940
இழிவு அறிந்து 946
இழுக்கல் 415
இழுக்காமை 536
இழைத்தது 779
இளித்தக்க 1288
இளிவரின் 970
இளைதாக 879
இளையர் 698
இறந்து அமைந்த 900
இறந்த வெகுளி 531
இறந்தார் 310
இறப்பே புரிந்த 977
இறல் ஈனும் 180
இறுதி பயப்பினும் 690
இறைகடியன் 564
இறை காக்கும் 547
இற்பிறந்தார் கண்ண 951
இற்பிறந்தார் கண்ணே 1044
இனத்து ஆற்றி 568
இனம் போன்று 822
இனி அன்ன 1294
இனிய உளவாக 100
இனைத் துணைத் 87
இணையர் 790
இன்கண் உடைத் 1152
இன்சொலால் ஈத்து 387
இன்சொலால் ஈரம் 91
இன்சொல் 99
இன்பத்துள் - பயக் 354
இன்பத்துள் - விழை 629
இன்பம் இடையறா 369
இன்பம் ஒருவற்கு 1052
இன்பம் கடல் 1166
இன்பம் விழை - இ 628
இன்பம் விழை - வி 615
இன்மை இடும்பை 1063
இன்மை என 1042
இன்மை ஒருவற்கு 988
இன்மையின் இன்னாத 1041
இன்மையின்இன்னாது 558
இன்றியமையாச் 961
இன்றும் வருவது 1048
இன்னா எனத்தான் 316
இன்னா செய்தாரை 314
இன்னா செய்தார்க் 987
இன்னாது இரக்கம் 224
இன்னாது இனன் 1158
இன்னாமை இன்பம் 630
ஈட்டம் இவறி 1003
ஈதல் இசைபட 231
ஈத்து உவக்கும் 228
ஈர்ங்கை விதிரார் 1077
ஈவார் கண் 1059
ஈன்றபொழுதின் 69
ஈன்றாள் பசி 656
ஈன்றாள் முகத்தே 923
உடம்பாடு இலா 890
உடம்பாடு உயிரி 1122
உடுக்கை இழந்த 788
உடுப்பதூஉம் 1079
உடைசெல்வம் 939
உடைத்தம் 473
உடைமையுள் 89
உடையர் எனப் 591
உடையார் முன் 395
உட்கப்படாஅர் 921
உட்பகை 883
உணர்வது உடை 718
உணலினும் 1326
உண்டார் கண் 1090
உண்ணற்க 922
உண்ணாது 160
உண்ணாமை உள் 255
உண்ணாமை வேண் 257
உதவி வரைத்தன்று 105
உப்பு அமைந்து 1302
உயர்வு அகலம் 743
உயிர் உடம்பின் 330
உயிர்ப்ப ஊர் 880
உய்த்தல் 1287
உரம் ஒருவற்கு 600
உரன் என்னும் 24
உரன் நசைஇ 1263
உருவு கண்டு 667
உருள் ஆயம் 933
உரைப்பார் 232
உலகத்தார் 850
உலகத்தோடு 140
உலகம் தழீஇய 425
உலைவு இடத்து 762
உவக்காண் 1185
உவந்து உறைவர் 1130
உவப்பத் தலைக்கூடி 394
உழந்து உழந்து 1177
உழவினார் 1036
உழுது உண்டு 1033
உழுவார் 1032
உழைப்பிரிந்து 530
உளபோல் 574
உளர் எனினும் 730
உளரென்னும் 406
உளரை தூக்காத 480
உள்ளக் களித்தலும் 1281
உள்ளத்தார் 1249
உள்ளத்தால் உள் 282
உள்ளத்தால் பொய் 294
உள்ளம் இலா 598
உள்ளம் உடைமை 592
உள்ளம் போன்று 1170
உள்ளற்க 798
உள்ளியது எய்தல் 540
உள்ளியது எல்லாம் 309
உள்ளினும் 1201

உள்ளினேன் 1316
உள்ளுவது எல்லாம் 596
உள்ளுவன் - உரைப் 1184
உள்ளுவன் - மறப் 1125
உள்ளொற்றி 927
உறங்குவது 339
உறல் முறையான் 885
உறா அதவர்க்கண்ட 1292
உறா அதவர்போல் 1096
உறா அதோ 1143
உறா அர்க்கு 1200
உறின் உயிர் 778
உறின் நட்டு 812
உறுதோறு உயிர் 1106
உறுபசியும் 734
உறுபொருளும் 756
உறுப்பு அமைந்த 761
உறுப்பு ஒத்தல் 993
உறுவது சீர் 813
உறை சிறியார் 680
உற்ற நோய்நீக்கி 442
உற்றநோய் நோன்றல் 261
உற்றவன் 950
உற்றான அளவும் 949
ஊக்கம் உடையான் 486
ஊடலில் தோற்றவர் 1327
ஊடலில் தோன்றும் 1322
ஊடலில் உண்டு 1307
ஊடல் உணங்க 1310
ஊடல் உணர்தல் 1109
ஊடல் கண் 1284
ஊடிப் பெறுகுவங் 1328
ஊடியவரை 1304
ஊடியிருந்தே 1312
ஊடுகமன்னோ 1329
ஊடுதல் 1330
ஊண்உடை 1012
ஊதியம் என்பது 797
ஊரவர்கௌவை 1147
ஊருணிநீர் 215
ஊழி பெயரினும் 989
ஊழின் பெருவலி 380
ஊழையும் 620
ஊறுஒரால் 662
ஊனைக் குறித்த 1013
எச்சம் என்று 1004
எட்பகவன்ன 889
எண் சேர்ந்த 910
எண்ணித் துணிக 467
எண்ணிய எண்ணி 666
எண்ணியார் 494
எண்ணென்ப 392
எண்பதத்தால் 991
எண்பதத்தான் 548
எண்பொருள் 424
எதிரதாக் காக்கும் 429
எந்நன்றி 110
எப்பொருளும் ஓரார் 695
எப்பொரு எத் 355
எப்பொருள் யார் 423
எய்தற்கு அரியது 489
எரியால் சுடப் 896
எல்லாப்பொருளும் 746
எல்லார்க்கும் எல் 582
எல்லாக்கும் நன் 125
எல்லா விளக்கும் 299
எல்லைக் கண் 806
எவ்வது உறைவது 426
எழுதுங்கால் 1285
எழுபிறப்பும் 62
எழுமை எழுபிறப் 107
எளிது என 145
எள்ளாத எண்ணிச் 470
எள்ளாமை 281
எள்ளின் இளிவு 1298
எற்றிற்கு உரியர் 1080
எற்று என்று 655
எனைத்தானும் எஞ் 317
எனைத்தானும் நல் 416
எனைத் திட்பம் 670
எனைத் துணையார் 144
எனைத்து நினைப் 1208
எனைத்தும் 820
எனைத்தொன்று 1202
எனைப்பகை 207
எனைமாட்சித்து 750
எனைவகையான் 514
என்பு இலதனை 77
என்றும் ஒருவுதல் 652
என்னைமுன் 771
ஏதம் பெரும் 1006
ஏதிலார் ஆரத் 837
ஏதிலார் குற்றம் 190
ஏதிலார் போலப் 1099
ஏந்திய கொள்கை 899
ஏமுற்றவரினும் 873
ஏரினும் நன்றால் 1038
ஏரின் உழாஅர் 14
ஏவவும் செய் 848
ஐந்து அவித்தான் 25
ஐயத்தின் நீங்கித் 353
ஐயப்படா அது 702
ஐயுணர்வு 354
ஒட்டார்பின் 967
ஒண்ணுதற்கோ 1088
ஒண்பொருள் 760
ஒத்தது அறிவான் 214
ஒப்புரவினால் 220
ஒரு தலையான் 1196
ஒருநாள் எழுநாள் 1296
ஒருபொழுதும் 337
ஒருமைக்கண் 398
ஒருமைச்செயல் 835
ஒருமை மகளிரே 974
ஒருமையுள் 126
ஒலித்தக்கால் 763
ஒல்லும் கருமம் 818
ஒல்லும் வகை 33
ஒல்லும் வாய் 673
ஒல்வது அறிவது 472
ஒழுக்கத்தின் எய் 137
ஒழுக்கத்தின் ஒல் 136

| | |
|---|---|
| ஒழுக்கத்து | 21 |
| ஒழுக்க முடையவர்க் | 139 |
| ஒழுக்கமும் | 952 |
| ஒழுக்கம் உடைமை | 133 |
| ஒழுக்கம் விழுப்பம் | 131 |
| ஒழுக்காறாக் | 161 |
| ஒளியார்முன் | 714 |
| ஒளி ஒருவற்கு | 971 |
| ஒறுத்தாரை | 155 |
| ஒறுத்தார்க்கு | 156 |
| ஒறுத்து ஆற்றும் | 579 |
| ஒற்றினான | 583 |
| ஒற்றம் உரை | 581 |
| ஒற்று ஒற்றி | 588 |
| ஒற்று ஒற்று | 589 |
| ஒன்றா உலகத்து | 233 |
| ஒன்றாக நல்லது | 323 |
| ஒன்றாமை | 886 |
| ஒன்றானும் | 128 |
| ஒன்று எய்தி | 932 |
| ஒன்னார்க் | 264 |
| ஓஓ இனிதே | 1176 |
| ஓஒதல் வேண்டும் | 653 |
| ஓதி உணர்ந்தும் | 834 |
| ஓம்பின் அமைந்தார் | 1155 |
| ஓர்த்து உள்ளம் | 357 |
| ஓர்ந்து கண் | 541 |
| கடல் அன்ன | 1137 |
| கடல் ஓடா | 496 |
| கடன் அறிந்து | 687 |
| கடன் என்ப | 981 |
| கடாஅ உரு | 585 |
| கடா அக்களிற் | 1087 |
| கடிது ஓச்சி | 562 |
| கடிந்த கடிந்து | 658 |
| கடும் சொல்லன் | 566 |
| கடுமொழியும் | 567 |
| கடைக் கொட்கச் | 663 |
| கணை கொடிது | 279 |
| கண் களவு | 1092 |
| கண்டது மன் | 1146 |
| கண்டார் | 1084 |
| கண்டுகேட்டு | 1101 |
| கண்ணிற்கு அணி | 575 |
| கண்ணின் துனி | 1290 |
| கண்ணின் பசப்போ | 1240 |
| கண்ணுடையர் | 393 |
| கண்ணும் கொளச் | 1244 |
| கண் உள்ளார் | 1127 |
| கண் உள்ளின் | 1126 |
| கண்ணொடு கண் | 1100 |
| கண்ணோட்டம் இல் | 577 |
| கண்ணோட்டம் என் | 571 |
| கண்ணோட்டத் | 572 |
| கண் தாம் கலுழ்வ | 1171 |
| கண் நிறைந்த | 1272 |
| கண் நின்று | 184 |
| கதம் காத்துக் | 130 |
| கதும் எனத் | 1173 |
| கயல் உண்கண் | 1212 |
| ரத்தலும் | 1162 |
| கரப்பவர்க்கு | 1070 |
| கரப்பு இடும்பை | 1056 |
| கரப்பு இலா | 1053 |
| கரப்பு இலார் | 1055 |
| கரப்பினும் | 1271 |
| கரவாது | 1061 |
| கருமஞ் சிதையாமல் | 578 |
| கருமணியின் | 1123 |
| கருமத்தான் | 1012 |
| கருமம் செய் | 1021 |
| கருவியும் காலமும் | 631 |
| கலங்காது கண்ட | 668 |
| கலந்து உணர்த்தும் | 1246 |
| கல்லா ஒருவன் | 405 |
| கல்லாத மேற் | 845 |
| கல்லாதவரின் | 729 |
| கல்லாதவரும் | 403 |
| கல்லாதான் | 404 |
| கல்லாதான் சொல் | 402 |
| கல்லார்ப் பிணிக்கும் | 570 |
| கல்லான் வெகுளும் | 870 |
| கவறும் கழகமும் | 935 |
| கவ்வையால் | 1144 |
| கழாஅக்கால் | 840 |
| களவினால் | 283 |
| களவின்கண் | 284 |
| களவு என்னும் | 287 |
| களித்தறியேன் | 928 |
| களித்தானை | 929 |
| களித்தொறும் | 1145 |
| கள்வார்க்குத் | 290 |
| கள்ளுண்ணா | 930 |
| கறுத்து இன்னா | 312 |
| கற்க கசடுஅறக் | 391 |
| கற்கதனா லாய | 2 |
| கற்றறிந்தார் | 717 |
| கற்றாருள் கற்றார் | 722 |
| கற்றார்முன் | 724 |
| கற்றிலனாயினும் | 414 |
| கற்றீண்டு | 356 |
| கற்றுக்கண் | 686 |
| கனவினான் | 1214 |
| கனவினும் | 819 |
| காக்க பொருளா | 122 |
| காக்கை கரவா | 527 |
| காட்சிக் கெளியன்அ | 386 |
| காணாச் சினத்தான் | 866 |
| காணாதான் | 849 |
| காணிற் குவளை | 1114 |
| காணுங்கால் | 1286 |
| காண்கமன் | 1265 |
| காதலா காதல் | 440 |
| காதலர் இல்வழி | 1224 |
| காதலர் தூதொடு | 1211 |
| காதல் அவரிலராக | 1242 |
| காதன்மை | 507 |
| காமக்கடல் | 1164 |
| காமக் கடும்புனல் உய் | 1134 |
| காமக் கடும்புனல் நீந் | 1167 |
| காமக் கணிச்சி | 1251 |
| காமமும் நாணும் | 1163 |

காமமென 1252
காமம் உழந்து 1131
காமம் விடு 1247
காமம் வெகுளி 360
காலத்தினாற் 102
காலம் கருதி 485
காலாழ் களரில் 500
காலை அரும்பி 1227
காலைக்குச் செய்த 1225
காணமுயலெய்த 772
குடம்பை 338
குடிசெய்வல் 1023
குடி செய்வார்க்கு 1028
குடிதழீஇக் 544
குடிபுறங் 549
குடிப்பிறந்தார் 957
குடிப்பிறந்து குற்றத் 502
குடிப்பிறந்து தன்கண் 794
குடிமடிந்து 604
குடியாண்மை 609
குடியென்னும் 601
குணநலம் 982
குணமென்னும் 29
குணம்நாடிக் 504
குணனிலனாய் 868
குணனும் குடிமை 793
குலஞ்சுடும் 1019
குழல்இனிது 66
குறிக்கொண்டு 1095
குறித்தது கூறாமை 704
குறிப்பறிந்து 696
குறிப்பிற் குறிப்புணரா 705
குறிப்பிற் குறிப்புணர்வா 703
குற்றமே காக்க 434
குற்றம் இலனாய் 1025
குன்றன்னார் 898
குன்றின் அனையாரும் 965
குன்றேறி 758
கூடிய காமம் 1264
கூத்தாட்டு 332
கூழும் குடியும் 554
கூறாமை நோக்கி 701
கூற்றத்தை 894
கூற்றமோ 1085
கூற்றம் குதித்தலும் 269
கூற்றுடன்று 765
கெடல்வேண்டின் 893
கெடாஅ வழிவந்த 809
கெடுங்காலை 799
கெடுப்பதூஉங் 15
கெடுவல்யான் 116
கெடுவாக 117
கெட்டார்க்கு 1293
கேடறியா 736
கேடில்விழுச் 400
கேடும் பெருக்கமும் 115
கேட்டார்ப்பிணிக்கும் 643
கேட்டினும் உண்டு 796
கேட்பினுங் 418
கேளிழுக்கம் 808
கைம்மாறு வேண்டா 211
கையறியாமை 925
கைவேல் 774
கொக்கொக்க 490
கொடியார்-உரை 1235
கொடியார்-கொ 1169
கொடுத்தலும் 525
கொடுத்தும் 867
கொடுப்பது அழுக் 166
கொடுப்பதூஉம் 1005
கொடும் புருவம் 1086
கொடையளி 390
கொலைமேற் 551
கொலையிற் 550
கொலை வினையர் 329
கொல்லா நலத் 984
கொல்லாமை 326
கொல்லான் 260
கொளப்பட்டேம் 699
கொளற்கரிதாய் 745
கொன்றன்ன 109
கோட்டுப்பூ 1313
கோளில்பொறி 9
சமன் செய்து 118
சலத்தால் 660
சலம்பற்றிச் 956
சாதலின் இன்னாத 230
சாயலும் நாணும் 1183
சார்புணர்ந்து 359
சால்பிற்கு 986
சான்றவர் 990
சிதைவிடத்து 597
சிறப்பறிய 590
சிறப்பீனும் செல்வமும் 31
சிறப்பீனும் செல்வம் 311
சிறப்பொடு 18
சிறியார் உணர்ச்சி 976
சிறகாப்பிற் 744
சிறுபடையான் 498
சிறுமை நமக்கு 1231
சிறுமை பல 934
சிறுமையும் 769
சிறுமையுள் 98
சிறைகாக்குங் 57
சிறைநலனும் 499
சிற்றினம் 451
சிற்றின்பம் 173
சினத்தைப் 307
சினமென்னும் 306
சீரிடம் காணின் 821
சீரினும் சீரல்ல 962
சீருடை செல்வர் 1010
சீர்மை சிறப் 195
சுடச்சுடரும் 267
சுவை ஒளி 27
சுழலும் இசை 777
சுழன்றும் ஏர்ப் 1031
சுற்றத்தால் 524
சூழாமல் 1024
சூழ்ச்சி முடிவு 671
சூழ்வார்கண் 445
செப்பம் உடை 112

| | |
|---|---|
| செப்பின் | 887 |
| செயற்கரிய செய் | 26 |
| செயற்கரிய யாஉள | 781 |
| செயற்கை அறிந் | 637 |
| செயற்பால செய்யா | 47 |
| செயற்பால தோரும் | 40 |
| செயிரின் தலை | 258 |
| செய்தக்க | 466 |
| செய்தேமஞ் | 815 |
| செய்யாமற் செய்த | 101 |
| செய்யாமற் செற் | 313 |
| செய்வானை நாடி | 516 |
| செய்வினை | 677 |
| செருக்குஞ். சினமும் | 431 |
| செருவந்த | 569 |
| செல்லா இடத்து | 302 |
| செல்லாமை | 1151 |
| செல்லான் கிழவன் | 1039 |
| செல்லிடத்துக் | 301 |
| செல்வத்துள் | 411 |
| செல்விருந்து | 86 |
| செவிகைப்பச் | 389 |
| செவிக்குணவு | 412 |
| செவிச்சொல்லும் | 694 |
| செவியிற் சுவை | 420 |
| செவியுணவிற் | 413 |
| செறாஅச் சிறு | 1097 |
| செறிதொடி | 1275 |
| செறிவறிந்து | 123 |
| செறுநரைக் | 488 |
| செறுவார்க்கு | 869 |
| செற்றவர்பின் | 1256 |
| செற்றாரெனக்கை | 1245 |
| செற்றார்பின் | 1255 |
| சென்ற இடத்தால் | 422 |
| சொலல் வல்லன் | 647 |
| சொல்லப் பயனஅ | 1078 |
| சொல்லுக சொல்லிற் | 200 |
| சொல்லுக சொல்லை | 645 |
| சொல்லுதல் | 664 |
| சொல் வணக்கம் | 827 |
| சொற்கோட்டம் | 119 |
| ஞாலங் கருதினும் | 484 |
| தகுதி என | 111 |
| தக்காங்கு | 531 |
| தக்காரினத் | 446 |
| தக்கார் தகவிலர் | 114 |
| தஞ்சம் தமரல்லர் | 1300 |
| தணந்தமை | 1233 |
| தண்ணந்துறைவன் | 1277 |
| தந்தை மகற்கு | 67 |
| தந்நலம் | 916 |
| தந்நெஞ்சத்து | 1205 |
| தமராகித் தற் | 529 |
| தம்பொருள் | 63 |
| தம்மில் இருந்து | 1107 |
| தம்மிற் பெரியார் | 444 |
| தம்மின் தம் | 68 |
| தலைப்பட்டார் | 348 |
| தலையின் இழிந்த | 964 |
| தவஞ்செய்வார் | 266 |
| தவமறைந்து | 274 |
| தவமும் தவமுடை | 262 |
| தவறிலராயினும் | 1328 |
| தள்ளா விளையுளும் | 731 |
| தற்காத்துத் | 56 |
| தனக்குவமை | 7 |
| தனியே இருந்து | 1296 |
| தன்குற்றம் நீக்கி | 436 |
| தன்துணை இன்றால் | 875 |
| தன்னுயிர்க்கு இன் | 318 |
| தன்னுயிர்தான் | 268 |
| தன்னுயிர் நீப்பினும் | 327 |
| தன்னூன் பெருக் | 251 |
| தன்னெஞ்சறிவது | 293 |
| தன்னை உணர்த்தி | 1319 |
| தன்னைத்தான் காக் | 305 |
| தன்னைத்தான் காத | 209 |
| தாமின்புறுவது | 399 |
| தாம்வீழ்வார் தம் | 1191 |
| தாம்வீழ்வார் மென் | 1103 |
| தாம் வேண்டின் | 1150 |
| தார்தாங்கி | 767 |
| தாளாண்மை இல் | 614 |
| தாளாண்மை என் | 613 |
| தாளாற்றி | 212 |
| தானம் தவம் | 19 |
| திறனல்ல | 157 |
| திறனறிந்து | 644 |
| தினற்பொருட்டால் | 256 |
| தினைத்துணை நன்றி | 104 |
| தினைத்துணையாங் | 433 |
| தினைத்துணையும் | 1282 |
| தீப்பால தான் | 206 |
| தீயவை செய்தார் | 208 |
| தீயவை தீய | 202 |
| தீயளவன்றி | 947 |
| தீயினாற் சுட்ட | 129 |
| தீவினையார் | 201 |
| துஞ்சினார் | 926 |
| துஞ்சுங்கால் | 1218 |
| துணைநலம் | 651 |
| துப்பார்க்கு | 12 |
| துப்பின் எவனாவர் | 1165 |
| துப்புரவு | 1050 |
| தும்முச் செறுப்ப | 1318 |
| துளியின்மை | 557 |
| துறந்தாரின் | 159 |
| துறந்தார்க்குத் | 263 |
| துறந்தார்க்கும் துவ் | 42 |
| துறந்தார் படிவ | 586 |
| துறந்தார் பெருமை | 22 |
| துறப்பார்மன் | 378 |
| துறைவன் | 1157 |
| துனியும் | 1306 |
| துன்பத்திற்கு | 1299 |
| துன்பம் உற | 669 |
| துன்புறூஉந் | 94 |
| துன்னாத்துறந் | 1250 |
| துன்னியார் | 188 |
| தூஉய்மை என் | 364 |
| தூங்காமை | 383 |

தூங்குக தூங்கி 672
தூய்மை துணை 688
தெண்ணீர் அடு 1065
தெய்வத்தான் 619
தெய்வந் தொழாஅள் 55
தெரிதலும் 634
தெரிந்த இனத் 462
தெரிந்துணரா 1172
தெருளாதான் 249
தெளிவிலதனை 464
தென்புலத்தார் 43
தேரான் தெளிவும் 510
தேரான் பிறனை 508
தேவர் அனையர் 1073
தேறற்க 509
தேறினும் 876
தொகச் சொல்லி 685
தொடங்கற்க 491
தொடலைக் 1135
தொடிநோக்கி 1279
தொடிப்புழுதி 1037
தொடியொடு 1236
தொடிற்சுடின் 1159
தொட்டனைத் 396
தொல்வரவும் 1043
தொழுதகை 828
தோன்றின் 236
நகல்வல்லர் 999
நகுதற் பொருட் 784
நகை ஈகை 953
நகையும் 304
நகையுள்ளும் 995
நகைவகைய 817
நசைஇயார் 1199
நச்சப்படாதவன் 1008
நடுவின்றி 171
நட்டார்குறை 908
நட்டார்க்கு 679
நட்டார் போல் 826
நட்பிற்கு வீற் 789
நட்பிற்குறுப்புக் 802
நண்பாற்றாராகி 998
நத்தம்போல் 235
நயந்தவர்க்கு 1181
நயந்தவர் நல் 1232
நயனில சொல்லி 197
நயனிலன் 193
நயனுடையான் 219
நயனொடு நன்றி 994
நயன் ஈன்று 97
நயன்சாரா 194
நலக்குரியார் 149
நலத்தகை 1305
நலத்தின்கண் 958
நலம் வேண்டின் 960
நல்குரவு 1045
நல்லவை 375
நல்லாண்மை 1026
நல்லார்கண் 408
நல்லாறு என 324
நல்லாறு எனினும் 222
நல்லாற்றான் 242
நல்லினத்தி 460
நவில்தொறும் 783
நற்பொருள் 1046
நனவினால் கண்ட 1215
நனவினால் நம் 1220
நனவினால் நல்காக் 1217
நனவினால் நல்காத 1213
நனவினால் நல்காரை 1219
நனவென 1216
நன்மையும் 511
நன்றறிவாரின் 1072
நன்றாகும் ஆக்கம் 328
நன்றாங்கால் 379
நன்றாற்ற லுள்ளுந் 469
நன்றிக்கு வித்து 138
நன்றி மறப்பது 108
நன்றென்ற 715
நன்றேதரினும் 113
நன்னீரை 1111
நாச்செற்று 335
நாடாது நட்டலிற் 791
நாடென்ப 739
நாடொறும் நாடி 553
நாடொறும் நாடுக 520
நாணாமை 833
நாணால் உயிரை 1017
நாணும் மறந் 1297
நாணென ஒன்றோ 1252
நாணொடு நல் 1133
நாண் அகத்தில்லார் 1020
நாண் என்னும் 924
நாண்வேலி 1016
நாநலம் என்னும் 641
நாம் காதல் 1195
நாளென ஒன்று 334
நிணந்தீயில் 1260
நிலத்தியல்பால் 452
நிலத்தில் 959
நிலவரை நீள் 234
நிலை அஞ்சி 323
நிலைமக்கள் 770
நிலையில் திரியாது 124
நில்லாதவற்றை 331
நிழல் நீரும் 881
நிறைநீர 782
நிறை நெஞ்சம் 917
நிறைமொழி 28
நிறையரியா 1138
நிறையுடைமை 154
நிறையுடையேன் 1254
நினைத்திருந்து 1320
நினைத்தொன்று 1241
நினைப்பவர் 1203
நீங்கான் வெகுளி 864
நீங்கின் தெறூஉம் 1104
நீரும் நிழலது 1309
நீர்இன்று அமை 20
நுணங்கிய 419
நுண்ணிய நூல் 373
நுண்ணியம் 710

| | |
|---|---|
| நுண்மாண் | 407 |
| நுனிக்கொம்பர் | 476 |
| நூலாருள் நூல் | 683 |
| நெஞ்சத்தார் | 1128 |
| நெஞ்சில் துறவார் | 276 |
| நெடுங்கடலும் | 17 |
| நெடுநீர் மறவி | 605 |
| நெடும்புனலுள் | 495 |
| நெய்யால் | 1148 |
| நெருநல் உளன் | 336 |
| நெருநற்று | 1278 |
| நெருப்பினுள் | 1049 |
| நோக்கினாள்-கி | 1093 |
| நோக்கினாள்-கெ | 1082 |
| நோதல் எவன் | 1308 |
| நோய் எல்லாம் | 320 |
| நோய்நாடி | 948 |
| நோவற்க | 877 |
| நோனா உடம்பும் | 1132 |
| பகச்சொல்லி | 187 |
| பகல் கருதி | 852 |
| பகல் வெல்லும் | 481 |
| பகுத்துண்டு | 322 |
| பகை என்னும் | 871 |
| பகை நட்பாக் | 874 |
| பகை நட்பாம் | 830 |
| பகை பாவம் | 146 |
| பகைமையும் | 709 |
| பகையகத்துச் | 723 |
| பகையகத்துப் | 727 |
| பசக்கமன் | 1189 |
| பசந்தாள் | 1188 |
| பசப்பென | 1190 |
| படலாற்றா | 1175 |
| படியுடையார் | 606 |
| படுபயன் | 172 |
| படைகுடி | 381 |
| படை கொண்டார் | 253 |
| பணியுமாம் | 978 |
| பணிவுடையன் | 95 |
| பணை நீங்கிப் | 1234 |
| பண என்னாம் | 573 |
| பணடறியேன் | 1083 |
| பணபிலான் | 1000 |
| பண்புடையார்ப் | 996 |
| பதிமருண்டு | 1229 |
| பயனில பல்லார் | 192 |
| பயனில சொல் | 196 |
| பயன் தூக்கார் | 103 |
| பயன் தூக்கிப் | 912 |
| பயன் மரம் | 216 |
| பரிந்தவர் நல்கா | 1248 |
| பரிந்தோம்பிக் | 132 |
| பரிந்தோம்பிப் | 88 |
| பரியதுகூர்ங் | 599 |
| பரியினும் | 376 |
| பருகுவார் | 811 |
| பருவத்தோடு | 482 |
| பருவரலும் | 1197 |
| பலகுடை | 1034 |
| பல சொல்லக் | 649 |
| பல நல்ல கற்ற | 823 |
| பல்குழுவும் | 735 |
| பல்லவை கற்றும் | 728 |
| பல்லார் பகை | 450 |
| பல்லார் முனிய | 191 |
| பழகிய செல்வமும் | 937 |
| பழகிய நட்பெவன் | 803 |
| பழிமலைந்து | 657 |
| பழியஞ்சி | 44 |
| பழுதெண்ணும் | 639 |
| பழைமை எனப் | 801 |
| பழையம் எனக் | 700 |
| பற்றற்ற கண்ணும் | 521 |
| பற்றற்ற கண்ணே | 349 |
| பற்றற்றேம் | 275 |
| பற்றி விடாஅ | 347 |
| பற்றுக பற்ற | 350 |
| பற்றுள்ளம் | 438 |
| பனி அரும்பி | 1223 |
| பன்மாயக் | 1258 |
| பாடுபெறுதியோ | 1237 |
| பாத்தூண் | 227 |
| பாலொடு தேன் | 1121 |
| பிணிக்கு மருந்து | 1102 |
| பிணியின்மை | 738 |
| பிணையேர் | 1089 |
| பிரித்தலும் | 633 |
| பிரிவுரைக்கும் | 1156 |
| பிழைத்துணர்ந்தும் | 417 |
| பிறப்பென்னும் | 358 |
| பிறப்பொக்கும் | 972 |
| பிறர்க்கு இன்னா | 319 |
| பிறர்நாணத் | 1018 |
| பிறர்பழியும் | 1015 |
| பிறவிப் | 10 |
| பிறன்பழி | 186 |
| பிறன்பொருளாள் | 141 |
| பிறன்மனை | 148 |
| பீலிபெய் | 475 |
| புகழ்இன்றால் | 966 |
| புகழ்ந்தவை | 538 |
| புகழ்பட வாழா | 237 |
| புகழ் புரிந்த | 59 |
| புக்கில் | 340 |
| புணர்ச்சி | 785 |
| புத்தேளுலகத் | 213 |
| புரந்தார்கண் | 780 |
| புலத்தலின் | 1323 |
| புலப்பலெனச் | 1259 |
| புலப்பென்கொல் | 1267 |
| புல்லவையுள் | 719 |
| புல்லாதிராஅப் | 1301 |
| புல்லிக்கிடந்தேன் | 1187 |
| புல்லிவிடாஅப் | 1324 |
| புறங்குன்றி | 277 |
| புறங்கூறி | 183 |
| புறந்துறுப்பு | 79 |
| புறந்தூய்மை | 298 |
| புன்கண்ணை | 1222 |
| பெண்ணியலார் | 1311 |
| பெண்ணிற் | 54 |

| | |
|---|---|
| பெண்ணினால் | 1280 |
| பெண்ணேவல் | 907 |
| பெயக்கண்டும் | 580 |
| பெயலாற்றா | 1174 |
| பெரிதாற்றிப் | 1276 |
| பெரிதினிது | 839 |
| பெரியாரைப் | 892 |
| பெருக்கத்து | 963 |
| பெருங்கொடையான் | 526 |
| பெருமை உடை | 975 |
| பெருமைக்கும் | 505 |
| பெருமைபெரு | 979 |
| பெரும் பொருளால் | 732 |
| பெறாஅமை | 1295 |
| பெறின் என்னாம் | 1270 |
| பெறுமவற்றுள் | 61 |
| பெற்றான் பெறின் | 58 |
| பேணாது பெட்டார் | 1178 |
| பேணாது பெட்பவே | 1283 |
| பேணாது பெண் | 902 |
| பேதை பெருங் | 816 |
| பேதைப் படுக்கும் | 372 |
| பேதைமை என்ப | 831 |
| பேதைமை ஒன்றோ | 805 |
| பேதைமையுள் | 832 |
| பேராண்மை | 773 |
| பொச்சாப்பார்க்கு | 533 |
| பொச்சாப்புக் | 532 |
| பொதுநலத்தார் | 915 |
| பொதுநோக்கான் | 528 |
| பொய்படும் | 836 |
| பொய்ம்மையும் | 292 |
| பொய்யாமை அன்ன | 296 |
| பொய்யாமை பொய் | 297 |
| பொருட்பெண்டீர் | 913 |
| பொருட்பொருளார் | 914 |
| பொருளல்லவரை | 751 |
| பொருளல்லவற்றை | 351 |
| பொருளற்றார் | 248 |
| பொருளாட்சி | 252 |
| பொருளானாம் | 1002 |
| பொருளென்னும் | 753 |
| பொருள் கருவி | 675 |
| பொருள் கெடுத்து | 938 |
| பொருள் தீர்ந்த | 199 |
| பொருள் நீங்கிப் | 246 |
| பொருள் மாலை | 1230 |
| பொருள்ளென | 487 |
| பொறியின்மை | 618 |
| பொறி வாயில் | 6 |
| பொறுத்தல் | 152 |
| பொறையொருங்கு | 733 |
| போற்றின் | 693 |
| மகன் தந்தைக்கு | 70 |
| மக்களே போல்வர் | 1071 |
| மக்கள் மெய் | 65 |
| மங்கலம் என்ப | 60 |
| மடலூர்தல் | 1136 |
| மடிமடிக் | 603 |
| மடிமை குடிமை | 608 |
| மடியிலா | 610 |
| மடியுளாள் | 617 |
| மடியை மடியா | 602 |
| மடுத்த வாய் | 624 |
| மணிநீரும் | 742 |
| மணியில் திகழ்தரு | 1273 |
| மண்ணொடு | 576 |
| மதி நுட்பம் | 636 |
| மதியும் மடந்தை | 1116 |
| மயிர்நீப்பின் | 969 |
| மருந்தாகி | 217 |
| மருந்தென | 942 |
| மருந்தோமற்று | 968 |
| மருவுக மாசற்றார் | 800 |
| மலரன்ன-அருமை | 1142 |
| மலரன்ன-முகம் | 1119 |
| மலரினும் | 1289 |
| மலர்காணின் | 1112 |
| மலர்மிசை | 3 |
| மழித்தலும் நீட்ட | 280 |
| மறத்தல் | 303 |
| மறந்தும் | 204 |
| மறப்பினும் | 134 |
| மறப்பின் | 1207 |
| மறமானம் | 766 |
| மறவற்க | 106 |
| மறைந்தவை | 587 |
| மறை பெறல் | 1180 |
| மறைப்பேன்மன் கா | 1253 |
| மறைப்பேன்மன் யா | 1161 |
| மற்றியான் | 1206 |
| மற்றும் தொடர்ப் | 345 |
| மனத்து மாசாக | 278 |
| மனத்தானாம் | 453 |
| மனத்தின் அமையா | 825 |
| மனத்துக்கண் | 34 |
| மனத்துளது | 454 |
| மனத்தொடு | 295 |
| மனநலத்தின் | 459 |
| மனநலம் நன்கு | 458 |
| மனநலம் மன் | 457 |
| மனந்தூயார்க் | 456 |
| மனந்தூய்மை | 455 |
| மனம்மாணா | 884 |
| மனைத்தக்க | 51 |
| மனைமாட்சி | 52 |
| மனையாளை | 904 |
| மனைவிழைவார் | 901 |
| மன்னர்க்கு | 556 |
| மன்னர் விழைப | 692 |
| மன்னுயிரெல் | 1168 |
| மன்னுயிர் ஓம்பி | 244 |
| மாதர் முகம்போல் | 1118 |
| மாலை நோய் | 1226 |
| மாலையோ | 1221 |
| மாறுபாடு | 945 |
| மிகச் செய்து | 829 |
| மிகல்மேவல் | 857 |
| மிகினும் குறை | 941 |
| மிகுதியான் | 158 |
| முகத்தான் அமர்ந் | 93 |
| முகத்தின் இனிய | 824 |

முகத்தின் முதுக் 707
முகநக நட்பது 786
முகம் நோக்கி 708
முகை மொக்குள் 1274
முடிவும் இடை 676
முதலிலார்க்கு 449
முயக்கிடைத் 1239
முயங்கிய 1238
முயற்சி திருவினை 616
முரண் சேர்ந்த 492
முறிமேனி 1113
முறைகோடி 559
முறைசெய்து 388
முறைப்படச் 640
முற்றாற்றி 748
முற்றியும் 747
முனைமுகத்து 749
முன்னுறக் 535
மேலிருந்து 973
மேற்பிறந்தா 409
மையல் ஒருவன் 838
மோப்பக் குழையும் 90
யாகாவராயினும் 127
யாங்கண்ணின் 1140
யாண்டுச்சென்று 895
யாதனின் 341
யாதானும் 397
யாமும் உளேங் 1204
யாமெய்யாக் 300
யாரினும் காதலம் 1314
யாம் எனது 346
யான் நோக்குங் 1094
வகுத்தான் 377
வகைமாண்ட 897
வகையறச் 465
வகையறிந்து தற் 878
வகையறிந்து வல் 721
வகை ஒழிய 240
வசையிலா 239
வசையென்ப 238
வஞ்ச மனத்தான் 271
வருகமன் 1266
வருமுன்னர் 435
வருவிருந்து 83
வரைவிலா 919
வலியார்க்கு 861
வலியார்முன் 250
வலியில்நிலைமை 273
வழங்குவ 955
வழிநோக்கான் 865
வழுத்தினாள் 1317
வறியார்க்கொன்று 221
வன்கண்குடி 632
வாணிகஞ் செய் 120
வாய்மை என 291
வாராக்கால் 1179
வாரிபெருக்கி 512
வாழ்தல் உயிர் 1124
வாழ்வார்க்கு 1192
வாளற்று 1261
வாளொடென் 726
வாள்போல் '882
வானுயர் 272
வானோக்கி 542
வான்நின்று 11
விசும்பின் 16
விடாஅது 1210
விடுமாற்றம் 689
விண்இன்று 13
வித்தும் இடல் 85
வியவற்கஅ 49
விருந்துபுறத் 82
விருப்பறாச் 522
விரைந்து 648
விலங்கொடு 410
வில்லேருழவர் 872
விழித்தகண் 775
விழுப்புண் 776
விழுப்பேற்றின் 162
விழைதகையான் 804
விழையார் 810
விளக்கற்றம் 1186
விளிந்தாரின் 13
விளியுமென் 1200
வினைகலந்து 1268
வினைக்கண் வினைகெ 612
வினைக்கண் வினையு 519
வினைக்குரிமை 518
வினைசெய்வார் 584
வினைத்திட்பம் 661
வினைபகை 674
வினையால் 678
வினைவலியும் 471
வீழப்படுவார் 1194
வீழுநர் வீழ 1193
வீழும் இருவர்க்கு 1108
வீழ்நாள்படா 38
வீழ்வாரின் 1198
வீறெய்தி 665
வெண்மை எனப் 844
வெருவந்த 563
வெள்ளத்தனைய இடு 672
வெள்ளத்தனைய மல 505
வேட்ட பொழு 1105
வேட்பத்தாஞ் 646
வேட்பன 697
வேண்டற்க வென்றி 931
வேண்டாமை 363
வேண்டிய வேண்டி 265
வேண்டின் உண் 342
வேண்டுங்கால் 362
வேண்டுதல் 4
வேலன்று 546
வேலொடு நின் 552
வைத்தான் வாய் 1001
வையத்துள் 50

## திருக்குறளால் கிடைத்த பெருமை

### திருக்குறள் நெறித் தோன்றல்

- 1985இல் தமிழக அரசின் "திருக்குறள் நெறிபரப்பு மையம்" நடத்திய விழாவில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், திருக்குறளார் முனுசாமி தலைமையில் நிதி அமைச்சர் நெடுஞ்செழியன், முல்லை பிஎல். முத்தையாவுக்கு 'திருக்குறள் நெறித் தோன்றல்' என்ற பட்டம் வழங்கி கௌரவித்தார்.

### திருவள்ளுவர் சீர் பரவுவார்

- 1993இல் "வள்ளுவர் வழி" வாசகர் வட்டம் நடத்திய விழாவில் தஞ்சைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் சி. பாலசுப்பிரமணியம், முல்லை பிஎல். முத்தையாவுக்குத் 'திருவள்ளுவர் சீர் பரவுவார்' என்ற விருதை வழங்கினார்.

### குறள் ஆய்வுச் செம்மல்

- 1994இல் முனைவர் கு. மோகனராசு தலைமையில் இயங்கும் உலகத் திருக்குறள் உயராய்வு மையம் சென்னையில் நடத்திய விழாவில் முல்லை பிஎல். முத்தையாவுக்கு 'குறள் ஆய்வுச் செம்மல்' எனும் திருக்குறள் விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.